# 30.06.2025 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்ட தீர்மானங்கள்

**பொ.சுது.நக.எண். B2/1924/2025**

**ஆணையர் அவர்களின் 01.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 705/2025** **பொருள் எண்.01**

**பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுசுகாதாரத்துறை- பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் நகர்ப்புற சமுதாய நல மையங்கள், மகப்பேறு மருத்துவமனைகள், மாநகராட்சி பகுப்பாய்வு கூடங்கள் மற்றும் காசநோய் மருத்துவமனைக்கு தேவையான 72 பாதுகாவலர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு மின்னணு ஒப்பம் கோரி பணியமர்த்த நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில், செயல்பட்டு வரும் நகர்ப்புற சமுதாய நல மையங்கள் மகப்பேறு மருத்துவமனைகள், மாநகராட்சி பகுப்பாய்வு கூடங்கள், மற்றும் காசநோய் மருத்துவமனைக்கு தேவையான 48 பாதுகாவலர்கள் (ஒரு மையத்திற்கு இரண்டு பாதுகாவலர்கள் இரண்டு சுழற்சி முறைக்கு மதியம் 2.00 மணி முதல் 10.00 மணி வரை இரவு 10.00 மணி முதல் காலை 6.00 மணி வரையில்) ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்த மன்றத் தீர்மான எண்.62/2024, 22.02.2024 நாளிட்ட ஒப்பம் கோரப்பட்டு, அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Monisha Security Agency, M/s. M/V.K. Murugan மற்றும் M/s. Janishree Corporate Services Pvt Ltd நிறுவனங்களுக்கு தலா 16 பாதுகாவலர்கள் 16.07.2024 முதல் 15.07.2025 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்த நிலைக்குழு (பொதுசுகாதாரம்) தீர்மான எண்.58/2024, நாள்.24.07.2024-ன்படி பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-1**

**பாதுகாவலர்கள் பணியமர்த்தப்பட்ட இடங்கள்**

| வஎண் | மண்டலம் | பணியமர்த்தப்பட்ட இடங்கள் | பாதுகாவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1 | திருவொற்றியூர் சமுதாய நல மையம் | 2 |
| 2 | 2 | மணலி சமுதாய நல மையம் | 2 |
| 3 | 3 | புழல் சமுதாய நல மையம் | 2 |
| 4 | 4 | மீனாம்பாள் நகர் சமுதாய நல மையம் | 2 |
| 5 | 5 | சஞ்சீவிராயன் பேட்டை சமுதாய நல மையம் | 2 |
| 6 | 5 | பெருமாள் பேட்டை மகப்பேறு மருத்துவமனை | 2 |
| 7 | 6 | திரு.வி.க. நகர் சமுதாய நல மையம் | 2 |
| 8 | 7 | அம்பத்தூர் சமுதாய நல மையம் | 2 |
| 9 | 8 | அயனாவரம் சமுதாய நல மையம் | 2 |
| 10 | 8 | செனாய் நகர் மகப்பேறு மருத்துவமனை | 2 |
| 11 | 9 | தேனாம்பேட்டை சமுதாய நல மையம் | 2 |

| | | | |
|---|---|---|---|
| 12 | 10 | வடபழனி சமுதாய நல மையம் | 2 |
| 13 | 10 | சைதாப்பேட்டை மகப்பேறு மருத்துவமனை | 2 |
| 14 | 11 | வளசரவாக்கம் சமுதாய நல மையம் | 2 |
| 15 | 12 | ஆலந்தூர் சமுதாய நல மையம் | 2 |
| 16 | 13 | அடையார் சமுதாய நல மையம் | 2 |
| 17 | 14 | பெருங்குடி சமுதாய நல மையம் | 2 |
| 18 | 15 | ஈஞ்சம்பாக்கம் சமுதாய நல மையம் | 2 |
| 19 | 15 | கண்ணகி நகர் சமுதாய நல மையம் | 2 |
| 20 | 15 | செம்மஞ்சேரி சமுதாய நல மையம் | 2 |
| 21 | 8 | ஈ.வே.ரா சாலை பகுப்பாய்வு கூடம் | 2 |
| 22 | 9 | வள்ளுவர் கோட்டம் பகுப்பாய்வு கூடம் | 2 |
| 23 | 10 | சிஜடி நகர் பகுப்பாய்வு கூடம் | 2 |
| 24 | 6 | காசநோய் மருத்துவமனை | 2 |
| | | மொத்தம் | 48 |

இதில் மண்டலம்-8ல் உள்ள ஈ. வெ. ரா. சாலை பகுப்பாய்வு கூடம் மற்றும் மண்டலம்-10ல் உள்ள சிஜடி நகர் பகுப்பாய்வு கூடத்திற்கு பாதுகாவலர்கள் தேவையில்லை என கருதப்படுகிறது. இதற்கு பதிலாக அதிக அளவில் நோயாளிகள் வந்து செல்லும் துரைப்பாக்கம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பாதுகாவலர்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு சுழற்சி முறையில் பாதுகாவலர்கள் பணியமர்த்தப்படுவதால் காலையில் பாதுகாவலர்கள் பணியில் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு பொதுமக்கள் பாதிப்பிற்குள்ளாகும் நிலை ஏற்படுகின்றது. எனவே, ஒரு மையத்திற்கு 3 பாதுகாவலர்கள் வீதம் 72 பாதுகாவலர்களை மூன்று சுழற்சி முறையில் (காலை 6.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரையில், மதியம் 2.00 மணி முதல் 10.00 மணி வரை, இரவு 10.00 மணி முதல் காலை 6.00 மணி வரையில்) பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-2**

**பாதுகாவலர்கள் பணியமர்த்தப்பட வேண்டிய இடங்கள்**

| வ. எண் | மண்டலம் | பணியமர்த்தப்பட வேண்டிய இடம் | பாதுகாவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1 | திருவொற்றியூர் சமுதாய நல மையம் | 3 |
| 2 | 2 | மணலி சமுதாய நல மையம் | 3 |
| 3 | 3 | புழல் சமுதாய நல மையம் | 3 |
| 4 | 4 | மீனாம்பாள் நகர் சமுதாய நல மையம் | 3 |
| 5 | 5 | சஞ்சீவிராயன் பேட்டை சமுதாய நல மையம் | 3 |
| 6 | 5 | பெருமாள் பேட்டை மகப்பேறு மருத்துவமனை | 3 |

| | | | |
|---|---|---|---|
| 7 | 6 | திரு.வி.க. நகர் சமுதாய நல மையம் | 3 |
| 8 | 7 | அம்பத்தூர் சமுதாய நல மையம் | 3 |
| 9 | 8 | அயனாவரம் சமுதாய நல மையம் | 3 |
| 10 | 8 | செனாய் நகர் மகப்பேறு மருத்துவமனை | 3 |
| 11 | 9 | தேனாம்பேட்டை சமுதாய நல மையம் | 3 |
| 12 | 10 | வடபழனி சமுதாய நல மையம் | 3 |
| 13 | 10 | சைதாப்பேட்டை மகப்பேறு மருத்துவமனை | 3 |
| 14 | 11 | வளசரவாக்கம் சமுதாய நல மையம் | 3 |
| 15 | 12 | ஆலந்தூர் சமுதாய நல மையம் | 3 |
| 16 | 13 | அடையார் சமுதாய நல மையம் | 3 |
| 17 | 14 | பெருங்குடி சமுதாய நல மையம் | 3 |
| 18 | 15 | கண்ணகி நகர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் | 3 |
| 19 | 15 | துரைப்பாக்கம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் | 3 |
| 20 | 15 | ஈஞ்சம்பாக்கம் சமுதாய நல மையம் | 3 |
| 21 | 15 | கண்ணகி நகர் சமுதாய நல மையம் | 3 |
| 22 | 15 | செம்மஞ்சேரி சமுதாய நல மையம் | 3 |
| 23 | 9 | வள்ளுவர் கோட்டம் பகுப்பாய்வு கூடம் | 3 |
| 24 | 6 | காசநோய் மருத்துவமனை | 3 |
| | | மொத்தம் | 72 |

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின், 27.06.2024 நாளிட்ட செயல்முறை ஆணையில் பாதுகாவலர்களுக்கு 2024-25ஆம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஊதிய நிர்ணயத்தில் தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.524/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, பாதுகாவலர்களுக்கு ஒரு மாத காலத்திற்கான ஊதியம் 30x524= ரூ.15,720/- ஆகும். எனவே, மேற்கண்ட பணியாளர்களுக்கு மாத ஊதியமாக ரூ.**15,720/-**ஆக நிர்ணயம் செய்ய ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது

கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) அவர்களின், 04.04.2025 நாளிட்ட ஆணையில் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் 50 மயான பூமிகளுக்கு 300 பாதுகாவலர்களை பணியமர்த்த ஒப்பம் கோரப்பட்டதில் தெரிவிக்கப்பட்ட ஊதியத்தினையே இந்த 72 பாதுகாவலர்களுக்கும் நிர்ணயம் செய்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் அரசாணை எண்-36-ன்படி, திருத்திய குறைந்தபட்ச ஊதியம் *for employment under any local authority of different classes of employees* அனைத்து மாநகராட்சிகள், நகராட்சி, பஞ்சாயத்து, ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு வெவ்வேறு சராசரி குறைந்தபட்ச தினக்கூலி நிர்ணயம் செய்யப்பட்டு, அமல்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை)எண்(2டி) எண்.36 (தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை (J1) நாள்.16.06.2023 –ன்படி *Unskilled*

இல் வரிசை எண் 4 ல் Watchman என்ற பதவிக்கு ஒருமாதத்திற்கு ஊதியம் ரூ.13,000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முதன்மை செயலர்/ஆணையர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறை அவர்களின், 29.02.2024 கடிதத்தின்படியும் மற்றும் ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படியும், அரசாணை எண்.62 ல் தெரிவிக்கப்பட்டபடி பணியாளர்களுக்கு அகவிலைப்படியாக ரூ.6,593/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் மேற்படி பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய விவரம் பின்வருமாறு.

**அட்டவணை-3**

| Employment under any Local Authority-All Corporations. | | | | |
|---|---|---|---|---|
| Serial Number | Classes of Employees | Minimum rate of Basic Wages | | |
| | | Per month (Rs P.) | DA Per month (2023) (Rs P.) | Total (Rs) |
| 1 | Unskilled | 13,000 | 6593 | 19,593 |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பாதுகாவலர்களுக்கு அடிப்படை ஊதியத்துடன், பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), பணியாளர் இன்சூரன்ஸ் (Employee's State Insurance), சரக்கு மற்றும் சேவை வரி (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் (Administrative Charges ) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மான என்.560/2020, நாள்.21.08.2020-ன்படி ஒப்பந்ததாரருக்கு நிர்வாக கட்டணமாக 10% (Salary+ESI+EPF) வழங்க அனுமதி அளித்துள்ளது.

**அட்டவணை-4**

| Employee's State Insurance (Upto Rs.21000) | | Employee's Provident Fund (Upto Rs.15000) | | GST | Administrative Charges |
|---|---|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary | | |
| 3.25% | 0.75% | 13% | 12.00% | 18% | Approximately (10%)(Exclusive GST) |

**அட்டவணை-5**

**தேவைப்படும் நிதி விவரம்**

| Sl. No | Category of Staff | Salary per Month (Rs) | EPF (13%) (Up to Rs.15000) | ESI (3.25 %) (Rs) | Adm in Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 12 months Rs (6x7x12 Months) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Security Guard | 19,593 | 1950 | 637 | 2218 | 4392 | 28,790 | 72 | 2,48,74,560 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் செயல்பட்டு வரும் நகர்ப்புற சமுதாய நல மையங்கள் மகப்பேறு மருத்துவமனைகள், மாநகராட்சி பகுப்பாய்வு கூடங்கள் மற்றும் காசநோய் மருத்துவமனைக்கு தேவையான 72 பாதுகாவலர்களை மூன்று சுழற்சி முறையில் (Three Shift

*basis)* தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,

2. இவர்களுக்கு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் அரசாணை எண்.36ன்படி மற்றும் முதன்மை செயலர் / ஆணையர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறை அவர்களின், 29.02.2024 நாளிட்ட ஆணையின்படியும் மொத்த மாத ஊதியம் (மாத ஊதியம் ரூ.13,000+ அகவிலைப்படி ரூ.6,593/-) ரூ.19,593/- என நிர்ணயம் செய்து வழங்க அனுமதிக்கும்,
3. இதற்கான நிர்வாக செலவினம் ரூ.2,48,74,560/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தி எட்டு இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து ஐநூற்றி அறுபது மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. பாதுகாவலர்களை பொது சுகாதாரத்துறை (தலைமையிடம்) மூலம் மின்னணு ஒப்பம் கோரி பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கும்,
5. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி நிதி பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் கூடுதல் நிதி ரூ.2,48,74,560/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தி எட்டு இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து ஐநூற்றி அறுபது மட்டும்) அனுமதித்து பின்னர் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பொது சுகாதாரம்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.102/2025, நாள்.19.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN02/00365/2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 706/2025** **பொருள் எண்.02**

**தானப்பத்திரம்**

மண்டலம்-02, கோட்டம்-19ல் (1) Mrs.R.Lakshmi (2) Mrs.M.Rajammal (3)Mrs.S.Kannigadevi (4) Mrs. K. Indumathi (5) Mrs. M. Nithiya (6) Mrs. M. Lakshmi and (7)Mr.M.Ramachandran அவர்கள் Telecom Nagar, Atthikulam Road, comprised in S.No.123/1D, 123/2A1, 127/1B, 126/1, 126/2, 126/3,127/1A, 127/2, 127/3 of Mathur Village, Madhavaram Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN02/00365/2025, நாள்:26.05.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்: 09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் (1)Mrs.R.Lakshmi (2)Mrs.M.Rajammal (3) Mrs.S.Kannigadevi (4)Mrs.K.Indumathi (5) Mrs.M.Nithiya (6) Mrs.M.Lakshmi and (7)Mr.M.Ramachandran என்பவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

*(அ)* (1)Mrs.R.Lakshmi (2)Mrs.M.Rajammal (3) Mrs.S.Kannigadevi (4)Mrs.K.Indumathi (5) Mrs.M.Nithiya (6) Mrs.M.Lakshmi and (7)Mr.M.Ramachandran என்பவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 5450.00சதுர மீட்டர் ஆகும். சாலைக்கென 1275.48சதுர மீட்டர் நிலம், TANGEDCOவிற்கு 20.96சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 21.16 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*(ஆ)* (1)Mrs.R.Lakshmi (2)Mrs.M.Rajammal (3) Mrs.S.Kannigadevi (4)Mrs.K.Indumathi (5) Mrs.M.Nithiya (6) Mrs.M.Lakshmi and (7)Mr.M.Ramachandran என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர்கள் பட்டாவினை, வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 6.00மீ சாலை மற்றும் 7.20மீ சாலை அமைந்துள்ளது. ஏனைய மனைகள் அனைத்தும் 72.00ச.மீ பரப்பளவு கொண்டுள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO விற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) Mrs. R. Lakshmi (2) Mrs. M. Rajammal (3) Mrs. S. Kannigadevi (4) Mrs.K.Indumathi (5) Mrs.M.Nithiya (6) Mrs.M. Lakshmi and (7)Mr.M.Ramachandran என்பவர்கள் அதற்கேற்றவாறு 21.16ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 20.96ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர்கள் (1)Mrs.R.Lakshmi (2)Mrs.M.Rajammal (3) Mrs.S.Kannigadevi (4)Mrs.K.Indumathi (5) Mrs.M.Nithiya (6) Mrs.M.Lakshmi and (7)Mr.M.Ramachandran என்பவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்கான 1275.48 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 21.16 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(ஊ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department, dated:16.07.2022ன்படி சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளர்களே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர்கள் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்கள்.

(எ) அபிவிருத்தியாளர்கள் தங்களின் கடிதத்தில், சாலை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

(ஏ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் (1) Mrs.R.Lakshmi (2)Mrs.M.Rajammal (3) Mrs. S. Kannigadevi (4) Mrs. K. Indumathi (5) Mrs. M. Nithiya (6) Mrs.M.Lakshmi and (7)Mr.M.Ramachandran அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) Telecom Nagar, Atthikulam Road, comprised in S.No.123/1D, 123/2A1, 127/1B, 126/1, 126/2, 126/3,127/1A, 127/2, 127/3 of Mathur Village, Madhavaram Taluk, Division-19, Zone-02ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 1275.48சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 21.16சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை (1)Mrs.R.Lakshmi (2)Mrs.M.Rajammal (3)Mrs.S.Kannigadevi (4)Mrs.K.Indumathi (5) Mrs.M.Nithiya (6) Mrs.M.Lakshmi and (7)Mr.M.Ramachandran அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2)மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர்கள் / அபிவிருத்தியாளர்கள் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.63/2025, நாள்.24.06.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>ந.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN02/00431/2025</u>**

**<u>ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 707/2025** **பொருள் எண்.03**

**<u>தானப்பத்திரம்</u>**

மண்டலம்-02, கோட்டம்-19ல் (1) Mr. D. Kumar (2) Mr. D. Balaji (3) Mrs. D. Gowri (4)Mrs. D. Dhanalakshmi (5) Mrs. Neela and (6) Mrs. J. Latha அவர்கள் Nehruji 3rd Street, comprised in Old S.No.79/2, as per patta 79/2K, 2H, 2I, 2J, 2L, 2B, 2F, 2O, 2E, 2D. 2N, 2M, 2C of Mathur Village, Madhavaram Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN02/00431/2025, நாள்:19.06.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் (1) Mr. D. Kumar (2) Mr. D. Balaji (3) Mrs. D. Gowri (4) Mrs. D. Dhanalakshmi (5) Mrs. Neela and (6) Mrs. J. Latha என்பவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

*(அ)* (1) Mr. D. Kumar (2) Mr. D. Balaji (3) Mrs. D. Gowri (4) Mrs. D. Dhanalakshmi (5) Mrs. Neela and (6) Mrs. J. Latha என்பவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, நிலத்தின் மொத்தப் பரப்பளவு 8067.17சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 2058.60சதுர மீட்டர் நிலம், TANGEDCOவிற்கு 31.00சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 31.00சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*(ஆ)* (1) Mr. D. Kumar (2) Mr. D. Balaji (3) Mrs. D. Gowri (4) Mrs. D. Dhanalakshmi (5) Mrs. Neela and (6) Mrs.J.Latha என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவர்களாக அறியப்படுகிறார்கள். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

*(இ)* விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 7.20மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில்

உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின்படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) Mr. D. Kumar (2) Mr. D. Balaji (3)Mrs.D.Gowri (4) Mrs. D. Dhanalakshmi (5) Mrs. Neela and (6) Mrs. J. Latha அவர்கள் அதற்கேற்றவாறு 31.00ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 31.00ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி, 10,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைப்பிரிவு 10,000 சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர்கள் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர்கள் (1)Mr. D. Kumar (2) Mr. D. Balaji (3) Mrs. D. Gowri (4) Mrs. D. Dhanalakshmi (5)Mrs.Neela and (6) Mrs. J.Latha என்பவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்கான 2058.60சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 31.00சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department, dated:16.07.2022ன்படி, சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளர்களே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர்கள் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்கள்.

(ஏ) அபிவிருத்தியாளர்கள் தங்களின் கடிதத்தில், சாலை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

(ஐ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் (1) Mr. D. Kumar (2) Mr. D. Balaji (3) Mrs. D. Gowri (4) Mrs. D. Dhanalakshmi (5) Mrs. Neela and (6) Mrs. J. Latha அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) Nehruji 3rd Street, comprised in Old S.No.79/2, as per patta 79/2K, 2H, 2I, 2J, 2L, 2B, 2F, 2O, 2E, 2D. 2N, 2M, 2C of Mathur Village, Madhavaram Taluk, Division - 19, Zone-02 ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 2058.60சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 31.00சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை (1)Mr.D.Kumar (2)Mr.D.Balaji (3) Mrs. D. Gowri (4) Mrs. D. Dhanalakshmi (5) Mrs.Neela and (6) Mrs.J. Latha அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2)மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர்கள் / அபிவிருத்தியாளர்கள் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.71/2025, நாள்.24.06.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.D1/SD/WDCN03/00283/2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 708/2025** **பொருள் எண்.04**

**தானப்பத்திரம்**

மண்டலம்-03, கோட்டம் -32ல் (1) Mr. S. Bharath Kumar Chordia (2) Mr. P. Annadurai and (3) Mr. A. Krishnamurthy அவர்கள் Kamaraj Nagar Main Road, Puthagaram, Chennai 600099 comprised in S.No.42/2A8, 42/55 & 42/56 part of Puthagaram Village, Madhavaram Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN03/00283/2025, நாள்:23.04.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

விண்ணப்பதாரர்கள் (1) Mr.S.Bharath Kumar Chordia (2) Mr.P.Annadurai and (3)Mr.A.Krishnamurthy என்பவர்கள் மனைஉட்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

*(அ)* (1) Mr.S. Bharath Kumar Chordia (2) Mr.P.Annadurai and (3) Mr.A. Krishnamurthy என்பவர்கள் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1161.00சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்காக 413.67சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*(ஆ)* (1) Mr. S. Bharath Kumar Chordia (2) Mr. P.Annadurai and (3) Mr. A. Krishnamurthy என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார்கள். மனை உரிமையாளர்கள் பட்டாவினை, வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

*(இ)* மனைஉட்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர்கள் (1) Mr. S. Bharath Kumar Chordia (2) Mr. P. Annadurai and (3) Mr. A. Krishnamurthy என்பவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்காக 413.67சதுர மீட்டர் நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

*(ஏ)* அபிவிருத்தியாளர்கள் தங்களின் கடிதத்தில், சாலை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

(ஐ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் (1) Mr. S. Bharath Kumar Chordia (2) Mr. P. Annadurai and (3) Mr. A. Krishnamurthy அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1)Kamaraj Nagar Main Road, Puthagaram, Chennai - 600099 comprised in S.No.42/2A8, 42/55 & 42/56 part of Puthagaram Village, Madhavaram Taluk, Division - 32, Zone 03ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 413.67சதுர மீட்டர் நிலத்தை (1) Mr. S. Bharath Kumar Chordia (2) Mr. P. Annadurai and (3) Mr. A. Krishnamurthy அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2)மனைஉட்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர்கள் / அபிவிருத்தியாளர்கள் உள்கட்டமைப்புகளான சாலை, மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.64/2025, நாள்.24.06.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ந.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN04/00864/2023**

**ஆணையர் அவர்களின் 11.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 709/2025** **பொருள் எண்.05**

**தானப்பத்திரம்**

மண்டலம்-04, கோட்டம் – 34ல் M/s. Velayutham Homes Rep. by Mr.V.Anand அவர்கள் KKR Garden, 1st Main Road, (KKR Town, 1st Main Road) comprised in S.No.22, T.S.No.2/2, Block No.7, Ward - 001 of Jambuli Village, Perambur Taluk, Chennai Districtல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN04/00864/2023, நாள்:16.10.2023ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டடப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்: 09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரரான M/s. Velayutham Homes Rep. by Mr. V. Anand மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) M/s. Velayutham Homes Rep. by Mr.V.Anand என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1692.77சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 313.34 சதுர மீட்டர் நிலம், TANGEDCOவிற்கு 7.25 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 8.75 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) M/s.Velayutham Homes Rep. by Mr.V.Anand என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், பெரம்பூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 7.20மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக)1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில்0.5%TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். M/s.Velayutham Homes Rep. by Mr.V.Anand அவர்கள் அதற்கேற்றவாறு 8.75ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 7.25ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 3,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு விண்ணப்பதாரர் அளிக்க வேண்டியதில்லை. மனைப்பிரிவு 3,000 சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு அளிக்க வேண்டிய நிலை எழவில்லை.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s.Velayutham Homes Rep. by Mr.V.Anand அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கான 313.34சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 8.75சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்படவேண்டும்.

ஆகவே, KKR Garden, 1st Main Road, (KKR Town, 1st Main Road) comprised in S.No.22, T.S.No.2/2, Block No.7, Ward - 001 of Jambuli Village, Perambur Taluk, Chennai District, Division-34, Zone-04ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 313.34சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 8.75சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை M/s. Velayutham Homes Rep.by Mr.V.Anand அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

24.12.2024 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.81/2024, நாள்:24.12.2024ன்படி, நிலைக்குழு (நகரமைப்பு) பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்திற்கிணங்க கள ஆய்வுக்கு பின்னர் இப்பொருள் குறித்து முடிவெடுக்கும் பொருட்டு ஒத்திவைக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலே குறிப்பிட்டுள்ள நிலத்தை செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் ஆகியோரால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிலத்தின் வருவாய் வகைப்பாடு ரயத்துவாரி மனை என்று உள்ளது. மேலும் *Online Patta*விலும் ரயத்துவாரி மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, KKR Garden, 1st Main Road, (KKR Town 1st Main Road) comprised in S.No.22, T.S.No.2/2, Block No.7, Ward - 001 of Jambuli Village, Perambur Taluk, Chennai District, Division-34, Zone-04ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 313.34சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 8.75 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை M/s. Velayutham Homes Rep. by Mr.V.Anand அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.65/2025, நாள்.24.06.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.D1/0065/2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 710/2025** **பொருள் எண்.06**

**தானப்பத்திரம்**

மண்டலம்-05, கோட்டம்-62ல் Mrs.S. Syamala Devi, (alias) Syamaladevi அவர்கள் Door No.193/85, Swamy (N) Street, Chintadripet, Chennai - 600002 comprised in R.S.No.1148, Block No.16 of Chintadripet Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN05/01244/2025, நாள்:19.02.2025ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-05ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 130.00ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 7.80மீ அகல Swamy (N) Street அமையபெற்றுள்ளது. Swamy (N) Street சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 15.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 18.605ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mrs.S.Syamala Devi, (alias) Syamaladevi அவர்களிடமிருந்து Door No.193/85, Swamy (N) Street, Chintadripet, Chennai - 600002 comprised in R.S.No.1148, Block No.16 of Chintadripet Village, Division - 62, Zone - 05ல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 18.605ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.66/2025, நாள்.24.06.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ந.து.ந.க.எண்.D1/0066/2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 711/2025** **பொருள் எண்.07**

**தானப்பத்திரம்**

மண்டலம்-06, கோட்டம்-68ல் (1) Mr.K.Elangovan (2) Mr.K.Rajendran (3)Mr.K.Sudhakar அவர்கள் Plot No.8, New Door No.24, Paper Mills Road, Lakshmanan Nagar, Peravallur, Chennai - 600082 comprised in T.S.No.66/1, Block No.1 of Peravallur Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/02129/2025, நாள்:17.03.2025ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 271.50ச.மீ ஆகும். விண்ணப்பதாரர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 17.75மீ அகல Paper Mills Road அமைய பெற்றுள்ளது. Paper Mills Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 2.50ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் (1) Mr.K.Elangovan (2) Mr.K.Rajendran (3)Mr.K.Sudhakar அவர்களிடமிருந்து Plot No.8, New Door No.24, Paper Mills Road, Lakshmanan Nagar, Peravallur, Chennai - 600082 comprised in T.S.No.66/1, Block No.1 of Peravallur Village, Division-68, Zone-06ல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 2.50ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.67/2025, நாள்.24.06.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ந.து.ந.க.எண்.D1 / SD / WDCN15 / 00407 / 2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 712/2025** **பொருள் எண்.08**

**தானப்பத்திரம்**

மண்டலம்-15, கோட்டம்-192ல் M/s.Ocean Inspirations LLP represented by its designated partner V. Gayathri அவர்கள் East Coast Road, Neelankarai, Chennai - 600115, comprised in S.No.82/113 & 82/2A1A1A1A3A of Neelankarai Villageல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN15/00407/2025, நாள்:09.06.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

விண்ணப்பதாரர் M/s. Ocean Inspirations LLP represented by its designated partner V.Gayathri அவர்கள் மனைஉட்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

*(அ)* M/s. Ocean Inspirations LLP represented by its designated partner V. Gayathri என்பவர் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, நிலத்தின் மொத்தப் பரப்பளவு 5268.00சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்காக 1335.23சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*(ஆ)* M/s. Ocean Inspirations LLP represented by its designated partner V. Gayathri என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

*(இ)* மனைஉட்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s. Ocean Inspirations LLP represented by its designated partner V.Gayathri எனபவர் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும், சாலைக்காக 1335.23சதுர மீட்டர் நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

*(ஈ)* மனைஉட்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலை சீரமைப்புக்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்க வேண்டும்.

எனவே, East Coast Road, Neelankarai, Chennai - 600115, comprised in S.No.82/113 & 82/2A1A1A1A3A of Neelankarai Village, Division - 192, Zone-15ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட

வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட 1335.23சதுர மீட்டர் நிலத்தை M/s. Ocean Inspirations LLP represented by its designated partner V. Gayathri அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.70/2025, நாள்.24.06.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.D2/1562/2025**

**ஆணையர் அவர்களின் 19.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 713/2025** **பொருள் எண்.09**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நகரமைப்பு துறை - மண்டலம்-13, வார்டு-170, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் - சென்னை தரமணி சிபிடி வளாகத்திலுள்ள சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 16,992 சதுர அடி காலி நிலத்தில் புதிய ஆராய்ச்சி நூலகக் கட்டடம் கட்டுவதற்கு கட்டட வரைபட அனுமதி கட்டணம் செலுத்துவதில் விலக்கு அளிக்க - அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி.**

மண்டலம்-13, வார்டு-170ல், சென்னை தரமணி சிபிடி வளாகத்தில் இயங்கி வரும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் உலகின் அதிகமான தமிழ் ஆவணங்களை (5 லட்சம் ஆவணங்களை) பாதுகாக்கும் காப்பகமாகும். இந்நூலகம் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 16,992சதுர அடி மொத்த பரப்பளவில் 8,972சதுர அடி பரப்பளவில் அமைந்திருந்த 2 மாடி கட்டடத்தில் கடந்த 30.05.2005 முதல் செயல்பட்டு வந்தது. இக்கட்டடம் 02.09.2010 முதல் ஆண்டுக்கு ரூ.10,000/-என 30 ஆண்டுகளுக்கு அரசாணை (நிலை) எண்.256 பள்ளிக் கல்வித் (கே1) துறை மூலம் குத்தகைக்கு அளிக்கப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இடப்பற்றாக்குறை காரணமாக, புதிய கட்டடம் கட்டுவதற்காக தொழில்நுட்பக் கல்வித்துறைக்கு அளிக்கப்பட்ட விண்ணப்பத்தை ஏற்று, மேற்படி நூலகம் அமைத்த இடத்தின் அருகில் பிரிண்டிங் டெக்னாலஜி பயிலகத்திற்கு சொந்தமான 14,989சதுரடி நிலத்தை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திற்கு 29.12.2021 முதல் 25 ஆண்டுகளுக்கு குத்தகை அளிக்க அரசாணை (நிலை) எண்.269 உயர்கல்வித் (B1) துறை வெளியிடப்பட்டு, குத்தகைக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக பழைய கட்டடம் என்பதாலும், கட்டடத்தின் பல்வேறு இடங்களில் நீர்க்கசிவு ஏற்பட்டு வருவதாலும், சென்னையில் அடிக்கடி ஏற்படும் இயற்கைப் பேரிடரின் போது இந்நூலகம் அமைந்த வளாகத்தில் பாதிப்படைவதனாலும் இந்நூலகத்திலுள்ள அரிய தமிழ் ஆவணங்களை மற்றும் விலைமதிப்பற்ற அறிவுக்கருவூலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, நூலகக் கட்டடத்தை இடித்து விட்டு புதிய கட்டடம் கட்டுவது பற்றி அரசிடம் முறையீடு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து, மாவட்ட நூலக அலுவலர், உள்ளூர் நூலக ஆணையம், சென்னை-600002 அவர்களின் 08.08.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளதன்படி, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் கோரிக்கையை ஏற்று, சென்னை தரமணி சிபிடி வளாகத்திலுள்ள சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 16,992 சதுர அடி மொத்த பரப்பளவில் 8,972 சதுர அடி பரப்பளவில் அமைந்திருந்த 2 மாடி கட்டடத்தை இடிப்பதற்கு பெருநகர சென்னை

மாநகராட்சியின் அனுமதி பெறப்பட்டு, தற்போது, அக்கட்டடம் இடிக்கப்பட்டு காலி மனையாக உள்ளது.

எனவே, அரசிற்கு சொந்தமான மேற்சொன்ன இரண்டு மனைகளிலும் சேர்த்து அரசின் அனுமதியுடன் புதிய கட்டடம் கட்டுவதற்காக ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் (CMDA) அனுமதி பெறவேண்டி கடந்த 30.04.2025 அன்று புதிய கட்டட வரைபட அனுமதி படிவம் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் ஆய்வுகள் தொடர்பான ஆவணமாக்கல், ஆவணங்களைப் பாதுகாத்தல் போன்ற பெரும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இது ஒரு இலாபநோக்கமற்ற வகையில் இயங்கிவரும் ஒரு பொது தொண்டு நிறுவனமாகும். இதன் முக்கியத்துவத்தை அறிந்த தமிழ்நாடு அரசு மேற்குறிப்பிட்ட மனைகளை அளித்ததுடன் இந்த புதிய கட்டுமானத்திற்கு ரூ.5 கோடி அளிப்பதாக உறுதி அளித்துள்ளது. இந்நூலகப் பணிகளுக்காக அரசு தொடர்மானியமும் வழங்கி வருகிறது. பள்ளிக்கல்வித்துறை, தொல்லியல் துறை ஆகியவற்றுடன் இணைந்து பல்வேறு பணிகளை முன்னெடுத்துள்ளது. அண்மையில், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் இயங்கிவரும் சிந்துவெளி ஆய்வு மையத்தில் ஐராவதம் மகாதேவன் இருக்கையை அமைப்பதற்கு ரூபாய் இரண்டு கோடி அளிப்பதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்நூலகம் உலகத்தரத்தில் நூல்களை ஆவணமாக்குதல், எண்ணிமைப்படுத்தி பாதுகாத்தல் உள்ளிட்டவற்றை மேற்கொண்டு வருகிறது. இந்நூலகம், தமிழ் ஆராய்ச்சி செய்யும் மாணவர்கள், பல்வேறு பணிகளில் ஆராய்ச்சி செய்யும் ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது.

மேற்படி, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் புதிய கட்டடம் தமிழ்நாடு அரசின் உதவியோடும் பொதுமக்களின் நிதியுதவியுடனும், தமிழ் ஆர்வலர்கள் மூலம் திரட்டப்படும் நிதியின் மூலமாகவே கட்டப்பட உள்ளது. இதற்கான கட்டுமான அனுமதி நிறுவனம் பிரிவில் (Institution Category) கோரப்பட்டுள்ளது., இந்த புதிய வரைபட அனுமதிக்கான முழு கட்டணத்திலிருந்து விலக்கு அளித்து, வரைபட அனுமதி வழங்குமாறு கேட்டு 23.04.2025 நாளிட்ட கடிதம் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களுக்கு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது .

தற்போது புதிய கட்டடம் கட்டுவதற்கான வரைபட அனுமதி கட்டணத்தில் விலக்களிப்பது தொடர்பாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் (CMDA) மூலம் அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அரசின் அனுமதி பெறும் நிலையில் உள்ளது.

மேற்கண்டவற்றை குறிப்பிட்டு இயக்குநர், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், அவர்களின் 13.06.2025 நாளிட்ட கடிதத்தில் கட்டிட அனுமதி கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் புதிய கட்டடம் தமிழ்நாடு அரசின் உதவியோடும், பொதுமக்களின் நிதியுதவியுடனும், தமிழ் ஆர்வலர்கள் மூலம் திரட்டப்படும் நிதியின் மூலமாகவே கட்டப்பட உள்ள நிலையில், இந்தப் புதிய கட்டடத்தின் நோக்கம், விளைவு, பயன்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு சிறப்பு சலுகையாக கட்டட வரைபட அனுமதி கட்டணம் ரூ.16,84,700/- விலக்களிப்பதற்கு அரசிடம் ஒப்புதல் பெறுவதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.69/2025, நாள்.24.06.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**வ.வ.அ.இ.பொ.து.வ.செ.ப.ந.க.எண்.பி4 / 224 / 2025**

**ஆணையர் அவர்களின் 16.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 714/2025** **பொருள் எண்.10**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வடக்கு வட்டாரம் (இயந்திரப் பொறியியல் துறை) - தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் 50 எண்ணிக்கையில் தலைமையகத்தில் கொள்முதல் செய்யப்பட்ட இலகுரக காம்பேக்டர் வாகன இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஆணை 31 / 07 / 2025 அன்றுடன் முடிவடைகிறது. இதில் மண்டலம் 4 லாரி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட 12 எண்ணிக்கையில் இலகுரக காம்பேக்டர்கள் 6 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட வாகனங்களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு மின்னனு மூலம் ஒப்பந்தம் முறையில் பணி அமர்த்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கும் வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் *4* லாரி நிலையத்தில் துப்புரவு பணிக்கான இலகு ரக காம்பேக்டர் வாகன இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஆணை வரும் *31/07/2025* அன்றுடன் முடிவடைய இருப்பதால், குப்பை அகற்றும் வாகனங்கள் அன்றாடம் மூன்று வேளைகளும் இயக்கப்படுவதால், அவைகளின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஆகிய பணிகள் பிரதானமாகிறது. எனவே, அன்றாட பணிகளை மேற்கொள்ளும் வாகனங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு இந்த பராமரிப்பு பணிகள் தொடர்ந்து ஒரு வருட காலத்திற்கு *(365* நாட்கள்*)* மின்னனு ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களின் விவரம்

| இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் | |
|---|---|
| Sl. No | வாகனங்கள் |
| 1 | TN 04 AQ 4870 |
| 2 | TN 04 AQ 4288 |
| 3 | TN 04 AQ 4716 |
| 4 | TN 04 AQ 4723 |
| 5 | TN 04 AQ 6408 |
| 6 | TN 04 AQ 6405 |
| 7 | TN 04 AQ 6435 |
| 8 | TN 04 AQ 6415 |
| 9 | TN 04 AQ 7304 |
| 10 | TN 04 AQ 4743 |
| 11 | TN 04 AP 9038 |
| 12 | TN 04 AP 9028 |

மேற்கண்ட கணக்கீட்டின்படி மண்டலம் *4* லாரி நிலையத்தில் *4* வது மண்டலத்தின் அனைத்து பணிகளையும் தொய்வில்லாமல் மேற்கொள்ள இயக்குதல் மற்றும் பராமரிப்பு

பணிகள் மின்னணு ஒப்பம் கோரி பணி அமர்த்தலாம் என கருதப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் தனியார் ஓட்டுனர்கள் மற்றும் பராமரிப்பு பணிக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய விவரம் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| Operation Rate for 12 Vehicles 24 Driver (2 Shifts)<br>Rs. 1151.64 x 24 No x 365 Days | Rs. 1,00,88,366.40/- (Or)<br>Rs. 1,00,88,366/-<br>Incl. of GST |
| Maintenance Rate for 12 Vehicle's<br>Rs. 904 x 12 x 365 Days | Rs.39,59,520/- Incl. of GST |
| Grand Total | Rs.1,40,47,886/- Incl. of GST |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் 12 எண்ணிக்கையில் இலகுரக 6 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட வாகனங்களை இயக்குதல் பணிக்கு ஒரு வருட காலத்திற்கு ஓட்டுநர்களுக்கு ஆகும் செலவீனம் ரூ.1,00,88,366/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து எட்டாயிரத்து முந்நூற்று அறுபத்து ஆறு மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட), பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவீனம் ரூ. 39,59,520/- (ரூபாய் முப்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று இருபது மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) அதன்படி 365 நாட்களுக்கு ஆகும் தோராய மொத்த செலவீனம் ரூ. 1,40,47,886/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து எண்ணூற்று எண்பத்து ஆறு மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) மேற்படி செலவீனம், 2025-26 ஆம் ஆண்டிற்கான வடக்கு வட்டாரம் (40-41-04) கணக்கு எண் 230-800-300, Hire Charges கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார மண்டலம்-4 லாரி நிலையத்திற்கு உட்பட்ட 12 எண்ணிக்கையில் இலகுரக 6 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட வாகனங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு ஒரு வருட காலத்திற்கு 365 நாட்களுக்கு இயக்குதல் பணிகளை காலை / மதியம் / இரவு வேளைகளில் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 24 எண்ணிக்கை ஓட்டுநர்களுக்கு ஆகும் செலவீனம் ரூ. 1,00,88,366/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து எட்டாயிரத்து முந்நூற்று அறுபத்து ஆறு மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட), பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவீனம் ரூ. 39,59,520/- (ரூபாய் முப்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று இருபது மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) அதன்படி 365 நாட்களுக்கு ஆகும் தோராய மொத்த செலவீனம் ரூ. 1,40,47,886/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து எண்ணூற்று எண்பத்து ஆறு மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) செலவீனத்தில்

பணியமர்த்த மின்னனு ஒப்பம் கோரி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்.

2. இதற்கான செலவீனமான ரூ. 1,40,47,886/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து எண்ணூற்று எண்பத்து ஆறு மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) 2025-26 ஆண்டில் நிதி ஆண்டிற்கென, வடக்கு வட்டாரம் (40-41-04) கணக்கு குறியீட்டு எண் 230-800-300 Hire Charge கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**வ.வ.அ.இ.பொ.து.வ.செ.ப.ந.க.எண்.பி4 / 223 / 2025**

**ஆணையர் அவர்களின் 16.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 715/2025** **பொருள் எண்.11**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வடக்கு வட்டாரம் (இயந்திரப் பொறியியல் துறை) - தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் 50 எண்ணிக்கையில் தலைமையகத்தில் கொள்முதல் செய்யப்பட்ட இலகுரக காம்பேக்டர் வாகன இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஆணை 31/07/2025 அன்றுடன் முடிவடைகிறது - இதில் மண்டலம் 5 லாரி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட 11 எண்ணிக்கையில் இலகுரக காம்பேக்டர்கள் 6 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட வாகனங்களை ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு மின்னணு மூலம் ஒப்பந்தம் முறையில் பணி அமர்த்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கும் வடக்கு வட்டாரத்திக்கு உட்பட்ட மண்டலம் 5 லாரி நிலையத்தில் துப்புரவு பணிக்கான இலகுரக காம்பேக்டர் வாகன இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஆணை வரும் 31/07/2025 அன்றுடன் முடிவடைய இருப்பதால், குப்பை அகற்றும் வாகனங்கள் அன்றாடம் மூன்று வேளைகளும் இயக்கப்படுவதால், அவைகளின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஆகிய பணிகள் பிரதானமாகிறது. எனவே, அன்றாட பணிகளை மேற்கொள்ளும் வாகனங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு இந்த பராமரிப்பு பணிகள் தொடர்ந்து ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) மின்னணு ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களின் விவரம்

| இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் | |
|---|---|
| Sl.No | வாகனங்கள் |
| 1 | TN04 AQ 4749 |
| 2 | TN04 AQ 4752 |
| 3 | TN04 AQ 4753 |
| 4 | TN04 AQ 4260 |
| 5 | TN04 AQ 4269 |
| 6 | TN04 AQ 4842 |
| 7 | TN04 AQ 7294 |
| 8 | TN04 AQ 7295 |
| 9 | TN04 AQ 7328 |
| 10 | TN04 AQ 6261 |
| 11 | TN04 AQ 7297 |

மேற்கண்ட கணக்கீட்டின்படி மண்டலம் 5 லாரி நிலையத்தில் 5 வது மண்டலத்தின் அனைத்து பணிகளையும் தொய்வில்லாமல் மேற்கொள்ள இயக்குதல் மற்றும் பராமரிப்பு

பணிகள் மின்னணு ஒப்பம் கோரி பணி அமர்த்தலாம் என கருதப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் தனியார் ஓட்டுனர்கள் மற்றும் பராமரிப்பு பணிக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய விவரம் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| Operation Rate for 11 Vehicles 22 Driver (2 Shifts)<br>Rs.1151.64 x 11 Nos. x 2 Shifts x 365 Days | Rs.92,47,669.20 (RO) Rs.92,47,669/- Incl. of GST |
| Maintenance Rate for 11 Vehicle's<br>Rs.904 x 11 Nos. x 365 Days | Rs.36,29,560/- Incl. of GST |
| Grand Total | Rs.1,28,77,229/- Incl. of GST |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் 11 எண்ணிக்கையில் இலகுரக 6 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட வாகனங்களை இயக்குதல் பணிக்கு ஒரு வருட காலத்திற்கு ஓட்டுநர்களுக்கு ஆகும் செலவீனம் ரூ.92,47,669/- (ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து அறுநூற்று அறுபத்து ஒன்பது மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) பராமரிப்பு பணிக்கு ஆகும் செலவீனம் ரூ.36,29,560/- (ரூபாய் முப்பத்தாறு இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) அதன்படி 365 நாட்களுக்கு ஆகும் தோராய மொத்த செலவீனம் ரூ.1,28,77,229/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தெட்டு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து இருநூற்று இருபத்தி ஒன்பது மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) மேற்படி செலவீனம் 2025-26 ஆம் ஆண்டிற்கான வடக்கு வட்டாரம் (40-41-04) கணக்கு எண் 230-800-300, Hire Charges கீழ் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

மேற்குறிப்பிட்டுள்ள பெருநகரசென்னை மாநகராட்சி, மண்டலம்–13, கோட்டம்–170 சூர்யா நகர் மற்றும் லேக் வியூ தெரு, கோட்டம்–178 பாரதி நகர், 180 திருவள்ளுவர் நகர் 7வது தெரு விரிவு ஆகிய இடங்களில் உள்ள மயான பூமிகளை மேம்படுத்தும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் –13, கோட்டம்– 170, சூர்யா நகர் மற்றும் லேக் வியூ தெரு, கோட்டம் – 178 பாரதி நகர், 180 திருவள்ளுவர் நகர் 7வது தெரு விரிவு ஆகிய இடங்களில் உள்ள மயான பூமிகளை மேம்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்கும்,

2. மேற்கண்டுள்ள பணிக்கு 2024-2025ஆம் ஆண்டின் விலைகளின்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,50,89,000.00/- க்கான திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. இப்பணிக்கு பெருநகர சென்னை மாநகராட்சி நிதி ஒதுக்கீடு அளிக்கவும்,

4. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ.6ந.க.எண்.இ1/ UNIT17/5/2025**

**ஆணையர் அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 730/2025** **பொருள் எண்.26**

**பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்-6, வார்டு-75, சத்தியவாணி முத்துநகர் பகுதியில் அமைந்துள்ள Plastic Bailing Centre வளாகத்தில் உள்ள Plastic Bailing Centre மற்றும் Plastic Shredding Machine yard கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட சத்தியவாணி முத்துநகர் பகுதியில் அமைந்துள்ள *Plastic Bailing Centre* வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடம் *-1 Plastic Bailing Centre* கட்டிடம் தரைதளம் – 754.40 சதுர மீட்டர் 1.27 ஏக்கர் நிலப்பரப்பில் 2004 ஆம் ஆண்டு கட்டப்பட்டு மற்றும் கட்டிடம் *-2 - Plastic Shredding Machine yard 41.50* சதுர மீட்டர் 1.27 ஏக்கர் நிலப்பரப்பில் 2011 ஆம் ஆண்டும் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் *Plastic Bailing Centre* வளாகத்தினை உள்விளையாட்டு அரங்கமாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால், இக்கட்டிடங்களை இடிப்பது அவசியமாகிறது.

தற்போதுள்ள 2 கட்டிடங்களை இடிக்க ஒப்பம் கோரும் பொழுது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் கட்டிடம் *-1 Plastic Bailing Centre* -7500 சதுர அடி முதல் 10,000 சதுரடி வரை உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ 2,00,000/- மற்றும் கட்டிடம் *-2 - Plastic Shredding Machine yard 1000* சதுர அடி வரை உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ 25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், சத்யவாணி முத்து நகரில் அமைந்துள்ள நவீன குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை கழிவுகள் மற்றும் மருத்துவக்கழிவுகள் மூலம் சிவஷண்முகபுரம் மற்றும் சத்தியவாணி முத்து நகர் பகுதி வாழ் மக்கள் சுகாதார சீர்கேட்டால் பாதிக்கப்படுவதாக தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் திரு.*T*. வசந்தகுமார் வழக்கு எண் *NHRC/2229/13/2019/FC*, திரு.நாகேந்திரன் வழக்கு எண் *SHRC /12677/2019/C3*, திரு.*E.E*. ராஜேந்திரன் வழக்கு எண் *F.NO/03 /60/2020*, திரு.கருணாகரன் *F.NO/10/94/2019* ஆகியோர்களால் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் அப்பகுதியில் குப்பை கழிவுகள் கொட்டப்படுவது ஜூலை 2020 ஆம் ஆண்டு முதலே நிறுத்தப்பட்டு அப்பகுதியில் *Plastic Bailing Machine* அமைக்கப்பட்டு நெகிழிகள் பண்டல் செய்யப்பட்டு சிமெண்ட் தொழிற்சாலைக்கு ஒப்பந்த அடிப்படையில் அனுப்பப்பட்டு வருகிறது.

மேலும், இதன் தொடர்ச்சியாக பசுமை தீர்ப்பாயத்தின் சிறப்பு செயலாளர் குழு கடந்த 22.06.2023 அன்று குப்பை கொட்டும் வளாகத்தினை ஆய்வு மேற்கொண்டனர் ஆய்வின் பொழுது சுகாதாரத்தினை பேணிக்காத்திட வழங்கிய நெறி முறைகள் செய்து முடிக்கப்பட்டு அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்விடம் சம்மந்தமாக மேலே

குறிப்பிட்டுள்ள வழக்குகள் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் நிலுவையில் உள்ளது.

மேலும், மத்திய துணை வட்டார ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின் படி மண்டலம்-6-ல் அமைந்துள்ள *Plastic Bailing Machine*-ஐ அகற்றி மண்டலம்-7-ல் அமைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட சத்தியவாணி முத்துநகர் பகுதியில் அமைந்துள்ள *Plastic Bailing Centre* வளாகத்தில் அமைந்துள்ள *Plastic Bailing Centre* கட்டிடம் மற்றும் *Plastic Shredding Machine yard* கட்டிடத்தின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**கட்டிடம்-1**

| | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | சத்தியவாணி முத்துநகர் பகுதியில் அமைந்துள்ள *Plastic Bailing Centre* வளாகத்தில் உள்ள *Plastic Bailing Centre* கட்டிடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2004 ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம் – 754.40 சதுர மீட்டர் (754.40 m2 x 10.76 = 8117.34 sq.ft ) |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1.27 ஏக்கர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ .558080.32 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் உள்ளது |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | உள்விளையாட்டு அரங்கம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | விளையாட்டு திடல் அமைப்பதற்கு |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சட்டமன்ற உறுப்பினர் ( திரு .வி .க நகர் ) அவர்கள் |

**கட்டிடம் -2**

| | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | சத்தியவாணி முத்துநகர் பகுதியில் அமைந்துள்ள *Plastic Bailing Centre* வளாகத்தில் உள்ள *Plastic Shredding Machine yard* கட்டிடம் |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2011 ஆம் ஆண்டு |

| | | |
|---|---|---|
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைதளம் – 41.50 சதுர மீட்டர் (41.50 m2 x 10.76 = 446.54 sq.ft ) |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1.27 ஏக்கர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ . 68724.58 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | உள்விளையாட்டு அரங்கம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | விளையாட்டு திடல் அமைப்பதற்கு |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சட்டமன்ற உறுப்பினர் ( திரு .வி .க நகர் ) அவர்கள் |

எனவே, மண்டலம்-6, பகுதி-17, வார்டு-75க்குட்பட்ட சத்தியவாணி முத்துநகர் பகுதியில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான *Plastic Bailing Centre* வளாகத்தில் உள்ள *Plastic Bailing Centre* மற்றும் *Plastic Shredding Machine yard* ஆகிய இரண்டு கட்டிடங்களை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.426/2025, நாள்.24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ந.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN08/00420/2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 731/2025** **பொருள் எண்.27**

**தானப்பத்திரம்**

மண்டலம்-08, கோட்டம் - 104ல் (1) Miss. Apoorva (2) Mrs. N. Sridevi (3) M/s. Nova Life Space Developments LLP represented by its Partner Mr. J. Ramakrishnan அவர்கள் TNHB Plot No.1960A & 1960B, Old S.No.57/2 part, 59/2 part, 60/1 part & 56/2 part, T.S.No.91/3 & 91/4, Block No.32, Ward-01, Villivakkam Village, Aminjikarai Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN08/00420/2025, நாள்:13.06.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் (1) Miss. Apoorva (2) Mrs. N. Sridevi (3) M/s. Nova Life Space Developments LLP represented by its Partner Mr.J.Ramakrishnan என்பவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

*(அ)* (1) Miss. Apoorva (2) Mrs. N. Sridevi (3) M/s. Nova Life Space Developments LLP represented by its Partner Mr. J. Ramakrishnan என்பவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 3027.34சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 445.67 சதுர மீட்டர் நிலம், TANGEDCO விற்கு 13.14 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 13.05 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*(ஆ)* (1) Miss. Apoorva (2) Mrs. N. Sridevi (3) M/s. Nova Life Space Developments LLP represented by its Partner Mr. J. Ramakrishnan என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவர்களாக அறியப்படுகிறார்கள். மனை உரிமையாளர்கள் பட்டாவினை, மண்டல துணை வட்டாட்சியர், அமைந்தகரை வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

*(இ)* விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 7.20 m & 9.00m அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில்

உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) Miss. Apoorva (2) Mrs. N. Sridevi (3) M/s. Nova Life Space Developments LLP represented by its Partner Mr.J. Ramakrishnan அவர்கள் அதற்கேற்றவாறு 13.05ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 13.14ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 10,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைஉட்பிரிவு 10,000சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர்கள் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர்கள் (1) Miss. Apoorva (2) Mrs. N. Sridevi (3) M/s. Nova Life Space Developments LLP represented by its Partner Mr. J. Ramakrishnan என்பவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்கான 445.67சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 13.05 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated:16.07.2022ன்படி, சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளர்களே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர்கள் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்கள்.

(ஏ) அபிவிருத்தியாளர்கள் தங்களின் கடிதத்தில், சாலைகள், வடிகால் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஐ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் (1) Miss. Apoorva (2)Mrs. N. Sridevi (3) M/s. Nova Life Space Developments LLP represented by its Partner Mr.J.Ramakrishnan அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு

நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) TNHB Plot No.1960A & 1960B, Old S.No.57/2 part, 59/2 part, 60/1 part & 56/2 part, T.S.No.91/3 & 91/4, Block No.32, Ward -01, Villivakkam Village, Aminjikarai Taluk, Division 104, Zone - 08ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 445.67சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 13.05 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை (1) Miss. Apoorva (2) Mrs.N.Sridevi (3) M/s. Nova Life Space Developments LLP represented by its Partner Mr. J. Ramakrishnan அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர்கள் / அபிவிருத்தியாளர்கள் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.68/2025, நாள்.24.06.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**மதுநகஎண்.அ1 / 443 / 2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 732/2025** **பொருள் எண்.28**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மன்றத்துறை – மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டப் பணிகள் பட்டியலில் கூடுதலாக பல்நோக்கு கட்டடம் கட்டும் பணியினை அவசரம் மற்றும் அவசியம் கருதி சேர்க்கப்பட்டதற்கும் – சுற்றறிக்கை அனுப்பியதற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், 28.05.2025 அன்று நடைபெற்ற சாதாரண மன்றக் கூட்டத்தில், நேரமில்லா நேரத்தின் போது திரு.மு.சரவணன், மன்ற உறுப்பினர், வார்டு எண்.72 அவர்கள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள்/மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டு நிதியில் பல்நோக்கு கட்டடம் கட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுவதாகவும், ஆனால் மாமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் அனுமதி மறுக்கப்படுவதாகவும் தெரிவித்தார். இதற்கு பல்நோக்கு கட்டடம் கட்டும் பணிகள் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டலாம் எனவும், தேவையெனில் ஆணையர் அவர்களிடம் உரிய ஆணை வழங்கப்பட அறிவுறுத்தப்படும் எனவும், மாண்புமிகு மேயர் அவர்களால் பதிலளிக்கப்பட்டது.

மன்றத் தீர்மான எண் 402/2013, நாள்.26.06.2013ல், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது பரிந்துரைக்கும் வார்டுக்கு தேவையான வளர்ச்சிப் பணிகளை, மண்டல அலுவலர்களாலும், துறைத் தலைவர்களாலும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு மன்றத் தீர்மானம் எண்.126/2004, நாள்.24.06.2004ன்படி இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்ட பொதுக்கொள்கை வழிகாட்டு மற்றும் நிறைவேற்றும் முறைகளின்படி அட்டவணை “அ”வில் கீழ்கண்ட 37 பணிகள் அனுமதிக்கக்கூடிய பணிகளாகவும், அட்டவணை “ஆ”வில் 14 பணிகள் அனுமதிக்கக்கூடாத பணிகளாகவும் வகைப்படுத்தப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் இது குறித்து தெரிவிப்பது யாதெனில், மாமன்ற உறுப்பினர் கோரிக்கைகேற்பவும், மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், இத்திட்டத்தின் செயல்பாட்டை, காலத்திற்கேற்ப அனுமதிக்கக்கூடிய பணிகள் பட்டியல் (அட்டவணை “அ”)வில் சில மாறுதல்கள் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

**அட்டவணை “அ”**

**அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பணிகள்**

1. கழிப்பறைகள் கொண்ட நவீன கழிப்பிடம்
2. தடுப்புகள் கொண்ட சிறுநீர் கழிப்பிடம்
3. மாநகராட்சி கட்டிடங்களுக்கு சுற்று சுவர்கள் கட்டுதல்.

4. சாலையோர கால்வாய்.
5. குளியல் அறை கட்டுதல்.
6. மாநகராட்சி பள்ளிகளுக்கு கணிப்பொறிகள்.
7. மாநகராட்சி பள்ளி வகுப்பறை மேம்படுத்துதல்.
8. மாநகராட்சி கட்டட வளாகத்தில் கைபம்புகள் அமைத்தல்.
9. பேருந்து நிழற்குடை அமைத்தல்.
10. பூங்காக்களில் சிறுவர் விளையாட்டு சாதனங்கள் அமைத்தல்.
11. பூங்கா மேம்படுத்துதல்.
12. குடிசைப் பகுதியில் அடிப்படை வசதிகளை குடிநீர் அமைத்து சாலை பொது கழிப்பிடம் மற்றும் குளியலறை.
13. சாலைகளின் குறுக்கே சிறு பாலம் கட்டுதல்.
14. இணைப்புச் சாலை மற்றும் அணுகுசாலை
15. உடற்பயிற்சிக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்கான சாதனங்கள் நிறுவுதல்
16. குப்பை சேகரிக்கும் பெட்டகம்
17. தாய்சேய் நல விடுதிகளுக்கான மின்னணு சாதனம் வாங்குதல்
18. மருத்துவ பரிசோதனை நிலையங்களுக்குத் தேவையான பரிசோதனை கருவிகள்.
19. மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் மழைநீர் சேமிப்பு அமைப்பு ஏற்படுத்துதல்.
20. பள்ளிகளில் கலையரங்கம் அமைத்தல் மற்றும் புதிதாக பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.
21. விளையாட்டு மைதானங்களில் திறந்தவெளி அரங்கங்கள் அமைத்தல்.
22. விளையாட்டு மைதானம் அமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள்.
23. நீத்தார் நிறைவுக்கூடம் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.
24. இடுகாடு மற்றும் சுடுகாடுகளில் அபிவிருத்திப் பணிகள் மற்றும் மேம்படுத்துதல்.
25. குப்பை அகற்றுவதற்கு மூன்று சக்கர மிதிவண்டி மற்றும் தேவையான பிளாஸ்டிக் (PLASTIC) தொட்டிகள் தள்ளுவண்டி வாங்குதல்.
26. பள்ளிகளுக்குத் தேவையான ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் ஒலி, ஒளிகாட்டு கல்வி சாதனங்கள் மற்றும் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்.
27. போக்குவரத்து தீவு மற்றும் நீரூற்றுகள்.
28. சாலை மையத் தடுப்பு அமைத்தல்.
29. சுரங்க நடைபாதைகள் மேம்படுத்துதல்.
30. மழைநீர் கால்வாய்.
31. சத்துணவுக் கூடங்கள் மேம்படுத்தும் பணி.
32. மாநகராட்சி கட்டிடங்களில் நிலத்தடி நீர் சேமிப்பு தொட்டி, மேல்நிலை தொட்டி மற்றும் மின்சார மோட்டார் அமைத்தல்.
33. சாலை மற்றும் நடைபாதைகள்.
34. தாய் சேய் நல மருத்துவமனை மற்றும் மருந்தகம் கட்டுதல்.
35. கால்வாயின் குறுக்கே சிறுபாலம் அமைத்தல்.

36. மாநகராட்சி கட்டட வளாகம் மற்றும் பூங்காவில் குழாய் கிணறு மற்றும் கை பம்பு அமைத்தல்.

37. கட்டடங்களின் கூரை மேல் சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் தகடுகளிலான உபகரணங்கள் (Solar Roof Top Plant) அமைத்தல்.

**கூடுதலாக சேர்க்க கூடிய பணிகள்**

**38. பல்நோக்கு கட்டடம் கட்டுதல்**

**அட்டவணை "ஆ"**

**அனுமதிக்கக் கூடாத பணிகள்**

1. அலுவலகக் கட்டடம்.
2. குடியிருப்பு வீடுகள்.
3. வணிக நிறுவனங்களில் பணிகள், டிரஸ்ட், பதிவு பெற்ற சொசைடி, தனியார் நிறுவனங்கள் அல்லது கூட்டுறவு நிறுவனங்கள்.
4. நீடித்து பயன் தரக்கூடிய சொத்தின் தனித் தகுதி பெற்ற பழுதுபார்ப்பு அல்லது மேம்படுத்துல் தவிர எந்தவிதமான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளும் செய்யக்கூடாது.
5. மானியம் மற்றும் கடன்கள்.
6. நினைவாலயம், சிலைகள் மற்றும் நினைவு கூடங்கள்.
7. தளவாட சாமான்கள், உபகரணங்கள் (அட்டவணை 'அ'வில் வரிசை எண்.37 தவிர) , குழல் ஆவி விளக்குகள்.
8. நிலம் கையகப்படுத்துதல் அல்லது கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு ஈடுசெய்தல்.
9. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பகுதிக்குட்படாத தனிப்பட்ட நபருக்கு பயன்படுத்தக் கூடிய சொத்துக்கள்.
10. வழிபாட்டு இடங்கள்.
11. குப்பை அகற்றுவதற்கு சிறு வாகனங்கள் வாங்குதல்.
12. தெருவிளக்கு.
13. பிறத் துறைகள் மற்றும் வாரியங்களின் பணிகள்
14. தொடர் செலவினங்கள் தேவைப்படும் பணிகள்.

எனவே, மேலே கண்டவாறு அட்டவணை 'அ'வில் அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பணிகளில் 37 பணிகளுக்கு பின்னர் 38வது பணியாக "பல்நோக்கு கட்டடம்" கட்டும் பணியையும் சேர்த்து மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்ட பொதுக் கொள்கை வழிகாட்டு மற்றும் பணிகள் நிறைவேற்றும் முறைகளின் கீழ் திருத்தம் மேற்கொண்டதற்கும், அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஆணையர் அவர்களின் 11.06.2025 நாளிட்ட ஆணை பெற்று இவ்விவரத்தினை அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், வட்டார துணை ஆணையர்கள் மற்றும் அனைத்து துறைத் தலைவர்கள்/ மண்டல அலுவலர்கள் ஆகியோருக்கு சுற்றறிக்கை அனுப்பியதற்கும், நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும்

(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.408/2025, நாள். 24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 317/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.நி.பி.ந.க.எண்.க(ம)மா/சிறப்பு / 2025**

**ஆணையர் அவர்களின் 25.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 733/2025** **பொருள் எண்.29**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிதி நிர்வாக பிரிவு - மண்டலங்களில் மேற்கொள்ளப்படும் பழுது பார்த்தல் மற்றும் பல்வேறு பராமரிப்பு பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு குறித்த விவரம் மன்றத்தின் தகவலுக்காக.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த 28.05.2025 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில், மண்டலங்களில் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என பல்வேறு மாமன்ற உறுப்பினர்களால் தெரிவித்த கருத்திற்கு உரிய விவரம் கீழ்கண்டுள்ளவாறு மாமன்றத்திற்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து மண்டலங்களிலும் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக 82 கணக்கு தலைப்புகளின் கீழ் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பல்வேறு மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணையின் அடிப்படையில் அனைத்து மண்டலங்களுக்கும் சிறப்பினமாக பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக 230-80-06-00 (இதர செலவினங்கள்) என்ற கணக்கு தலைப்பின் கீழ் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதன்மை தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் 29.07.2023 நாளிட்ட செயல்முறை ஆணை மற்றும் ஆணையரின் 14.02.2025 நாளிட்ட செயல்முறை ஆணைகளின்படி 2022, 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் கீழ்காணும் வழிகாட்டு முறைகளை குறிப்பிட்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

1. ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கு ஒப்பந்தங்களை அழைக்க மண்டல அலுவலருக்கு அதிகாரம் உள்ளது.
2. இந்த பராமரிப்பு ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கு ஒப்பந்தங்களை சதவீத அடிப்படையில் அழைக்கலாம்.
3. ஒப்பந்த ஆவணத்தில் ஒப்பம் கோரும் போது வெற்றிகரமான ஏலதாரரால் மேற்கோள் காட்டப்பட்ட சதவீதம் அனைத்தும் SOR பணிகளுக்கும் ஒரே மாதிரியாக பொருந்தும். பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்றுக்கொண்ட பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. ஒப்பந்தத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

5. சாலை பராமரிப்புக்காக ரூ.5.00 இலட்சமும், பராமரிப்பு பணிக்காக ரூ.5.00 இலட்சமும் ஒதுக்குவது கட்டாயமாகும்.
6. எந்தவொரு குறிப்பிட்ட பராமரிப்பு பணிக்கான கணக்குத் தலைப்பில் நிதி ஒதுக்கீடு இல்லாத இனத்திற்கு நிதி நிர்வாக பிரிவின் கவனத்திற்கு கொண்டுவந்து நிதி பெற்று தீர்க்க வேண்டும் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் செலவின விவரங்கள் பின்வருமாறு:-

**கணக்கு தலைப்பு எண்.230-80-06-00 (இதர செலவினங்கள்)**(ரூ.கோடியில்)

| வ.எண். | ஆண்டு | நிதி ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| 1 | 2022-2023 | 22.07 | 11.75 |
| 2 | 2023-2024 | 22.60 | 21.93 |
| 3 | 2024-2025 | 29.02 | 26.75 |
| 4 | 2025-2026 | 27.51 | 10.20 |

மேலும், 2025-2026-ஆம் நிதியாண்டிற்கு அனைத்து மண்டலங்களுக்கும் மேற்கண்ட கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவின விவரங்கள் பின்வருமாறு :

| மண்டலம் | வார்டு எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு | செலவினம் | மீதம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய்) | | |
| மண்டலம் - 1 | 14 | 1,85,85,000 | 57,83,453 | 1,28,01,547 |
| மண்டலம் - 2 | 8 | 1,00,00,000 | 59,74,038 | 40,25,962 |
| மண்டலம் - 3 | 11 | 1,50,00,000 | 13,31,740 | 1,36,68,260 |
| மண்டலம் - 4 | 15 | 1,50,00,000 | 5,39,521 | 1,44,60,479 |
| மண்டலம் - 5 | 15 | 2,00,00,000 | 37,94,660 | 1,62,05,340 |
| மண்டலம் - 6 | 15 | 2,00,00,000 | 65,50,300 | 1,34,49,700 |
| மண்டலம் - 7 | 15 | 1,70,00,000 | 1,14,000 | 1,68,86,000 |
| மண்டலம் - 8 | 15 | 1,50,00,000 | 80,77,224 | 69,22,776 |
| மண்டலம் - 9 | 18 | 2,20,00,000 | 1,11,69,596 | 1,08,30,404 |
| மண்டலம் - 10 | 16 | 5,00,00,000 | 3,13,32,351 | 1,86,67,649 |
| மண்டலம் - 11 | 13 | 2,00,00,000 | 59,71,788 | 1,40,28,212 |
| மண்டலம் - 12 | 12 | 1,44,74,000 | 1,10,000 | 1,43,64,000 |
| மண்டலம் - 13 | 13 | 1,30,00,000 | 72,34,597 | 57,65,403 |
| மண்டலம் - 14 | 11 | 1,50,00,000 | 1,33,56,668 | 16,43,332 |
| மண்டலம் - 15 | 9 | 1,00,00,000 | 6,98,249 | 93,01,751 |
| **மொத்தம்** | **200** | **27,50,59,000** | **10,20,38,185** | **17,30,20,815** |

மேலும், பல்வேறு கணக்கு தலைப்புகளில் பராமரிப்பு பணிக்கென மண்டல அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பிரேரணையின் அடிப்படையில் அம்மண்டலத்திற்கு தேவையான பராமரிப்பு பணிகளுக்கென வரவு செலவு திட்டத்தின் போது நிதி ஒதுக்கப்படுகிறது.

இது தவிர, அவ்வப்போது மண்டலங்களில் ஏற்படும் தேவைகளுக்கேற்ப மண்டல வார்டு குழு தீர்மானத்தின் அடிப்படையில் வைக்கப்படும் கோரிக்கைகள் மண்டல அலுவலர் / வட்டார துணை ஆணையர் அவர்கள் நிலையில் பரிந்துரைக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு கோரி நிதி நிர்வாகப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படும் பிரேரணைகள் மீது ஆய்வு செய்து கோரப்படும் நிதி ஒதுக்கீடு கூடுதல் நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு பராமரிப்பு பணிக்கான தேவைகள் நிறைவு செய்யப்படுகிறது என்ற விவரம் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

> "25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.343/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

******

**வ.து.நக.எண்.தொ.வ / 8386 / 2024-25**

**ஆணையர் அவர்களின் 23.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 734 / 2025** **பொருள் எண்.30**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - தொழில் உரிமம் - தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 திருத்தம் பெறப்பட்டது - மன்றத்தின் தகவலுக்காகவும் மற்றும் பதிவுக்காகவும்.**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் *1998* (திருத்தியமைக்கப்பட்டது *2022)* மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள்- *2023* ஆகியவைகள் தமிழ்நாடு அரசு அரசிதழ் எண்.*124*, நாள். *13.04.2023*ன்படி அரசிதழில் வெளியிடப்பட்டது. அச்சட்டத்தில் பிரிவு *102* ன்படியும், மற்றும் விதிகள் *2023*ல் *289* ன்படி தொழில் உரிமம் வழங்கவும், இத்தொழில் உரிமம் கட்டணம் நிர்ணயம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டிருந்தது.

அதன்படி, மன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டு *01.10.2024* முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் மற்றும் விதிகளின்படி தொழில் உரிமம் வழங்க நடைமுறை செய்யப்பட்டது.

தற்போது, தமிழ்நாடு அரசு அரசிதழில் எண். *285*, நாள் *16,06,2025* ன்படி கீழே வழங்கப்பட்டுள்ளவாறு விதியில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

In the said Rules, in rule 289, in sub-rule (5) for the proviso, the following provisos shall be substituted, namely:-

"Provided that where the trade or business relates to Schedule II, except food retail and storage of goods, is to be carried out in a shop measuring areas up to 500 square feet, the Commissioner shall grant licence through self certification on the same day itself.

Provided further that no licence shall be refused without giving an opportunity of being heard to the applicant"

அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அட்டவணை-*II*ல் உள்ள *500* சதுர அடிக்கொண்ட தொழில்களுக்கு (உணவு பொருட்கள் மற்றும் சரக்குகள் சேமித்தல் தவிர்த்து ) மற்ற தொழில்களுக்கு அன்றைய தினமே வணிகர்களே சுய அறிக்கை அளித்து உரிமம் பெற்றுக் கொள்வதற்கு சென்னை மாநகராட்சி இணையதளத்தில் உரிய வழிவகை மேற்கொள்ளப்பட உள்ளது. இத்தகவலினை நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் தகவலுக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் சமர்பிக்கப்படுகிறது.

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.308/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் தகவலுக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**வ.து.ந.க.எண்.கே.வரி / 4000 / 2017**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 735/2025** **பொருள் எண்.31**

**பெருநகர சென்னை மாநகராட்சி- வருவாய் துறை – கேளிக்கை வரி - திரைப்படங்களுக்கான கேளிக்கை வரி சதவீதம் குறைக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பதிவிற்காகவும் மற்றும் தகவலுக்காகவும்.**

தமிழ்நாடு அரசு கேளிக்கை வரி சட்டம் 2017 இயற்றப்பட்டு, கேளிக்கை வரியினை உள்ளாட்சி அமைப்புகள் வசூலித்திட வழிவகை செய்யப்பட்டு 01.07.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் 01.07.2017 முதல் கேளிக்கை வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள திரையரங்குகள், பொழுதுபோக்கு மன்றங்கள், பொழுது போக்கு நிலையங்கள், விளையாட்டு அரங்கம் மற்றும் மெட்ராஸ் ரேஸ் கிளப் ஆகிய இனங்கள் மீது கேளிக்கை வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.1) துறை, நாள் 07.05.2025 –ன்படி தமிழ் திரைப்படங்களுக்கான கேளிக்கை வரிக்கான சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது புதிய தமிழ் திரைப்படத்திற்கு 4 சதவீதமும் மற்றும் பழைய தமிழ் திரைப்படத்திற்கு 3.5 சதவீதமாகவும் குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை (நிலை) எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.1) துறை, நாள்.07.05.2025–ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் தமிழ் திரைப்படத்திற்கான கேளிக்கை வரிக்கான சதவீதம் குறைக்கப்பட்டுள்ள விவரம், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் தகவலுக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.309/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் தகவலுக்காகவும் மற்றும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ4/12234/2023**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 736/2025** **பொருள் எண்.32**

**பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை - கல்வித்துறையின் நிர்வாக வசமுள்ள மண்டலம் 1 முதல் 15 வரையிலுள்ள சென்னைப்பள்ளிகள், அரசுப்பள்ளிகளில் 200 மாணவர்களுக்கு ஒரு Sweeper, 10 கழிப்பறைகளுக்கு ஒரு Scavanger, என தற்காலிக தூய்மை பணியாளர்கள் நிர்ணயம் செய்து மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது – தற்போதைய நிதிநிலையை கருத்தில் கொண்டு ஏற்கனவே பெறப்பட்ட மன்ற அனுமதியில் திருத்தமாக மன்றத்தீர்மான எண்.014/2024. நாள்.31.01.2024ன் படி 300 மாணவர்களுக்கு ஒரு Sweeper 10 கழிப்பறைகளுக்கு ஒரு Scavanger என தற்காலிக தூய்மை பணியாளர்கள் நிர்ணயம் செய்வதற்கும் - பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையம், சமுதாய கல்லூரி, 13 அரசு ஆதி திராவிட தொடக்கப் பள்ளிகளுக்கும் ஏற்கனவே பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் நிர்ணயம் செய்வதற்கும் - தினக்கூலியாக ஊதியம் ரூ.753/- வழங்குவதற்கும் – சிறப்பு காலமுறை ஊதியத்தில் 76 பணியாளர்கள் - திருத்திய 1538 தற்காலிக தூய்மை பணியாளர்கள் நிர்ணயத்திற்கு அனுமதி.**

அரசாணை நிலை) எண். 166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( மாந4) துறை, நாள்.23.11.2016ல் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள உள்ளாட்சி பள்ளிகள், அரசு பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை பராமரிக்க பெருக்குபவர் / துப்புரவு பணியாளர்களை தனியார் நிறுவனங்களின் மூலம் நியமனம் செய்து அப்பராமரிப்பு பணிகளை நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் வசூலிக்கும் கல்வி வரியின் மூலம் மேற்கொள்ளுமாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையின் 23.01.2017, 30.03.2017, 31.05.2017 மற்றும் 14.09.2022 நாளிட்ட சுற்றறிக்கையில் மேற்காணும் அரசாணையின்படி மண்டலம்-1 முதல் 15 வரையிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகள், அரசு பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை பராமரிக்க பெருக்குபவர் / துப்புரவு பணியாளர்களை ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் 11 மாதங்களுக்கு / (ஜுன் முதல் ஏப்ரல் வரை) ஒவ்வொரு பள்ளிக்கும் தூய்மை பணிகளை மேற்கொள்ள தனியார் நிறுவன ஒப்பந்ததாரர்கள் மூலம் அல்லது தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் உறுப்பினர்கள் (NULM) மூலம் பணியாளர்களை பணியமர்த்தி தூய்மை பணிகளை தொய்வின்றி மண்டல அலுவலர்கள் மூலம் மேற்கொள்ள மண்டல அலுவலர்கள் 1 முதல் 15 வரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

கல்வித்துறையின் சுற்றறிக்கையின் படி பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகங்கள் 1 முதல் 15 வரையிலுள்ள ஒவ்வொரு மண்டலத்திற்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகள் / அரசு பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை பராமரிக்க தேசிய நகர்ப்புற வாழ்வாதார

இயக்கத்தின் குழுக்கள் உறுப்பினர்கள் (NULM) மற்றும் அண்டைவீட்டுக்குழுக்கள் (SHG) மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மன்றத்தீர்மான எண்.014/2024 நாள்.31.01.2024ல் மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகள் / அரசு பள்ளிகளுக்கு அரசாணை நிலை எண்.166 ந.நி.கு.வ.(MA.IV) நாள்.23.11.2016 ஒவ்வொரு பள்ளிகளுக்கு குறைந்தபட்ச தூய்மைப்பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என தெரிய வந்ததால் சென்னை பள்ளிகள் / அரசுபள்ளிகளில் உள்ள வகுப்பறைகளின் எண்ணிக்கை / கழிவறைகளின் எண்ணிக்கை மற்றும் மாணவர்களின் எண்ணிக்கையின் படி கீழ்கண்ட அட்டவணையின் படி தேவைப்படும் தூய்மைப்பணியாளர்களை ஒவ்வொரு மண்டலத்திற்குட்பட்ட ஒவ்வொரு பள்ளிகளுக்கும் பணியமர்த்துமாறு மண்டல அலுவலர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

NULM and SHG Sweeper and Scavenger Norms in Schools

| No. of Classrooms | No. of Students | No. of Sweepers | No. of Toilets | | No. of Scavengers | |
|---|---|---|---|---|---|---|
| | | | Male | Female | Male | Female |
| 1 - 10 | up to 300 | 1 | 5 | 5 | 0 | 1 |
| 11 - 20 | 301 - 600 | 2 | 10 | 10 | 1 | 1 |
| 21- 30 | 601- 900 | 3 | 15 | 15 | 1 | 2 |
| 31-40 | 901-1200 | 4 | 20 | 20 | 2 | 2 |
| 41-50 | 1201 -1500 | 5 | 25 | 25 | 2 | 3 |
| 51-60 | 1501-1800 | 6 | 30 | 30 | 3 | 3 |
| 61-70 | 1801 -2100 | 7 | 35 | 35 | 3 | 4 |
| 71- 80 | 2101 -2400 | 8 | 40 | 40 | 4 | 4 |
| 81-90 | 2401-2700 | 9 | 45 | 45 | 4 | 5 |
| 91-100 | 2701 -3000 | 10 | 50 | 50 | 5 | 5 |
| 101-110 | 3001 -3300 | 10 | 55 | 55 | 5 | 5 |

Source : G.O. No. 116, Municipal Administration and Water Supply
Note : Co-Ed Schools shall be provided with one female worker and one male worker for cleaning toilets and one sweeper for cleaning the school campus.
Girls Schools minimum two female workers shall be provided along with one sweeper.
Boys Schools minimum 2 male or female worker shall be provided along with one sweeper

ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ஜுன் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 11 மாதங்களுக்கு தேவைப்படும் துப்புரவு மற்றும் தூய்மை பணியாளர்களை மண்டல அலுவலகங்கள் 1 முதல் 15 வரையில் உள்ள சென்னை பள்ளிகள் / அரசு பள்ளிகளுக்கு மண்டல அலுவலகங்கள் மூலமாக தற்காலிகமாக பணியாளர்களை பணியமர்த்துவதற்கும் அப்பணியாளர்களுக்கு தினக்கூலியாக ரூ.687/- வழங்குவதற்கும் தேவைப்படும் நிதியினை நிதிநிர்வாகப்பிரிவிற்கு அனுப்பி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

கல்வித்துறையின் 07.02.2024 நாளிட்ட சுற்றறிக்கையில் மன்றத்தீர்மான எண்.014/2024 நாள்.31.01.2024ன்படி சென்னை பள்ளிகள் / அரசு பள்ளிகளில் உள்ள வகுப்பறைகளின் எண்ணிக்கை கழிப்பறைகளின் எண்ணிக்கை மாணவர்களின் எண்ணிக்கைகேற்ப தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி அப்பணியாளர்களுக்கு தினக்கூலியாக ரூ.687/- வழங்குமாறு மண்டலம் 1 முதல் 15 வரையிலான மண்டல அலுவலர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மைத்துறையின் 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை மண்டலங்களிலும் (கல்வித்துறை உட்பட) அண்டைவீட்டு குழுவின் (SHG) மற்றும் NMRன் கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் UNSKILLED தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே 05.07.2023 முதல் பெற்று வந்த மாத ஊதியம் wage ரூ.17687/- என்ற வீதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.687/- வழங்கியதை 01.04.2024 முதல் wage ரூ.19593/-என்ற வீதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.753/- என உயர்த்தி மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டுள்ளது.

மன்றத்தீர்மான எண்.55/2025ன்படி சென்னை பள்ளிகள் / அரசு பள்ளிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தற்காலிக தூய்மை பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் (NULM) / அண்டைவீட்டு குழுக்கள் (SHG) மூலமாக மண்டல அலுவலகங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மை பணிகளில் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளதாக தெரியவந்ததால் 200 மாணவர்களுக்கு 1 sweeper 10 கழிவறைகளுக்கு 1 scavenger என ஒவ்வொரு பள்ளிகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, வகுப்பறைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப sweeper-ம் கழிவறைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப scavenger-ம் 15 மண்டலங்களில் உள்ள 417 சென்னை பள்ளிகள், ஒரு சமுதாய கல்லூரி ஒரு தொழிற்பயிற்சி நிலையம், 92 அரசு பள்ளிகள் என மொத்தம் 511 பள்ளிகளுக்கு மொத்தம் 1822 தூய்மை பணியாளர்கள் நிர்ணயம் செய்யப்பட்டது.

தற்போதைய நிதிநிலையை கருத்தில் கொண்டு 300 மாணவர்களுக்கு 1 sweeper 10 கழிவறைகளுக்கு 1 scavenger என ஒவ்வொரு பள்ளிகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, வகுப்பறைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப sweeper-ம் கழிவறைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப scavenger-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள 15 மண்டலங்களில் உள்ள 417 சென்னை பள்ளிகள், ஒரு சமுதாய கல்லூரி ஒரு தொழிற்பயிற்சி நிலையம், 92 அரசு பள்ளிகள் என மொத்தம் 511 பள்ளிகளுக்கு மொத்தம் 1538 தூய்மை பணியாளர்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு மண்டலத்திற்குட்பட்ட மொத்த பள்ளிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தற்காலிக தூய்மை பணியாளர்கள் எண்ணிக்கை:

| மண்டலம் | மொத்த சென்னை பள்ளிகளின் எண்ணிக்கை | மொத்த அரசு பள்ளிகளின் எண்ணிக்கை | ஐடிஐ/ சமுதாய கல்லூரி | மொத்த துப்புரவு/ தூய்மை பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 26 | 04 | | 72 |
| 2 | 17 | 06 | | 68 |
| 3 | 13 | 06 | | 56 |
| 4 | 46 | 05 | | 145 |
| 5 | 42 | 07 | | 116 |
| 6 | 48 | 07 | | 165 |
| 7 | 35 | 04 | | 104 |
| 8 | 29 | 05 | 1 | 128 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 53 | 05 | 1 | 136 |
| 10 | 37 | 08 | | 187 |
| 11 | 12 | 13 | | 78 |
| 12 | 12 | 07 | | 46 |
| 13 | 24 | 04 | | 115 |
| 14 | 08 | 03 | | 40 |
| 15 | 15 | 08 | | 82 |
| மொத்தம் | 417 | 92 | 2 | 1538 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலங்கள் 1 முதல் 15 வரையிலுள்ள பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள், கழிவறைகளின் எண்ணிக்கை மற்றும் 300 மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேற்காணும் திருத்திய அட்டவணையின்படி தேவைப்படும் 1538 தற்காலிக தூய்மை பணியாளர்களை NULM or SHG மூலமாக மண்டலங்களிலுள்ள ஒவ்வொரு பள்ளிகளுக்கும் பணியமர்த்தி கொள்ள அனுமதியும்,
2. ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ஜுன் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 11 மாதங்களுக்கு துப்புரவு / தூய்மை பணியாளர்களை மண்டல அலுவலகங்கள் 1 முதல் 15 வரையிலுள்ள சென்னை / அரசு பள்ளிகளுக்கு மண்டல அலுவலகங்கள் மூலமாக தற்காலிகமாக பணியாளர்களை பணியமர்த்துவதற்கும்,
3. பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 1 முதல் 15 வரையிலுள்ள சென்னை பள்ளிகள் / அரசுப்பள்ளிகளில் பணிபுரியும் (NULM or SHG) தூய்மை பணியாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மைத்துறையின் சுற்றறிக்கை தி.க.மே.து.ந.க.எண்.அ3/3974/2023 நாள்.29.07.2024-ன்படி ஒரு நாளுக்கான தினக்கூலி ரூ.753/- வழங்குவதற்கும்,
4. ஒரு கல்வி ஆண்டிற்கு தேவைப்படும் மண்டலம் 1 முதல் 15 வரையிலுள்ள சென்னை பள்ளிகள் / அரசுப்பள்ளிகளுக்கு பணியமர்த்தப்படும் துப்புரவு / தூய்மை பணியாளர்களுக்கு தினக்கூலியாக நாளொன்றுக்கு ரூ.753/- வீதம் ஒரு மாதத்திற்கு 26 நாட்களுக்கு 11 மாதங்களுக்கு தேவைப்படும் நிதியை ஒவ்வொரு மண்டலத்திற்கும் நிதி நிர்வாகப்பிரிவின் மூலமாக ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,
5. தினக்கூலி உயர்த்தி வழங்குவதால் மண்டலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்படும் பட்சத்தில் உரிய கணக்கு தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு வேண்டி நிதி நிர்வாகப்பிரிவிற்கு கோப்பினை அனுப்பி அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்க மண்டலங்களுக்கு அறிவுறுத்துவதற்கும்,
6. தூய்மை பணிகளுக்கு தேவைப்படும் அனைத்து பொருட்களையும் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து கொள்முதல் செய்து பயன்படுத்திக்கொள்ள அனுமதியும்,
7. மன்றத்தீர்மான எண்.014/2024 நாள்.31.01.2024-ல் துப்புரவு / தூய்மைப் பணியாளர்கள் மண்டலங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில் மண்டலம்-9ல்

உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் தொழிற்பயிற்சி நிலையம் பட்டியலில் விடுபட்டுள்ளதால் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 4 தற்காலிக துப்புரவு / தூய்மைப் பணியாளர்களுக்கு மண்டலம்-9ன் மூலமாக ஊதியம் வழங்குவதற்கும்,

8. பள்ளிகளுக்கான பட்டியலில் மண்டலம் ஏதேனும் மாறியிருந்தால் மண்டல அலுவலர் மூலமாக உரிய ஒப்புதல் பெற்று ஊதியம் வழங்குவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 17.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.06.2025 அன்று தீர்மான எண்.54/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.312/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1/4454/2025**

**ஆணையர் அவர்களின் 14.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 737/2025** **பொருள் எண்.33**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஜூன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை ஏற்கனவே பணிபுரியும் அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக ECS மூலம் வழங்குவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் *206* தொடக்கப் பள்ளிகளும், *130* நடுநிலைப்பள்ளிகளும், *46* உயர் நிலைப்பள்ளிகளும் மற்றும் *35* மேல்நிலைப்பள்ளிகளும் ஆக மொத்தம் *417* பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்களின் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஆண்டுதோறும் மாணவர்களின் சேர்க்கை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்தப்படுகின்ற சிறப்புத் திட்டங்களால் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை இக்கல்வியாண்டிலும் அதிகரித்து வருகின்ற காரணத்தினால் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் *D.T.Ed.* தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களின் நலன் கருதி அப்பள்ளிகளில் கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு தற்காலிக இடைநிலை ஆசிரியர்களின் தேவை உள்ளது.

| வ.எண். | பதவியின் பெயர் | தேவைப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் | 61 |

*2025-2026*ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் *(SG Teachers)* அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் பணியமர்த்திக் கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. கீழ்கண்ட அட்டவணையின்படி தற்காலிகமாக பணியமர்த்தப்படும் தற்காலிக இடைநிலை ஆசிரியர்களுக்கு ஜூன் *2025* முதல் ஏப்ரல் *2026* வரை *(11* மாதங்கள்*)* ஊதியம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

| வ. எண். | தற்காலிக பதவியின் பெயர் | தேவைப்படும் தற்காலிக ஆசிரியர்களின் எண்ணிக்கை | மாத தொகுப்பு ஊதியம் (ரூ) | ஆசிரியர்கள் பணிபுரிய வேண்டிய கால அளவு (ஜூன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை) | மொத்த ஊதியம் (கலம் எண். 3 x 4 x5 = 6)) |
|---|---|---|---|---|---|
| 1 | தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் | 61 | 12,000 | 11 மாதங்கள் | 80,52,000 |

மேற்சொன்னதின் அடிப்படையில் 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் தற்காலிக இடைநிலை ஆசிரியர்கள் ஜூன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை பணியமர்த்துவது அவசியமாகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப 61 தற்காலிக இடைநிலை ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஜூன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை பணியமர்த்துவதற்கு அனுமதியும்,
2. மேற்குறிப்பிட்ட தற்காலிக இடைநிலை ஆசிரியர்களுக்கு ஜூன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை 11 மாதங்களுக்கு ஊதியமான ரூ. 80,52,000/-னை (ரூபாய் எண்பது இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும்) கணக்கு குறியீட்டு எண். 80-82-06, 230-11-02-02 (கல்விச் செலவினங்கள்) என்கிற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 17.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.06.2025 அன்று தீர்மான எண்.55/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.313/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண்.அ1/4455/2025**

**ஆணையர் அவர்களின் 14.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 738/2025** **பொருள் எண்.34**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஜூன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை ஏற்கனவே பணிபுரியும் அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக ECS மூலம் வழங்குவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 206 தொடக்கப் பள்ளிகளும், 130 நடுநிலைப்பள்ளிகளும், 46 உயர் நிலைப்பள்ளிகளும் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகளும் ஆக மொத்தம் 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்களின் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஆண்டுதோறும் மாணவர்களின் சேர்க்கை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்தப்படுகின்ற சிறப்புத் திட்டங்களால் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு 10ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை இக்கல்வியாண்டிலும் அதிகரித்து வருகின்ற காரணத்தினால் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியமர்த்துவது அவசியமாகிறது. தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் இளங்கலை பட்டம் மற்றும் B.Ed. தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களின் நலன் கருதி அப்பள்ளிகளில் கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களின் தேவை உள்ளது.

| வ. எண். | பதவியின் பெயர் | தேவைப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் (B.T. Teacher) | 300 |

2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் (B.T. Teachers) அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் பணியமர்த்திக் கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. கீழ்கண்ட அட்டவணையின்படி தற்காலிகமாக பணியமர்த்தப்படும் தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஜூன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை (11 மாதங்கள்) ஊதியம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

| வ. எண். | தற்காலிக பதவியின் பெயர் | தேவைப்படும் தற்காலிக ஆசிரியர்களின் எண்ணிக்கை | மாத தொகுப்பு ஊதியம் (ரூ) | ஆசிரியர்கள் பணிபுரிய வேண்டிய கால அளவு (ஜுன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை) | மொத்த ஊதியம் (கலம் எண். 3 x 4 x5 = 6)) |
|---|---|---|---|---|---|
| 1 | தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் | 300 | 15,000 | 11 மாதங்கள் | 4,95,00,000 |

மேற்சொன்னதின் அடிப்படையில் 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் ஜுன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை பணியமர்த்துவது அவசியமாகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப 300 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஜுன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை பணியமர்த்துவதற்கு அனுமதியும்,

2. மேற்குறிப்பிட்ட தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஜுன் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை 11 மாதங்களுக்கு ஊதியமான ரூ.4,95,00,000/-னை (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம் மட்டும்) கணக்கு குறியீட்டு எண்.80-82-01,230-11-02-02 (கல்விச் செலவினங்கள்) என்கிற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 17.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.06.2025 அன்று தீர்மான எண்.56/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.314/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1/4456/2025**

**ஆணையர் அவர்களின் 14.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 739/2025** **பொருள் எண்.35**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - 35 சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஜூன் 2025 முதல் மார்ச் 2026 வரை ஏற்கனவே பணிபுரியும் அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக ECS மூலம் வழங்குவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 206 தொடக்கப் பள்ளிகளும், 130 நடுநிலைப்பள்ளிகளும், 46 உயர் நிலைப்பள்ளிகளும் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகளும் ஆக மொத்தம் 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்களின் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஆண்டுதோறும் மாணவர்களின் சேர்க்கை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்தப்படுகின்ற சிறப்புத் திட்டங்களால் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை இக்கல்வியாண்டிலும் அதிகரித்து வருகின்ற காரணத்தினால் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களின் தேவை பற்றாக்குறையாக உள்ள காரணத்தினால் தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியமர்த்துவது அவசியமாகிறது. தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம் மற்றும் B.Ed. தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களின் நலன் கருதி அப்பள்ளிகளில் கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் தேவை உள்ளது.

| வ.எண். | பதவியின் பெயர் | தேவைப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் (P.G. Teacher) | 206 |

2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் (P.G. Teachers) அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் பணியமர்த்திக் கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. கீழ்கண்ட அட்டவணையின்படி தற்காலிகமாக பணியமர்த்தப்படும் தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஜுன் 2025 முதல் மார்ச் 2026 வரை (10 மாதங்கள்) ஊதியம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

| வ. எண். | தற்காலிக பதவியின் பெயர் | தேவைப்படும் தற்காலிக ஆசிரியர்களின் எண்ணிக்கை | மாத தொகுப்பு ஊதியம் (ரூ) | ஆசிரியர்கள் பணிபுரிய வேண்டிய கால அளவு (ஜுன் 2025 முதல் மார்ச் 2026 வரை) | மொத்த ஊதியம் (கலம் எண். 3 x 4 x5 = 6)) |
|---|---|---|---|---|---|
| 1 | தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் | 206 | 18,000 | 10 மாதங்கள் | 3,70,80,000 |

மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் ஜுன் 2025 முதல் மார்ச் 2026 வரை பணியமர்த்துவது அவசியமாகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி எண்ணிக்கைக்கு ஏற்ப 206 தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியமர்த்துவதற்கும், அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் அவர்களின் வாயிலாக ஜுன் 2025 முதல் மார்ச் 2026 வரை பணியமர்த்துவதற்கு அனுமதியும்,
2. மேற்குறிப்பிட்ட தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஜுன் 2025 முதல் மார்ச் 2026 வரை 10 மாதங்களுக்கு ஊதியமான ரூ. 3,70,80,000/-னை (ரூபாய் மூன்று கோடியே எழுபது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) கணக்கு குறியீட்டு எண். 80-82-01, 230-11-02-02 (கல்விச் செலவினங்கள்) என்கிற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 17.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 23.06.2025 அன்று தீர்மான எண்.57/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.315/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.10உ.செ.பொ.ப.அ.28ந.க.எண். 9094/2024**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 740/2025** **பொருள் எண்.36**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10, கோட்டம்-129 க்கு உட்பட்ட அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோவிலுக்கு சொந்தமான காந்திநகர் ராஜாஜி தெரு சாலிகிராமம், பிளாக் எண்.18, நகர சர்வே எண்.23 உள்ள ஒரு பகுதி 21528 சதுரடி நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி - கோசாலை (Cattle shed) அமைக்கும் பணிக்கு தடையில்லா சான்று/ உள்நிழைவு அனுமதி கோரப்பட்டது - 5 ஆண்டுகளுக்கு குத்தகை பெற பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை தெரிவித்து ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி.**

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் 10.06.2025 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் சுற்றித் திரியும் மாடுகளை பாதுகாத்து பராமரிக்கும் பணி மேற்கொள்ள ஒரே இடத்தில் தேவையான கட்டமைப்பு ஏற்படுத்தி புதியதாக கோசாலை அமைக்கும் வளர்ச்சி திட்ட பணி பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளவிருக்கும் கோசாலை கட்டமைப்பு பணிக்காக சென்னை சாலிகிராமம் அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோவிலுக்கு சொந்தமான காந்திநகர் ராஜாஜி தெரு சாலிகிராமம், பிளாக் எண்.18, நகர சர்வே எண்.23 உள்ள ஒரு பகுதி 21528 சதுரடி நிலத்தில் கோசாலை அமைக்க தடையில்லா சான்று/ உள்நுழைவு அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதன்தொடர்பாக இணை ஆணையரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையில் சென்னை சாலிகிராமம் அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோவிலுக்கு சொந்தமான காந்திநகர் ராஜாஜி தெரு சாலிகிராமம், பிளாக் எண்.18, நகர சர்வே எண்.23 உள்ள 21528 சதுரடி நிலத்திற்கு சந்தை மதிப்பின் அடிப்படையில் சதுர அடிக்கு வணிக நோக்கத்தின் அடிப்படையில் தொண்டு நிறுவனங்களுக்கு 0.1% ன்படி நியாய வாடகை கணக்கீட்டு தாளின் படி ரூ.1,18,500/- அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோவில் செயல் அலுவலரால் வாடகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. வாடகையினை ஏற்று கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 5 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு பெற சம்மதம் கடிதம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

**நிபந்தனைகள்**

1. குத்தகைக்காலம் 5 ஆண்டுகள் மட்டுமே.
2. குத்தைகை காலத்தில் நியாய வாடகை நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட மாத வாடகையினை பிரதி மாதம்-5-ஆம் தேதிக்குள் திருக்கோயிலுக்கு செலுத்தப்பட வேண்டும்.
3. நிர்ணயிக்கப்பட்ட வாடகை மூன்றாண்டுகளுக்கு மட்டுமே உரியது.

4. மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் சட்டபிரிவு 34 (A) -ன் படி வாடகை மறுநிர்யணம் செய்யப்படும்.
5. திருக்கோயில் நிலத்தினை அடமானம் (Mortgage) அல்லது உள்குத்தகை (Sub-Lease) மற்றும் எவ்வித பாராதீனமும் செய்யக்கூடாது.
6. மேற்கண்ட நிலத்தில் கட்டுமானங்கள் செய்யப்படும்போது திருக்கோயில் மூலம் உரிய அலுவலருக்கு விண்ணப்பித்து அனுமதி பெறப்பட வேண்டும்.
7. கட்டுமானங்கள் தொடர்பான சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் முறையான வரைபட அங்கீகாரம் கேட்புத்துறையே சொந்த செலவில் திருக்கோயில் பெயரில் பெற்றுக்கொள்ள வேண்டும்.
8. கட்டடங்களில் ஏற்படும் பாதிப்புகள், விபத்துகள், இயற்கை சீற்றங்களின் விளைவுகள் ஆகியவற்றிற்கு கேட்புத்துறையே பொறுப்பாகும்.
9. நிலம் எந்நோக்கத்திற்கு கேட்கப்படுகிறதோ அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
10. குத்தைக் காலம் முடிவுற்றவுடன் உடனடியாக திருக்கோவில் நிலத்தினை அவற்றில் உள்ள கட்டுமானங்களுடன், ஆக்கிரமிப்புகள் ஏதும் இருப்பின் அவற்றினை அகற்றி திருக்கோயிலின் வசம் கேட்புத்துறை திரும்ப ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு ஒப்படைக்க தவறின் நிலத்தை ஒப்படைக்கும் காலம் வரை அப்போதைய நில மதிப்பில் சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டு மதிப்பு இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் இழப்பீட்டுத் தொகையை கேட்புத்துறை திருக்கோயிலுக்கு செலுத்த வேண்டும்.
11. திருக்கோயில் நலன் கருதி, திருக்கோயில் நிர்வாகம் விதிக்கும் இதர நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
12. குத்தகை ஒப்பந்தம் இந்து சமய அறநிலையத் துறையால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் சட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
13. குத்தகை நீட்டிப்பு திருக்கோயில் நிர்வாகத்தின் விருப்பத்திற்கும், ஒப்புதலுக்கும் மற்றும் சட்டப்பிரிவு 34க்கும் உட்பட்டதாகும்.
14. குத்தகை நீட்டிப்பு தேவையெனில் 4 ஆண்டுகள் முடிந்தவுடன் கேட்புத்துறை முறையாக விண்ணப்பிக்க வேண்டும். மேற்கண்ட விண்ணப்பத்தின் மீது சட்டப்பிரிவு 34ன் கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொண்டு குத்தகையை நீட்டிப்பது குறித்து முடிவு செய்யப்படும்.
15. திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தினை எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். வேறு காரணத்திற்காக பயன்படுத்தினாலோ அல்லது உள்வாடகைக்கு விட்டாலோ குத்தகை செலுத்தாமல் இருந்தாலோ அல்லது குத்தகை நிபந்தனைகளுக்கு மாறாக செயல்பட்டாலோ

ஒப்பந்தத்தை மீறியதாக கருதி குத்தகை உரிமத்தை இரத்து செய்து நிலத்தினை திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்படும்.

16. மேற்கண்ட நிலத்தில் கட்டப்படக் கூடிய கட்டிடத்திற்குரிய மின் கட்டணம், குடிநீர் கட்டணம் மற்றும் வரி ஆகியவற்றை கேட்புத்துறையே செலுத்த வேண்டும்.
17. மேற்காணும் நிபந்தனைகளை உள்ளடக்கி, கேட்புத்துறை தனது சொந்த செலவில் குத்தகை ஒப்பந்த பத்திரம் எழுதி பதிவு செய்து தர வேண்டும்.
18. குத்தகை ஒப்பந்த பத்திரம் பதிவு செய்த நாள் அல்லது கேட்புத்துறை மேற்படி இடத்தில் நுழைவு செய்திட அனுமதி வழங்கிய நாள், இதில் எது முன்னதோ அந்த நாளிலிருந்து குத்தகை காலம் நடைமுறைக்கு வரும் என்ற நிபந்தனைகளுடன் கடிதம் பெறப்பட்டுள்ளது.

எனவே, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்கு சொந்தமான சாலிகிராமம், மண்டலம்-10, கோட்டம்-129, காந்திநகர், ராஜாஜி தெரு சாலிகிராமம், பிளாக் எண்.18, நகர சர்வே எண்.23 உள்ள நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் புதிய கோசாலை அமைக்கவும் 5 ஆண்டுகளுக்கு குத்தகை பெறுவதற்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.1,18,500/- செலுத்துவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை தெரிவித்து ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை அவர்களுக்கு கடிதம் அனுப்ப நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.310/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1296/2024**

**ஆணையர் அவர்களின் 05.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 741/2025** **பொருள் எண்.37**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மறைந்த M.S. விஸ்வநாதன் அவர்களின் குடும்பத்தினர் அளித்துள்ள மனு - மண்டலம்-9, கோட்டம்-126ல் உள்ள லூப் சாலைக்கு பதிலாக கோட்டம்-125ல் உள்ள டி மான்டி சாலைக்கு M.S. விஸ்வநாதன் அவர்களின் பெயரினை சூட்டுவது - மன்றத்தீர்மானம் நிறைவேற்றிட அரசின் அனுமதி பெறப்பட்டது - மன்றத்தின் அனுமதி.**

திரு. ம. ரா. விஜயகிருஷ்ணன் மெல்லிசை மன்னர் ரசிகர் அமைப்பு அவர்கள் மதிப்பிற்குரிய துணை மேயர் அலுவலகத்தில் அளித்துள்ள 11.07.2024 நாளிட்ட மனுவில் 70 வருடங்களுக்கு மேலாக தென்னிந்திய குறிப்பாக தமிழ் இசை நெஞ்சங்களை தன் இசையால் ஆளும், தமிழக மக்களின் நீங்கா இடம் பெற்றவரும், நம் தாய் மொழியாம் தமிழுக்கு அணி செய்யும் விதமாக அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களின் விருப்பத்தின் பேரில் தமிழ் தாய் வாழ்த்திற்கு மெட்டமைத்து 1970லிருந்து இன்றும் அரசு மற்றும் கல்வி சாலைகளில் தமிழ் தாய் வாழ்த்தினை முழங்க செய்தவருக்கு தகுந்த மரியாதை செய்ய மெல்லிசை மன்னர் *M.S.* விஸ்வநாதன் அவர்கள் வசித்த சாலைக்கு அவரது பெயரை சூட்ட அனுமதி தருமாறும் அல்லது அவர் இல்லத்தின் அருகாமையில் உள்ள நெடுஞ்சாலை ஒன்று அவர் பெயர் தாங்கியிருந்தால் சிறப்பாக இருக்கும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. *M.S.* விஸ்வநாதன் அவர்களின் குடும்பத்தினர் அளித்துள்ள 13.02.2025 நாளிட்ட மனுவில் கடந்த 70 ஆண்டுகளாக தென்னிந்திய மக்களைக் குறிப்பாகத் தமிழ் மக்களை இன்னிசையால், மெல்லிசையால், மெல்லிசை மன்னரின் இசை மகிழ்வித்து வருவதை யாவரையும் விடக் கலைஞர் அறிந்தக் காரணத்தினாலேயே என்றென்றும் நிலைக்கத் தமிழ்த் தாய் வாழ்த்திற்கு இசை அமைக்கும் வாய்ப்பினை மெல்லிசை மன்னருக்கு அளித்தார், அது அரசு ஆணையாகவும் பிறப்பிக்கப்பட்டது.

மேற்கூறிய பெருமை தவிர மெல்லிசை மன்னர், 6 முதல்வர்களுடன் பணிபுரிந்த பெருமைக்குரியவர்.

- பேரறிஞர் அண்ணா – வேலைக்காரி
- முத்தமிழ் அறிஞர் கலைஞர் - பல படங்கள் மற்றும் தமிழ் தாய் வாழ்த்து
- மக்கள் திலகம் *MGR* - பல படங்கள்
- செல்வி.ஜெ. ஜெயலலிதா - பல படங்கள்
- திரு *N.T.* ராமாராவ் - பல படங்கள்

இன்றைய முதல்வர் - குறிஞ்சி மலர் (தொலைக்காட்சி நாடகம்)

எந்த ஒரு திரைக் கலைஞருக்கும் கிடைத்திராத பேறு இது என்றும், மண்டலம்-9, கோட்டம்-126ல் உள்ள லூப் சாலைக்கு “*M.S.* விஸ்வநாதன் சாலை” என பெயர் சூட்ட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மண்டலம்-9, கோட்டம்-126ல் உள்ள லூப் சாலைக்கு "M.S. விஸ்வநாதன் சாலை" என பெயர் சூட்ட மாமன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றிட அரசின் அனுமதி வேண்டி அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு 07.03.2025 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டதனை தொடர்ந்து, அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 21.03.2025 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, கோட்டம்-126ல் உள்ள லூப் சாலைக்கு "M.S. விஸ்வநாதன் சாலை" என பெயர் சூட்டுவது குறித்த தீர்மானத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் முன் ஒப்புதலுக்கு வைத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மறைந்த M.S. விஸ்வநாதன் அவர்களின் குடும்பத்தினர் அளித்துள்ள 21.04.2025 நாளிட்ட மனுவில், சென்னையில் அவர் வசித்த இல்லத்திற்கு அருகிலுள்ள டிமான்டி சாலைக்கு "மெல்லிசை மன்னர் M.S. விஸ்வநாதன் சாலை" என்று பெயர் சூட்ட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, கோட்டம்-126ல் உள்ள லூப் சாலைக்கு "M.S. விஸ்வநாதன் சாலை" என பெயர் சூட்டுவது குறித்த தீர்மானத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் முன் ஒப்புதலுக்கு வைத்திட அனுமதி அளிக்கப்பட்டதனை ரத்து செய்து, மண்டலம்-9, கோட்டம்-125ல் உள்ள டிமான்டி சாலைக்கு "மெல்லிசை மன்னர் M.S. விஸ்வநாதன் சாலை" என பெயர் சூட்டுவதற்கு மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட அரசின் அனுமதி வேண்டி அரசு முதன்மைச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக 24.04.2025 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 28.05.2025 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9, கோட்டம்-126ல் உள்ள லூப் சாலைக்கு "M.S. விஸ்வநாதன் சாலை" என பெயர் சூட்டுவதற்கு மாமன்றத்தில் அளிக்கப்பட்ட அனுமதியை ரத்து செய்து மண்டலம் – 9, கோட்டம் – 125-ல் உள்ள டிமான்டி சாலைக்கு "மெல்லிசை மன்னர் M.S.விஸ்வநாதன் சாலை" என பெயர் சூட்டுவது குறித்த தீர்மானத்தினை பெருநகர சென்னை மாநகரட்சி மாமன்றத்தின் முன் ஒப்புதலுக்கு வைத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் – 9, கோட்டம் – 125-ல் உள்ள டிமான்டி சாலைக்கு "மெல்லிசை மன்னர் M.S.விஸ்வநாதன் சாலை" என பெயர் மாற்றம் செய்வதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.292/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/439/2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 742/2025** **பொருள் எண்.38**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - சென்னை ஜி.என்.செட்டி சாலையில் அமைந்துள்ள கலைவாணர் திரு.என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் சிலையினை கலைவாணர் அரங்க வளாகத்தில் மாற்றி அமைக்க - மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தடையின்மை சான்று வழங்கப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, இயக்குநரின் நேர்முக கடிதத்தில் சென்னை மாநகரின் தியாகராய நகர் ஜி.என்.செட்டி சாலையில் அமைந்துள்ள கலைவாணர் திரு.என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் திருவுருவச்சிலையினை அவ்விடத்திலிருந்து அகற்றி கலைவாணர் அரங்க வளாகத்தினுள் அமைத்திட ஏதுவாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் தீர்மானத்துடன் கூடிய அறிக்கையினை அரசுக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.183, வருவாய்த்துறை (LD 4(1)), நாள்.23.05.2017-ன் வழிமுறைகளைப் பின்பற்றி புலத்தணிக்கை மேற்கொண்டு குறிப்பான பரிந்துரையுடன் கூடிய விரிவான அறிக்கையினை வரைபடம் மற்றும் புகைப்படங்களுடன் இத்துறைக்கு அனுப்புமாறு உதவி ஆணையர், மண்டலம்-5 அவர்களிடம் 19.03.2025 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து (வடக்கு வட்டார அலுவலகம்) அவர்களின் 12.06.2025 நாளிட்ட கடிதத்தில், தனி வட்டாட்சியர் (நிமஉது), உதவி பொறியாளர் (வார்டு-59) மற்றும் உரிமம் பெற்ற நில அளவர் ஆகியோருடன் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**உத்தேச நிலமானது கிராமக் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு உள்ளது**

Taluk: Mylapore Town: Triplicane (Part-1) Ward:59

| Block Code and Name of Locality | Survey Field/Sub Div | Govt. Mitta Zamindari Inam | Dry, Wet Unassessed, Promboke, House-site | Extent in Hectare | Adangal (UDS) Details |
|---|---|---|---|---|---|
| Block-59 மவுண்ட் ரோடு | 3171/1 | சர்க்கார் | புறம்போக்கு | 44.0.17.0 | அரசு பொது பணித்துறை |

கலைவாணர் திரு.என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களது திருவுருவச் சிலை அமையவுள்ள இடமானது சென்னை, கலைவாணர் அரங்க நுழைவு வாயிலுக்கு அருகில் அரங்கத்திற்கு தெற்கு பக்கத்தில் அமைந்துள்ளது.

உத்தேச இடத்திற்கான 4 பக்க எல்லைகள் கீழ்க்கண்டவாறு உள்ளது என்றும்,

வடக்கு – புல எண்.3171/1 – சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

கிழக்கு – புல எண். 3171/1 – சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

தெற்கு – புல எண். 3171/1 – சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

மேற்கு – புல எண். 3171/1 - சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

திருவுருவச் சிலை அமையவுள்ள இடம் தற்போது காலியிடமாக உள்ளது. உத்தேச இடத்தில் மரங்கள், கட்டடங்கள் போன்றவை ஏதுமில்லை எனவும், பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏதுமில்லாத இடமாக உள்ளது என தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வலுவலக *16.06.2025* நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மாமன்ற தீர்மானத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு தடையின்மை சான்று வழங்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை ஜி.என்.செட்டி சாலையில் அமைந்துள்ள கலைவாணர் திரு.என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் சிலையினை மண்டலம்-5, கோட்டம்-59, கலைவாணர் அரங்க வளாகத்தில் மாற்றி அமைப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு தடையின்மை சான்று வழங்கப்பட்டதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 296/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1362/2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 743/2025** **பொருள் எண்.39**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-5, கோட்டம்-61 - மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களது திருவுருவச் சிலையினை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உள்ள கன்னிமாரா நூலகத்தின் நுழைவு வாயிலில் அமைக்க - மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதிகுட்பட்டு சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தடையின்மை சான்று வழங்கப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் 05.06.2025 நாளிட்ட கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவை விதி எண்.110-ன்கீழ் “மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களது உருவச் சிலை தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் அமைக்கப்படும்” என்ற அறிவிப்பினை அறிவித்துள்ளார்,

தற்போது, மாண்புமிகு முதலமைச்சரின் X தளப் பக்கத்தில், மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களது திருவுருவச் சிலையினை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உள்ள கன்னிமாரா நூலகத்தின் நுழைவு வாயிலில் அமைக்கப்படுவதற்கான இடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களது உருவச் சிலையினை தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை மாநகரில் எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உள்ள கன்னிமாரா நூலகத்தின் நுழைவு வாயிலில் அமைத்திட ஏதுவாக, அவ்விடத்திற்கான புலத்தணிக்கை அறிக்கை பெற்றும், உச்ச நீதிமன்ற வழக்கு எண்.SLP (C) 8519/2006-ல் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு உட்பட்டு அமைந்துள்ளதா என்ற விவரத்துடனும், தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் சிலையினை அமைத்திட உள்ளாட்சி தொடர்புடைய அமைப்பின் அனுமதியினையும், காவல் துறையின் இசைவினையும் பெற்று விரிவான அறிக்கை அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-5, கோட்டம்-61, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உள்ள கன்னிமாரா நூலகத்தின் நுழைவு வாயிலில் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களின் திருவுருவச் சிலையினை நிறுவுதல் தொடர்பாக, அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கும் நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மன்றத்தீர்மானம் மற்றும் இசைவினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.183, வருவாய்த்துறை (LD 4(1)), நாள்.23.05.2017-ன் வழிமுறைகளைப் பின்பற்றி மேற்படி இடத்தினை புலத்தணிக்கை மேற்கொண்டு குறிப்பான பரிந்துரையுடன் கூடிய விரிவான அறிக்கையினை வரைபடம் மற்றும் புகைப்படங்களுடன் இத்துறைக்கு அனுப்புமாறு உதவி ஆணையர், மண்டலம்-5 அவர்களிடம் 10.06.2025 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து (வடக்கு வட்டார அலுவலகம்) அவர்களின் 12.06.2025 நாளிட்ட கடிதத்தில் தனி வட்டாட்சியர் (நிமஉது), துணை நூலகர் (கன்னிமாரா நூலகம்),

உதவி பொறியாளர் (பொ.ப.து), உதவி பொறியாளர் (வார்டு-61) மற்றும் உரிமம் பெற்ற நில அளவர் ஆகியோருடன் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

உத்தேச நிலமானது கிராமக் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| Block Code and Name of Locality | Survey Field/Sub Div | Govt. Mitta Zamindari Inam | Dry, Wet Unassessed, Promboke, House-site | Extent in Hectare | How the holding is utilized |
|---|---|---|---|---|---|
| Block-31 பாந்தியன் ரோடு ஹாலர்ரோடு | 480/1 | சர்க்கார் | புறம்போக்கு | 6.38.33.0 | அரசு மியூசியம் |

மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களது திருவுருவச் சிலை அமையவுள்ள இடமானது எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உள்ள கன்னிமாரா நூலகத்தின் நுழைவு வாயிலில் அமைந்துள்ளது.

உத்தேச இடத்திற்கான 4 பக்க எல்லைகள் கீழ்க்கண்டவாறு உள்ளது

வடக்கு – புல எண்.480/1 – சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

கிழக்கு – புல எண்.480/1 – சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

தெற்கு – புல எண்.480/1 – சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

மேற்கு – புல எண்.480/1 – சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

திருவுருவச் சிலை அமையவுள்ள இடத்தில் கருங்கல் தரைத்தளம் அமைக்கப்பட்டுள்ளது. உத்தேச இடத்தில் மரங்கள், கட்டடங்கள் போன்றவை ஏதுமில்லை எனவும், பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏதுமில்லாத இடமாக உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வலுவலக 16.06.2025 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மாமன்ற தீர்மானத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு தடையின்மை சான்று வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-5, கோட்டம்-61, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உள்ள கன்னிமாரா நூலகத்தின் நுழைவு வாயிலில் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களின் திருவுருவச் சிலையினை அமைப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தடையின்மை சான்று வழங்கப்பட்டதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.297/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1377/2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 744/2025** **பொருள் எண்.40**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-13, கோட்டம்-180 - முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்களுக்கு சென்னை திருவான்மியூர் புறநகர் இரயில் நிலையம் (MRTS) அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவில் திருவுருவச் சிலை அமைக்க மன்றத்தின் பின்னேற்பு அனுமதிகுட்பட்டு சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தடையின்மை சான்று வழங்கப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் கடிதத்தில், *24.06.2024* அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில், *2024-2025* ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிகையின் போது, மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள், "இந்தியாவின் இரும்புப் பெண்மணி எனப் போற்றப்படும் ஒரே பெண் பிரதமரும் தீர்க்கமான வெளியுறவுக் கொள்கையை கொண்டவரும், பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவருமான திருமதி. இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு சென்னையில் ரூ.*50* இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்படும்" என்ற அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

மேலும், திருமதி. இந்திரா காந்தி அம்மையார் அவர்களது திருவுருவச் சிலையினை சென்னை திருவான்மியூர் புறநகர் இரயில் நிலையம் *(MRTS)* அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவில் அமைத்திட அவ்விடத்திற்கான புலத்தணிக்கை அறிக்கை பெற்றும், அச்சிலை அமையவுள்ள இடம் உச்சநீதிமன்ற வழக்கு எண். *SLP (C)* எண்.*8519/2006*-இன் தீர்ப்புக்கு உட்பட்டு உள்ளதா என்ற விவரத்துடனும், தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் சிலையினை அமைத்திட தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் அனுமதியினையும், காவல் துறையின் இசைவினையும் பெற்று விரிவான அறிக்கை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்களுக்கு சென்னை திருவான்மியூர் புறநகர் இரயில் நிலையம் *(MRTS)* அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவில் அமைப்பது தொடர்பாக அரசு விதிகளின்படி தகுதி இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவு மற்றும் மன்றத்தீர்மானம் ஆகியவற்றினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.*183*, வருவாய்த்துறை *(LD 4(1))*, நாள்.*23.05.2017*-ன் வழிமுறைகளைப் பின்பற்றி மேற்படி இடத்தினை புலத்தணிக்கை மேற்கொண்டு குறிப்பான பரிந்துரையுடன் கூடிய விரிவான அறிக்கையினை வரைபடம் மற்றும் புகைப்படங்களுடன் இத்துறைக்கு அனுப்ப உதவி ஆணையர், மண்டலம்-*13* அவர்களிடம் *12.06.2025* நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து (வடக்கு வட்டார அலுவலகம்) அவர்களின் 16.06.2025 நாளிட்ட கடிதத்தில், தனி வட்டாட்சியர் (நிமஉது) மற்றும் உரிமம் பெற்ற நில அளவர் ஆகியோருடன் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

| மாவட்டம் | வட்டம் | கிராமம் | பிளாக் | புல எண் | வகைபாடு | மொத்த விஸ்தீரணம் | உரிமையாளர் | தற்போது புலத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| சென்னை | வேளச்சேரி | திருவான்மியூர் | 2 | 2 | சர்க்கார் புறம்போக்கு | 2.70.40 | பக்கிங்காம் கால்வாய்/ வாய்க்கால் | சென்னை மாநகராட்சி பூங்கா |

மேற்கண்ட புலமானது தற்போது சென்னை மாநகராட்சி சாலையோர பூங்கா *(WRTC Park)* ஆக திருவான்மியூர் முதல் சென்னை கடற்கரை வரை செல்லும் பறக்கும் இரயில் நிலையத்தின் கீழ் அமைந்துள்ளது. இப்பூங்காவில் முன்னாள் இந்திய பிரதமர் திருமதி.இந்திராகாந்தி அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைப்பதற்கு போதிய இடம் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது என்றும், மேற்படி கோரியுள்ள திருவுருவச் சிலைகள் பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அதிகாரம் உள்ளதால் திருவுருவச் சிலைகள் அமைப்பது குறித்து நீர்வளத்துறையிடம் *(WRD )* இருந்து அனுமதி பெற்று திருவுருவச்சிலையை நிறுவலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக 18.06.2025 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மாமன்ற தீர்மானத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு தடையின்மை சான்று வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-13, கோட்டம்-180 முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்களுக்கு சென்னை திருவான்மியூர் புறநகர் இரயில் நிலையம் *(MRTS)* அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவில் திருவுருவச் சிலை அமைப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தடையின்மை சான்று வழங்கப்பட்டதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.301/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/1105-1/2025**

**ஆணையர் அவர்களின் 16.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 745/2025** **பொருள் எண்.41**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் (ம) உடைமைத்துறை - சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை நிரந்தர அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டது - சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகளுக்காக நிலம் ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.**

அரசாணை நிலை எண். 74, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறை, நாள்:01.05.2025-ன்படி, சென்னை மாவட்டம், வில்லிவாக்கம் எம்.டி.எச். சாலை (சர்கார் புறம்போக்கு) அமைந்தகரை கிராமம், பிளாக் எண். 3, நகர நில அளவை எண். 34ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் 2710 ச.மீட்டர் நிலத்தை நிரந்தர அடிப்படையில் மாற்றுதல் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு முன்நுழைவு அனுமதியுடன் நிருவாக ஒப்புதல் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சென்னை மாவட்டம், மண்டலம்-08 வில்லிவாக்கம் எம்.டி.எச். சாலை (சர்கார் புறம்போக்கு) அமைந்தகரை கிராமம், பிளாக் எண். 3, நகர நில அளவை எண். 34 இல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் 2710 ச.மீட்டர் நிலத்தினை மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலக தனி வட்டாட்சியர் (நி.ம.உ.து), உரிமம் பெற்ற நில அளவர்கள், மண்டல கோட்டப் பொறியாளர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன அலுவலர் ஆகியோருடன் இணைந்து கூட்டுப் புலத்தணிக்கை மேற்கொண்டு புலத்தணிக்கை அறிக்கையினை அனுப்புமாறு மத்திய வட்டார துணை ஆட்சியருக்கும் (நி.ம.உ.து) மற்றும் குறிப்பான பரிந்துரையுடன் விரிவான அறிக்கையினை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு 30.05.2025 நாளிட்ட கடிதத்தின்படி, உதவி ஆணையர்-08 அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டது.

உதவி ஆணையர், மண்டலம்-8 அவர்களின் 09.06.2025 நாளிட்ட கடிதத்தில், கோட்டம்-94, பகுதி-21, மண்டலம்-8க்குட்பட்ட மேற்கண்ட நிலத்தினை நிருவாக மற்றும் முன் நுழைவு அனுமதியுடன் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என்றும், தற்போது MTH சாலை, வில்லிவாக்கத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மூலம் பணி நடைபெறுவதால் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-8, பகுதி-21, வார்டு-94, அரசாணை (நிலை) எண். 74, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறை, நாள்: 01.05.2025-ல் சென்னை மாவட்டம், வில்லிவாக்கம் எம்.டி.எச். சாலை (சர்கார் புறம்போக்கு) அமைந்தகரை கிராமம், பிளாக் எண்.3, நகர நில அளவை எண்.34இல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் 2710 ச.மீட்டர் நிலத்தை நிரந்தர அடிப்படையில் நிலத்திற்கு வழிகாட்டு விலை மதிப்பின் அடிப்படையில்

**கணக்கிடப்பட்டுள்ள நிலக்கிரயத் தொகையான** *(2710 sq.mtr x GLV 88265 = 239198150)* **ரூ.***23,91,98,150/-***ஐ (ரூபாய் இருபத்தி மூன்று கோடியே தொண்ணூற்று ஓர் இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நூற்று ஐம்பது மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடன் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் அப்புலத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ளும் பொழுது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் தகுந்த பாதுகாப்புடனும், கட்டிட இடுபாடுகளை உடனுக்குடன் அகற்றிடவும், சாலையில் ஏற்படும் பள்ளங்களை உடனுக்குடன் சரி செய்திட வேண்டுமென்ற அடிப்படையிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்டப் பணிகளுக்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலத்தினை வழங்குவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

> "25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 293/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**DIV64/12/2025-DIVISION(64)-AE-JE(C and M)**

**ஆணையர் அவர்களின் 28.05.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 746/2025** **பொருள் எண்.42**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 6, வார்டு - 64, மகாவீர் நகரில் உள்ள OSR நிலம் (பிளாக் எண்.10, T.S.No.5/1, கொளத்தூர் தாலுகா) - LPDM.No. 96 /1974 - பெருநகர சென்னை மாநகராட்சி வசம் நிலம் கையகப்படுத்த மன்றத்தின் அனுமதி.**

மகாவீர் நகரானது துணை நகரமைப்பு இயக்குனர், சென்னை செங்கல்பட்டு மண்டலம் அவர்களால் 1974ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவாகும். இதன் மனைப்பிரிவு எண்.*DTCP* எண்.*96/1974*, தேதி: *14/06/1974*. இம்மனைப்பிரிவில் *35* மனைபிரிவுகளும் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்தவெளி நிலமும் (சிறுவர் விளையாட்டு இடம்) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் சாலைகள் மற்றும் திறந்தவெளி நிலங்களை அப்போதைய வில்லிவாக்கம் பஞ்சாயத்து ஆணையருக்கு தானபத்திரம் பதியப்பட்ட தகவல் ஏதும் இவ்வலுவலகத்தில் இல்லை.

அங்கீகரிக்கப்பட்டுள்ள திறந்தவெளி நிலத்தில் (சிறுவர் விளையாட்டு நிலம்) மொத்தப் பரப்பளவு சுமார் *783* சதுர மீட்டராகும் ( *8425* சதுர அடி ). இந்நிலத்தில் தற்பொழுது சுமார் *287.5* சதுர மீட்டர் ( *3093* சதுர அடி ) அளவில் மட்டுமே பூங்கா அமைந்துள்ளது மீதமுள்ள நிலம் இதுநாள் வரையில் காலியாகவே உள்ளது. மேலும் வருவாய் துறையின் நிரந்தர நிலப் பதிவேட்டில் *51.50* சதுர மீட்டர் (*554* சதுர அடி ) மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

**திறந்தவெளி (*OSR*) நில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன,**

| வ. எண் | பிளாக் எண் | சர்வே எண் | | கட்டமைப்பின் வகை | சதுர மீட்டரில் பரப்பளவு |
|---|---|---|---|---|---|
| | | T.S.No | Sub division | | |
| 1 | 10 | 5 | 1 | பூங்கா | 287.50 |
| 2 | 10 | 5 | 1 | காலியான நிலம் | 495.50 |
| | | | | மொத்தம் | 783.00 |

பிரிவு *19 (i), (iii), (iv)* இன் கீழ் உள்ள விதியின்படி மற்றும் *(vi)* மேம்பாடு மற்றும் கட்டுப்பாடு விதிகளின்படி, திறந்தவெளி, சாலைகள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள், அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பொது உபயோகத்திற்கான ஒதுக்கப்பட்ட மனை பிரிவில் உள்ள நிபந்தனையின்படி பொது உபயோகத்தில் உள்ள நிலங்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்பின் சொத்தாக தானாகவே கருதப்படுகிறது. சென்னை நகர முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம், *199* இன் பிரிவு *74* இன் கீழ் உள்ள விதிகளின்படி, மன்ற தீர்மானம் பெற்ற பிறகு, பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் மூலம், இந்த வகையான நிலங்கள் அந்தந்த மனை பிரிவு ஊக்குவிப்பார்கள் *(Layout Promotors)/TNHB/TNSCB* போன்றவர்களிடமிருந்து கையகப்படுத்தப்படுகின்றன. அரசாங்க நிலத்தை எந்த சங்கத்திற்கும் ஒப்படைக்க அந்த உள்ளாட்சி அமைப்பின் தனிப்பட்ட அதிகாரி முடிவு செய்ய

முடியாது. அரசாங்கத்திடம் உள்ள நிலங்களுக்கான உரிமையை மாற்றும் அதிகாரம் அரசிடமே உள்ளது.

தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி இட ஒதுக்கீடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், *1959* இன் பிரிவு *8* இன் கீழ், அரசாங்கத்தின் முன் அனுமதியின்றி இந்த நிலங்களில் எந்த நிரந்தரக் கட்டுமானத்தையும் செய்ய இயலாது. இந்த வகையான நிலங்கள் மாநகராட்சி சொந்தமான நிலங்கள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், *OSR*ல் *5* சதவிகித கட்டுமானம் மட்டுமே செய்யப்பட வேண்டும்.

*1978* ஆம் ஆண்டு கொளத்தூர் பஞ்சாயத்து அனைத்து சொத்துக்களுடன் சென்னை மாநகராட்சி வசம் சேர்க்கப்பட்டது. மகாவீர் நகர் பொது உபயோகத்திற்கான ஒதுக்கப்பட்ட திறந்தவெளி *(OSR)* நிலத்தில் இதுநாள் வரையில் யாரும் உரிமை கோரவும் இல்லை மற்றும் மாண்புமிகு நீதிமன்றத்தில் எந்தவிதமான வழக்குகளும் இல்லை.

மேற்கண்ட காலியாக உள்ள நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலப் பதிவேட்டில் சேர்க்க வேண்டும்.

எனவே,

1. மனைப் பிரிவின்படி உள்ள மொத்த திறந்த வெளி நிலத்தில் *(OSR)* காலியாக உள்ள நிலத்தை பொது நோக்கத்திற்காகப் பயன்படுத்த அனுமதியை அளிக்கவும்,
2. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், *1998* இன்படி, மேற்கண்ட திறந்தவெளி நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக கையகப்படுத்துவதற்கும்,
3. மொத்த பொது உபயோக நிலத்தினை பட்டா மற்றும் வருவாய் பதிவுகளை பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.294/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**DIV65/5/2025-DIVISION(65)-AE-JE(C and M)**

**ஆணையர் அவர்களின் 16.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 747/2025** **பொருள் எண்.43**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -6, வார்டு -65, ஜெயராம் நகரில் ஆக்கிரமிக்கப்பட்ட OSR நிலம் (பிளாக் எண்.20, T.S.No.23, கொளத்தூர் தாலுகா) - DTCP.No.122/1972 பெருநகர சென்னை மாநகராட்சி வசம் நிலம் கையகப்படுத்த மன்றத்தின் அனுமதி.**

ஜெயராம் நகரானது துணை நகரமைப்பு இயக்குனர், சென்னை செங்கல்பட்டு மண்டலம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட 1972ஆம் ஆண்டு மனைப்பிரிவாகும் இதன் மனைப்பிரிவு எண். DTCP.No.122/1972, தேதி: 05/08/1972. இம்மனைப்பிரிவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக (OSR) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் சாலைகள் மற்றும் திறந்தவெளி நிலங்களை அப்போதைய வில்லிவாக்கம் பஞ்சாயத்து ஆணையருக்கு தானபத்திரம் பதியப்பட்ட தகவல் ஏதும் இவ்வலுவலகத்தில் இல்லை.

ஜெயராம் நகரில் 1972ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை (7535 சதுர அடி) திருமண மண்டபம் கட்டி பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்க கோரி நில உரிமையாளர் / Promoter திரு.ஜெயராம் நாயக்கர் அவர்களின் கோரிக்கையை மேற்கோள் காட்டி, செயலாளர் கொளத்தூர் பஞ்சாயத்து அவர்கள் ஜெயராம் நகரில் 7535 சதுர அடி பரப்பளவில் பொது உபயோகத்திற்காக உள்ள நிலத்தை தனிப்பட்ட பயன்பாட்டிற்கு பின்வரும் நிபந்தனையுடன் ஒதுக்கி உள்ளனர்.

**“மேற்படி நிலத்தின் உரிமையாளர் திரு. ஜெயராம் நாயக்கர் ஒரு பள்ளிக் கூடமாவது அல்லது கல்யாண மண்டபமாவது அவர் செலவிலேயே பொது உபயோகத்திற்கு நடத்தி வருமாறும் மேற்படி இடம் அவர் சுவாதீனத்திலேயே விட்டுவிடுமாறும் இச்சபை ஒருமனதாக தீர்மானித்து அந்த பொது இடத்தை அவரிடமே ஒப்படைத்து விடுமாறு அங்கீகரித்துள்ளனர்”.**

இந்நிலையில், ஜெயராம்நகர், மண்டலம்-6, பகுதி-15, வார்டு – 65, இல் உள்ள ஜெயராம் நகர் பிரதான சாலையில் உள்ள 7535 சதுர அடி பரப்பளவை உள்ளடக்கிய பொது உபயோகத்திற்கான (OSR) நிலத்தைச் (பிளாக் எண்.20, T.S.No.23, கொளத்தூர் தாலுகா) சுற்றி ஒரு சுற்றுச்சுவரை அமைத்து தற்காலிக கொட்டகையுடன் கூடிய திருமண மண்டபம் சென்னை மாநகராட்சியின் கட்டிட / வரைபட அனுமதி பெறப்பட்டு (கட்டிட அனுமதி எண் 53/1988, Dt: 25.08.1988) கட்டிடம் கட்டப்பட்டு தனி நபரின் கட்டுப்பாட்டில் இதுநாள் வரையில் உள்ளது.

திறந்தவெளி/ பொது பயன்பாட்டிற்காக (OSR) நில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | பிளாக் எண் | சர்வே எண் | | கட்டமைப்பின் வகை | பரப்பளவு சதுர மீட்டரில் |
|---|---|---|---|---|---|
| | | T.S.No | Sub division | | |
| 1 | 20 | 23 | 0 | தற்காலிக கட்டிடம் | 700.00 |

பிரிவு *19(i), (iii), (iv)* இன் கீழ் உள்ள விதியின்படி மற்றும் *(vi)* மேம்பாடு மற்றும் கட்டுப்பாடு விதிகளின்படி, திறந்தவெளி, சாலைகள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள், அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பொது உபயோகத்திற்கான ஒதுக்கப்பட்ட மனை பிரிவில் உள்ள நிபந்தனையின்படி பொது உபயோகத்தில் உள்ள நிலங்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்பின் சொத்தாக தானாகவே கருதப்படுகிறது. சென்னை நகர முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம், *199* இன் பிரிவு *74* இன் கீழ் உள்ள விதிகளின்படி, மன்ற தீர்மானம் பெற்ற பிறகு, பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் மூலம், இந்த வகையான நிலங்கள் அந்தந்த மனை பிரிவு ஊக்குவிப்பார்கள் *(Layout Promoters)/ TNHB/TNSCB* போன்றவர்களிடமிருந்து கையகப்படுத்தப்படுகின்றன. அரசாங்க நிலத்தை எந்த சங்கத்திற்கும் ஒப்படைக்க அந்த உள்ளாட்சி அமைப்பின் தனிப்பட்ட அதிகாரி முடிவு செய்ய முடியாது. அரசாங்கத்திடம் உள்ள நிலங்களுக்கான உரிமையை மாற்றும் அதிகாரம் அரசிடமே உள்ளது. இந்தக் கடிதத்தில் உள்ளதைப் போல, பொது நோக்கத்திற்கான நிலத்தின் ஒரு பகுதியை தனிப்பட்ட சங்கத்திற்கு ஒப்படைப்பதற்கான தனிப்பட்ட செயலாளர்/கொளத்தூர் பஞ்சாயத்து அவர்கள் *14.08.1974*ல் அளித்த கடிதத்தின்படி, தனிப்பட்ட நபரின் பயன்பாட்டின் நோக்கத்திற்கான அரசாங்க நிலத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி இட ஒதுக்கீடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், *1959* இன் பிரிவு *8* இன் கீழ், அரசாங்கத்தின் முன் அனுமதியின்றி இந்த நிலங்களில் எந்த நிரந்தரக் கட்டுமானத்தையும் செய்ய இயலாது. இந்த வகையான நிலங்கள் மாநகராட்சி சொந்தமான நிலங்கள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் *7535* சதுர அடி ஒதுக்கப்பட்டு அந்த இடத்தில் உள்ள அனைத்து பொது உபயோக நிலத்தினையும், பொது நலச் சங்கம் எவ்வித அனுமதியும் இல்லாமல் உபயோகித்து வருகின்றார்கள்.

மேலும், *OSR* ல் *5* சதவிகித கட்டுமானம் மட்டுமே செய்யப்பட வேண்டும். *1978* ஆம் ஆண்டு கொளத்தூர் பஞ்சாயத்து அனைத்து சொத்துக்களுடன் சென்னை மாநகராட்சி வசம் சேர்க்கப்பட்டது.

பொது உபயோகத்திற்கான ஒதுக்கப்பட்ட *(OSR)* நிலத்தை முழுவதுமாக நில உரிமையாளர் / *Promoter* திரு.ஜெயராம் நாயக்கர் அவர்களின் குடும்பத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். நில உரிமையாளர் / *Promoter* திரு.ஜெயராம் நாயக்கர் அவர்களின் குடும்பத்தினர் ஆக்கிரமித்துள்ள அந்த நிலத்தின் மீது உரிமை கோர எந்த உரிமையும் இல்லை. மேலும், மாஸ்டர் பிளானில் குறிப்பிடப்பட்டுள்ள அசல் மனை பிரிவு *20 / 23, DTCP*-யிடமிருந்து எந்த முன் ஒப்புதலையும் பெறாமல், மனை பிரிவு தன்னிச்சையாக திருத்தப்பட்டுள்ளது.

மேலும், பஞ்சாயத்து செயலாளர் வழங்கிய அனுமதி கடிதத்தை ரத்து செய்து, நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலப் பதிவேட்டில் சேர்க்க வேண்டும்.

எனவே,

1. மனைப்பிரிவின்படி பொது உபயோகத்திற்கான *(OSR) 7535* சதுர அடி நிலத்தை பொது நோக்கத்திற்காகப் பயன்படுத்த தனி நபருக்கு செயலாளர், கொளத்தூர் பஞ்சாயத்து அவர்களால் வழங்கிய அனுமதியை ரத்து செய்யவும்,

2. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், *1998* இன் பிரிவு *128(1)(b)* இன் கீழ் தாக்கீது அளித்து, அசல் மனை *DTCP* எண்.*122/1972*, தேதி: *05/08/1972*இல் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கண்ட பொது உபயோகத்திற்கான நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக கையகப்படுத்தவும்,

3. மொத்த பொது உபயோக நிலத்தினை பட்டா மற்றும் வருவாய் பதிவுகளை பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பெயர் மாற்றம் செய்யவும்,

4. ஏற்கனவே *1988*ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் பெறப்பட்ட கட்டிட அனுமதியை ரத்து செய்யவும் மற்றும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை இடிப்பதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.295/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1050/2025**

**ஆணையர் அவர்களின் 21.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 748/2025** **பொருள் எண்.44**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் மேம்படுத்துதல் / திட்டப்பணிகள் செயல்படுத்துதல் - முதல்வர் படிப்பகம் அமைக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி.**

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் 05.05.2025 நாளிட்ட கடிதத்தில், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் தலைவர் அவர்களின் அறிவிப்பு எண்.4ன்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் பல்வேறு நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள முன் மொழியப்பட்டுள்ளது.

சென்னையில் அதிவேக இணையத்துடன், போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் மாணவ மாணவிகளுக்கு தேவையான வசதிகளுடன் கூடிய கற்றல் மையங்களை வட சென்னை பகுதியில் 13 இடங்களிலும் இதர பகுதிகளில் 2 இடங்களிலும் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் 15 முதல்வர் படிப்பகங்கள் உருவாக்கப்படவுள்ளன என்றும், மேலும், பிளாக் எண்.107, சர்வே எண்.4736/2, ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட தி.நகர் கிராமம், கோடம்பாக்கம் நூலகத்தினை கடந்த 29.03.2025 அன்று மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் தலைவர், அரசு கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் பிற அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி நூலகத்தில் முதல்வர் படிப்பகம் அமைக்க முன்மொழியப்பட்டு அறிவிக்கப்பட்டது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் மேற்படி வளர்ச்சி திட்டப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் முன்நுழைவு அனுமதி / தடையின்மை சான்றுடன் அந்நிலத்தின் சர்வே எண் (உட்பிரிவுடன்) FMB Sketches, புல வரைபடத்துடன் கூடிய நில ஆவணங்ளை வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பிளாக் எண்.107, சர்வே எண்.4736/2, ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட தி.நகர் கிராமம், கோடம்பாக்கம் நூலகத்தில் முதல்வர் படிப்பகம் அமைக்கும் வளர்ச்சி திட்டப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, மேற்படி இடத்தினை கள ஆய்வு செய்து அவ்விடத்தின் சர்வே எண் (துணைப் பிரிவுகளுடன்), FMB Sketches மற்றும் நில ஆவணங்களுடன் மேலும், மேற்படி நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வேறு ஏதேனும் திட்டப்பணிகள் மேற்கொள்ள தீர்மானித்திருந்தால் அதன் விவரத்தினையும், விரிவான அறிக்கையாக உடன் இத்துறைக்கு அனுப்புமாறு உதவி ஆணையர், மண்டலம் - 9 மற்றும் துணை ஆட்சியர்/நி.ம.உ.து (மத்திய வட்டார அலுவலகம்) அவர்களிடம் 09.05.2025 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

உதவி ஆணையர், மண்டலம் – 9 அவர்களின் 20.06.2025 நாளிட்ட கடிதத்தில், முதல்வர் படைப்பகம் அமைக்கும் வளர்ச்சி திட்டப்பணியினை மேற்கொள்ள, ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட தி.நகர் கிராமம், பிளாக் எண்.107, சர்வே எண்.4736/2 இடத்தினை களஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மேற்படி நிலத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கலாம் என மண்டலம்-9 பரிந்துரைக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் – 9, கோட்டம் – 113, ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட தி.நகர் கிராமம், பிளாக் எண்.107, சர்வே எண்.4736/2-ல், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் கோடம்பாக்கம் நூலகத்தில் முதல்வர் படைப்பகம் அமைக்கும் வளர்ச்சி திட்டப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் முன் நுழைவு அனுமதியினை வழங்குவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.300/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1136/2025**

**ஆணையர் அவர்களின் 24.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 749/2025** **பொருள் எண்.45**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் மேம்படுத்துதல் / திட்டப்பணிகள் செயல்படுத்துதல் -"Climate resilient Sponge park" அமைக்க - சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி.**

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் 30.04.2025 நாளிட்ட கடிதத்தில், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் தலைவர் அவர்களின் அறிவிப்பு எண்.6ன்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் பல்வேறு நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள முன்மொழியப்பட்டுள்ளதாகவும்,

சென்னையில் உள்ளூர் இளைஞர்களின் திறன்களை மேம்படுத்தவும், சென்னை நகரில் சமூக தொடர்பு மற்றும் ஓய்வுக்கான துடிப்பான மையங்களை உருவாக்கவும், ஒருங்கிணைந்த விளையாட்டு மையம் உருவாக்கப்படவுள்ளன என்றும்,

மேற்குறிப்பில், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், "சென்னை பெருநகரப் பகுதியில் *"seven climate-resilient Sponge Parks will be set up across Chennai Metropolitan area at an estimated cost of Rs.88 crore."* மதிப்பீட்டில் ஏழு காலநிலை-எதிர்ப்பு கடற்பாசி பூங்காக்கள் அமைக்கப்படும்" என அறிவித்துள்ளார் எனவும், 7 பூங்காக்களில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் பின்வரும் இரண்டு பூங்காக்களை உருவாக்க /மேம்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது எனவும்,

| SI | Project Name | Location | Land Details |
|---|---|---|---|
| 1. | Climate-resilient Sponge Parks will be developed at Elango Nagar playground Padi. | Padi | Survey No : 369, 370,371,374,375,376 and 377 of Padi. |
| 2. | Climate-resilient Sponge Parks will be developed at Corporation Park, Thoraipakkam. | Thoraipakkam | Suvey No: 404 of Thoraipakkam |

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் மேற்படி வளர்ச்சி திட்டப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் முன்நுழைவு அனுமதி / தடையின்மை சான்றுடன் அந்நிலத்தின் சர்வே எண்(உட்பிரிவுடன்) *FMB Sketches*, புல வரைபடத்துடன் கூடிய நில ஆவணங்ளை வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, சர்வே எண். 369, 370, 371, 374, 375, 376 (ம) 377 பாடி இளங்கோ நகர் விளையாட்டு திடலில் *Climate-resilient Sponge* பூங்கா அமைக்க மற்றும் சர்வே எண். 404 துரைப்பாக்கம் மாநகராட்சி பூங்காவில் *Climate-resilient Sponge* பூங்கா அமைக்கும், வளர்ச்சி திட்டப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, மேற்படி இடத்தினை கள ஆய்வு செய்து அவ்விடத்தின் சர்வே எண் (துணைப் பிரிவுகளுடன்), *FMB Sketches* மற்றும் நில ஆவணங்களுடன் மேலும், மேற்படி நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வேறு ஏதேனும் திட்டப்பணிகள் மேற்கொள்ள தீர்மானித்திருந்தால் அதன் விவரத்தினையும்,

விரிவான அறிக்கையாக உடன் இத்துறைக்கு அனுப்புமாறு மண்டல அலுவலர், மண்டலம் – 7 மற்றும் 15 மற்றும் துணை ஆட்சியர்/நி.ம.உ.து (மத்தியம் மற்றும் தெற்கு) அவர்களுக்கு 20.05.2025 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மண்டல அலுவலர், மண்டலம்-15 அவர்களின் 17.06.2025 நாளிட்ட கடிதத்தில், மண்டலம் - 15, வார்டு - 195, புல எண் – 404, தலைமை செயலக அலுவலர் குடியிருப்பு முதல் பிரதான சாலையிலுள்ள பூங்காவை மேம்படுத்தி புனரமைக்கும் பணிக்காக பணியாணை 23.08.2024 அன்று வழங்கப்பட்டு தற்பொழுது பணிகள் நடைப்பெற்று வருகிறது என்றும், இதன் மதிப்பு ரூ.76.39 இலட்சம் என்றும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் சென்னை பெருநகர பகுதியில் Seven Climate resilient Sponge parks ஏழு காலநிலை எதிர்ப்பு கடற்பாசி பூங்காக்கள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும்,

மேற்படி நிலமானது வட்டாட்சியர் அலுவலக நிரந்தர நிலப்பதிவேட்டில் சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம், புல எண்.404/2B, பரப்பளவு – 11, ஹெக்டேர் 87.0 ஏர்ஸ் எனவும், புல எண் - 404/2C, பரப்பளவு – 11, ஹெக்டேர் 57.0 எனவும், உரிமையாளர் தமிழ்நாடு தலைமைச் செயலக பணியாளர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் என பதிவாகியுள்ளது என்றும்,

மண்டலம்-15, வார்டு 195, சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம். புல எண். 404/2B (ம) புல எண். 404/2C மொத்த பரப்பளவு 23 ஹெக்டேர், 44.0 ஏர்ஸ் விஸ்தீரணம் கொண்ட தமிழ்நாடு தலைமை செயலக பணியாளர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு சொந்தமான முதல் பிரதான சாலையில் அமைந்துள்ள பூங்காவில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் “Climate resilient Sponge park” அமைக்க திட்டப் பணிகள் மேற்கொள்ள தடையின்மை சான்று வழங்க உரிய விதிகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, வரிசை எண்-2ல் காணும் மண்டலம்-15, வார்டு 195, சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம். புல எண். 404/2B (ம) புல எண். 404/2C மொத்த பரப்பளவு 23 ஹெக்டேர், 44.0 ஏர்ஸ் விஸ்தீரணம் கொண்ட தமிழ்நாடு தலைமை செயலக பணியாளர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு சொந்தமான முதல் பிரதான சாலையில் அமைந்துள்ள பூங்காவில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் “Climate resilient Sponge park” அமைக்க வளர்ச்சி திட்டப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் முன் நுழைவு அனுமதி வழங்குவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 340/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/998/2025**

**ஆணையர் அவர்களின் 24.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 750/2025** **பொருள் எண்.46**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-5, கோட்டம்-61, எழும்பூர் (பகுதி-2) புல எண்.1572/1 - தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு பெயர் மாற்றம் செய்து தர கோரியது - புலத்தணிக்கை அறிக்கை பெறப்பட்டது - பணிகளை மேற்கொள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு தடையின்மைச் சான்று வழங்க மன்றத்தின் அனுமதி.**

மாவட்ட அலுவலர், தீயணைப்பு – மீட்புப்பணித்துறை அவர்களின் 30.04.2025 நாளிட்ட கடிதத்தில், மத்திய சென்னை மாவட்டம், சென்னை - 2, புதுப்பேட்டை, கதவு எண்.10 மற்றும் 11, டிரைவர் தெரு என்ற முகவரியில் மத்திய தீயணைப்பு துறைக்கு சொந்தமான இரண்டு குடியிருப்புகள் உள்ளதாகவும், இவை சுமார் 80 ஆண்டுகள் பழமையானதாகும், தற்போது இந்த இரண்டு குடியிருப்புகளும் மிகவும் பாழடைந்து பயன்படுத்த இயலாத நிலை உள்ளது என்றும், இக்குடியிருப்புகளை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்ட மேற்படி இடத்திற்கு புலப்படச்சுவடி புத்தகம் (FMA) கோரி எழும்பூர் வட்ட, வட்டாட்சியருக்கு கடிதம் எழுதப்பட்டு, FMA பெறப்பட்டது என்றும் சொத்து விவரம் பின்வரும் விவரப்படி உள்ளது என்றும் எழும்பூர் கிராமம், பிளாக் எண்.48 (RS.No.) மறுநில நகர அளவீட்டு எண்.1572/1-ல் 6643.3 சதுர அடி நிலத்தின் உரிமையாளர் விவரம்,

1. Name of the Owner - கார்பரேஷன் ஆப் மெட்ராஸ் “பிரைவேட்.”
2. Description of the Field – தீயணைப்பு குடியிருப்பு

மேற்படி இடத்தில் விரைவில் புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளதால் அவ்விடத்தினை இயக்குநர், தீயணைப்பு-மீட்புப்பணிகள் துறை என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்து வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட மண்டலம் – 5, எழும்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.48, (RS.No) மறுநில நகர அளவீட்டு எண்.1572/1-ல், 6643.3 சதுர அடி நிலத்தினை புலத்தணிக்கை மேற்கொண்டு மேற்படி புலத்தினை தீயணைப்பு- மீட்புப்பணிகள் துறைக்கு பெயர் மாற்றம் செய்வது குறித்து விரிவான அறிக்கையினை இத்துறைக்கு தெரிவிக்குமாறு 19.05.2025 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மண்டல அலுவலர், மண்டலம்–5 அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. பதிலேதும் பெறப்படவில்லை.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து, வடக்கு வட்டார அலுவலகம் அவர்களின் 16.06.2025 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, கோட்டம் – 61, பிளாக் எண்.48, எழும்பூர் வட்டம், எழும்பூர் (பகுதி-2) நகர புல எண்.1572/1ல் 6627 சதுரஅடி நிலத்தை தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு பெயர் மாற்றம் செய்து தரக் கோரிய வரப்பெற்ற கடிதம் தொடர்பாக 12.06.2025 அன்று புலத்தணிக்கை மற்றும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றும், தணிக்கையின்போது மாவட்ட தீயணைப்பு அலுவலர், தனி

வட்டாட்சியர் (நி.ம.உ.து), உதவி பொறியாளர் (வார்டு - 61) மற்றும் உரிமம் பெற்ற நில அளவர் ஆகியோர் உடனிருந்தனர் என்றும் மேற்படி நிலம், வருவாய் ஆவணங்களில் பின்வருமாறு பதிவாகியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு

மாவட்டம் : சென்னை, வட்டம் : எழும்பூர் நகரம் : எழும்பூர் (பகுதி-2)

| Block Code and Name of Locality | Survey Field/ Sub Div. | Govt, Mitta, Zamindari, Inam | Dry, Wet, Unassessed Promboke, House – site | Extent in Hectare | Adangal (UDS Details) | How the holding is utilized |
|---|---|---|---|---|---|---|
| 0048 துளசிங்க நாயக்கன் தெரு | 1572/1 | ரயத்துவாரி | விடுவரி | 0.11.50.0 | கார்பரேசன் ஆப் மெட்ராஸ் பிரைவேட் | தீயணைப்பு குடியிருப்பு |

**புலத்தின் நான்கெல்லைகள்:**

| | | |
|---|---|---|
| வடக்கு | : | புல எண்.1576/1, 2, 3, 4, 1575 (பகுதி) |
| தெற்கு | : | புல எண்.1594 – தெரு |
| கிழக்கு | : | புல எண்.1593 – பட்டா நிலம் |
| மேற்கு | : | புல எண்.1572/1 (பகுதி) – பெண்களுக்கான மனநல மறுவாழ்வு காப்பகம் |

மேற்கண்ட புலத்தில் 1939ஆம் ஆண்டு முதல் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்குச் சொந்தமான அலுவலகக் கட்டிடம் இயங்கி வருவதாக தணிக்கையின்போது தெரிவிக்கப்பட்டது என்றும், மேற்படி கட்டடமானது தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளதாலும், புதிய கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளதாலும், புதிய கட்டடம் அமைப்பதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது என்றும், புலத்தில் வேப்பமரம்-1. மா மரம்-1. தென்னை மரம்-1 ஆகியவை உள்ளன என்றும், தீயணைப்பு வாகனங்கள் நிறுத்தம் செய்யும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என தெரிவித்து, நகர நிலஅளவை பதிவேடு நகல், புல வரைபடம், வருவாய் ஆவணங்கள் ஆகியவை இணைத்து புலத்தணிக்கை அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலம் தொடர்பாக நிலம் மற்றும் உடைமைத் துறையின் ஆவண அறையில் உள்ள ஆவணங்களை ஆராய்ந்ததில், எழும்பூர் நிரந்தர நில பதிவேட்டில், *RS No.1338* முதல் 1684 வரை பதிவாகியுள்ள புத்தக எண்.3ல் பக்க எண்34 மற்றும் 35ல் புல எண்.1572/1ல் 5 மனை, 376 சதுர அடி எனவும், வகைப்பாடு *Corporation Private*, உபயோகம் *"Houses Bungalow etc., quarters for the Central Fire Brigade water waves staff"* என பதிவாகியுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 5, கோட்டம் - 61, பிளாக் எண்.48, எழும்பூர் வட்டம், எழும்பூர் (பகுதி-2) நகர புல எண்.1572/1ல் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பயன்பாட்டில் உள்ள இரண்டு குடியிருப்புகள் கட்டிடங்கள் சுமார்

80 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ளதாலும், அவை மிகவும் பாழடைந்த பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதாலும், இக்குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய கட்டிடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதாலும், சுமார் 6627 சதுரஅடி கொண்ட நிலத்தினில் பணிகளை மேற்கொள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு தடையின்மைச் சான்று வழங்க, நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.342/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/1508/2025**

**ஆணையர் அவர்களின் 24.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 751/2025** **பொருள் எண்.47**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - சென்னை மாவட்டம், வீட்டுமனை பட்டா வரன்முறைப்படுத்துதல் - அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்பவர்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்குதல் - வருவாய் துறை ஆவணங்களில் பாதை, வண்டி பாதை, பாட்டை, களம், மயானம்/இடுகாடு, கார்பரேஷன் பப்ளிக் ஆகிய வகைபாடு கொண்ட நிலங்களில் வசிப்பவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க மன்றத்தின் அனுமதி.**

சென்னை மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில், சென்னை மாவட்டத்தில் ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு ஒருமுறை வரன்முறைபடுத்தும் சிறப்பு திட்டத்தின் கீழ் வீட்டு மனை பட்டா வழங்க அரசாணை நிலை எண்.97 மற்றும் 205 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்: 21.02.2025 மற்றும் 26.04.2025 ஆகிய அரசாணைகளில் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் மாநகராட்சி நிலமாற்றம் விலக்களிக்கப்பட்டவை - கார்ப்பரேஷன் பப்ளிக், சர்க்கார் புறம்போக்கு-கார்ப்ரேஷன் பப்ளிக், மாநகராட்சி பொது வகைபாட்டில் வீடுகள் மூலமாக ஆக்கிரமம் செய்துள்ளதாக சோழிங்கநல்லூர், ஆலந்தூர், தண்டையார்பேட்டை வட்டாட்சியர்களிடமிருந்து அறிக்கை வரப்பெற்றுள்ளது என்றும், அவற்றின் விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வட்டத்தின் பெயர் | கிராமம் | வகைபாடு | வார்டு | பிளாக் எண். | நகரபுல எண். புல எண். | மொத்த பரப்பு (ச.அடி) | வரன்முறைப் படுத்தபட வேண்டிய பரப்பு (ச.அடி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தண்டையார் பேட்டை | தண்டையார் பேட்டை | மாநகராட்சி பொது (தெரு) | 43 | 53 | 3531 | 7394.809/ 0.06.87.0 | 4932/0.04.58.0 |
| 22 | தண்டையார் பேட்டை | தண்டையார் பேட்டை | மாநகராட்சி பொது (தெரு) | 40 | 68 | 3871 | 39718.5/ 0.36.90.0 | 17500/ 0.16.25.5 |
| | | | மாநகராட்சி பொது | 40 | 69 | 3872 | 0.15.97.0 | |

மேற்படி குறிப்பிட்டுள்ள புலங்களில் வரிசை எண் 1-ல் உள்ள புல எண் 3531-ல் 25 குடும்பங்கள் ஆக்கிரமணம் செய்துள்ளனர் மற்றும் வரிசை எண் 2-ல் உள்ள புல எண்.3871 மற்றும் புல எண் 3872 ஆகியவற்றில் 55 குடும்பங்கள் ஆக்கிரமணம் செய்துள்ளனர் என்றும், அவர்களில் அரசாணை நிலை எண்.97 மற்றும் 205 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்:21.02.2025 மற்றும் 26.04.2025 ஆகிய அரசாணையின்படி முறையே 19 குடும்பங்கள் மற்றும் 43 குடும்பங்கள் தகுதியுடையவர்கள் என வட்டாட்சியரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்றும்,

மேலும் மேற்படி நிலப்பகுதிகளின் நான்கெல்லைகள் விவரம் பின்வருமாறு.

1. **புல எண்.3531**

| | | |
|---|---|---|
| வடக்கு | : | புல எண் 3532 |
| தெற்கு | : | புல எண் 3530/1 |
| கிழக்கு | : | புல எண் 3529 |
| மேற்கு | : | புல எண் 3536/1 |

2. **புல எண் 3871 மற்றும் புல எண் 3872**

| | | |
|---|---|---|
| வடக்கு | : | புல எண்.28. சாத்தான்காடு கிராமம் (திருவொற்றியூர் வட்டம்) |
| தெற்கு | : | பிளாக் 68 |
| கிழக்கு | : | பிளாக் 77 |
| மேற்கு | : | சர்வே எண்.3870/2, 3869/2, 3873 |

இந்நேர்வு தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை மாவட்டம் அவர்களின் 20.06.2025 நாளிட்ட கடிதத்தில் உள்ளாட்சி அமைப்பின் நிலங்களான மாநகராட்சி பொது வகைபாட்டில் உள்ள நபர்களின் ஆக்கிரமணத்தை வரன்முறை செய்ய உள்ளாட்சி அமைப்பின் தீர்மானம் பெற்ற பின்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள புலத்தில் வசிக்கும் தகுதியுள்ள நபர்களுக்கு அரசாணை நிலை எண்.97 மற்றும் 205 ன் கீழ் வரண்முறைப்படுத்தி பட்டா வழங்கும் பொருட்டு சென்னை மாநகராட்சியின் மாமன்ற தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

துணை ஆட்சியர் / நிமஉது (வடக்கு) அவர்களின் 23.06.2025 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4, கோட்டம்-40 & 43, தண்டையார்பேட்டை (பகுதி-1, 3) நகர புலஎண். 3871, 3872, 3531 முதலிய கார்ப்பரேசன் பப்ளிக் நிலங்களில் வசிக்கும் தகுதியுள்ள நபர்களுக்கு அரசாணைகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்கும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நிலங்கள் 23.6.2025 அன்று மண்டல அலுவலர் (மண்டலம்-4), துணை ஆட்சியர் (நிமஉது) (வடக்கு) உதவி செயற் பொறியாளர், தனி வட்டாட்சியர் (நிமஉது), உதவி பொறியாளர் (வார்டு-40), உதவி பொறியாளர் (வார்டு-43),உதவி சார் ஆய்வாளர் மற்றும் உரிமம் பெற்ற நில அளவர்கள் ஆகியோருடன் கூட்டுப் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும்,

ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள புலங்கள், வருவாய் ஆவணங்களின்படி கீழ்க்கண்டவாறு காணப்படுகிறது என்றும்,

மாவட்டம் : சென்னை வட்டம் : தண்டையார்பேட்டை நகரம் : தண்டையார்பேட்டை (பகுதி-1 &3)

| S. No | Block No | T.S. No | Govt., Mitta, Zamindari, Inam | Dry, Wet, Unassessed, Poramboke, House-site | Adangal (UDS Details) | Total Extent in Hect. | How the holding is utilized |
|---|---|---|---|---|---|---|---|

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 68 | 3871 | மாநகராட்சி | நிலமாற்றம் – விலக்களிக்கப்பட்டவை | கார்ப்பரேசன் பப்ளிக் | 0.36.90.0 | தெரு |
| 2. | 69 | 3872 | மாநகராட்சி | நிலமாற்றம் – விலக்களிக்கப்பட்டவை | கார்ப்பரேசன் பப்ளிக் | 0.15.97.0 | தெரு |
| 3. | 53 | 3531 | மாநகராட்சி | நிலமாற்றம் – விலக்களிக்கப்பட்டவை | - | 0.06.87.0 | தெரு |

புலஎண்.3871 மற்றும் 3872 ஆகியவற்றில் உள்ள மொத்த ஆக்கிரமிப்புதாரர்களின் எண்ணிக்கை 55 என்றும், அதில் வீட்டுமனைப் பட்டா பெறத் தகுதியுள்ளவர்களின் எண்ணிக்கை 43 என்றும் கண்டறியப்பட்டுள்ளது. அரசாணைகளின்படி வரண்முறை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பரப்பு புலஎண்.3871ல் 0.08.53.5 ஹெக். மற்றும் புலஎண்.3872ல் 0.08.27.5 ஹெக். நிலம் வரண்முறை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், புலஎண்.3531ல் உள்ள மொத்த ஆக்கிரமிப்புதாரர்களின் எண்ணிக்கை 25 என்றும், அதில் வீட்டுமனைப் பட்டா பெறத் தகுதியுள்ளவர்களின் எண்ணிக்கை 19 என கண்டறியப்பட்டுள்ளது. இப்புலத்தில் அரசாணை நிலை எண்.97 மற்றும் 205 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்: 21.02.2025 மற்றும் 26.04.2025 ஆகிய அரசாணைகளின்படி வரண்முறை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பரப்பு 0.04.10.5 ஹெக். ஆகும் என்றும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதியின் 4 பக்க எல்லைகள் கீழ்க்கண்டவாறு உள்ளது என்றும்,

| S. No | Survey No. | Classification | Total Extent (in Hec.) | Extent to be withdrawn (in Hec.) | Boundaries | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | East Survey No | West Survey No. | South Survey No. | North Survey No. |
| 1. | 3871 | மாநகராட்சி | 0.36.90.0 | 0.08.53.5 | 4033/2, 4034/5, 4035/5 | 3871/2, 3869/2, 3868 | 3872, 3873 | 3871 |
| 2. | 3872 | மாநகராட்சி | 0.15.97.0 | 0.08.27.5 | 4031/3 | 3873 | 3872 (பாகம்) | 3871 |
| 3. | 3531 | மாநகராட்சி | 0.06.87.0 | 0.04.10.5 | 3529 | 3536 | 3530 | 3532 |

ஆக்கிரமிப்புதாரர்களில் பெரும்பாலானவர்கள் மாடி வீடுகளும், ஒருசில நபர்கள் ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்த வீடுகளும் கட்டியுள்ளனர். பலதரப்பட்ட இனத்தைச் சார்ந்த அவர்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த இடத்தில் குடியிருந்து வருபவர்கள் என்றும், அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலை செய்பவர்களும், பல்வேறு கூலி வேலை செய்பவர்களும் அங்கு வசிக்கின்றனர் என்றும் விசாரணையிலிருந்து தெரிய வருகிறது. அப்பகுதியில் அனைத்து அடிப்படை வசதிகளும் மாநகராட்சியின் சார்பில் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. மேற்படி புலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் எதிர்கால திட்டப் பணிகளோ அல்லது சாலை விரிவாக்கப் பணிகளோ மேற்கொள்ளும் திட்டங்கள் மண்டல அளவில் ஏதுமில்லை என்று மண்டல அலுவலர்-4 அவர்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும்,

இப்புலங்களுக்கு மேற்குப் பகுதியில், இப்புலங்களுக்கு அருகாமையில், வரண்முறை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிலங்களுக்கு குறைந்தபட்சமாக 80 மீட்டர் தொலைவிலும், அதிகபட்சமாக 280 மீட்டர் தொலைவிலும் வ.உ.சி. நகர் இரயில் நிலையம் அமைந்துள்ளது.

மேலும், சென்னை கடற்கரையிலிந்து திருவள்ளூர் மார்க்கமாகச் செல்லும் இரயில் பாதை இப்புலங்களுக்குத் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. வருவாய் நிலையாணை எண். 21 (vi)-ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்,

***(vi) Lands in the vicinity of Railway stations. –*** *As much inconvenience is entailed by private individuals' holding lands in the vicinity of railway stations, Collectors are debarred from assigning for private occupation Government lands situated within half a mile (880 yards) of the boundary of a railway station except with the special sanction of the Board obtained in each case. They should inform their Taluk subordinates that they are prohibited from permitting any such occupation without special orders, and will be held personally responsible for any unauthorized occupation due to their act or neglect. The sanction of the Board will not be given unless, for special reasons, the Railway authorities are in favour of the grant. Such lands should be registered as reserved in the village accounts.*

மேலும், புகைப்பட நகல், நகர நில ஆவணங்கள், பிளாக் வரைப்படம், வருவாய் நிலையாணை எண். 21(vi) நகல் மற்றும் புகைப்படங்கள் இணைத்து புலத்தணிக்கை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை நிலை எண் 97 (ம) 205 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்: 21.02.2025 (ம) 26.04.2025ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பாதை, வண்டி பாதை, மாநகராட்சி பொது வகைபாட்டில் உள்ள மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இடங்களில் வசிக்கும் தகுதிவாய்ந்த நபர்களுக்கு பட்டா வழங்க சென்னை மாவட்ட ஆட்சியர் கோரியவாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.341/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/1438/2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 752/2025** **பொருள் எண்.48**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - சென்னை மாவட்டம், வீட்டுமனை பட்டா வரண்முறைப்படுத்துதல் - அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்பவர்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்குதல் - வருவாய் துறை ஆவணங்களில் பாதை, வண்டி பாதை, பாட்டை, களம், மயானம்/இடுகாடு, கார்பரேஷன் பப்ளிக் ஆகிய வகைபாடு கொண்ட நிலங்களில் வசிப்பவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க மன்றத்தின் அனுமதி.**

சென்னை மாவட்ட ஆட்சியரின் 11.06.2025 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டத்தில் ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு ஒருமுறை வரண்முறைபடுத்தும் சிறப்பு திட்டத்தின் கீழ் வீட்டு மனை பட்டா வழங்க அரசாணை நிலை எண்.97 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்.21.02.2025 மற்றும் அரசாணை நிலை எண்.205 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்.26.04.2025ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் மாநகராட்சி நிலமாற்றம் விலக்களிக்கப்பட்டவை – கார்ப்பரேஷன் பப்ளிக், சர்க்கார் புறம்போக்கு-கார்ப்பரேஷன் பப்ளிக், மாநகராட்சி பொது வகைபாட்டில் வீடுகள் மூலமாக ஆக்கிரமம் செய்துள்ளதாக சோழிங்கநல்லூர், ஆலந்தூர், தண்டையார் பேட்டை வட்டாட்சியர்களிடமிருந்து அறிக்கை வரப்பெற்றுள்ளது. அவற்றின் விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வட்டத்தின் பெயர் | கிராமம் | வகைபாடு | வார்டு | பிளாக் எண். | நகரபுல எண். புல எண். | மொத்த பரப்பு (ச.அடி) | வரண்முறைப் படுத்தபட வேண்டிய பரப்பு (ச.அடி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சோழிங்க நல்லூர் | ஜல்லடியன் பேட்டை | வண்டிப் பாதை | 191 | - | 221/1 | 34982.675 | 215.28 |
| 2. | ஆலந்தூர் | முகலிவாக்கம் | பாதை | 156 | - | 75/1 | 160920.52 | 52,392.13 |
| 3. | தண்டையார் பேட்டை | தண்டையார் பேட்டை | மாநகராட்சி பொது | 52 | 25 | 1752/1, 1752/2, 1754/1, 1755 | 215999.390 | 92862 |

மேலும், இந்நேர்வு தொடர்பாக அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் சுற்றறிக்கையில், உள்ளாட்சி அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களான மாநகராட்சி நிலமாற்றம் விலக்களிக்கப்பட்டவை- கார்ப்பரேஷன் பப்ளிக், சர்க்கார் புறம்போக்கு-பாதை, வண்டி பாதை வகைபாட்டில் உள்ள நபர்களின் ஆக்கிரமணத்தை வரண்முறை செய்ய உள்ளாட்சி அமைப்பின் தீர்மானம் பெற்ற பின்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பட்டியலில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள புலங்களில் வசிக்கும் தகுதியுள்ள நபர்களுக்கு அரசாணை நிலை எண்.97 மற்றும்

205ன் கீழ் வரன்முறைப்படுத்தி பட்டா வழங்கும் பொருட்டு சென்னை மாநகராட்சியின் மாமன்ற தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

துணை ஆட்சியர் / நிமஉது (தெற்கு) அவர்களின் 16.06.2025 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஜல்லடியான் பேட்டை கிராமம் மற்றும் ஆலந்தூர் வட்டம், முகலிவாக்கம் கிராமம், ஆகிய பகுதிகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்பவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானம் வழங்குதல் குறித்து புலத்தணிக்கை அறிக்கை தெரிவிக்க கோரப்பட்டுள்ளதற்கு கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

அட்டவணை-1

<u>சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஜல்லடியான்பேட்டைகிராமம்</u>

| புல எண். | வகைப்பாடு | மொத்த பரப்பளவு (ஹெக்) | குடியிருப்பு எண்ணிக்கை | நான்கெல்லை (புல எண்கள்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | கிழக்கு | மேற்கு | வடக்கு | தெற்கு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 221 /1 | வண்டிப்பாதை | 0.32.50 | 1 | 221/2 p | 220, 223 | 222 | 218 |

அட்டவணை-2

<u>சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், முகலிவாக்கம் கிராமம்</u>

| புல எண். | வகைப்பாடு | மொத்த பரப்பளவு (ஹெக்) | குடியிருப்பு எண்ணிக்கை | நான்கெல்லை (புல எண்கள்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | கிழக்கு | மேற்கு | வடக்கு | தெற்கு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 75/1 | பாதை | 1.49.50.0 | 78 | 75/14 | 68 | 69,74 | 80 |

மேற்படி புலத்தணிக்கையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருவது தெரியவருகிறது எனவும், மேற்கண்ட புல எண்களில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானம் வழங்குவதற்கு பரிந்துரை செய்து நில அளவரின் புலத்தணிக்கை அறிக்கைகளை இணைத்து அனுப்பப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணை ஆட்சியர் / நிமஉது (வடக்கு) அவர்களின் 18.06.2025 நாளிட்ட கடிதத்தில், 18.06.2025 அன்று மண்டல அலுவலர்/மண்டலம்-5, துணை ஆட்சியர்/நிமஉது(வடக்கு), செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், வட்டாட்சியர் (தண்டையார்பேட்டை வட்டம்), தனி வட்டாட்சியர் (நிமஉது), வட்ட சார் ஆய்வாளர், உதவி சார் ஆய்வாளர் மற்றும் உரிமம் பெற்ற நில அளவர் ஆகியோருடன் கூட்டுப் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள புலமானது, வருவாய் ஆவணங்களின்படி கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை-3

<u>மாவட்டம் : சென்னை வட்டம் : தண்டையார்பேட்டை நகரம் : தண்டையார்பேட்டை (பகுதி 4)</u>

| S. No | Block No | T.S. No | Govt., Mitta, Zamindari, Inam | Dry, Wet, Unassessed, Poramboke, House-site | Adangal (UDS Details) | Total Extent in Hect. | How the holding is utilized |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 25 | 1752/1 | சர்க்கார் | புறம்போக்கு | கார்ப்பரேசன் பப்ளிக் | 0.02.61.0 | ரோடு |
| 2. | | 1752/2 | சர்க்கார் | புறம்போக்கு | - | 0.71.93.0 | காலியிடம் |
| 3. | | 1754/1 | சர்க்கார் | புறம்போக்கு | - | 0.09.63.5 | - |
| 4. | | 1755 | மாநகராட்சி | நிலமாற்றம் – விலக்களிக்கப்பட்டவை | கார்ப்பரேசன் பப்ளிக் | 1.16.49.5 | ரோடு |

இப்புலத்தில் உள்ள மொத்த ஆக்கிரமிப்புதாரர்களின் எண்ணிக்கை 381 ஆகும் எனவும், அதில் வீட்டுமனைப் பட்டா பெறத் தகுதியுள்ளவர்களின் எண்ணிக்கை 272 என கண்டறியப்பட்டுள்ளதாகவும், அரசாணை நிலை எண்.97 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்.21.02.2025 மற்றும் அரசாணை நிலை எண்.205 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்.26.04.2025 ஆகிய அரசாணைகளின்படி வரண்முறை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பரப்பு 92862 சதுரஅடி ஆகும் எனவும், ஆக்கிரமிப்புதாரர்களின் பெரும்பாலானவர்கள் மாடி வீடுகளுடன் கூடிய குடியிருப்புகள் கட்டியுள்ளனர் என்றும் பலதரப்பட்ட இனத்தைச் சார்ந்த அவர்கள் இரண்டு மூன்று தலைமுறைகளாக அந்த இடத்தில் குடியிருந்து வருபவர்கள் என்றும், அரசு மற்றும் தனியார் பணிகளில் வேலை செய்பவர்களும், பல்வேறு கூலி வேலை செய்பவர்களும் அங்கு வசிக்கின்றனர் என்றும் விசாரணையிலிருந்து தெரிய வருவதாகவும், அப்பகுதியில் அனைத்து அடிப்படை வசதிகளும் மாநகராட்சியின் சார்பில் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது என்றும், மேற்படி புலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியின் எதிர்கால திட்டப் பணிகளோ அல்லது சாலை விரிவாக்கப் பணிகளோ மேற்கொள்ளும் திட்டங்கள் மண்டல அளவில் ஏதுமில்லை என்று மண்டலம் 5 அவர்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இப்புலங்களுக்கு தெற்குப் பகுதியில், இப்புலங்களை அடுத்தாற்போல் வண்ணாரப்பேட்டை இரயில் நிலையம் அமைந்துள்ளது எனவும், மேலும், சென்னை கடற்கரையிலிந்து திருவள்ளூர் மார்க்கமாகச் செல்லும் இரயில் பாதை இப்புலங்களுக்குத் தெற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது என்றும், வருவாய் நிலை எண். 21(vi)-ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“ ***(vi) Lands in the vicinity of Railway stations***. As much inconvenience is entailed by private individuals holding lands in the vicinity of railway stations, Collectors are debarred from assigning for private occupation Government lands situated within half a mile (880 yards) of the boundary of a railway station except with the special sanction of the Board obtained in each case. They should inform their Taluk subordinates that they are prohibited from permitting any such occupation without special orders, and will be held personally responsible for any unauthorized occupation due to their act or neglect. The sanction of the Board will not be given unless, for special reasons, the Railway

authorities are in favour of the grant. Such lands should be registered as reserved in the village accounts. ''

மேலும், புகைப்பட நகல், நகர நில ஆவணங்கள், பிளாக் வரைப்படம், வருவாய் நிலையாணை எண். *21(vi)* நகல் மற்றும் புகைப்படங்கள் இணைத்து புலத்தணிக்கை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை நிலை எண் *97* (ம) *205* வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்: *21.02.2025* (ம) *26.04.2025*ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள வண்டி பாதை, பாதை, மாநகராட்சி பொது வகைபாட்டில் உள்ள மேற்கண்ட அட்டவணை 1 முதல் 3 ல் குறிப்பிட்டுள்ள இடங்களில் வசிக்கும் தகுதிவாய்ந்த நபர்களுக்கு பட்டா வழங்க சென்னை மாவட்ட ஆட்சியர் கோரியவாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.302/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6 / 477 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 753 / 2025** **பொருள் எண். 49**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - சென்னை (வடக்கு) மண்டலம் விநியோகப்பிரிவு - *II* இன் கீழ் இயங்கும் வண்ணாரப்பேட்டை பகுதி - மணலி சாலை - *III (02EA056NC)*, அமுதம் சில்லரை அங்காடி தனியார் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது - இவ்வங்காடிகளுக்கு மாண்புமிகு *R.K* நகர் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.**

மாவட்ட வருவாய் அலுவலர் / முதுநிலை மண்டல மேலாளர் (வடக்கு), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்களின் 21.02.2025 நாளிட்ட கடிதத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், சென்னை (வடக்கு) மண்டலம் விநியோகப்பிரிவு-*II* இன் கட்டுப்பாட்டில் இயங்கும் வண்ணாரப்பேட்டை பகுதி, மணலி சாலை -*III (02EA056NC)* அமுதம் சில்லரை அங்காடி தனியார் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதாகவும், இவ்வங்காடிக்கு ஏற்கனவே 2022-2023ஆம் நிதி ஆண்டின்படி மாண்புமிகு *R.K.* நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் புதிய கட்டிடம் பெரியார் நகர், கொருக்குப்பேட்டையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது .

வண்ணாரப்பேட்டை பகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4, பகுதி-9, வார்டு எண் 41 ற்குட்பட்ட பகுதியில், புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் மணலி சாலை - *III (02EA056NC)* என்ற அமுதம் சில்லரை அங்காடிக்கு, பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் 573/2015 நாள்.30.09.2015ன்படி வாடகையின்றி மற்றும் முன்பணமின்றி ஒதுக்கீடு செய்து வழங்கிடவும் மேலும் தங்கள் தொகுதிக்குட்பட்ட குடும்ப அட்டைதாரர்களின் நலனை கருதி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் எந்தவித இலாப நோக்கமும் இன்றி செயல்படுவதாலும், அரசு அறிவிக்கின்ற சிறப்பு திட்டங்களை செயல்படுத்துவதாலும் மேலும் பேரிடர் காலங்களில் மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டு வரும் நிறுவனம் என்பதாலும், பருவ மழை காலங்களில் ஏற்படும் உணவுப்பொருட்கள் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், அமுதம் சில்லரை அங்காடிக்கு மணலி சாலை -*III (02EA056NC)* அங்காடிக்கு புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் நியாயவிலைக் கடையினை அமைத்திடவும் அதை வாடகையின்றி இயக்கம் செய்திடவும் அங்காடிக்கு இலவசமாக இடம் ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மண்டலம்-4, பகுதி-9, வார்டு எண்.41, பெரியார் நகர், கொருக்குப்பேட்டை பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினை அமுதம் சில்லரை அங்காடிக்கு ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, அதன் வட்டம், கிராமம், பிளாக் எண், புல எண் அவற்றின் பயன்பாட்டு தன்மை, பரப்பளவு மற்றும் வரைபடத்துடன் கூடிய விரிவான அறிக்கையாக அளிக்க கோரி

இவ்வலுவலக 06.06.2025 நாளிட்ட கடிதம் மூலம் உதவி ஆணையர், மண்டலம் -5 அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து, வடக்கு வட்டார அலுவலகம் அவர்களின் 13.06.2025 நாளிட்ட கடிதத்தில், வண்ணாரப்பேட்டை கூட்டுறவு பண்டக சாலை எண்.02 EA056NC கொருக்குப்பேட்டை தனியார் கட்டடத்தில் இயங்கி வந்ததாகவும், இக்கூட்டுறவு பண்டக சாலை இயங்கி வந்த கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் கட்டட உரிமையாளர் உடனடியாக கடையை காலி செய்ய கோரியதால், பொது விநியோக திட்டம் பாதிப்படையாத வகையில் சென்னை-21, கொருக்குப்பேட்டை, கோவிந்தசாமி சாலை கதவு எண்.31/30 ல் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் மேற்படி நியாயவிலை கடைக்கு இட ஒதுக்கீடு செய்ய உத்தேசமான இடமாக அமைந்துள்ளது. ஆகவே, மேற்படி கட்டடத்திற்கான வட்ட கிராமம் ஆவணங்கள் அடிப்படையில் பரிந்துரை செய்யப்படுகிறது.

மேற்படி உத்தேச நிலமானது கிராம கணக்குகளில் கீழ்க்கண்டவாறு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Taluk: Tondiarpet Town: Tondiarpet Ward: 001

| Block Code and Name of Locality | Survey Field/ Sub Div. | Govt.Mitta, Zamindari, Inam | Dry, Wet, Unassessed, Promboke, House site | Extent in Hectare - Ares | Adangal (UDS Details) | How the holding is utilized |
|---|---|---|---|---|---|---|
| 32 | 1847/4 | சர்கார் | புறம்போக்கு | 15.12.0 | --- | |

மேற்படி புலத்தின் நான்குபக்க எல்லைகள் பின்வருவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - குடியிருப்பு பகுதி
கிழக்கு - குடியிருப்பு பகுதி
தெற்கு - கோவிந்தசாமி நகர்
மேற்கு - மா.பொ.சி.தெரு

மேலும், மேற்படி கட்டிடம் கூட்டுறவு பண்டக சாலை நியாய விலைக்கடைகள் இயங்குவதற்காக புதிதாக கட்டப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி கடையின் பரப்பளவு 900 சதுரடி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-4, பகுதி-9, வார்டு எண்.41, பெரியார் நகர், கொருக்குப்பேட்டை பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மேற்படி அமுதம் சில்லரை அங்காடி அமைக்க மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

1. மண்டலம்-4, பகுதி-9, வார்டு எண்.41, பெரியார் நகர், கொருக்குப்பேட்டை பகுதியில் 900 சதுரடி பரப்பளவுள்ள கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ. 6750/+GST 18% = ரூ.1215/- ஆக மொத்தம் ரூ.7965 (ரூ. 6750/-ன் தொகையை 12 மாதத்திற்கு முன் பணமாக ரூ.81,000/-) செலுத்த வேண்டும் என்றும்,

2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15% உயர்த்தப்படும் என்றும்,
3. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்,

மேற்படி, கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் அமுதம் சில்லரை அங்காடி அமைக்க மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.303/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6 / 1109 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 754 / 2025** **பொருள் எண்.50**

**பெருநகர சென்னை மாநகராட்சி – நிலம் மற்றும் உடைமைத்துறை – சென்னை (வடக்கு) மண்டலம் விநியோகப்பிரிவு - II இன் கீழ் இயங்கும் சூளை பகுதி - (02AA017) K.S.M. தெரு, தற்போதைய இடத்திலிருந்து அருகாமையில் மாண்புமிகு துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தில் அமுதம் சில்லரை அங்காடியை மாற்றி தர கோரப்பட்டுள்ளது– அறிக்கை வரப்பெற்றுள்ளது - மன்றத்தின்அனுமதி**

மேலாளர் (சேமிப்பு & இயக்கம்) / முதுநிலை மண்டல மேலாளர் (பொ), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்களின் 14.05.2025 நாளிட்ட கடிதத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், சென்னை (வடக்கு) மண்டலம் விநியோகப்பிரிவு-II இன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சூளை பகுதி 02AA017 K.S.M., தெரு அமுதம் சில்லரை அங்காடி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

உதவி பொறியாளர் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5 அவர்களின் கடிதத்தில், சூளை பகுதி துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 54 வது வார்டு, லாயர் சின்னத்தம்பி தெருவில் இயங்கி வரும் 02AA017- K.S.M. தெரு அமுதம் சில்லரை அங்காடி கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக அங்காடி கட்டும் பணி துவங்க உள்ளதாகவும் அம்மன் கோயில் தெரு, 1 வது சந்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்திற்கு அங்காடியை மாற்றித்தருமாறு கோரியுள்ளார்.

பகுதி அலுவலரின் கடிதத்தில் தற்போது இயங்கி வரும் கட்டிடத்திலிருந்து அம்மன் கோயில் தெருவில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் 02AA017-K.S.M. தெரு அமுதம் சில்லரை அங்காடியை அதே பகுதியில் உள்ள அம்மன் கோயில் தெருவில், மாண்புமிகு துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்திடக் கோரி கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார் .

மேலும், துறைமுகம் தொகுதிக்குட்பட்ட குடும்ப அட்டைதாரர்களின் நலனை கருதி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் எந்தவித இலாப நோக்கமும் இன்றி செயல்படுவதாலும், அரசு அறிவிக்கின்ற சிறப்பு திட்டங்களை செயல்படுத்துவதாலும் மேலும் பேரிடர் காலங்களில் மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டு வரும் நிறுவனம் என்பதாலும் பருவ மழை காலங்களில் ஏற்படும் உணவுப்பொருட்கள் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், 02AA017 K.S.M. தெரு அமுதம் சில்லரை அங்காடிக்கு மேற்கூறிய முகவரியில் மாண்புமிகு துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் புதிதாக அம்மன் கோயில் தெரு, 1 வது சந்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள கட்டிடத்தினை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் பெயரில் அதன் ஓர் அங்கமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அங்காடி 02AA017-K.S.M. தெரு பொது

விநியோகத்திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தற்காலிகமாக முன்பணமின்றியும் மற்றும் வாடகையின்றியும் இலவசமாக ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மண்டலம் -5, வார்டு-54, சூளை பகுதி லாயர் சின்னத்தம்பி தெருவில் இயங்கி வரும் 02AA017-K.S.M அமுதம் சில்லரை அங்காடியை, அதே பகுதியில் உள்ள அம்மன் கோயில் தெரு 1வது சந்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மேற்படி சில்லரை அங்காடியை இடமாற்றம் செய்திட இயலுமாயின் இக்கட்டிடத்தின் வட்டம், கிராமம், பிளாக் எண், புல எண், அவற்றின் பயன்பாட்டுத் தன்மை, பரப்பளவு, அவற்றிற்கான வரைபடம் ஆகியவற்றினை இத்துறைக்கு விரிவான அறிக்கையாக அளிக்க கோரி இவ்வலுவலக 06.06.2025 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலர் மண்டலம் -5 அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து, வடக்கு வட்டார அலுவலகம் அவர்களின் 13.06.2025 நாளிட்ட கடிதத்தில், அமுதம் சில்லரை அங்காடி எண். 02 02AA017 KSM அம்மன் கோயில் தெரு 1வது சந்து மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் மேற்படி நியாயவிலை கடைக்கு இட ஒதுக்கீடு செய்ய உத்தேசமான இடமாக அமைந்துள்ளது. ஆகவே, மேற்படி கட்டடத்திற்கான நகர நில அளவை ஆவணங்கள் அடிப்படையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி உத்தேச நிலமானது வருவாய் ஆவணங்களின்படி கீழ்க்கண்டவாறு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

TALUK: PURASAWALKAM TOWN: V.O.C NAGAR

| Block Code and Name of Locality | Survey Field/ Sub Div. | Govt.Mitta, Zamindari, Inam | Dry, Wet, Unassessed, Promboke, House site | Extent in Hectare - Ares | Adangal (UDS Details) | How the holding is utilized |
|---|---|---|---|---|---|---|
| 66 அம்மன் கோயில் தெரு | 7800/2 | மாநகராட்சி | பொது உபயோகம் | 0.45.22.5 | கார்பரேஷன் பப்ளிக் | வீடு, தெரு, காலியிடம் |

மேற்படி புலத்தின் நான்கு பக்க எல்லைகள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வடக்கு | - | 7800/2 (பகுதி) |
| கிழக்கு | - | 7800/2 (பகுதி) |
| தெற்கு | - | 7800/2 (பகுதி) |
| மேற்கு | - | 7800/89 |

மேலும் மேற்படி கட்டிடம் கூட்டுறவு பண்டக சாலை நியாய விலைக்கடைகள் இயங்குவதற்காக புதிதாக கட்டப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி கடையின் பரப்பளவு 875 சதுரடி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் -5, வார்டு-54, சூளை பகுதி லாயர் சின்னத்தம்பி தெருவில் இயங்கி வரும் 02AA017-K.S.M அமுதம் சில்லரை அங்காடியை, அதே பகுதியில் உள்ள அம்மன் கோயில் தெரு 1வது சந்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மேற்படி அமுதம் சில்லரை

அங்காடி அமைக்க மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கீழ்க்கண்ட 1 முதல் 3 வரை உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

1. மண்டலம் - 5, வார்டு - 54ல் சூளை பகுதி அம்மன் கோயில் தெருவில் 875 சதுரடி பரப்பளவுள்ள கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ.7219/ + GST 18% ரூ.1299/- ஆக மொத்தம் ரூ.8518 (ரூ.7219/-ன் தொகையை 12 மாதத்திற்கு முன் பணமாக ரூ.86,628/-) செலுத்த வேண்டும் என்றும்,
2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15 சதவீதம் உயர்த்தப்படும் என்றும்,
3. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்,

மேற்படி, கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் செயல்பட்டுவரும் அமுதம் சில்லரை அங்காடி அமைக்க மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.304/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/1229/2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 755/2025** **பொருள் எண்.51**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் – 4, வார்டு – 43, வண்ணாரப்பேட்டை கூட்டுறவு பண்டக சாலை நியாயவிலைக்கடை எண். 010 EF026 நியாயவிலைக் கடைக்கு மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.**

செயலாட்சியர், வண்ணாரப்பேட்டை கூட்டுறவு பண்டகசாலை லிட், எக்ஸ்.என்.சி.589 அவர்களின் 20.05.2025 நாளிட்ட கடிதத்தில், வண்ணாரப்பேட்டை கூட்டுறவு பண்டகசாலை நியாயவிலைக்கடை எண்.010 EF026/எண்.55, எஸ். என் சாலை, தண்டையார்பேட்டை, சென்னை-81ல் தற்போது தனியார் கட்டிடத்தில் இயங்கி வருவதாகவும், இக்கட்டிடத்திற்குரிய வாடகை அதிகப்படியாக உள்ளதாலும், மேலும் இக்கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் கட்டிட உரிமையாளர் உடனடியாக காலி செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பொது விநியோகத்திட்டம் நியாயவிலைக்கடை செயல்படுவதற்கு ஏற்ப பொதுமக்களுக்கு பயன்பாட்டுக்கு உகந்த நிலையில் போதிய வசதியுடன் தனியார் கட்டிடம் இல்லாததனால் உடனடியாக அசாதாரண சூழ்நிலை ஏற்படாத வண்ணம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு அவசியம் தேவை உள்ளதால் தமிழ்நாடு அரசு வழங்கும் பொதுவிநியோகத் திட்டம் பொதுமக்களின் நலன்கருதி எவ்வித தொய்வின்றி இடையூறு இன்றி தொடர்ந்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் எஸ். என் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள கடையினை நியாயவிலைக் கடைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மண்டலம்-4, வார்டு-43 எஸ். என் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடத்தினை ஒதுக்கீடு செய்ய இயலுமாயின் இக்கட்டித்தின் வட்டம், கிராமம், பிளாக் எண், புல எண், அவற்றின் பயன்பாட்டுத் தன்மை, பரப்பளவு, அவற்றிற்கான வரைபடம் ஆகியவற்றினை இத்துறைக்கு விரிவான அறிக்கையாக அளிக்க கோரி இவ்வலுவலக 06.06.2025 நாளிட்ட கடிதம் மூலம் உதவி ஆணையர், மண்டலம்-4 அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து, வடக்கு வட்டார அலுவலகம் அவர்களின் 13.06.2025 நாளிட்ட கடிதத்தில், வண்ணாரப்பேட்டை கூட்டுறவு பண்டக சாலை XNC 589 எண்.10, EF026 எண். 34, எஸ். என் சாலை, தண்டையார் பேட்டை, சென்னை-81ல் தனியார் கட்டடத்தில் இயங்கி வந்ததாகவும், இக்கூட்டுறவு பண்டக சாலை இயங்கி வந்த கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் கட்டட உரிமையாளர் உடனடியாக கடையை காலி செய்ய கோரியதால், பொதுவிநியோக திட்டம் பாதிப்படையாத வகையில் சென்னை-13, இராயபுரம் சூர்யநாராயணன் தெரு, கதவு எண்.31ல் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் மேற்படி நியாயவிலை கடைக்கு இட ஒதுக்கீடு செய்ய உத்தேசமான இடமாக அமைந்துள்ளது. ஆகவே, மேற்படி கட்டடத்திற்கான

வட்ட கிராமம் ஆவணங்கள் அடிப்படையில் பரிந்துரை செய்யப்படுகிறது. மேற்படி உத்தேச நிலமானது கிராம கணக்குகளில் கீழ்க்கண்டவாறு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Taluk: Tondiarpet    Town: Tondiarpet    Ward: 001

| Block Code and Name of Locality | Survey Field/ Sub Div. | Govt.Mitta, Zamindari, Inam | Dry, Wet, Unassessed, Promboke, House site | Extent in Hectare - Ares | Adangal (UDS Details) | How the holding is utilized |
|---|---|---|---|---|---|---|
| 54 பொதுமணி நகர், 1வது சந்து | 3615 | மாநகராட்சி | நிலமாற்றம் விலக்களிக்கப்பட்டவை | 0.89.91.5 | --- | தெரு |

மேற்படி புலத்தின் நான்குபக்க எல்லைகள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வடக்கு | - | குடியிருப்பு மற்றும் வணிக பயன்பாடு கட்டிடம் |
| கிழக்கு | - | பொது கழிப்பறை |
| தெற்கு | - | சூர்யநாராயணன் சாலை |
| மேற்கு | - | புதுமனைக்குப்பம் தெரு |

மேலும் மேற்படி கட்டிடம் கூட்டுறவு பண்டக சாலை நியாய விலைக்கடைகள் இயங்குவதற்காக புதிதாக கட்டப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி கடையின் பரப்பளவு 560 சதுரடி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் – 4, வார்டு-43 எஸ். என் சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மேற்படி அமுதம் சில்லரை அங்காடி அமைக்க மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கீழ்க்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

1. மண்டலம் – 4, வார்டு-43 எஸ். என் சாலையில் 900 சதுரடி பரப்பளவுள்ள கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ. 4200/ + GST 18% = ரூ.756/- ஆக மொத்தம் ரூ.4956 (ரூ. 4200/-ன் தொகையை 12 மாதத்திற்கு முன் பணமாக ரூ.50400/-) செலுத்த வேண்டும் என்றும்,
2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15 சதவீதம் உயர்த்தப்படும் என்றும்,
3. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்,

மேற்படி, கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் செயல்பட்டுவரும் அமுதம் சில்லரை அங்காடி அமைக்க மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.305/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/1334/2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 756/2025** **பொருள் எண்.52**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - இயற்கை எரிவாயு விநியோகம் செய்வதற்கான அடிப்படை கட்டமைப்புகள் ஏற்படுத்துவது - பெருநகர சென்னை மாநகராட்சி நிலங்களை *TIDCO* நிறுவனத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கவும் அதனை *TIDCO* நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட இயற்கை எரிவாயு விநியோகஸ்தர்கள் மூலமாக பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**

தமிழ்நாடு அரசின் நகர இயற்கை எரிவாயு விநியோக கொள்கை *2023*ல் விதி எண்.*3.3.3.2.*ல் அரசு நகர இயற்கை எரிவாயு விநியோகம் மேற்கொள்வதற்காக தேவையான இடத்தினை அடையாளம் கண்டு ஒதுக்கீடு செய்யும் என்றும் அதன் மூலம் பொது மக்கள் நன்மை பெறும் வகையில் *DRS, PRS. SRS* நிறுவுவதற்கான முன் நுழைவு அனுமதியும் பெற்று தரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மை செயலர் / நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தலைமையில் *19.02.2025* அன்று நடைப்பெற்ற கூட்டத்தில் *7m x 3m* அளவிலான *27* இடங்கள் *(Torrent Gas) AGP (2* இடம்*)* கோரியுள்ள நிலங்களை விரைவாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நகர இயற்கை எரிவாயு விநியோகஸ்தர்கள் அனைத்து மாவட்டங்களிலும் போக்குவரத்து துறையில் *CNG* சில்லறை வர்த்தகத்தில் கால்பதிந்துள்ளனர். எனினும் வீடுகளுக்கான குழாய் மூலமான எரிவாயு இணைப்புகளில் மிக குறைந்த தேவையான இடம் *(7m x 3m) DRS* அமைக்க இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

ஒவ்வொரு *DRS* அமைப்பும் *25000* முதல் *30,000* குடியுருப்புகளுக்கு கேஸ் விநியோகம் செய்யும் என்பதால் உடனுக்குடன் மாற்றம் செய்ய முடியாது. அதற்கு நிரந்தர இடம் அவசியமாகிறது. மேலும் குழாய் மூலம் இயற்கை எரிவாயு விநியோகம் செய்வதற்கு தகுந்த இடம் அவசியம் தேவைப்படுகிறது.

மேலும், நகர இயற்கை எரிவாயு விநியோகஸ்தர்கள் சிறிய அளவிலான இடத்தை ஒதுக்கீடு செய்யும்படி தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அதே போன்று தனியாரிடமிருந்து எந்தவொரு நிலமும் விலைக்கோ / குத்தகைக்கோ பெறப்படாததால் குடியிருப்புக்கான குழாய் மூலமான கேஸ் விநியோகத்திற்கான அரசு நிலத்தின் ஒதுக்கீடு அவசியமாகிறது.

சென்னை, திருவள்ளூர், நாகபட்டினம் மாவட்டங்களுக்கான அரசு அங்கீகரிக்கப்பட்ட நகர கேஸ் விநியோகஸ்தராக உள்ள திருவாளர்கள் டொரண்ட் கேஸ் சென்னை பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் பெருநகர சென்னை மாநராட்சி தரப்பில் உரிய இடம் ஒதுக்கீடு செய்ய கோரும் *27* இடங்களுக்கான பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, *DRS/ PRS/ SRS* அமைப்புகள் ஏற்படுத்த தேவையான இணைப்பில் கண்டுள்ள நிலங்களை *TIDCO* நிறுவனத்திற்கு வழங்குமாறும், அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இயற்கை எரிவாயு விநியோகஸ்தர்களுக்கு மேற்படி நிலங்களை அரசு விதிமுறைகளைப் பின்பற்றி வழங்க அனுமதி வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

*DRS* அமைப்பதற்கு தேவையான இடத்தினை அடையாளம் கண்டு கள ஆய்வு செய்து சாத்தியகூறு அறிக்கையினை சமர்ப்பிக்கும்படி மண்டல அலுவலர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் மண்டல அலுவலர்கள் கீழ்கண்டவாறு சாத்திய கூறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளனர்.

<u>மண்டல அலுவலர் -6 அவர்கள் கீழ்கண்டவாறு சாத்திய கூறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.</u>

| S. N 0 | Zone &Division | Block No | Survey No | Classification | Location | Area Availability In Sqm | Possibility for fixing District Regulation | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Zone - 6, Div-71 | 12 | 226/4 Part | இரயத்துவாரி மனை | ஸ்டீபன் சாலை | 21 | இல்லை | இவ்விடம் நார்த் டவுன் குடியிருப்பு பகுதியின் முன்புறமாக உள்ளது மேலும் இச்சாலையில் *CMDA*-ன் வரைப்படத்தின் சாலை விரிவாக்கப் பணிக்கு இடம் ஒதுக்கப்பட்டுள் ளது |

"மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள படி மண்டலம் -6, வார்டு – 71, ஸ்டீபன் சாலையில் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் *(CMDA)* வரைபடத்தின்படி சாலை விரிவாக்கத்தில் உள்ளது. எனவே இச்சாலையில் நிரந்தர கட்டமைப்பு *(Permanent Structure)* மேற்கொள்ள இயலாது என்று கருத்துரு வழங்கப்படுகிறது".

<u>மண்டல அலுவலர் -7 அவர்கள் கீழ்கண்டவாறு சாத்திய கூறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.</u>

| S. No | Zone &Division | Block No | Survey No | Classification | Location | Area Availability In Sqm |
|---|---|---|---|---|---|---|
| 1 | Zone -7, Div-84 | 47 | 129 | ராயத்துவாரி நஞ்சை | வடக்கு அவென்யூ 26 வது தெரு | 21 |
| 2 | Zone -7, Div-85 | 75 | 3 | சர்கார் புறம்போக்கு | கண்ணாத்தம்மன் சாலை | 21 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | Zone -7, Div-89 | 37 | 24 | சர்கார் புறம்போக்கு | ஆபிஸ் காலனி, டி.வி.எஸ், அவென்யூ | 21 |

"மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிறுவனம் மூலம் மண்டல அலுவலர் மற்றும் செயற் பொறியாளர் அவர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேற்கண்ட இடங்களில் அமைக்க எந்த வித ஆட்சேபணை இல்லை என கருத்துரு வழங்கப்படுகிறது."

<u>மண்டல அலுவலர் -8 அவர்கள் கீழ்கண்டவாறு சாத்திய கூறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.</u>

| S.No | Zone &Division | Block No | Survey No | Classification | Location | Area Availability In Sqm |
|---|---|---|---|---|---|---|
| 1 | Zone -8, Div-104 | 32 | 138 | ராயத்துவாரி மனை (பூங்கா) | அண்ணா நகர், I- பிளாக் 40 வது தெரு | 21 |
| 2 | Zone -8, Div-108 | 26 | 448/1 | மாநகராட்சி பொது உபயோகம் | ஸ்பர் டேங்க் சாலை | 21 |

"மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி மாவட்ட வருவாய் அலுவலர் மண்டல அலுவலர்-8 அவர்கள் தலைமையில் 06.03.2025 மண்டலம்- 8 கோட்டம் - 104, அண்ணாநகர்-1.பிளாக் 40வது தெரு மற்றும் கோட்டம் 108. ஸ்பர் டேங்க் சாலையை களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பகுதி அருகாமையில் பள்ளி வளாகம், வணிக வளாகங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

எனவே, மண்டலம்-8. கோட்டம் 104, அண்ணா நகர், 1 பிளாக் 40வது தெரு மற்றும் கோட்டம் 108, ஸ்பர் டேங்க் சாலைகளில் *District Regulation Station* அமைத்து கொள்ளலாம் என்று கருத்துரு வழங்கப்படுகிறது."

<u>மண்டல அலுவலர் -9 அவர்கள் கீழ்கண்டவாறு சாத்திய கூறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.</u>

| S. No | Zone &Division | Block No | Survey No | Classification | Location | Area Availability In Sqm | Possibility for fixing District Regulation | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Zone -9, Div-116 | 32 | 1536/2 | மாநகராட்சி பொது உபயோகம் | டாக்டர் பெசன்ட் சாலை | 21 | ஆம் | - |
| 2 | Zone -9, Div-123 | 35 | 1671/2 | மாநகராட்சி பொது உபயோகம் | லஸ் சர்ச் சாலை | 21 | ஆம் | CMRL யின் தடையில்லா சான்று (NOC) பெறப்பட வேண்டும் |
| 3 | Zone -9, Div-124 | 70 | 3547 | மாநகராட்சி பொது | செயின்ட் மேரிஸ் | 21 | இல்லை | இச்சாலை CMDA வின் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | உபயோகம் | சாலை | | | அறிவுறுத்தலின் படி சாலை விரிவாக்க பணி மேற்கொள்ளப் பட உள்ளது. |

“எனவே மேற்கண்ட அட்டவணையில் மண்டலம்-9, கோட்டம் 124 செயின்ட் மேரிஸ் சாலையில் பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் (CMDA) அவர்களின் அறிவுறுத்தலின் படி சாலை விரிவாக்க பணி மேற்கொள்ளப்படவுள்ளதால் இச்சாலையில் மேற்படி பணிகள் மேற்கொள்ள இயலாது கோட்டம்-116 டாக்டர் பெசன்ட் சாலையில் District Regulation Station அமைத்து கொள்ளலாம்.

மேலும், CMRL நிறுவனத்திடமிருந்து தடையில்லா சான்று (NOC) பெறப்பட்ட பின்பு கோட்டம் - 123 லஸ் சர்ச் சாலையில் மேற்கூறிய பணிகள் மூலம் மேற்கொள்ளப்படலாம் என்று கருத்துரு வழங்கப்படுகிறது.”

<u>மண்டல அலுவலர் -10 அவர்கள் கீழ்கண்டவாறு சாத்திய கூறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.</u>

| S. No | Zone & Division | Block No | Survey No | Classification | Location | Area Availability In Sqm |
|---|---|---|---|---|---|---|
| 1 | Zone -10 | 52 | 54 | சென்னை மாநகராட்சி | ஜெய் நகர் | 21 |
| 2 | Zone -10 | 2 | 134 | நத்தம் புறம்போக்கு | நடேசன் நகர் மேற்கு | 21 |

“மேற்குறிப்பிட்ட இடங்களில் DRS அமைக்க கூட்டு கள ஆய்வு செய்யப்பட்டு புல தணிக்கை வரைபடம் மற்றும் நகர நில அளவை பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்விடங்களில் பொதுமக்களுக்கு இடையூறின்றி தக்க பாதுகாப்புடன் DRS அமைக்க அனுமதி வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மண்டலம்-10. வார்டு-138ல் கே.கே.நகர் அண்ணா பிரதான சாலை, எம்.ஜி.ஆர்.கால்வாய் ஒட்டி தமிழ்நாடு மின்சார வாரியம் அருகில் காலி இடம் கூட்டுகள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் அந்த இடம் அருகில் எம்.ஜி.ஆர் கால்வாய் தமிழ்நாடு மின்சார உயர் அழுத்த கேபிள்களும் மற்றும் நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பிற்கு செல்லும் பாதாள குழாய்கள் உள்ளதாலும், சாலை பகுதியாக உள்ளதாலும் அவ்விடம் மேற்படி மூலம் District regulation station MDPE குழாய்கள் அமைப்பதற்கு ஏற்ற இடம் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மண்டலம் 10 வார்டு 140ல் எல்.ஐ.ஜி காலனி அசோக்நகர் உள்ள காலி இடத்தில், கூட்டுக் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் அந்த இடம் ஸ்ரீ பிரசன்ன வேங்கட நரசிம்ம பெருமாள் திருக்கோவிலுக்கு சொந்தமான இடம் என தெரிய வருகிறது. ஆகவே பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தடையில்லா சான்றிதழ் வழங்க இயலாது.

கோட்டம் 141 நியூபோக் சாலை பேருந்து சாலைகள் துறை மூலம் பராமரிக்கப்படுகிறது. மேலும் இச்சாலையில் மீன்மார்க்கெட் அமைந்துள்ளது. சாலையின் அடியில் மழைநீர் வடிகால் அமைந்துள்ளது. எனவே மேற்படி டொரண்ட் கேஸ் நிறுவனம் மூலம் *District regulation station MDPE* குழாய்கள் அமைப்பதற்கு ஏற்ற இடம் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது."

எனவே, கீழ்கண்ட இடங்களுக்கு மட்டும் மண்டல அலுவலர்களிடமிருந்து சாத்தியக்கூறு அறிக்கை (*Feasibility Report*) பெறப்பட்டுள்ளது.

| S. No | Zone &Division | Block No | Survey No | Classification | Location | Area Availability In Sqm |
|---|---|---|---|---|---|---|
| 1 | Zone -7, Div-84 | 47 | 129 | ராயத்துவாரி நஞ்சை | வடக்கு அவென்யூ, 26 வது தெரு | 21 |
| 2 | Zone -7, Div-85 | 75 | 3 | சர்கார் புறம்போக்கு | கண்ணாத்தம்மன் சாலை | 21 |
| 3 | Zone -7, Div-89 | 37 | 24 | சர்கார் புறம்போக்கு | ஆபிஸ் காலனி, டி.வி.எஸ், அவென்யூ | 21 |
| 4 | Zone -8, Div-104 | 32 | 138 | ராயத்துவாரி மனை (பூங்கா) | அண்ணா நகர், I-பிளாக் 40 வது தெரு | 21 |
| 5 | Zone -8, Div-108 | 26 | 448/1 | மாநகராட்சி பொது உபயோகம் | ஸ்பர் டேங்க் சாலை | 21 |
| 6 | Zone -9, Div-116 | 32 | 1536/2 | மாநகராட்சி பொது உபயோகம் | டாக்டர் பெசன்ட் சாலை | 21 |
| 7 | Zone -10 Div-127 | 52 | 54 | சென்னை மாநகராட்சி | ஜெய் நகர் | 21 |
| 8 | Zone -10 Div-127 | 2 | 134 | நத்தம் புறம்போக்கு | நடேசன் நகர் மேற்கு | 21 |

எனவே, மேற்படி இடங்களில் DRs அமைப்புகளை ஏற்படுத்த TIDCO நிறுவனத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்கவும், அதனை TIDCO நிறுவனம் அரசால் அங்கீகரிக்கப்பட்ட இயற்கை எரிவாயு விநியோகஸ்தர்கள் மூலமாக பணியினை மேற்கொள்ள நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.306/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.11.வதுந.க.எண்.L13/962 /2025**

**ஆணையர் அவர்களின் 16.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 757/2025** **பொருள் எண்.53**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 11, கோட்டம் – 153, ராமகிருஷ்ணா நகர், அறிவரசன் சாலை, போரூர், சென்னை – 600 116ல் - புதிதாக சமூக நல கூடம் கட்டப்பட்டுள்ளது - சமூக நல கூடத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதித்து வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 11, கோட்டம் – 153, பகுதி – 34 ராமகிருஷ்ணா நகர், அறிவரசன் சாலை, போரூர், சென்னை – 600 116ல் புதிதாக கட்டப்பட்ட சமூக நல கூடம் பொது மக்கள் சுபநிகழ்ச்சிகள் நடத்தும் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது.

செயற் பொறியாளர், மண்டலம் – 11 அவர்களின் 02.04.2025 நாளிட்ட கடிதத்தின்படி இச்சமுதாய நல கூடம் 3290 ச.அடி கொண்ட மனையில் தரைதளம் 1685 (1454+231) ச.அடி, முதல் தளம் 1454 ச.அடி, படியறை 151 ச.அடி கொண்ட கட்டுமானத்தில் உள்ளது. தரைதளத்தில் திறந்த வெளி வாகனம் நிறுத்தும் இடமும் முதல் தளத்தில் சமையல் கூடம் மற்றும் உணவு அருந்தும் கூடம் 100 நபர்கள் அமர்ந்து உணவருந்தும் வசதியுடன்) தரை தளத்தில் திருமண நிகழ்ச்சி செய்யும் இடமாகவும் உள்ளது (100 பேர் அமரும் வசதியுடன்).

இந்த சமுதாய நல கூடம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் கட்டப்பட்டுள்ளது. இச்சமுதாய நலக்கூடத்தில் தளவாட சாமான்கள் தவிர்த்து மின்சார இணைப்பு, மின் விளக்கு, கழிவறை, மின் விசிறி, குடிநீர் இணைப்பு மற்றும் சமையல் அறை, போன்ற அத்தியாவசிய வசதிகள் அமைய பெற்றுள்ளன. சமுதாய நல கூடத்திற்கு தேவையான தளவாட சாமான்களை கொள்முதல் செய்ய தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.7.05/- (BSR) என சென்னை மாநகராட்சி சொத்து வரி விதிப்பில் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, மண்டலம் – 11, கோட்டம் – 153, பகுதி – 34 ராமகிருஷ்ணா நகர், அறிவரசன் சாலை, போரூர், சென்னை – 600 116ல் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு இந்த மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கீழ்கண்ட விவரங்களின் படி வாடகை நிர்ணயம் செய்யலாம்.

**கணக்கீட்டுத்தாள்**

**கட்டிடத்தின் விவரம்**

| | |
|---|---|
| தரைதளம் | 1685 (1454+231) ச.அடி |
| முதல் தளம் | 1454 ச.அடி |
| படியறை | 151 ச.அடி |
| மொத்தம் | 3290 ச.அடி |

கட்டிடத்தின் மொத்த சதுரடி 3290 ச.அடி x7.05x12 = ரூ. 278334/-

ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்

ஒரு நாள் வாடகை ரூ. 6958.35 ( சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

அரைநாள் வாடகை ரூ.3479.17 (சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

மேற்கண்டவாறு கணக்கிட்டுள்ள ஒருநாள் வாடகை ரூ.6958.35/- என்பதை முழுமையாக ரூ.7000/- எனவும் அரைநாள் வாடகை ரூ.3479.17 என்பதை முழுமையாக ரூ.3500/- எனவும் (இச்சமுதாய நலக்கூடத்தில் நடத்தப்படும் சுப நிகழ்ச்சிகளுக்கு வாடகை மட்டுமே பொருந்தும்) மற்றும் நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின்சாரக் கட்டணம் கணக்கிட்டு நிகழ்ச்சி நடத்துபவர்களிடம் தனியே வசூலிக்கப்படும்.

மேலும், அவ்வப்போது மத்திய மாநில அரசுகளால் நிர்ணயம் செய்யப்படும் நடைமுறையிலுள்ள G.S.T. (சரக்கு மற்றும் சேவை வரி) தொகை வாடகை தொகையுடன் சேர்த்து வசூலிக்கப்படும். சமுதாய நல கூடத்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை கருத்தில் கொண்டு இந்த முன் வைப்புத் தொகையை ரூ.15000/- நிர்ணயம் செய்யலாம்.

**பிற நிபந்தனைகள்.**

1. அரசியல் நிகழ்ச்சிகள், வணிக ரீதியான நிகழ்ச்சிகள் போன்றவைகளுக்கு அனுமதி கிடையாது.
2. சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக அலுவலர் கூட்டங்கள் இயற்கை இடர்பாடுகளின் போது பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தேர்தல் பணிகள் போன்ற தவிர்க்க முடியாத அவசர நிகழ்வுகளில் சமுதாய நல கூடம் தேவைப்படின் மனுதாரருக்கு வழங்கப்படும், முன்பதிவானது ரத்து செய்யப்படும்.
3. ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நல கூடம் பயன்படுத்திட வேண்டும்.
4. சமுதாய நல கூடத்திற்குள் உள்ள பொருட்களை சேதப்படுத்தினால் அதற்குரிய தண்டத்தொகை வசூலிக்கப்பட்டு முன்வைப்புத் தொகையிலிருந்து நேர் செய்யப்படும்.

எனவே, மண்டலம் – 11, கோட்டம் – 153, பகுதி 34 , ராமகிருஷ்ணா நகர், அறிவரசன் சாலை, போரூர், சென்னை – 600 116ல் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தின் ஒரு நாள் வாடகை ரூ. 7000/- (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) எனவும் அரை நாள் வாடகை ரூ. 3500/- (ரூபாய். மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) எனவும் (சரக்கு மற்றும் சேவை வரி (GST) தனியே) நிர்ணயம் செய்யவும், சமுதாய நல கூடத்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை கருத்தில் கொண்டு முன்வைப்புத் தொகையை ரூ.15000/- ஆக நிர்ணயம் செய்யவும், சமூக நல கூடத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.299/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**<u>ம.அ.11ந.க.எண்.சி1/596/2025</u>**

**<u>ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 758/2025** **பொருள் எண்.54**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-11, பகுதி-32, 33 (ம) 34, கோட்டம்-143 முதல் 155 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியாளர்களை தற்காலிகமாக சுய உதவிக்குழு (SHG) மூலம் 01.06.2025 முதல் 30.04.2026 வரை உள்ள பதினோரு மாத காலத்திற்கு பணியமர்த்த நிர்வாக அனுமதி.</u>**

இதனைத்தொடர்ந்து, சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், மாத்தூர் கிராமம், புல எண். *129/1A1A, 129/2A1A, 131/1, 131/2A, 132/A, 132/1B1A* மற்றும் 139-ல் பரப்பு 1.12 ஏக்கர் நிலத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2, வார்டு-19ல், ஒரு பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையம் அமைக்க ரூ.12,00,00,000/- (ரூபாய் பன்னிரெண்டு கோடி மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியின் மீட்பு மற்றும் நிவாரணத் தலைப்பின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு நிதி ஒதுக்கீடு செய்து **அரசாணை(நிலை)எண்.249, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2 பிரிவு நாள்.16.05.2025ல்** அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மேலும் ஒப்பளிக்கப்பட்ட இத்தொகையினை கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் எனவும், இச்செலவீனத்தை மேற்கொள்ள கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்தும் அரசு மேற்கண்ட அரசாணையின் மூலம் ஆணையிட்டுள்ளது.

மேற்கண்ட பத்தியில் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

*“2245* இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 08 பொது – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவீனங்கள் – *AA* வெள்ளம், தீ, வறட்சி தொடர்பான பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்கான நிதி உதவி – 309 உதவித்தொகை – 09 ஏனையவை*”*

*(IFHRMS* த.தொ.கு 2245 *80 800 AA 30909)*

எனவே, மேற்குறிப்பிட்ட அரசாணையின்படி ஒப்பளிக்கப்பட்ட ரூ.12,00,00,000/- (ரூபாய் பன்னிரெண்டு கோடி மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு கீழ்கண்ட வங்கி கணக்கு விவரப்படி பெற்றுத்தர வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தின் உதவி ஆணையர்-3 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

| பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டிடம், சென்னை - 600 003. | |
|---|---|
| **வங்கியின் பெயர்** | **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி** |
| **வங்கியின் கிளை** | **பெருநகர சென்னை மாநகராட்சி** |
| **வங்கி கணக்கு எண்** | 171102000002437 |
| IFSC | IOBA0001711 |
| MICR | 600020091 |

எனவே, சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், மாத்தூர் கிராமம், புல எண். *129/1A1A, 129/2A1A, 131/1, 131/2A, 132/A, 132/1B1A* மற்றும் 139-ல் பரப்பு 1.12 ஏக்கர் நிலத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2, வார்டு-19ல், ஒரு பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு அரசிடமிருந்து ரூ.12,00,00,000/- மதிப்பீட்டிற்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெற பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தின் அனுமதி பெற்று கோப்பை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு அனுப்ப நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்**.411/2025, **நாள்**. 24.06.2025-**ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**".

"25.06.2025 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்**.318/2025, **நாள்**.25.06.2025**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.4.ந.க.எண்.சி5 / 9817 / 2025**

**ஆணையர் அவர்களின் 25.04.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 765/2025** **பொருள் எண்.61**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 4 - கோட்டம் 34 முதல் 48 வரை குறுகிய தெருக்கள் தவிர்த்து 15 அடிக்கு மேல் உள்ள தெரு / சாலைகளில் 247 எண்ணிக்கையிலான LCV வாகனங்கள் மற்றும் 3 எண்ணிக்கை முன்பளு தூக்கி இயந்திரம் கொண்டு குப்பைகளை சேகரித்து கொடுங்கையூரில் அமைய உள்ள TPFல் கொட்டி அதனை குப்பை கொட்டும் வளாகத்திற்கு அனுப்புதலுக்கு வேண்டி - 247 LCV வாகனங்கள் மற்றும் 3 எண்ணிக்கையிலான முன்பளு தூக்கி இயந்திரம் ஆகியவற்றை 4 மாத காலத்திற்கு (120 நாட்கள்) வாடகைக்கு அமர்த்த மன்றத்தின் நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம்-4, வார்டு-34 முதல் 48 வரை 2859 சாலைகளில் உள்ள 1,63,817 குடியிருப்புகளில் பல்வேறு வகையான வாகனங்களை கொண்டு சேகரிக்கப்படும் குப்பைகள் வார்டு-37ல் உள்ள கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகிறது. மண்டலம்- 4ல் இவ்வாறு நாள் ஒன்றுக்கு சேகரிக்கப்படும் மொத்த குப்பைகளின் எடை சுமார் 460 டன்னாகும்.

இந்த குப்பைகள் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு வாகனங்கள் மற்றும் குப்பைத் தொட்டிகள் மூலம் அகற்றப்படுகிறது.

| வ.எண். | வாகனங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | BOV | 418 |
| 2 | BIN | 1145 |
| 3 | COMPACTOR LORRY | 48 |

மேற்கண்ட அட்டவணையில் உள்ளவாறு மண்டலம்-4ல் வார்டு 34 முதல் 48 வரை குப்பைகள் சேகரிக்கப்பட்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது.

ஆணையர் அவர்களின், 11.04.2025 நாளிட்ட அறிவுறுத்தலின்படி, கோட்டம்–35ல் பரிட்சார்த்த முறையில் Bin-களை குறைத்து, 20 LCV வாகனம் கொண்டு குப்பை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இப்பணியில் 15 அடிக்கும் குறைவான குறுகிய அகலம் கொண்ட தெருக்களில் மட்டும் BOV வாகனங்களை கொண்டு குப்பை பெறப்பட்டு, அருகாமையில் உள்ள Binகளில் கொட்டப்பட்டு, பின்னர் Compactor வாகனம் கொண்டு குப்பை அகற்றப்பட்டு கொடுங்கையூர் குப்பைக் கொட்டும் வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. LCV வாகனங்கள் கொண்டு பெறப்படும் குப்பைகளை நேரடியாக கொடுங்கையூர் குப்பைக் கொட்டும் வளாகத்தில் இதற்கென தனியாக இடம் ஒதுக்கப்பட்டு கொட்டப்பட்டு வருகின்றது. இம்முறையின் மூலம் கோட்டத்தில் குப்பை அகற்றும் பணி சிறப்பாக உள்ளது. எனவே இம்முறையினை மண்டலம்–4 முழுவதும் விரிவுப்படுத்தலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு குப்பைகளை சேகரிப்பதால் BOV வாகனம் மற்றும் BIN எண்ணிக்கை மிகவும் குறைவாக உபயோகப்படுத்தவும் 15 அடிக்கு மேல் உள்ள சாலைகளில் LCV கொண்டு குப்பைகளை சேகரித்து நேரடியாக கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்குள் கொட்டும் பணிக்கு 247 எண்ணிக்கையிலான LCV வாகனங்கள் மற்றும் வாகனங்களிலிருந்து குப்பைகளை அகற்ற குப்பை கொட்டப்படும் இடத்தில் 03 எண்ணிக்கையிலான Front end Loader with backhoe தேவைப்படுகிறது.

இயந்திர பொறியியல் துறையின், 24.09.2024 நாளிட்ட சுற்றறிக்கையின்படி வாடகைக்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களை பணியமர்த்த கீழ்கண்ட வாடகை தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்காக தேவைப்படும் LCV மற்றும் Front end Loader with backhoe வாகனங்களின் வாடகை விவரம் மற்றும் மொத்தத் தொகை பின்வருமாறு

| வ.எண். | விவரங்கள் | தொகை |
|---|---|---|
| 1 | ஒரு எண்ணிக்கை LCV நாளொன்றுக்கான வாடகை (8 மணிநேரம்) | ரூ.2775/- (வரிகள் உட்பட) |
| 2 | 247 எண்ணிக்கையிலான LCV வாகனங்களுக்கான நாளொன்றுக்கான வாடகை | ரூ.6,85,425/- (வரிகள் உட்பட) |
| 3 | 247 எண்ணிக்கை LCV வாகனங்களுக்கு 120 நாட்களுக்கான தொகை | ரூ. 8,22,51,000 (அ) |
| 4 | ஒரு எண்ணிக்கை Front end Loader நாளொன்றுக்கான வாடகை (8 மணிநேரம்) | ரூ.7533/- (வரிகள் உட்பட) |
| 5 | 03 எண்ணிக்கையிலான Front end Loader நாளொன்றுக்கு | ரூ.22,599/- (வரிகள் உட்பட) |
| 6 | 03 எண்ணிக்கை Front end Loaderக்கு 120 நாட்களுக்கான தொகை | ரூ. 27,11,880 (ஆ) |
| | மொத்தத் தொகை (அ + ஆ) | ரூ. 84962880/- |

எனவே, 247 எண்ணிக்கையிலான LCV வாகனம் மற்றும் 03 எண்ணிக்கையிலான Front end Loader ஆகியவற்றிற்கான 120 நாட்களுக்கான மொத்த வாடகை (அ) + (ஆ) = ரூ. 8,49,62,880/- ஆகும். இச்செலவீனம் வடக்கு வட்டாரம், மண்டலம் 4ல் கணக்கு தலைப்பு எண் 230-800-400 Hire Chargesல் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

1. கோட்டம் 34 முதல் 48 வரை 15 அடிக்கு மேல் உள்ள சாலை மற்றும் தெருக்களில் குப்பைகளை சேகரிக்க 247 எண்ணிக்கையிலான LCV வாகனங்கள் மற்றும் 03 எண்ணிக்கையிலான Front end Loader with backhoe உபகரணங்களை வாடகைக்கு அமர்த்தி பணிகளை மேற்கொள்ள அனுமதியும்,

2. கோட்டம் 34 முதல் 48 வரை 15 அடிக்கு மேல் உள்ள சாலை மற்றும் தெருக்களில் குப்பைகளை சேகரிக்க 247 எண்ணிக்கையிலான LCV வாகனங்கள் மற்றும் 03 எண்ணிக்கையிலான Front end Loader with backhoe உபகரணங்களை 120 நாட்களுக்கு வாடகைக்கு அமர்த்த ரூ.8,49,62,880/- (ரூபாய் எட்டு கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து எண்ணூற்று எண்பது மட்டும்) (வரிகள் உட்பட) செலவீனத்தில் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. மேற்படி செலவீனத்தினை வடக்கு வட்டாரம், மண்டலம் 4ல் கணக்கு தலைப்பு எண்.230-800-400 Hire Chargesல் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ள அனுமதியும்,
4. இயந்திரப் பொறியியல் துறை (தலைமையிடம்) மூலம் ஒப்பம் கோரி, மண்டலம் – 4ன் மூலம் பணி மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.101/2025, நாள்.19.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.298/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3 /0059 /2025**

**ஆணையர் அவர்களின் 11.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 766/2025** **பொருள் எண்.62**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4, வார்டு –37ல் கேப்டன் காட்டன் கால்வாய் தூர்வாரும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி**

கீழ்குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீட்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சம் |
|---|---|---|---|---|
| 1 | 37 | 6063 | கேப்டன் காட்டன் கால்வாய் தூர்வாரும் பணிக்காக | 693.00 |

| | | |
|---|---|---|
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | செயற்பொறியாளர், மண்டலம்-4 |
| 3 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-4 |
| 4 | சம்மந்தப்பட்டதுறையால்அனுமதி | மண்டலம்-4 |
| 5 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல் முறை ஆணை எண். மற்றும்தேதி | ---------------- |
| 6 | வார்டு குழு தீர்மான எண். மற்றும் தேதி | பின்னர் பெறப்படும் |
| 7 | மதிப்பீடு எந்த வருடத்தின்அட்டவணை விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-25 |
| 8 | மதிப்பீடு தொகை | |
| | அ) பணியின்செலவீனம் | ரூ.5,80,61,681.26 |
| | ஆ) மேலானமேற்பார்வைசெலவினம் | ரூ.---------------- |
| | இ) சிறுமேற்பார்வைசெலவு | ரூ. ----------------- |
| | ஈ) தரக்கட்டுப்பாடுசெலவு | ரூ. ----------------- |
| | உ) மற்றஎதிர்பாராசெலவு | ரூ. 2,06,599.30 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி | ரூ. 5,80,616.81 |
| | எ) பொருட்கள் (ம) சேவைவரி | ரூ. 1,04,51,102.30 |
| | மொத்தம் | ரூ. **6,93,00,000.00** |
| 9 | நிதியின் மூலத்தன்மை<br>அ) வரவு செலவு ஒதுக்கீடு<br>ஆ) மதிப்பீடுகளுக்குஇதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ.-----------<br>ரூ.------------- |

| | | |
|---|---|---|
| | இ) மீதமுள்ள நிதி (அ - ஆ) | ரூ.------------ |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி. | ரூ. 6,93,00,000.00 |
| | உ) மீதமுள்ள தொகை | |

எனவே,

1. மண்டலம்-4, பகுதி-09, வார்டு –37ல் கேப்டன் காட்டன் கால்வாய் தூர்வாரும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6,93,00,000/- (ரூபாய். ஆறு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதியும்.
2. இப்பணி மேற்கொள்ள தேவைப்படும் தொகையினை SDRF திட்டத்தின் மூலம் பெற்று மற்றும் மழைநீர் வடிகால்வாய் துறை மூலமாக குறுகிய கால ஒப்பம் கோரி, மண்டலம்-4ன் மூலமாக பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.428/2025, நாள். 24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.333/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.8ந.க.எண்.இ1/809/2025**

**ஆணையர் அவர்களின் 12.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 767/2025** **பொருள் எண்.63**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-8, வார்டு- 95, தேவர் தெருவில் உள்ள மழைநீர் வடிகால்வாயை (900 x 900mm) இடித்து விட்டு புதியதாக 341மீ நீளத்திற்கு மழைநீர்வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு - 2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

கீழ்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு நிர்வாக அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ எண். | வார்டு எண் | பணி / சாலையின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டு எண் | மதிப்பீட்டுத் தொகை (ரூ). |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு-95 | தேவர் தெருவில் உள்ள மழைநீர் வடிகால்வாயை (900 x 900mm) இடித்து விட்டு புதியதாக 341மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி. | மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | NH/2024-25/22793 | 1,23,40,000 |
| | | | மொத்தம் | | 1,23,40,000 |

| | | | |
|---|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | மாண்புமிகு சென்னை மாநகர மேயர் அவர்கள் |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | மண்டலம்-8 |
| 4. | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | : | ஆம் |
| 5. | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி | : | மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) |
| | செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி | : | TS No. 15 Date. 03.02.2025 |
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2024-2025 ஆம் ஆண்டு |
| 7. | மதிப்பீட்டின் தொகை | : | |
| | அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. 1,00,77,864.03 |
| | ஆ) மேலான எதிர்பாரா செலவு | : | ரூ. 2,46,563.16 |
| | இ) சேவை மாற்றம் (1%) | : | ரூ. 1,00,778.64 |
| | ஈ) திட்ட ஆலோசகர் செலவு 1.5% | : | ரூ ------ |

| | | | |
|---|---|---|---|
| | உ) தொழிலாளர்கள் பொது நல நிதி(1 %) | : | ரூ 1,00,778.64 |
| | ஊ) எதிர்பாராத செலவு | : | ரூ ------ |
| | எ) சரக்கு மற்றும் சேவை வரி (18 %) | : | ரூ 18,14,015.53 |
| | மொத்தம் | : | **ரூ.** 1,23,40,000.00 |
| 8. | அ) மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா? அல்லது சாலை பகுதியா? | : | |
| | ஆ) அதன் அளவு குறிப்பிடவும் | : | - |
| 9. | ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | : | 36188/ மீட்டர் - |
| 10. | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் தேதி | : | |
| 11. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | ------ |
| 12. | நிதியின் மூலத்தன்மை | : | ------ |
| | அ) வரவு செலவு ஒதுக்கீடு | : | ------ |
| | ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | : | ------ |
| | இ) மீதம் உள்ள நிதி (அ-ஆ) குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | **ரூ.**1,23,40,000/- |

எனவே,

| | |
|---|---|
| 1. | மண்டலம்-8, வார்டு-95க்குட்பட்ட தேவர் தெருவில் உள்ள மழைநீர் வடிகால்வாயை (900 x 900mm) இடித்து விட்டு புதியதாக 341மீ நீளத்திற்கு மழைநீர்வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு விலைப்பட்டியல் 2024-2025ன்படி தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ.1,23,40,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும், |
| 2 | மேற்படி செலவீனத்தொகை கணக்கு குறியீடு எண். 20-21-07/412-100(SWD & Culvert) மழைநீர் வடிகால்வாய் மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டியும், |

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.9.ந.க.எண்.இ2/03602/2025**

**ஆணையர் அவர்களின் 11.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 768/2025** **பொருள் எண்.64**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, வார்டு – 125, மயிலாப்பூர் மயானபூமியில் (Fencing, Plumbing, Sump work, Toilet Block, Road work, Earth filling) மேம்படுத்தும் பணி - 2024-25-ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டமதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| வ. எண் | வார்டு எண் | பணி / சாலையின் விவரம் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு ச.மீ. | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 01 | 125 | மண்டலம் 9<br>கோட்டம் 125<br>பகுதி 25 | மயிலாப்பூர் மயானபூமியில் (Fencing, Plumbing, Sump work, Toilet Block, Road work, Earth filling) மேம்படுத்தும் பணி. | - | - | 1,99,00,000/- |
| | | | | | மொத்தம் | 1,99,00,000/- |

| | | | |
|---|---|---|---|
| 02 | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | செயற்பொறியாளர்-II, ம-9 |
| 03 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | மண்டலம் – 9 |
| 04 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | மண்டலம் – 9 |
| 05 | தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி | : | செயற்பொறியாளர்,ம-9, எண்65/2025-26, நாள்.22.05.2025 |
| 06 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் வைத்து தயாரிக்கப்பட்டது. | : | 2024-2025 |
| 07 | மதிப்பீட்டின் தொகை | | |
| | அ) பணி செலவீனம் மட்டும் | : | ரூ. 1,63,16,629.91 |
| | ஆ) மேலான மேற்பார்வை | : | ரூ. ------ |
| | இ) ஆலோசணை கட்டணம் | : | ரூ. ------ |
| | ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 3,20,044.11 |
| | உ) தரக்கட்டுப்பாடு | : | ரூ. 1,63,166.30 |
| | ஊ) தமிழ்நாடு நல தொழிலாளர் நிதி | : | ரூ. 1,63,166.30 |
| | எ) சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) | : | ரூ. 29,36,993.38 |
| | மொத்தம் | : | **ரூ. 1,99,00,000/-** |

| | | | |
|---|---|---|---|
| 08 | மழைநீர் கட்டுவது வடிகால் நடைபாதை பகுதியா அல்லது சாலைப்பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | : | |
| 09 | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | : | |
| 10 | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா | : | ஆம் |
| 11 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி | : | 9வது வார்டு குழு தீர்மானம் எண். பின்னர் பெறப்படும் |
| 12 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | -- |
| 13 | நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி (20- 21-07 / 412-400-609) |
| | அ) வரவு செலவு ஒதுக்கீடு | : | ரூ. ---- |
| | ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | : | ரூ.---- |
| | இ) மீதம் உள்ள நிதி (அ-ஆ) | : | ரூ. ----- |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | **ரூ. 1,99,00,000** |

எனவே,

1. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ1,99,00,000/-க்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ன் சட்டபிரிவு விதி 248ன்படி நிர்வாக அனுமதியும்,
2. கணக்கு தலைப்பு எண் 20-21-07/412-400-609-ல் போதிய நிதி இல்லாததால் இப்பணிக்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ.13.ந.க.எண்.சி2/1426/2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 769/2025** **பொருள் எண்.65**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-13, கோட்டம் -179 மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு, முத்துலட்சுமி சாலையில் HDPE குழாயும் Dr. முத்துலட்சுமி சாலை (LB Road) மற்றும் காமராஜர் சாலையில் புதிய மழைநீர் வடிகால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- *13*, பகுதி – *38*, கோட்டம் *179* க்குட்பட்ட டாக்டர். முத்துலட்சுமி சாலையில் உள்ள மழைநீர் வடிகால்வாயை வந்தடைகிறது. மேலும், இவ்விரு மழைநீர்வடிகால்வாயில் இருந்து மழைநீர் வெளியேற உரிய *Disposal* கால்வாய் இல்லாததால் தேங்கிய மழைநீரானது வெளியேற வழியின்றி அதிகளவில் சாலைகளில் தேங்கியதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்தனர். மேலும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறு ஏற்படுகிறது. எனவே, பொது மக்கள் மழைக்காலங்களில் எவ்வித இடையூறும் இன்றி செல்வதற்கு முத்துலட்சுமி சாலையில் *HDPE* குழாய்கள் பதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், காமராஜர் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்வாயானது பல வருடங்களுக்கு முன்னால் செங்கற்களால் கட்டப்பட்டு தற்போது மிகவும் சிதலமடைந்த நிலையில் உள்ள கால்வாய்களில் மழைநீர் வெளியேற வழியின்றி அதிகளவில் சாலைகளில் தேங்கியதால் அப்பகுதியின் குடியிருப்பு சுற்றியுள்ள பகுதிகளில் குடியிருப்பு வாசிகளும் பொதுமக்களும் பெரிதும் பாதிப்படைந்தனர். மேலும் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறு ஏற்படுகிறது.

எனவே, முத்துலட்சுமி சாலையில் மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு புதியதாக *HDPE* குழாய்களும் காமராஜர் சாலை மற்றும் டாக்டர். முத்துலட்சுமி சாலை (எல்.பி. ரோடில்) மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு பழைய மழைநீர் கால்வாய்களை இடித்து அகற்றி புதியதாக மழைநீர் கால்வாய் அமைக்க உத்தேசிக்கப்பட்டு 13வது மண்டல வார்டு குழு தீர்மானத்திற்குட்பட்டு இப்பணியை மேற்கொள்ள கீழ்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| S.No | Name of the Street | Estimate No | Estimate Value |
|---|---|---|---|
| 1 | Muthulakshmi Salai (HDPE Pipe) | NN/2024-25/27660 | 16,64,000.00 |
| 2 | Dr.Muthulakshmi Salai (LB Road) | NN/2024-25/27675 | 38,00,000.00 |
| 3 | Kamaraj Salai | NN/2024-25/27659 | 73,85,000.00 |
| | | Total | 1,28,49,000.00 |

மேற்கண்ட விவரப்படி மண்டலம்-*13*, பகுதி - *38*, கோட்டம்-179ல் அட்டவணையில் கண்டுள்ள தெருவில் வெள்ள பாதிப்பை தடுக்கும் பொருட்டு புதியதாக முத்துலட்சுமி சாலையில் *HDPE* குழாய் மற்றும் காமராஜர் சாலை மற்றும் டாக்டர். முத்துலட்சுமி சாலை (எல்.பி. ரோடில்) மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு பழைய மழைநீர் கால்வாய்களை

இடித்து அகற்றி புதியதாக மழைநீர் கால்வாய் அமைக்கவும் மற்றும் *HDPE* குழாய் அமைக்கும் பணிக்கு தனித்தனியாக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-13, பகுதி-38, கோட்டம்-179ல் உள்ள முத்துலட்சுமி சாலையில் *HDPE* குழாயும், *Dr*.முத்துலட்சுமி சாலை *(LB Road)* மற்றும் காமராஜர் சாலையில் மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு பழைய மழைநீர் கால்வாய்களை இடித்து அகற்றி புதியதாக மழைநீர் கால்வாய் மற்றும் *HDPE* குழாய் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் கண்டுள்ள மதிப்பீடுகளுக்கு தனித்தனியாக நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பம் கோர அனுமதி வேண்டியும்,
2. இப்பணிக்கு தலைமையிடத்து மழைநீர் வடிகால்வாய் துறையின் மூலமாக ஒப்பம் கோர அனுமதியும்,
3. இப்பணிகளுக்கான செலவீன தொகையை மழைநீர் வடிகால்வாய் துறையின் மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**பா.து.ந.க.எண்.பி3 / 477 / 2025**

**ஆணையர் அவர்களின் 11.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 770 / 2025** **பொருள் எண்.66**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை – மண்டலம்-9, வார்டு-118 & 123ல் டி.டி.கே சாலை மற்றும் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள ஆழ்வார்பேட்டை மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியினை உகந்த முறையில் அழகுபடுத்தும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

கீழ்க்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அம்மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் (பாலங்கள்) அவர்களின் 23.05.2025 நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆணையர் அவர்களின் 12.12.2024 நாளிட்ட குறிப்பின்படி, நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டது. தற்போது நமக்கு நாமே திட்டத்தின் கீழ் போதிய நிதி இல்லாத நிலையில் இம்மதிப்பீட்டிற்கு மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி (ம) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 01.பணியின் பெயர் | மண்டலம்-9, வார்டு-118 & 123ல் டி.டி.கே சாலை மற்றும் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள ஆழ்வார்பேட்டை மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியினை உகந்த முறையில் அழகுபடுத்தும் பணி. |
| 02.எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | பாலங்கள் துறை |
| 03.சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | பாலங்கள் துறை |
| 04.தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | தலைமை பொறியாளர் / பாலங்கள், நாள். 23.05.2025. |
| 05.மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-25 ஆம் ஆண்டின் பட்டியலின்படி |
| 06.மதிப்பீட்டின் தொகை | ரூ. 4,16,15,000.00 |
| (அ)பணி செலவினம் மட்டும் | ரூ. 3,39,71,759.35 |
| (ஆ) பொருட்கள் மற்றும் சேவை வரி - 18% | ரூ. 61,14,916.68 |
| (இ) தரக்கட்டுப்பாடு – 1% | ரூ. 3,39,717.59 |
| (ஈ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி – 1% | ரூ. 3,39,717.59 |
| (உ) எதிர்பாரா செலவினம் – 2.5% | ரூ. 8,48,888.79 |
| மொத்தம் | ரூ. 4,16,15,000.00 |
| 07.ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | ------------ |

| | |
|---|---|
| 08.வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 09.மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | ----------- |
| 10.நிதியின் மூலத்தன்மை | மூலதன நிதி |
| (அ)வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2024-25 | ------------ |
| (ஆ)மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | ------------- |
| (இ)மீதம் உள்ள நிதி (அ-ஆ) | ------------ |
| (ஈ)இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.4,16,15,000/- |

எனவே,

1. மண்டலம்-9, வார்டு-118 & 123ல் டி.டி.கே சாலை மற்றும் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள ஆழ்வார்பேட்டை மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியினை உகந்த முறையில் அழகுபடுத்தும் பணிக்கு ரூ.4,16,15,000/-க்கு 2024-25ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,
2. இப்பணியை மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளவும்,
3. இப்பணிக்கு சிறப்பு திட்டங்கள் துறை மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை அத்துறை மூலம் மேற்கொள்ளவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.429/2025, நாள்.24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது ".

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.334/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**TVKNGR/129/2025-ADMIN(ENGINEERING)-E2**

**ஆணையர் அவர்களின் 07.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 771/2025** **பொருள் எண்.67**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மதிப்பீடு - 2024-25 - மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, முத்துகுமரப்ப தெருவில் அமைந்துள்ள நவீன சமுதாய நலக்கூடத்திற்கு சுற்றுப்புற சுவர் அமைத்தல், முன்பக்க தோற்றம் அழகுப்படுத்துதல், தீயணைப்பு தண்ணீர் தொட்டி மற்றும் தீயணைப்பு உபகரணங்கள் அமைத்தல் மற்றும் இதர நவீன வசதிகள் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின்பெயர் | மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, முத்துகுமரப்ப தெருவில் அமைந்துள்ள நவீன சமுதாய நலக்கூடத்திற்கு சுற்றுப்புற சுவர் அமைத்தல், முன்பக்க தோற்றம் அழகுப் படுத்துதல், தீயணைப்பு தண்ணீர் தொட்டி மற்றும் தீயணைப்பு உபகரணங்கள் அமைத்தல் மற்றும் இதர நவீன வசதிகள் அமைக்கும் பணி. |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | ------------ |
| 3 | எந்ததுறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்-6 |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன்வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-25 ஆம் ஆண்டு |
| 5 | மதிப்பீட்டின் தொகை | **ரூ.** 6,30,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 5,14,36,911.12 |
| | (ஆ)சரக்கு மற்றும் சேவைவரி 18% | ரூ. 92,58,644.00 |
| | (இ)தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம்1 % | ரூ. 5,14,369.11 |
| | (ஈ) தரக்கட்டுப்பாட்டு செலவு 1 % | ரூ. 5,14,369.11 |
| | (உ) மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 12,75,706.66 |
| | **மொத்தம்** | **ரூ.** 6,30,00,000.00 |
| 6 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 7 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 8 | நிதியின்தன்மை/ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளநிதி/கணக்குகுறியீட்டுஎண் | |
| 9 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | **ரூ.**6,30,00,000.00 |

எனவே,

1. மண்டலம்-6,பகுதி-15, கோட்டம்-69, முத்துகுமரப்ப தெருவில் அமைந்துள்ள நவீன சமுதாய நலக்கூடத்திற்கு சுற்றுப்புற சுவர் அமைத்தல், முன்பக்க தோற்றம் அழகுப்படுத்துதல், தீயணைப்பு தண்ணீர் தொட்டி மற்றும் தீயணைப்பு உபகரணங்கள் அமைத்தல் மற்றும் இதர நவீன வசதிகள் அமைக்கும் பணிக்காக **ரூ.6,30,00,000/- க்கு** (ரூபாய் ஆறு கோடியே முப்பது இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்கு 2024-25 ஆம் ஆண்டின் கணக்கு எண்.412-400-603/ Community Hall என்ற தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு பரிந்துரை செய்யவும்,
3. மேற்கண்ட பணிக்கு ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.407/2025, நாள். 24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.316/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.நீ.வ.து.ந.க.எண் அ3 / 1497 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 772 / 2025** **பொருள் எண்.68**

**பெருநகர சென்னை மாநகராட்சி – மழைநீர் வடிகால் துறை- மழைநீர் வடிகால்களில் சட்ட விரோதமாக விடப்படும் கழிவுநீர் இணைப்புகளை கண்டறிந்து மற்றும் தெருக்களில் கழிவுநீர் விடுவதை கண்டறிந்து அதனை அடைத்தல் - தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998. விதி எண்.161ல் மழைநீர் வடிகால்களில் சட்ட விரோதமாக விடப்படும் கழிவுநீர் இணைப்புகளை கண்டறிந்து மற்றும் தெருக்களில் கழிவுநீர் விடுபவர்கள் மீது அபராதம் விதிக்க துணை விதிகள் கொண்டு வர மன்றத்தின் அனுமதி**

திரு.ஏ. நாரயணன், இயக்குநர், திருவாளர் *Change India* என்ற மனுதாரர், தொடர்ந்த வழக்கு எண் 31345/2014ல் உயர்நீதி மன்றத்தில் இவ்வழக்கின் பிரதிவாதிகள் மழைநீர் வடிகால்களில் மனிதர்கள் மூலம் மனித நுழைவாயிலில் இறங்கி வண்டல் மணல் எடுக்கப்படுகிறது என்று தெரிவித்து அவ்வாறு வேலை செய்வதை தடுக்க வேண்டும் என்றும் மற்றும் நவீன இயந்திரங்கள் மூலம் மழைநீர் வடிகால்களில் தூர் வாரி, கழிவுநீர் விடுவதை தடுக்க வேண்டும் என்றும் வழக்கு தொடர்ந்தார்.

இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் பலமுறை விசாரிக்கப்பட்டு, உயர்நீதிமன்றம் இவ்வழக்கின் பிரிதிவாதிகள், மழைநீர் வடிகால்களில் கழிவுநீர் இணைப்பு கொடுப்பவர்கள் மீது அவர்கள் கட்டிய கட்டிடத்தை பொறுத்து ரூ. 5000/- முதல் ரூ.2 இலட்சம் வரை அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

எனவே இதுகுறித்து தெரிவிப்பது யாதெனில் பெருநகர சென்னை மாநகராட்சி சட்டவிதி எண் 1919ல் கீழ்கண்டபடி அபராத தொகை விதிக்கப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*Section* 191ன் படி - சட்ட விரோதமாக கழிவு நீர் இணைப்பிற்கு ரூ200/- அபராதம்.

*Section202*ன்படி:( *Sub Section* 5)ன்படி கழிவு நீரினை தெருக்களில் விடுவதற்கு ரூ 20/- அபராதம், என்று இருந்தது.

எனவே உயர்நீதிமன்ற உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு அரசிடம், இந்த சட்ட விதிகளை திருத்தவும் கடிதம் அனுப்பியது. அதன்படி தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு சட்ட சபை கூட்டத்தில், 01.02.2017 அன்று சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919ல்,

“*Section* 191ல் (தமிழ்நாடு சட்டவிதி *IV of* 1919) எந்த ஒரு மாநகராட்சிக்கு சொந்தமான *cable, Wire, Pipe*, மழைநீர் வடிகால், நீர்வழிகால்வாய்களில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அனுமதியின்றி இணைப்புகள் கொடுக்க கூடாது என்றும் *Section* 202(5)யின் படி எந்த ஒரு வீட்டில் இருந்தும் கழிவுநீரினை தெருக்களில் விடக்கூடாது என்றும் உள்ளதில்”

*Schedule VII* ல் *Section 191 and 2(5)* ல் கீழ்கண்ட மாற்றங்கள் செய்யப்படுகிறது.

**a. சாதாரண கட்டிடங்கள்**

- குடியிருப்பு கட்டிடங்கள் ரூ5000/-
- வணிக கட்டிடங்கள் ரூ 10,000/-

***b)* சிறப்பு கட்டிடங்கள்**

- *I)* குடியிருப்பு கட்டிடங்கள் ரு 25,000/-
- *II)* வணிக கட்டிடங்கள் ரூ 50,000/-

***c)* அடுக்குமாடி கட்டிடங்கள்**

- *a)* குடியிருப்பு கட்டிடங்கள் ரு1,00,000/-
- *b)* வணிக கட்டிடங்கள் ரூ 2,00,000/-

அபராதம் விதிக்கப்படும் என்று திருத்தம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு எண்.161ல் ,

1. நகராட்சியால் பராமரிக்கப்படும் எந்தவொரு நீர் ஆதாரம் அல்லது வடிகால்களில் மாசுபாடு, சுகாதாரக் கேடுகள் அல்லது தொல்லை அல்லது சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் அல்லது நீர் அல்லது வடிகால் அமைப்பின் இலவச ஓட்டத்தைத் தடுக்கும் எந்தவொரு பொருளையும் அல்லது எந்தவொரு குப்பைகளையும், பொருளையும் அல்லது வர்த்தகக் கழிவுகளையும் அல்லது கழிவுகளையும் யாரும் தூக்கி எறியவோ அல்லது வெளியேற்றவோ கூடாது.
2. தற்போது நடைமுறையில் உள்ள வேறு எந்த சட்டத்தின் விதிகளுக்கும் உட்பட்டு, நகராட்சி பகுதியில் உள்ள எந்தவொரு நீர் ஆதாரம் அல்லது [வடிகால் அல்லது கழிவுநீர்] ஆகியவற்றில் எந்தவொரு தொழிற்சாலை கழிவுகள், துர்நாற்றம் வீசும் நீர் அல்லது கழிவுகளை வெளியேற்றுவதை ஒழுங்குபடுத்துவதற்கு மன்றத்தில் தேவையான துணைச் சட்டங்களை உருவாக்கலாம் என்று உள்ளது.

இந்த பிரிவில் மழைநீர் வடிகால்களில் சட்ட விரோதமாக கழிவுநீர் இணைப்புகளை கொடுப்பவர்கள் மீதும் மற்றும் தெருக்களில் கழிவுநீர் விடுபவர்கள் மீதும் அபராதம் விதிக்க துணை விதிகள் கீழ்கண்டவாறு கொண்டு வர வேண்டும்.

***a)* சாதாரண கட்டிடங்கள்**

- குடியிருப்பு கட்டிடங்கள் ரூ10,000/-
- வணிக கட்டிடங்கள் ரூ 25,000/-

***b)* சிறப்பு கட்டிடங்கள்**

- *I)* குடியிருப்பு கட்டிடங்கள் ரு 50,000/-
- *II)* வணிக கட்டிடங்கள் ரு1,00,000/-

***c)* அடுக்குமாடி கட்டிடங்கள்**

- *a)* குடியிருப்பு கட்டிடங்கள் ரு2,00,000/-
- *b)* வணிக கட்டிடங்கள் ரூ. 5,00,000/-

எனவே,

1. மழைநீர் வடிகால்களில் சட்ட விரோதமாக கழிவுநீர் இணைப்புகளை கொடுப்பவர்கள் மீதும் மற்றும் தெருக்களில் கழிவுநீர் விடுபவர்கள் மீதும் அபராதம் விதிக்க துணை விதிகள் கீழ்கண்டவாறு கொண்டு வரவும்,

**a) சாதாரண கட்டிடங்கள்**

- குடியிருப்பு கட்டிடங்கள் ரூ10,000/-
- வணிக கட்டிடங்கள் ரூ 25,000/-

**b) சிறப்பு கட்டிடங்கள்**

- I) குடியிருப்பு கட்டிடங்கள் ரு 50,000/-
- II) வணிக கட்டிடங்கள் ரு1,00,000/-

**c) அடுக்குமாடி கட்டிடங்கள்**

- a) குடியிருப்பு கட்டிடங்கள் ரு2,00,000/-
- b) வணிக கட்டிடங்கள் ரூ. 5,00,000/-

2. இதன்படி, மண்டல அலுவலர்கள் மூலம். Form-1ன்படி, சட்டவிரோதமாக மழைநீர் வடிகால்களில் கழிவுநீர் இணைப்பு கொடுக்கும் கட்டிட உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும். மற்றும் Form 2ன் படி தெருக்களில் கழிவுநீர் விடும் கட்டிட உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க தாக்கீது அளித்து மேல்நடவடிக்கை எடுக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.307/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**மநீ.வ.து.ந.க.எண்.பி1 / 1868-4 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 773/2025** **பொருள் எண்.69**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால்துறை - மண்டலம் -4 ல் உள்ள ஏஜ சாலை சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்வாயை இடித்துவிட்டு புதியதாக கட்டும் பணி மற்றும் மண்டலம் -10ல் உள்ள பி.டி. ராஜன் சாலையில் (பன்னீர்செல்வம் சாலையிலிருந்து அண்ணா பிரதான சாலை வரை) புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தனித்தனி திட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.05.2025 அன்று நடந்த ஆய்வு கூட்டத்தில் சென்னை மாநகரில் பருவ மழையின்போது ஏற்படும் வெள்ள அபாயத்தினை தடுக்க மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சென்னை மாநகரில் பல்வேறு தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்து தரும்படி கோரிக்கை வைத்தனர்.

இக்கோரிக்கைக்கு இணங்க மண்டலம்-4ல் உள்ள ஏஜ சாலை சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்வாயை இடித்து விட்டு புதியதாக கட்டும் பணி மற்றும் மண்டலம் 10ல் உள்ள பி.டி. ராஜன் சாலை (பன்னீர்செல்வம் சாலையிலிருந்து அண்ணா பிரதான சாலை வரை) உள்ள புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தனித்தனி திட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பம் கோருவதற்கு அனுமதியும் வேண்டி தயாரிக்கப்பட்ட தனித்தனி திட்ட மதிப்பீடுகள் பின்வருமாறு.

**அட்டவணை**

| வ.எண் | மண்டலம் | வார்டு | சாலையின் பெயர் | பணியின் தன்மை | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | 4 | 45 | ஏஜ சாலை | சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்வாயை இடித்துவிட்டு புதியதாக கட்டும் பணி | 417.00 |
| 2 | 10 | 136 | பி.டி. ராஜன் சாலை (பன்னீர்செல்வம் சாலையிலிருந்து அண்ணா பிரதான சாலை வரை) | புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி | 440.00 |

எனவே,

1. மேற்கண்ட அட்டவணையின்படி, மண்டலம்-4ல் உள்ள ஏஏ சாலை சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்வாயை இடித்துவிட்டு புதியதாக கட்டும் பணி மற்றும் மண்டலம் -10ல் பி.டி. ராஜன் சாலை (பன்னீர்செல்வம் சாலையிலிருந்து அண்ணா பிரதான சாலை வரை) உள்ள புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தனித்தனி திட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பம் கோருவதற்கு அனுமதியும்,

2. மேற்காணும் பணிகளுக்கு உண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண்.412-401-100 (Storm Water Drain and culverts) என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.417/2025, நாள்.24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 323/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**மநீ.வ.து.ந.க.எண்.பி1 / 1868-5 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 774/2025** **பொருள் எண்.70**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால்துறை - மண்டலம்-4 மற்றும் 13ல் உள்ள பல்வேறு தெருக்களில் சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்வாயை இடித்துவிட்டு புதியதாக மழைநீர் வடிகால் கட்டும் பணிக்காக மற்றும் கால்வாய் தூர்வாருதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட தனித்தனி திட்ட மதிப்பீட்டு தொகைக்கு நிர்வாக அனுமதி.**

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.05.2025 அன்று நடந்த ஆய்வு கூட்டத்தில் சென்னை மாநகரில் பருவ மழையின் போது ஏற்படும் வெள்ள அபாயத்தினை தடுக்க மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சென்னை மாநகரில் பல்வேறு தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்து தரும்படி கோரிக்கை வைத்தனர்.

இக்கோரிக்கைக்கு இணங்க மண்டலம்-4ல் உள்ள கேப்டன் காட்டன் கால்வாய் தூர்வாரும் பணி மற்றும் மண்டலம் -13ல் உள்ள ஏஜிஎஸ் காலனி 7வது குறுக்குத் தெரு, விஜிசி நகர் 3வது பிரதான சாலை, பத்மாவதி நகர் பிரதான சாலை, ஸ்ரீனிவாசா நகர் 2வது தெரு, ஏஜிஎஸ் காலனி 9வது குறுக்குத் தெரு (பகுதி), ஸ்ரீனிவாசா நகர் 1வது தெருவில் உள்ள சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்வாயை இடித்துவிட்டு புதியதாக கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தனித்தனி திட்ட மதிப்பீடுகள் பின்வருமாறு.

**அட்டவணை**

| வ. எண் | மண்டலம் | வார்டு | சாலையின் பெயர் | பணியின் தன்மை | மதிப்பீட்டு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | 4 | 37 | கேப்டன் காட்டன் கால்வாய் | கால்வாய் தூர்வாருதல் | 693.00 |
| 2 | 13 | 176 | ஏஜிஎஸ் காலனி 7வது குறுக்குத் தெரு, விஜிசி நகர் 3வது பிரதான சாலை, பத்மாவதி நகர் பிரதான சாலை, ஸ்ரீனிவாசா நகர் 2வது தெரு, ஏஜிஎஸ் காலனி 9வது குறுக்குத் தெரு (பகுதி), ஸ்ரீனிவாசா நகர் 1வது தெரு | சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்வாயை இடித்துவிட்டு புதியதாக மழைநீர் வடிகால் கட்டும் பணி | 560.00 |

எனவே,

1. மேற்கண்ட அட்டவணையின்படி, மண்டலம்-4ல் உள்ள கேப்டன் பருத்தி கால்வாய் தூர்வாரும் பணி மற்றும் மண்டலம்-13ல் உள்ள ஏஜிஎஸ் காலனி 7வது குறுக்குத் தெரு, விஜிசி நகர் 3வது பிரதான சாலை, பத்மாவதி நகர் பிரதான சாலை, ஸ்ரீனிவாசா நகர் 2வது தெரு, ஏஜிஎஸ் காலனி 9வது

குறுக்குத் தெரு (பகுதி), ஸ்ரீனிவாசா நகர் 1வது தெருவில் உள்ள சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்வாயை இடித்துவிட்டு புதியதாக கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தனித்தனி திட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பம் கோருவதற்கு அனுமதியும்,

2. மேற்காணும் பணிகளுக்கு உண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண்.412-401-100 (Storm Water Drain and culverts) என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.416/2025, நாள்.24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.322/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**சி.தி.து.ந.க.எண்.பி1/0452/2022**

**ஆணையர் அவர்களின் 24.05.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 775/2025** **பொருள் எண்.71**

**பெருநகர சென்னை மாநகராட்சி - சிறப்பு திட்டங்கள் துறை - Hybrid Annuity Model-ன் கீழ் சென்னை மாநகராட்சிப் பகுதியின் மண்டலங்கள் 5, 6 மற்றும் 9 (மெரினா) மட்டும் உள்ள முன்னோடி இடங்களில் பொது வசதிக் கழிப்பறைகளின் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, மேலாண்மை மற்றும் பரிமாற்றம் (DBFOT) தற்பொழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது கூடுதல் பணிக்காக பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ளவும் அதற்கான நிர்வாக அனுமதியை தமிழ்நாடு அரசிடமிருந்து பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி.**

"சென்னை நகரத்தின் *5, 6 & 9* (மெரினா) மட்டும் மண்டலங்களில் உள்ள இடங்களில் கழிப்பறைகளை வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, மேலாண்மை மற்றும் பரிமாற்றம் *(DBFOT)* என்ற திட்டத்திற்கான மொத்த திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.*430.11* கோடிக்கு நிர்வாக அனுமதி ஒப்புதல் பெறப்பட்டது. பொது தனியார் கூட்டாண்மை *(PPP)*ன் கீழ் *9* வருட காலத்திற்கு " *Hybrid Annuity Model*-ன் மூலம் பணி மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒப்பந்ததாரார் திருவாளர். *M/s RSB Arch Project Consultants (Lead)* கூட்டமைப்பில் திருவாளர். *METEC Design and Construction Engineers India Pvt Ltd* மற்றும் திருவாளர். *Ferrgra Enterprises Pvt Ltd* ஆகியவற்றுக்கு "சென்னை நகரத்தின் *5, 6 & 9* (மெரினா மட்டும்) மண்டலங்களின் கீழ் உள்ள இடங்களில் பொது வசதிக் கழிப்பறைகளை வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, மேலாண்மை மற்றும் பரிமாற்றம் *(DBFOT)* என்ற திட்டத்தை பின்வரும் நிதி அளவுருக்களுடன் மேற்கொள்வதற்காக பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது:

• மூலதன நிதி (ஜிஎஸ்டி தவிர்த்து) - ரூ.*72.5* கோடி

• முதல் ஆண்டு பரமரிப்பு மற்றும் இயக்குதல் ரூ.*34* கோடி.(அறிவிப்பு எண்.*12/2017* இன் படி ஜிஎஸ்டி விலக்கு - மத்திய வரி (விகிதம்) - பிரிவு *243W*)

• மொத்த திட்ட மதிப்பு ரூ.*430.11* கோடி (ஆண்டுக்கு *4.5%* பரமரிப்பு மற்றும் இயக்குதல் அதிகரிப்பு விகிதத்தின் அடிப்படையில்)

மேலும், திருவாளர். *DRRSB Pct One Pvt Ltd* என்ற பெயரில் ஒரு *SPV (Special Purpose Vechile)* நிறுவப்பட்டது. மேலும், *28.04.2023* அன்று சேவையாளர் ஒப்பந்தம் கையெழுத்தானது. நிதி முடிவு *31.08.2023* அன்று சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் நியமிக்கப்பட்ட தேதி *01.09.2024*.

அதைத் தொடர்ந்து, திருவாளர். *DRRSB Pct One Pvt Ltd* பணிகளை முடித்து *26.02.2025* அன்று *Commerical Operation Date* நாளாக அங்கீகரிக்கப்பட்டது. முடிக்கப்பட்ட கழிப்பறைகளின் இருக்கை எண்ணிக்கையின் சுருக்கம் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

| Description | Completed and Taken for O&M | |
|---|---|---|
| | Locations | Seats |
| Minor Retrofitting | 80 | 896 |
| Major Retrofitting | 129 | 1707 |
| New Construction | 51 | 668 |
| Total | 260 | 3271 |

ஆணையர் அவர்களின் கலந்தாய்வு கூட்டத்தின் உத்திரவின் படி மண்டலம் 5, 6 & 9 (மெரினா மட்டும்) பகுதியில் உள்ள அனைத்து கழிவறைகளுக்கும் விரிவான செயல்பாடு மற்றும் பராமரிப்பு இருக்கும் வகையில் விளையாட்டு மைதானங்கள், மயானம் போன்றவற்றில் உள்ள கழிப்பறைகளை இந்த ஒப்பந்தத்தின் கீழ் சேர்க்க அறிவுறுத்தப்பட்டது.

வட்டார துணை ஆணையர்கள், மண்டல அதிகாரிகள் மற்றும் மண்டல பொறியாளர்களுடன் கலந்துரையாடியதன் அடிப்படையில், மண்டலங்கள் 5, 6 & 9 ல் (மெரினாவில் மட்டும்) கூடுதல் இடங்கள் தேர்வு செய்து பட்டியல் தயாரிக்கப்பட்டது.

அவ்வாறு தேர்வு செய்து தயாரிக்கப்பட்ட பட்டியல் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் TNIDB அவர்களுக்கு 21.04.2025 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

கூடுதல் இடங்களின் சுருக்கம் (மூலதன பணிகள் உட்பட) இருக்கை எண்ணிக்கையுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

| | Zone-5 | | Zone-6 | | Zone-9 (Marina only) | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Location | Seats | Location | Seats | Location | Seats | Location | Seats |
| Minor Refurbishment | 7 | 33 | 13 | 66 | 0 | 0 | 20 | 99 |
| Major Refurbishment | 1 | 9 | 3 | 8 | 0 | 0 | 4 | 17 |
| New Construction | 19 | 134 | 15 | 113 | 1 | 13 | 35 | 260 |
| Total | 27 | 176 | 31 | 187 | 1 | 13 | 59 | 376 |

கூடுதல் பணிக்கான மூலதனச் செலவினங்கள் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது:

| | Additional Scope | | | | |
|---|---|---|---|---|---|
| | Location | Seats | Cost per unit as per G.O (in Rs. Lakh) | Total Cost (in Rs. Cr) | Amount incl GST (in Rs. Cr.) |
| Construction | | | | | |
| Minor Refurbishment | 20 | 99 | 1.50 | 1.49 | |
| Major Refurbishment | 4 | 17 | 2.75 | 0.47 | |
| New Construction | 35 | 260 | 3.67 | 9.54 | |
| Total | | | | 11.49 | 13.56 |
| Other Costs<br>Camera Monitoring<br>Customer Feedback<br>Biometric Attendance | 59 | | 0.24 | 0.14 | 0.17 |
| Contingency (7.5% of capex) | | | | | 1.03 |
| Grand Total (A+B+C) | | | | | 14.76 |

மண்டலம் 9ன் வேண்டுகோளின்படி, ஹட்கோ சிஎஸ்ஆர் நிதியின் கீழ் மண்டலத்தால் கட்டப்பட்ட 4 இருக்கைகள் கொண்ட ஒரு மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறையும் செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் மட்டுமே கூடுதல் பணிகளாக சேர்க்கப்படுகிறது.

| | Zone-5 | | Zone-6 | | Zone-9 (Marina only) | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Location | Seats | Location | Seats | Location | Seats | Location | Seats |
| Minor Refurbishment | 7 | 33 | 13 | 66 | 0 | 0 | 20 | 99 |
| Major Refurbishment | 1 | 9 | 3 | 8 | 0 | 0 | 4 | 17 |
| New Construction | 19 | 134 | 15 | 113 | 1 | 13 | 35 | 260 |
| Only O&M | | | | | 1 | 4 | 1 | 4 |
| Total | **27** | **176** | **31** | **187** | **2** | **17** | **60** | **380** |

பிரிவு 16.5.2 இன் படி, சேவையாளரின் மேற்கோள் செலவின் அடிப்படையில் கூடுதல் பணிக்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பு செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது:

| Description | Amount |
|---|---|
| First Year O&M Cost for 3270 seats | Rs.34,00,00,000 |
| Yearly O&M Cost for 1 seat | Rs. 1,03,975.54 |
| O&M Cost per seat per day | Rs. 284.86 |

| Year | O&M Cost per seat (Escalation estimated @4.5%) | No. of Seats | Amount |
|---|---|---|---|
| 1 | Rs.103975.54 | 380 | 3,95,10,705.20 |
| 2 | Rs. 108654.43 | 380 | 4,12,88,686.93 |
| 3 | Rs. 113543.88 | 380 | 4,31,46,677.85 |
| 4 | Rs. 118653.36 | 380 | 4,50,88,278.35 |
| 5 | Rs. 123992.76 | 380 | 4,71,17,250.87 |
| 6 | Rs. 129572.43 | 380 | 4,92,37,527.16 |
| 7 | Rs. 135403.19 | 380 | 5,14,53,215.89 |
| | Total O&M Cost for 7 years | | Rs. 31,68,42,342 |

மேலும், சில இடங்களில் 24x7 கழிப்பறை வசதி, அதாவது இரவு நேரங்களில் செயல்படுத்தும் வகையில் 8 மணிநேர கூடுதல் ஷிப்ட் தேவைப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மண்டல பொறியாளர்களின் பரிந்துரைகள், Independent Engineer மற்றும் கலந்துறைகள் பெற்றவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், 260 இடங்களில் 43 இடங்கள் 750 இருக்கைகளுக்கு இரவு ஷிப்ட் தேவை என்று கண்டறியப்பட்டது. எனவே, கூடுதல் செலவு ஒரு இருக்கைக்கு மேற்கோள் காட்டப்பட்ட செலவில் பாதியாக கணக்கிடப்படுகிறது.

| Description | Amount |
|---|---|
| First Year O&M Cost for 3270 seats | Rs.34,00,00,000 |
| Yearly O&M Cost for 1 seat | Rs. 1,03,975.54 |
| Yearly O&M Cost for 1 extra shift | Rs. 51,987.77 |

எனவே, 750 இருக்கைகளுக்கான இரவு நேரப் பணிக்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பு செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது:

| Year | O&M Cost per seat (Escalation estimated @4.5%) | No. of Seats | Amount |
|---|---|---|---|
| 1 | Rs. 51987.77 | 750 | 3,89,90,827.50 |
| 2 | Rs. 54327.22 | 750 | 4,07,45,414.74 |
| 3 | Rs. 56771.94 | 750 | 4,25,78,958.40 |
| 4 | Rs. 59326.68 | 750 | 4,44,95,011.53 |

| | | | |
|---|---|---|---|
| 5 | Rs. 61996.38 | 750 | 4,64,97,287.05 |
| 6 | Rs. 64786.22 | 750 | 4,85,89,664.96 |
| 7 | Rs. 67701.60 | 750 | 5,07,76,199.89 |
| 8 | Rs. 70748.17 | 750 | 5,30,61,128.88 |
| | O&M Cost for night shift for 8 years | | Rs. 36,57,34,492 |

மூலதனம் மற்றும் செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு செலவுகள் உட்பட மொத்த செலவினங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது :-

| Description | Amount (in Rs. Cr) |
|---|---|
| Capital Cost for 376 seats | 14.76 |
| O&M Cost for 380 seats for 8 years | 31.68 |
| Total Cost for additional scope of 380 seats | 46.44 |
| Cost for night shift for 750 seats | 36.57 |
| Total Cost including additional scope and night shift | 83.01 |
| Percentage Increase compared to Total Project Value = (83.01/362.43)*100% | 22.90% |

ஒப்பந்தம் பிரிவு *16.4.2* இன் பிரிவு *16 "Change of Scope"* இன்படி, கூடுதல் மொத்த திட்டச் செலவு மற்றும் சலுகைக் காலத்திற்கான *O&M* கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகையில் அதிகபட்சமாக *25%* வரை சேர்க்கலாம், அதாவது ரூ. *362.43* கோடி *x 0.25 =90.61* கோடியாகும். இதில் *83.01* கோடிக்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ள தற்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் பணிக்கான மூலதனச் செலவுக் கட்டணம் சலுகை ஒப்பந்தத்தின் பிரிவு *16.3* இன் படி "பெருநகர சென்னை மாநகராட்சி இங்கு ஒப்புக் கொள்ளப்பட்டபடி, வரம்பு மாற்றத்திற்கான செலவில் *20%* (இருபது சதவீதம்)க்கு சமமான தொகையை ஒப்பந்ததாரருக்கு முன்கூட்டியே செலுத்த வேண்டும். மேலும் ஒரு சர்ச்சை ஏற்பட்டால், ஒப்பந்ததாரர், *Independent Engineer* மதிப்பிடப்பட்ட செலவில் *20%* (இருபது சதவீதம்) செலுத்த வேண்டும். ஒப்பந்ததாரர், பணி தொடங்கிய பிறகு, செயல்பாட்டில் உள்ள பணிகள் அல்லது முடிக்கப்பட்ட பணிகள் தொடர்பான கட்டணத்திற்கான பட்டி பெருநகர சென்னை மாநகராட்சியிடம் சமர்ப்பிக்க வேண்டும், பெருநகர சென்னை மாநகராட்சி அதன் துல்லியத்தை தீர்மானிக்க போதுமான ஆவணங்களால் ஆதரிக்கப்படலாம். அத்தகைய பட்டியினை பெற்ற *30* (முப்பது) நாட்களுக்குள், *Independent Engineer* நியாயமானதாக சான்றளிக்கப்பட்ட மற்றும் அதிகாரசபையின் அந்தந்த வார்டு/மண்டலத்தின் உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற் பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு வழங்கும், மேலும் இங்கு செய்யப்பட்ட முன்பணத்திற்கு விகிதாசாரக் கழிவைச் செய்த பிறகு".

கூடுதல் பணிக்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பு கட்டணம், சலுகை ஒப்பந்தத்தின்படி காலாண்டு செயல்பாடு மற்றும் பராமரிப்பு பணிகளை ஒப்பந்ததாரர் சேர்க்கப்படும். ஒப்பந்தத்தின்படி குறியீடுகளின் அடிப்படையில் அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான *O&M* கொடுப்பனவுகள் இதில் கணக்கிடப்படும்.

எனவே,

1. சென்னை நகரத்தின் 5, 6 மற்றும் 9 (மெரினா) மண்டலங்களில் உள்ள முன்னோடி பொது வசதிக் கழிப்பறைகளை வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, மேலாண்மை மற்றும் பரிமாற்றம் (DBFOT) திட்டத்தின் ஒப்பந்ததாரர் கூடுதலாக 60 இடங்களில் 380 இருக்கைகள் மற்றும் ஏற்கனவே பாரமரிப்பில் உள்ள கழிப்பிடங்களில் 750 இருக்கைகளில் இரவு ஷிப்ட கூடுதலாக செய்யவும் ஆகும் செலவினம் மொத்தம் ரூ.83.01 கோடி தொகையை பெருநகர சென்னை மாநகராட்சி முலதன நிதியில் மேற்கொள்ளவும் அதற்கான நிர்வாக அனுமதி தமிழ்நாடு அரசுடமிருந்து பெறுவதற்கான அனுமதியும்,
2. அரசின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி மேற்படி கூடுதல் பணிக்கான LOA வழங்கவும்,,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.431/2025, நாள்.24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.336/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**<u>தி.க.மே.து.ந.க.எண்.அ7 / 2902 / 2025</u>**

**<u>ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 776 / 2025** **பொருள் எண்.72**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம்-2 (மணலி) - மண்டலம்-1 முதல் 8 வரையில் உள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-1) ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் (Operating and Maintenance (O&M) Contract) பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை, மண்டலம்-2 ல் (மணலி) மண்டலம்-1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-1) அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு, 50 மெட்ரிக்டன் திறன் கொண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையத்திற்கு (Phase-1) செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ரெயின்போ எண்டர்பிரைசஸ் அவர்கள் மூலம் 12.07.2024 அன்று முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்த பணிக்காலம் வரும் 11.07.2025 அன்றுடன் முடிவடைய உள்ளதால் இப்பணி அத்தியாவசிய பணி என்பதாலும் தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக இப்பணிக்கு மேலும் ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. மேலும், ஒப்பந்ததாரர் மக்கும் கழிவுகளை உள்ளீடு செய்யும் அளவினை பொறுத்து கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் 27.06.2024 நாளிட்ட செயல்முறை ஆணை மற்றும் ஆணையர் அவர்களின் 22.09.2024 நாளிட்ட சுற்றறிக்கையில் கண்டுள்ள விலை விகிதத்தின் அடிப்படையில், ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான (Operating and Maintenance (O&M) Contract) மதிப்பீடு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| மதிப்பீட்டுத் தொகை- சுருக்கம் | | |
|---|---|---|
| அ) | 32 – எண்ணிக்கை பணியாளர்கள் செலவின தொகை | ரூ. 85,22,800/- |
| ஆ) | Mini Truck (1 No.) வாடகை கட்டணம் | ரூ.9,99,130/- |
| இ) | Skid Steer Loader (2 Nos.) – வாடகை கட்டணம் | ரூ.53,55,878/- |

| | | |
|---|---|---|
| ஈ) | உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் நலபொருட்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் | ரூ.*2,66,500/-* |
| உ) | *Supply of EM Solution. Annual Maintenance for Machines* | ரூ.*24,01,250/-* |
| *Total Estimate Cost including GST (அ+ஆ+இ+ஈ+உ+ஊ)* | | ரூ. *1,75,45,558/-* |
| *Rounded off to Rs.1,75,46,000/-*<br>*(Rupees one crore seventy five lakhs fourty six thousand only)* | | |

எனவே,

1) மண்டலம்-2(மணலி)ல் மண்டலம் 1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செது உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-1) ஒரு வருட காலத்திற்கு (Operating and maintenance (O&M) Contract) செயல்படுத்துதல் மற்றும் உள்ளீடு செய்யும் மற்றும் பராமரித்தல் பணி ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ. 1,75,46,000/-க்கு (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஐந்து இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,

2) இப்பணி அவசியமான அத்தியாவசிய பணி என்பதால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோருவதற்கு அனுமதியும்,

3) இப்பணிக்கான திடக்கழிவு மேலாண்மை துறையின் வருவாய் நிதி கணக்கு தலைப்பு எண் 230 – 80-05-01-ல் (Collection, Transportation and Processing Charges) மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/2903/2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 777/2025** **பொருள் எண்.73**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம்-2 (மணலி) - மண்டலம்-1 முதல் 8 வரையில் உள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-2) ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் (Operating and Maintenance (O&M) Contract) பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை, மண்டலம்-2 ல் (மணலி) மண்டலம்-1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-2) அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு, 50 மெட்ரிக்டன் திறன் கொண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையத்திற்கு (Phase-2) செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ரெயின்போ எண்டர்பிரைசஸ் அவர்கள் மூலம் 12.07.2024 அன்று முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்த பணிக்காலம் வரும் 11.07.2025 அன்றுடன் முடிவடைய உள்ளதால் இப்பணி அத்தியாவசிய பணி என்பதாலும் தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக இப்பணிக்கு மேலும் ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. மேலும், ஒப்பந்ததாரர் மக்கும் கழிவுகளை உள்ளீடு செய்யும் அளவினை பொறுத்து கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் 27.06.2024 நாளிட்ட செயல்முறை ஆணை மற்றும் ஆணையர் அவர்களின் 22.09.2024 நாளிட்ட சுற்றறிக்கையில் கண்டுள்ள விலை விகிதத்தின் அடிப்படையில், ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான (Operating and Maintenance (O&M) Contract) மதிப்பீடு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| மதிப்பீட்டுத் தொகை- சுருக்கம் | | |
|---|---|---|
| அ) | 32 – எண்ணிக்கை பணியாளர்கள் செலவின தொகை | ரூ. 85,22,800/- |
| ஆ) | Mini Truck (1 No.) வாடகை கட்டணம் | ரூ.9,99,130/- |
| இ) | Skid Steer Loader (2 Nos.) – வாடகை கட்டணம் | ரூ.53,55,878/- |

| | | |
|---|---|---|
| ஈ) | உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் நலபொருட்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் | ரூ.2,66,500/- |
| உ) | *Supply of EM Solution. Annual Maintenance for Machines* | ரூ.24,01,250/- |
| *Total Estimate Cost including GST (அ+ஆ+இ+ஈ+உ+ஊ)* | | ரூ. 1,75,45,558/- |
| *Rounded off to Rs.1,75,46,000/-*<br>*(Rupees one crore seventy five lakhs fourty six thousand only)* | | |

எனவே,

1) மண்டலம்-*2*ல் (மணலி) மண்டலம் *1* முதல் *8* வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் *50* மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்று புகும் வகையில் பதனம் செது உரம் தயாரிக்கும் நிலையம் *(Phase-2)* ஒரு வருட காலத்திற்கு *(Operating and maintenance (O&M) Contract)* செயல்படுத்துதல் மற்றும் உள்ளீடு செய்யும் மற்றும் பராமரித்தல் பணி ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ. 1,75,46,000/-க்கு (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஐந்து இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,
2) இப்பணி அவசியமான அத்தியாவசிய பணி என்பதால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோருவதற்கு அனுமதியும்,
3) இப்பணிக்கான திடக்கழிவு மேலாண்மை துறையின் வருவாய் நிதி கணக்கு தலைப்பு எண் *230 – 80-05-01*-ல் *(Collection, Transportation and Processing Charges)*ல் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**தி.க.மே.ந.க.எண்.அ7 / 1361 / 2025**

**ஆணையர் அவர்களின் 18.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 778 / 2025** **பொருள் எண்.74**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம் 13 மற்றும் 15ல் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தூய்மை பணி மேற்கொள்ளும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் Padmavathi Hospitality And Facilities Management Service அவர்களுக்குபணி ஆணை வழங்க அனுமதி.**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 25.02.2025 அன்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவின் படி, இனி வரும் காலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB) பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளின்

1. உட்புற சாலைகள்
2. தெரு விளக்குகள்
3. திடக்கழிவு மேலாண்மை பணிகள்
4. பூங்கா மற்றும் விளையாட்டு திடல் பணிகள்
5. திறந்தவெளி முன்பதிவு நிலம்
6. ரேஷன் கடை பராமரிப்பு பணிகள்
7. மரம் நடுதல்

ஆகிய பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி இனி வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம் 13 மற்றும் 15ல் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 37154 ஆகும். அதனுடைய மொத்த பரப்பளவு 502777.37 சதுர மீட்டர் ஆகும்.

மேற்கூறிய குடியிருப்புகளில் உள்ள உட்புற சாலைகள், பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்கள், திறந்த வெளி முன்பதிவு நிலங்கள் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய இடத்தில் ஒன்பது மாத காலத்திற்கு போதிய அளவு ஆட்களை ஒப்பந்ததாரர் மூலம் நியமித்து, போதிய குப்பைத் தொட்டிகளை வைத்து அப்பகுதியை தூய்மையாக வைத்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு ஆகும் தோராய செலவினங்கள்:

| TAMIL NADU URBAN HABITAT DEVELOPMENT BOARD AND BURIAL GROUND DETAILS | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| SOUTH REGION ( Outsourcing for 9 months) | | | | | | | | | | | |
| Sweepers | | | Rotamac Bin | | 1100 Lt Compactor Bin | | Welfare items Expenditure for Sweepers Rs. | Total Amount Expenditure Rs. | Consumables , Supervision & Admin charges (25% of the Total Amount) Rs. | GRAND TOTAL Rs. |
| Zone | Qty in Nos | Amount (Rs.673.75 incl GST 18% & 3.25% ESI) Rs. | Qty in Nos | Amount (Rs.2,400Bin Rs. | Qty in Nos | Amount (Rs.21,760 per bin including All taxes) | | | | |
| 13 | 51 | 92,77,538 | 51 | 1,22,400 | 34 | 7,39,840 | 28,71,000 | 7,25,57,833 | 1,81,39,458 | 9,06,97,291 |
| 15 | 318 | 5,78,48,175 | 318 | 7,63,200 | 43 | 9,35,680 | | | | |
| | 369 | 6,71,25,713 | 369 | 8,85,600 | 77 | 16,75,520 | 28,71,000 | 7,25,57,833 | 1,81,39,458 | 9,06,97,291 |

மண்டலம் 13 மற்றும் 15க்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் திடக்கழிவு மேலாண்மை சம்மந்தப்பட்ட பணிகளை ஒன்பது மாத காலத்திற்கு மேற்கொள்ள தோரயமாக ரூ.9,06,97,291/- செலவு ஆகும் (ரூபாய் ஒன்பது கோடியே ஆறு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஒன்று மட்டும்).

இப்பணியின் அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதி மன்றத்தின் பின்னேற்பு ஆணை எதிர்நோக்கி ஆணையரின் அனுமதி பெற்று இப்பணிக்கு மின்னனு ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாளாக 08.04.2025 என்று குறிப்பிட்டு கோரப்பட்டது.

09.04.2025 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது.

| Sl. No | Tender Participants | Technical Bid Qualification |
|---|---|---|
| 1. | M/s. Srinivas waste management services pvt.ltd | Bid Qualified |
| 2. | M/s. LD man power solution | Bid Not Qualified |

இதில் திருவாளர்கள் LD MAN POWER SOLUTION நிறுவனத்தினர் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெறாததால் இவ்ஒப்பந்ததாரரின் ஒப்பங்கள் விலைப்புள்ளி திறப்பிற்கு தகுதி பெறவில்லை என்பதால் நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரு ஒப்பந்ததாரர் திருவாளர்கள் SRINIVAS WASTE MANAGEMENT SERVICES PVT.LTD தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளி திறக்க (FINANCIAL BID) அனுமதிக்கப்பட்டது.

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிகள் (FINANCIAL BID) 17.04.2025 அன்று திறக்கப்பட்டு இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் ரூ.9,80,00,000(GST வரி உட்பட) இறுதி விலைத்தொகையாக நிர்ணயம் செய்துள்ளார். இத்தொகை அலுவலக விலைத்தொகை ரூ.9,06,97,291/- யை விட (+) 8.05% அதிகம் என்பதை கருத்தில் கொண்டு கண்காணிப்பு பொறியாளர் (தி.க.மே) அவர்களின் அனுமதி பெறப்பட்டு முதலாவது ஒப்பம் ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் 02.05.2025 அன்று மின்னணு ஒப்பம் (e-tender) மூலமாக மறு ஒப்பம் கோரப்பட்டது (Technical Bid) இதில் இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதன் விவரம் கீழ்வருமாறு

| Sl. No | Tender Participants | Technical Bid Qualification |
|---|---|---|
| 1. | M/s. Jay kay trans | Bid Not Qualified |
| 2. | M/s. Nellai Motors | Bid Not Qualified |

ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் மேலே குறிப்பிட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் (Technical Bid) தகுதி பெறாததால், கண்காணிப்பு பொறியாளர் (தி.க.மே) அவர்களின் அனுமதி பெறப்பட்டு இரண்டாவது ஒப்பம் ரத்து செய்யப்பட்டது.

மேற்கண்டவாறு இரண்டு முறை ஒப்பம் ரத்து செய்யப்பட்டதால், தகுதி வரம்பில் (Qualification Criteria) ஒப்பந்ததாரரின் கடைசி மூன்று ஆண்டின் சராசரி வருமானம் 100 சதவீதமாக இருந்ததை 80 சதவீதமாக குறைத்து குறுகிய கால மறு மின்னணு ஒப்பம் கோருவதற்கு 14.05.2025 அன்று ஆணையரின் ஆணை பெறப்பட்டு மூன்றாம் முறை ஒப்பம் கோரப்பட்டது.

இந்நிலையில் குறுகியகால மறுஒப்பம் 30.05.2025 அன்று திறக்கப்பட்டதில் திருவாளர்கள் Padmavathi Hospitality and Facilities Service அவர்கள் மட்டும் இவ் ஒப்பத்தில் பங்கேற்றார். இதன் விவரம் கீழ்வருமாறு

| Sl. No | Tender Participants | Technical Bid Qualification |
|---|---|---|
| 1. | Padmavathi Hospitality And Facilities Management Service | Bid Qualified |

இதில் Padmavathi Hospitality and Facilities Service நிறுவனத்தினர் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளி திறக்க (Financial Bid) அனுமதிக்கப்பட்டது.

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிகள் 16.06.2025 அன்று திறக்கப்பட்டது. இதன் விவரம் கீழ்வருமாறு,

| Sl. No | Name of the Bidder | Estimated Work Value | Rate Quoted inclusive of all taxes for nine months | Whether the Bidder Qualified/Not Qualified | Percentage % |
|---|---|---|---|---|---|
| 1. | Padmavathi Hospitality And Facilities Management Service | ரூ.9,06,97,291/- | ரூ.9,03,37,199.82பை | L1 Bid Qualified | (-) 0.40 % |
| Roundoff Rs. | | | 9,03,37,200/- | | |

மேற்படி பெறப்பட்ட ஒற்றை ஒப்பத்தில் ஒப்பந்ததாரரான திருவாளர்கள் *Padmavathi Hospitality and Facilities Management Service* அளித்துள்ள ஒப்ப தொகை ரூ.*9,03,37,199.82*பை ஆகும். இது அலுவலக தொகையான ரூ.*9,06,97,291/-*விட *(-)0.40%* குறைவாகும்.

திருவாளர்கள். *Padmavathi Hospitality and Facilities Management Service (L1)* ஒப்பந்தாரரிடம் விலை குறைப்பு கோரப்பட்டதில், *16.06.2025* அன்று ஒப்பந்ததாரர் விலை குறைப்பு தர இயலாது என்று கடிதம் கொடுத்துள்ளார்.

மண்டலம் *13* மற்றும் *15*க்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் திடக்கழிவு மேலாண்மை சம்மந்தப்பட்ட பணிகளை ஒன்பது மாத காலத்திற்கு மேற்கொள்ள ரூ.*9,03,37,199.82*பை *Say* **ரூ.*9,03,37,200/-*** (ரூபாய் ஒன்பது கோடியே மூன்று இலட்சத்து முப்பத்தேழாயிரத்து இருநூறு ரூபாய் மட்டும்) செலவாகும். இது அலுவலக விலையை விட *(-) 0.40 %* குறைவாகும்.

எனவே,

1. மண்டலம் *13* மற்றும் *15*க்குட்பட்ட பகுதியில் இருக்கும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள *37,154* எண்ணிக்கையிலான குடியிருப்புகளில் உட்புற சாலைகள், பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், திறந்தவெளி முன்பதிவு நிலம் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஒன்பது மாத காலத்திற்கு ஒப்பம் கோரப்பட்ட மதிப்பிற்கு ரூ.9,06,97,291/– (ரூபாய் ஒன்பது கோடியே ஆறு இலட்சத்து தொண்ணூற்று ஏழயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஒன்று மட்டும்) நிர்வாக அனுமதிக்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டியும்,
2. இப்பணிக்கு குறைந்த ஒப்பம் கோரியுள்ள திருவாளர்கள்Padamavathi Hospitality And Facilities Management Service நிறுவனத்திற்கு மண்டலம் 13 மற்றும் 15க்குட்பட்ட பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள 37,154 எண்ணிக்கையிலான குடியிருப்புகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஒன்பது மாத காலத்திற்கு ஒப்பந்ததாரர் அளித்த விலைப்புள்ளி ரூ.9,03,37,199.82பைசா (Rounded off) **ரூ.9,03,37,200/-** (ரூபாய் ஒன்பது கோடியே மூன்று இலட்சத்து முப்பத்தேழாயிரத்து இருநூறு மட்டும்) அலுவலக மதிப்பீட்டின் விலையை விட (-) 0.40% குறைவு என்பதை ஏற்க ஆணை வேண்டியும்,
3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை நிதி ஆலோசகர் அவர்களால் வட்டார அலுவலகத்திற்கு (தெற்கு) Budget Head Code 230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கி அந்நிதியிலிருந்து பணியை மேற்கொள்ளவும்,

4. பணி ஆணை வழங்கப்பட்ட பின் இப்பணிகளை வட்டார அலுவலகம் (தெற்கு) மூலம் கண்காணிக்கவும் மற்றும் அனைத்து மண்டலங்களிலிருந்து செயல்திறன் சான்றிதழ்கள் பெற்று வட்டார மேற்பார்வை பொறியாளர் (தெற்கு) மூலம் பட்டியை தீர்க்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.112/2025, நாள்.19.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.311/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**திக.மே.து.ந.க.எண்.அ7/4640/2023**

**ஆணையர் அவர்களின் 16.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 779/2025** **பொருள் எண்.75**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை – பொது தனியார் கூட்டாண்மையில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்ற (DBFOT) ஒப்ப முறையில் மாநகரத்தை சுத்தம் செய்யும் திட்டம் - மண்டலம்-5 மற்றும் 6 பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது, தெரு துப்புரவு கழிவுகள் (தெரு துப்புரவு கழிவுகள் அகற்றும் நடவடிக்கைகள் உட்பட), தோட்டக்கழிவுகள் அபாயகரமான கழிவுகளை சேகரித்தல் மற்றும் சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு செயலாக்க வசதி/ குப்பைக்கொட்டும் வளாகம் (தொகுப்பு -6) கொண்டு சேர்த்தல் - இத்திட்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர், Consortium of Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited, அவர்களின் இறுதி ஒப்பத் தொகையான முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணம் (IAQ) ரூ.276.00 கோடியினை அதற்கான குழுவின் பரிந்துரையின்படி மன்றத்தின் ஒப்புதலுடன் பணி ஆணை வழங்கியதை ஏற்க மறுத்ததால், அதற்கடுத்த L2 ஒப்பந்ததாரர் ஆகிய M/s Delhi MSW Solutions Limited அவர்கள் அதே செயலாக்க கட்டணமான ரூ.276.00 கோடி-க்கு ஏற்பு கடிதம் அளித்தனர் - மீண்டும் ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு பரிந்துரைகளை ஏற்று M/s Delhi MSW Solutions Limited அவர்களுக்கு மன்றத்தின் ஒப்புதலை, எதிர் நோக்கி பணி ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் 11 மண்டலங்கள் ஏற்கனவே தனியார் மயமாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. மேலும் இந்த 11 தனியார் மயமாக்கப்பட்ட மண்டலங்களில் துப்புரவு பணிகளின் செயல்பாடு, சேவை வழங்கல் திருப்திகரமான செயல் திறனைக் கண்டு, பொதுமக்கள் / RWA மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 5 மற்றும் 6 மண்டலங்களின் சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை சேவைகளை அதே தரத்தில் எதிர்பார்க்கப்படுவதாக தெரிய வருகிறது.

எனவே, மண்டலம்-5&6ன் துப்புரவு பணியினை தனியார் மயமாக்க முடிவு செய்யப்பட்டது. மண்டலம்-5 & 6ல் அதிக மக்கள் தொகை அடர்த்தி மற்றும் அதிகமாக வந்து செல்வோர் மக்கள் எண்ணிக்கை, குறுகிய சாலைகள், தெருக்கள் மற்றும் அதிக எண்ணிக்கையிலான அரசு அலுவலகங்களான தலைமை செயலகம், மாண்பமை உயர்நீதிமன்றம், ராஜீவ் காந்தி பொது மருத்துவமனை, மத்திய ரயில்வே நிலையம், ரிப்பன் கட்டிடம் உட்பட முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் உள்ளது. சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை சேவைகளின் தரத்தை மேம்படுத்தவும், சேவையின் விலை குறைய வாய்ப்புள்ளதாலும் 5 மற்றும் 6 மண்டலங்களில் தூய்மைப்பணி நடவடிக்கைகளை தனியார் மயமாக்கப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

2021-2022ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கொள்கை குறிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மையினை மேம்படுத்த தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 12.05.2022 நாளிட்ட அறிவுறுத்தலின்படி, கொடுங்கையூரில் ஒருங்கிணைந்த கழிவுகளை செயலாக்குவதற்கும் மற்றும் மறுசுழற்சி செய்வதற்கும் தகுந்த வசதிகளை நிறுவுவதற்கும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் 5 & 6 பகுதிகளில் திடக்கழிவு சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது குறித்து சாத்தியக்கூறு மதிப்பீட்டை மேற்கொள்ளவும் பரிவர்த்தனை ஆலோசனை சேவைகளை வழங்கவும் தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும் பரிவர்த்தனை ஆலோசகர் M/s.SSIA மற்றும் M/s.Pollucare Engineers India Private Limited கூட்டமைப்பு நிறுவனம் (Consortium) தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் லிமிடெட் (TNUIFSL) மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் இப்பணிக்காக 21.09.2022 அன்று நியமனம் செய்யப்பட்டார்கள்.

இத்திட்ட பணிக்கான இறுதி விரிவான திட்ட சாத்திய கூறு அறிக்கை (DFR) நிபுணர் குழுவால் 05.06.2023 அன்று அங்கீகரிக்கப்பட்டது.

மேலும், அங்கீகரிக்கப்பட்ட இறுதி விரிவான திட்ட சாத்திய கூறு அறிக்கை (DFR) திட்ட கட்டமைப்பு மற்றும் திட்டச் செலவுக்கான ஒப்புதலுக்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு (TNIDB) 24.08.2023 நாளிட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. திட்ட கட்டமைப்பு மற்றும் மதிப்பீட்டுடன் கூடிய இறுதி விரிவான திட்ட சாத்திய கூறு அறிக்கைக்கு (DFR) 17.11.2023 அன்று தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் (TNIDB) ஒப்புதல் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் (TNIDB) ஒப்புதலுக்கு பின், இத்திட்டப் பணிக்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.41, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC.I), நாள்.06.03.2024-ன்படி 10 ஆண்டு திட்ட காலத்திற்கான இத்திட்ட பணியானது பொது தனியார் கூட்டாண்மையில் (PPP) வடிவமைத்தல், கட்டுதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்ற (DBFOT) ஒப்ப முறையில் மேற்கொள்ள இத்திட்ட பணிக்கு அரசிடமிருந்து ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், ஒப்பம் இறுதி செய்ததின் அடிப்படையில் சரியான நிதித் தேவை மற்றும் கட்டமைப்புக்கான இறுதி அனுமதி வழங்கப்படும் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| விவரங்கள் | மண்டலம்-5 | மண்டலம்-6 | மொத்தம் |
|---|---|---|---|
| மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பு) | 6,19,440 | 6,47,580 | 12,67,020 |
| மக்கள் தொகை (2023) (குடியிருப்போர்) | 8,25,429 | 8,62,274 | 16,87,703 |

| | | | |
|---|---|---|---|
| மக்கள் தொகை (2023) (Resident+ Floating) | 9,90,515 | 9,05,388 | 18,95,903 |
| மக்கள் தொகை (2032) (குடியிருப்போர்) | 10,37,950 | 10,84,285 | 21,22,235 |
| மக்கள் தொகை (2032) (Resident+ Floating) | 12,45,540 | 11,38,499 | 23,84,039 |
| பரப்பளவு (சதுர.கி.மீ) | 21.81 | 17.11 | 38.92 |
| சாலையின் நீளம் (கி.மீ) | 257.23 | 380.27 | 637.50 |
| மக்கள் தொகை அடர்த்தி (2011) (நபர்கள்/ சதுர.கி.மீ) | 28,402 | 37,848 | 33,125 (சராசரி) |
| மக்கள் தொகை அடர்த்தி (2023) (நபர்கள் / சதுர.கி.மீ) | 37,846 | 50,396 | 44,121 (சராசரி) |
| மக்கள் தொகை அடர்த்தி (2032) (நபர்கள் / சதுர.கி.மீ.) | 47,590 | 63,371 | 55,481 (சராசரி) |
| திடக்கழிவு உருவாக்கம் 2023 (மெ.டன்/நாள்) | 683 | 561 | 1,244 |
| திடக்கழிவு உருவாக்கம் 2032 (மெ.டன்/நாள்) | 768 | 631 | 1,398 |
| கோட்டத்தில் இருந்து கொடுங்கையூர் குப்பை அகற்றும் வளாகம் வரை உள்ள சராசரி நீளம் (கி.மீ) | 8 | 8 | 8 |

மன்ற தீர்மானம் எண்.183/2024, நாள்: 24.06.2024ன்படி வரைவு முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) ஆவணங்கள் கூடிய இத்திட்டப்பணிக்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. மன்றத்தின் ஒப்புதலுக்கு பிறகு, வரைவு முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) ஆவணங்கள் 01.07.2024 அன்று தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு (TNIDB) சமர்ப்பிக்கப்பட்டு, இதற்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் (TNIDB) ஒப்புதல் 03.08.2024 அன்று பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து, பொது தனியார் கூட்டாண்மையில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்ற (DBFOT) ஒப்ப முறையில் மாநகரத்தை சுத்தம் செய்யும் திட்டம்: மண்டலம்-5 மற்றும் 6 பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது, தெரு துப்புரவு கழிவுகள் (தெரு துப்புரவு கழிவுகள் அகற்றும் நடவடிக்கைகள் உட்பட), தோட்டக்கழிவுகள் அபாயகரமான கழிவுகளை சேகரித்தல் மற்றும் சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு செயலாக்க வசதி/ குப்பைக்கொட்டும் வளாகம் (தொகுப்பு -6) கொண்டு சேர்த்தல் என்ற இத்திட்ட பணிக்கான முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) ஆவணங்கள் 03.08.2024 அன்று tntender இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

இத்திட்ட பணிக்கான ஒப்ப முன் ஆய்வு கூட்டம் (Pre Bid Meeting) 22.08.2024 அன்று நடத்தப்பட்டது, 14 ஒப்பந்ததாரர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஒப்ப முன் ஆய்வு கூட்டத்தில் எழுப்பப்பட்ட வினவல்களுக்கு பதிலளிக்கவும் மற்றும் இத்திட்டப் பணியின்

நோக்கத்தில் சில திருத்தங்கள் செய்திட, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திடம் *(TNIDB) 26.09.2024* அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு, ஒப்ப முன் ஆய்வு கூட்டத்தில் ஒப்பந்ததாரர்களின் வினவல்களுக்கான பதில்கள் மற்றும் திருத்தங்கள் *01.10.2024* அன்று *tntenders* இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

அதன்பிறகு இவ்வொப்பத்திற்கான காலக்கெடு *15.10.2024* அன்று நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்ட பணிக்கான ஒப்பம், இறுதி நாளான *17.10.2024* அன்று தொழில்நுட்ப ஒப்பம் திறக்கப்பட்டு, பின்வரும் ஒப்பந்ததாரர்கள் இவ்வொப்பத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

1. திருவாளர்கள். *Delhi MSW Solution Limited*
2. திருவாளர்கள். *Swachatha Corporation & M/s. Brij Gopal Construction Company Private Limited* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)*
3. திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)*

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அசல் சான்றிதழ்கள் ஒப்பம் அழைக்கும் அதிகாரியால் *Tender Inviting Authority (TIA)* சரிபார்க்கப்பட்டது. *02.12.2024* அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழு *(Tender Scrutiny and Evaluation Committee)* கூட்டத்தில், இவ்வொப்பத்தில் பங்கேற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து கூடுதல் விளக்கங்களைப் பெற முடிவு செய்யப்பட்டு, ஒப்பந்ததாரர்களிடம் சில விளக்கம் கோரப்பட்டு, தகுந்த விளக்கங்கள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்டது. ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்கங்கள் அடிப்படையில் இரண்டு ஒப்பந்ததாரர்களே தொழில்நுட்ப தகுதி பெற்றவர் என்று *03.01.2025* அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவில் முடிவெடுக்கப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் | தொழில்நுட்ப தகுதி |
|---|---|---|
| *1.* | திருவாளர்கள். *Delhi MSW Solution Limited* | தகுதி பெற்றவர் |
| *2.* | திருவாளர்கள். *Swachatha Corporation & M/s. Brij Gopal Construction Company Private Limited* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)* | தகுதி பெறாதவர் |
| *3.* | திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)* | தகுதி பெற்றவர் |

ஒப்ப காலத்தில், திட்டத்தில் கடற்கரை சுத்தம் செய்யும் செயல்பாட்டைச் சேர்ப்பதன் மூலம் திட்ட பணியின் நோக்கத்தை மாற்ற பெருநகர சென்னை மாநகராட்சி முடிவு செய்தது. இதனால் திட்ட மதிப்பீட்டில் கூடுதல் செலவிற்கு மாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, *03.02.2025* அன்று தமிழக அரசிடமிருந்து திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கான முன்மொழிவைச் சமர்ப்பிப்பதன் மூலம் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கான

திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதலைப் பெற பெருநகர சென்னை மாநகராட்சியால் கடிதம் அனுப்பப்பட்டது.

தமிழ்நாடு அரசிடமிருந்து திருத்தப்பட்ட நிர்வாக அனுமதி(*Revised Administrative Sanction (RAS)* பெறும் வரை ஒப்ப நடவடிக்கைகள் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் *24.03.2025* நாளிட்ட கடிதத்தில், ஒப்பத்தை இறுதி செய்த பிறகு திருத்தப்பட்ட நிர்வாக முன்மொழிவை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிடப்பட்டது.

இரண்டு தொழில்நுட்ப தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி *18.03.2025* அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த விலைப்புள்ளியின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | ஒப்பந்ததாரர்களின் பெயர் | முதல் வருடத்திற்கான செயலாக்கக் கட்டண தொகை *(IAQ)* (ரூ.) |
|---|---|---|
| *1* | திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)* | *2,77,48,14,395.49* |
| *2* | திருவாளர்கள். *Delhi MSW Solution Limited* | *3,60,00,00,000.00* |

மேலே உள்ள அட்டவணையின்படி, இவ்வொப்பத்தில் பங்குபெற்ற ஒப்பந்தரார்களில், திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)* அவர்கள் முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணம் *(Initial Annual Quote (IAQ))* ரூ. *2,77,48,14,395.49* (ரூபாய் இருநூற்று எழுபத்தேழு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து பதினான்காயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபாய் மற்றும் நாற்பத்தொன்பது பைசா மட்டும்) குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரராக தகுதி பெற்றுள்ளார்.

நிதி ஒப்பம் திறக்கப்பட்ட பிறகு, குறைந்த விலைப்புள்ளி அளித்த *L1* ஒப்பந்ததாரருடன் விலைக்குறைப்பு செய்ய பேச்சுவார்த்தை கூட்டம் 26.03.2025 அன்று நடைபெற்றது, அதில் *L1* ஒப்பந்ததாரரிடம் நிதி விலைப்புள்ளியை மறு பரிசீலனை செய்யுமாறு கோரப்பட்டது. இதனை தொடர்ந்து, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)* அவர்கள் 09.04.2025 நாளிட்ட கடிதத்தின்படி இறுதியாக முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணம் *(Initial Annual Quote (IAQ))* ரூ.276.00 கோடியில் இத்திட்ட பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.

*DFR 17.11.2023* அன்று *TNIDB* யிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அரசின் நிர்வாக ஒப்புதல் *06.03.2024* அன்று பெறப்பட்டு ஒப்பங்கள்

கோரப்பட்டு ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாளிற்கும் மேற்குறிப்பிட்ட 17.11.2023ற்கும் இடைப்பட்ட காலத்தில் தினக்கூலி விகிதங்கள், டீசல் விலை, நுகர் பொருட்கள் மற்றும் மூலதனச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் அத்தியாவசிய தேவைகளின் அடிப்படையில், மண்டலங்கள் 1, 4, 5 , 9 , & 13ன் கடற்கரை பகுதிகள் (மணற்பகுதி உட்பட) சுத்தம் செய்தல், அதன் தொடர்புடைய சேவைகளுக்கான கூடுதல் செலவினங்கள் கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டதில் மதிப்பீட்டில் உயர்வு ஏற்பட காரணமாக அமைந்துள்ளது. இதன் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி ஆலோசகர் 07.04.2025 அன்று சமர்ப்பித்த செலவு மதிப்பீடு மற்றும் பகுத்தறிவு அறிக்கையின் *(Cost Truing Up and Rationalization Report)* அடிப்படையில், திருத்தப்பட்ட *IAQ* ரூ.271.44 கோடியாக கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் திட்ட பணியினை கண்காணிக்கும் பொறியாளர் *"Independent Engineer"* நியமிக்க ஆகும் செலவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் ஒப்பந்ததாரருக்கும் இடையில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்றும், அந்த செலவு மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை என்றும் ஒப்ப பணிகள் தொடக்கத்தின் போது மண்டலங்களில் தேக்கத்தில் உள்ள மொத்தப் பகுதியினை சுத்தம் செய்தல் *(Initial Total Area Cleaning)* செலவு மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை என்பது குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இனங்களை கருத்தில் கொண்டு ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவால் ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி விலைப்புள்ளித் தொகை ரூ.276.00 கோடி ஏற்புடையது என கருதப்பட்டு, இத்திட்டப் பணிக்காக ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)* அவர்கள் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியான ரூ.276.00 கோடியினை முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணமாக *(Initial Annual Quote (IAQ))* ஏற்கலாம் என ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவால் 09.04.2025 அன்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பொருள் மன்றத்தில் வைக்கப்பட்டு, மன்ற தீர்மான எண்.493/2025, நாள்.30.04.2025-ன்படி ஒப்புதல் பெற்ற பிறகு, 03.05.2025 அன்று L1 ஒப்பந்ததாரரான திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited.* கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)* அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் *(LoA)* வழங்கப்பட்டது.

திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited*, கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium)* அவர்கள் ஒப்ப ஏற்பு கடிதம் கிடைக்கப்பெற்ற பிறகு, 12.05.2025 அன்று தங்கள் சமர்ப்பித்த ஒப்பந்தத்தை திரும்பப் பெற்றுக்கொள்வதாக கூறி மின்னஞ்சல் மூலம் கடிதம் பெறப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, ஒப்ப ஆவணத்தில் *RFP* தொகுதி *I* இன் துணைப்பிரிவு 3.11.4(e)யில் “If the L1 identified in accordance with sub-Article 3.11.4 (a) is rejected in accordance with sub Article 2.7.3 or withdraws, the Authority may, in the second round

of bidding invite all the remaining Bidder to revalidate or extend their respective Earnest Money Deposit (EMD), as necessary, and match the Financial Bid of L1.”3.11.4 (a) The Financial Bid would then be ranked in ascending order of the financial bid parameter. The Bidder quoting the lowest Initial Annual Quote (IAQ) for the Project shall be ranked First as L1 and the Bidder quoting the second lowest Financial Bid shall be ranked Second as L2 and so on” என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்ப விதிகளின் படி, ஒப்ப ஆவணத்தில் *RFP* நிபந்தனைகளுக்கு இணங்க, ஒப்ப செல்லுபடியை நீட்டிக்கவும், ஒப்ப பாதுகாப்பாக அவர்களின் முன் வைப்பு தொகையினை பயன்படுத்தவும், *L1* ஒப்பந்தாரர் இறுதி நிதி விலை குறைப்பிற்கு *L2* ஒப்பந்ததாரரான *M/s Delhi MSW Solutions Limited* அவர்களின் ஒப்புதல் அளிக்குமாறு ஒப்பந்த அழைப்பு அதிகாரியிடமிருந்து *L2* ஒப்பந்ததாரருக்கு *17.05.2025* அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பம் செல்லுபடி காலத்தை நீட்டிக்கவும், முன் வைப்பு தொகையினை பயன்படுத்தவும், ஒப்பந்ததாரரின் ஒப்புதல் *19.05.2025* அன்று பெறப்பட்டது. இதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் *L2 M/s Delhi MSW Solutions Limited*, அவர்கள் *L1*ன் ஒப்பந்ததாரரின் ஆவண ஒப்பந்த விலைப்புள்ளி ரூ.*276.00* கோடியினை முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணமாக *(Initial Annual Quote (IAQ)* ஏற்று ஒப்புதல் கடிதம் *21.05.2025* அன்று பெறப்பட்டது.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு *28.05.2025* அன்று குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி கீழ்கண்டவற்றிற்கு ஆணையர் அவர்களின் *10.06.2025* நாளிட்ட அனுமதி பெறப்பட்டது.

1. இத்திட்ட பணிக்கு ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக்குழுவின் பரிந்துரையின்படி *M/s Delhi MSW Solutions Limited)* அவர்கள் அளித்துள்ள முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணம் *(Initial Annual Quote (IAQ))* ரூ.*276.00* கோடி (ரூபாய் இருநூற்று எழுபத்து ஆறு கோடி மட்டும்) விலைப்புள்ளியினை ஏற்கவும்.
2. இத்திட்ட பணியினை மேற்கொள்ளவிருக்கும் திருவாளர்கள். *M/s Delhi MSW Solutions Limited)* அவர்களுக்கு பணியாணை வழங்குவதற்கும்.

திருவாளர்கள். *M/s Delhi MSW Solutions Limited* அவர்களுக்கு *10.06.2025* அன்று பணியாணை வழங்கப்பட்டது.

எனவே,

1. இத்திட்ட பணிக்கு ஒப்ப கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக்குழுவின் பரிந்துரையின்படி திருவாளர்கள். *M/s Delhi MSW Solutions Limited)* அவர்கள் அளித்துள்ள முதல் வருடத்திற்கான செயலாக்க கட்டணம் *(Initial Annual Quote (IAQ))* ரூ.*276.00* கோடி (ரூபாய் இருநூற்று எழுபத்து ஆறு கோடி மட்டும்) விலைப்புள்ளியினை ஏற்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

2. இத்திட்ட பணியினை மேற்கொள்ளவிருக்கும் திருவாளர்கள். *M/s Delhi MSW Solutions Limited)* அவர்களுக்கு பணியாணை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
3. இத்திட்ட பணிக்கு தமிழக அரசிடமிருந்து திருத்தப்பட்ட நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி இத்திட்டப் பணியாணை வழங்கியதற்கும்,
4. பொது தனியார் கூட்டாண்மையில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி, இயக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்ற *(DBFOT)* ஒப்ப முறையில் மாநகரத்தை சுத்தம் செய்யும் திட்டம்: மண்டலம்-*5* மற்றும் *6* பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது, தெரு துப்புரவு கழிவுகள் (தெரு துப்புரவு கழிவுகள் அகற்றும் நடவடிக்கைகள் உட்பட), தோட்டக்கழிவுகள், அபாயகரமான கழிவுகளை சேகரித்தல் மற்றும் சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு செயலாக்க வசதி/ குப்பைக்கொட்டும் வளாகம் (தொகுப்பு -*6)* கொண்டு சேர்த்தல் திட்ட பணியினை *10* ஆண்டு காலத்திற்கு செயல்படுத்தவும்,
5. திருவாளர்கள். *Urbaser SAU-Spain, M/s. Elkoplast Envirosystems India Private Limited and M/s. Sumeet Facilities Limited*, கூட்டமைப்பு நிறுவனம் *(Consortium) L1* ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணியாணைக்கான மன்றத்தின் தீர்மான எண்.*493/2025*, நாள்: *30.04.2025* ரத்து செய்வதற்கும்,

மேற்கண்ட *1* முதல் *5* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.114/2025, நாள்.19.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.328/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**க.துந.க.எண்.பி1 / 1465 / 2025**

**ஆணையர் அவர்களின் 16.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 780 / 2025** **பொருள் எண்.76**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 11, வார்டு - 150, போரூர் டோல் பிளாஸா சர்வீஸ் ரோட்டில் முதல்வர் படைப்பகம் (CM Spaces) கட்டடம் கட்டும் பணிக்கு 2024-2025ஆம் ஆண்டின் விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் 2025 – 2026 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிவிப்பில் முதல்வர் படைப்பகம் (CM Spaces) ஐந்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று வெளியிட்டார்கள்.

மண்டலம் - 11, வார்டு - 150, போரூர் டோல் பிளாஸா சர்வீஸ் ரோட்டில் முதல்வர் படைப்பகம் (CM Spaces) கட்டடம் கட்டும் பணியினை மேற்கொள்ள வேண்டி 2024-2025 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் - 11, வார்டு - 150, போரூர் டோல் பிளாஸா சர்வீஸ் ரோட்டில் முதல்வர் படைப்பகம் (CM Spaces) கட்டடம் கட்டும் பணி. |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 11. |
| 3 | **மதிப்பீட்டின் தொகை விவரம்** | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,73,60,000.00 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 67,24,800.00 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா.1% | ரூ. 3,73,600.00 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 3,73,600.00 |
| | (உ) கலந்தாலோசகர் கட்டணம் 2.00% | ரூ. 7,50,000.00 |
| | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 9,18,000.00 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 4,65,00,000.00 |
| 4 | நிதியின் தன்மை | பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி |
| 5 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 4,65,00,000.00 |

மேற்குறிப்பிட்டுள்ள மண்டலம் - 11, வார்டு - 150, போரூர் டோல் பிளாஸா சர்வீஸ் ரோட்டில் முதல்வர் படைப்பகம் (CM Spaces) கட்டடம் கட்டும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவீனத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. மேற்கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.4,65,00,000/- (ரூபாய் நான்கு கோடியே அறுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவீனத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி ஒதுக்கீடு அளிக்கவும்,
3. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.415/2025, நாள்.24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது."

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.321/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**க.து.ந.க.எண். பி1 / 1550 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 781 / 2025** **பொருள் எண்.77**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் – 15, கோட்டம் – 193, Subburayan Nagar Burial Ground Thoraipakkam, கோட்டம் – 195, Mettukuppam Rajiv Nagar Burial Ground, கோட்டம்– 196, Kannagi Nagar Hindu Burial Ground, Kannagi Nagar Christian Burial Ground, Kannagi Nagar Muslim Burial Ground, Okkiyampettai Burial Ground Thoraipakkam, Kannagi Nagar 17th Main Road (LPG Gasifire) ஆகிய மயானபூமிகள் பழுதுபார்த்து மேம்படுத்தும் பணி - 2024-2025 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மண்டலம்–15, கோட்டம்–193, Subburayan Nagar Burial Ground Thoraipakkam, கோட்டம் –195, Mettukuppam Rajiv Nagar Burial Ground, கோட்டம் – 196, Kannagi Nagar Hindu Burial Ground, Kannagi Nagar Christian Burial Ground, Kannagi Nagar Muslim Burial Ground, Okkiyampettai Burial Ground Thoraipakkam, Kannagi Nagar 17th Main Road (LPG Gasifire) ஆகிய மயானபூமிகள் பழுதுபார்த்து மேம்படுத்தும் பணி 2024-2025 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின் படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்–15, கோட்டம்–193, Subburayan Nagar Burial Ground Thoraipakkam, கோட்டம் – 195, Mettukuppam Rajiv Nagar Burial Ground, கோட்டம் – 196, Kannagi Nagar Hindu Burial Ground, Kannagi Nagar Christian Burial Ground, Kannagi Nagar Muslim Burial Ground, Okkiyampettai Burial Ground Thoraipakkam, Kannagi Nagar 17th Main Road (LPG Gasifire) ஆகிய மயானபூமிகள் பழுதுபார்த்து மேம்படுத்தும் பணி. |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 15 |
| 3 | மதிப்பீட்டின் தொகை விவரம் | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 1,44,42,846.06 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 25,99,712.61 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 1,44,428.50 |
| | (ஈ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 2,02,013.70 |
| | **மொத்தம்** | ரூ. 1,73,89,000.00 |
| 4 | நிதியின் தன்மை | பெருநகரசென்னை மாநகராட்சிமூலதன நிதி |
| 5 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 1,73,89,000.00 |

மேற்குறிப்பிட்டுள்ளபெருநகரசென்னை மாநகராட்சி, மண்டலம்–15, கோட்டம்–193, Subburayan Nagar Burial Ground Thoraipakkam, கோட்டம் – 195, Mettukuppam Rajiv Nagar Burial Ground, கோட்டம் – 196, Kannagi Nagar Hindu Burial Ground, Kannagi Nagar Christian Burial Ground, Kannagi Nagar Muslim Burial Ground, Okkiyampettai Burial Ground Thoraipakkam, Kannagi Nagar 17th Main Road (LPG Gasifire) ஆகிய மயானபூமிகள் பழுதுபார்த்து மேம்படுத்தும் பணி 2024-2025 ஆம் ஆண்டிற்கான விலைப்பட்டியலின் படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் மூலமாக மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–15,கோட்டம்–193, Subburayan Nagar Burial Ground Thoraipakkam, கோட்டம்–195, Mettukuppam Rajiv Nagar Burial Ground, கோட்டம்–196, Kannagi Nagar Hindu Burial Ground, Kannagi Nagar Christian Burial Ground, Kannagi Nagar Muslim Burial Ground, Okkiyampettai Burial Ground Thoraipakkam, Kannagi Nagar 17th Main Road (LPG Gasifire) ஆகிய மயானபூமிகள் பழுதுபார்த்து மேம்படுத்தும் பணி ரூ. 1,73,89,000.00 மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவினத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்வதற்கும்,
3. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண். பி1 / 1544 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 782 / 2025** **பொருள் எண்.78**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் – 15, கோட்டம் – 198 Kuppuisamy Street Karapakkam Burial Ground, Kuppuisamy Street Karapakkam Burial Ground Opp to Compost Yard (North Side), Kuppuisamy Street Karapakkam Christian Burial Ground, Karapakkam (Burial Only), Kuppuisamy Street Karapakkam Burial Ground Karapakkam (Burial and Cremeation), Sathiyavanimuthu Street Burial Ground (Near Indane Gas) 2024-2025 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மண்டலம்–15, கோட்டம்–198 Kuppuisamy Street Karapakkam Burial Ground, Kuppuisamy Street Karapakkam Burial Ground Opp to Compost Yard (North Side), Kuppuisamy Street Karapakkam Christian Burial Ground, Karapakkam (Burial Only), Kuppuisamy Street Karapakkam Burial Ground Karapakkam (Burial and Cremeation), Sathiyavanimuthu Street Burial Ground (Near Indane Gas) 2024-2025 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின் படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்–15, கோட்டம்–198 Kuppuisamy Street Karapakkam Burial Ground, Kuppuisamy Street Karapakkam Burial Ground Opp to Compost Yard (North Side), Kuppuisamy Street Karapakkam Christian Burial Ground, Karapakkam (Burial Only), Kuppuisamy Street Karapakkam Burial Ground Karapakkam (Burial and Cremeation), Sathiyavanimuthu Street Burial Ground (Near Indane Gas) |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 15 |
| 3 | மதிப்பீட்டின் தொகை விவரம் | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 86,27,509.84 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 15,52,951.08 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 86,275.01 |
| | (ஈ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 1,13,263.03 |
| | **மொத்தம்** | **ரூ.** 1,03,80,000.00 |
| 4 | நிதியின் தன்மை | பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி. |
| 5 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | **ரூ.** 1,03,80,000.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பெருநகரசென்னை மாநகராட்சி, மண்டலம்–15, கோட்டம்–198 Kuppuisamy Street Karapakkam Burial Ground, Kuppuisamy Street Karapakkam Burial Ground Opp to Compost Yard (North Side), Kuppuisamy Street Karapakkam Christian Burial Ground, Karapakkam (Burial Only), Kuppuisamy Street Karapakkam Burial Ground Karapakkam (Burial and Cremeation), Sathiyavanimuthu Street Burial Ground (Near Indane Gas) 2024-2025 ஆம் ஆண்டிற்கான விலைப்பட்டியலின்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் மூலமாக மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–15, கோட்டம்–198 Kuppuisamy Street Karapakkam Burial Ground, Kuppuisamy Street Karapakkam Burial Ground Opp to Compost Yard (North Side), Kuppuisamy Street Karapakkam Christian Burial Ground, Karapakkam (Burial Only), Kuppuisamy Street Karapakkam Burial Ground Karapakkam (Burial and Cremeation), Sathiyavanimuthu Street Burial Ground (Near Indane Gas) ரூ. 1,03,80,000.00 மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்.

2. மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவினத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்வதற்கும்,

3. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண். பி1 / 1543 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 783 / 2025** **பொருள் எண்.79**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் – 15, கோட்டம்-199, Shozhinganallur, TNHB C12 Road Burial Ground, கோட்டம்-200 Chemmancherry Pondicherry Pattai Burial Ground (Near Pond), Chemmancherry Mayana Salai ஆகிய மயானபூமிகள் பழுதுபார்த்து மேம்படுத்தும் பணி - 2024-2025 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மண்டலம்–15, கோட்டம்-199, Shozhinganallur, TNHB C12 Road Burial Ground, கோட்டம்-200 Chemmancherry Pondicherry Pattai Burial Ground (Near Pond), Chemmancherry Mayana Salai ஆகிய மயானபூமிகள் பழுதுபார்த்து மேம்படுத்தும் பணிக்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின் படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்–15, கோட்டம்-199, Shozhinganallur, TNHB C12 Road Burial Ground, கோட்டம்-200 Chemmancherry Pondicherry Pattai Burial Ground (Near Pond), Chemmancherry Mayana Salai ஆகிய மயானபூமிகள் பழுதுபார்த்து மேம்படுத்தும் பணி. |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 15 |
| 3 | மதிப்பீட்டின் தொகை விவரம் | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 1,41,12,926.47 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 25,40,326.76 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 1,41,129.26 |
| | (ஈ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 3,05,617.53 |
| | **மொத்தம்** | **ரூ.** 1,71,00,000.00 |
| 4 | நிதியின் தன்மை | பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி |
| 5 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | **ரூ.** 1,71,00,000.00 |

*M/s. Sai Tube Well* அளித்த ஒப்பந்தப்புள்ளிகள் மிகவும் அதிகமாக அளித்திருந்ததால், அவர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி பேச்சுவார்த்தையின்போது ஒவ்வொரு மழைநீர் வடிகால்களின் அளவின்படி *(Size)* ஒரு மீட்டர் நீளத்திற்கு தூர்வாரும் பணிக்கு ஆகும் பணித் தொகையின் விவரத்தினை அளித்துள்ளார். இந்நிலையில் இந்த மழைநீர் வடிகால்களை தூர்வாரும் பணிக்கு வெவ்வேறு அளவுள்ள மழைநீர்வடிகால் அளவுகளுக்கு *M/s.ITCOT* நிறுவனத்திடமிருந்து ஒரு மீட்டர் நீளம் தூர்வார செலவாகும் தொகை *Base Rate* பெறப்பட்டது.

அதன்படி பேச்சுவார்த்தையின்போது *M/s. Sai Tube Well* அளித்த ஒவ்வொரு மழைநீர்வடிகாலின் அளவின்படி *(Size)* தூர்வார செலவாகும் தொகையினை *M/s.ITCOT* நிறுவனம் அளித்த அடிப்படைத் தொகையுடன் *(Base Rate)* ஒப்பீடு செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

பேச்சு வார்த்தையின்போது *M/s. Sai Tube Well* நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம் மற்றும் அடிப்படை விலையுடன் *(Base Rate)* ஒப்பீடு செய்யப்பட்ட விவரம்

(அட்டவணை-*III*)

| Sl.NO | Size of the Drain | Tentative Length of SWD network in North region in KM | Quoted Rateby M/s.Sai Tube Well in Tender per RM With GST at 18 % | Base Rates arrived by ITCOT Without GST | Base Rates arrived by ITCOT With GST at 18 % | Rate Quoted by M/s.Sai Tube Well on 1 st Negotiation without GST | Rate Quoted by M/s.Sai Tube Well on 1 st Negotiation with GST | % excess over Base rate on 1st Negotiation |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | OPENDRAIN -.45 m *.45 m | 483.12 | 4700 | 1618 | 1909.24 | 1860 | 2194.8 | 14.96 |
| 2 | ARCHDRAIN 2.00 m | 3.0 | 8000 | 5073 | 5986.14 | 7264 | 8571.52 | 43.19 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 0.60x0.75 | 462.54 | 4700 | 2774.00 | 3273.32 | 3250 | 3835 | 17.16 |
| 4 | 0.90x0.90 | 284.74 | 8000 | 3851.00 | 4544.18 | 4430 | 5227.4 | 15.04 |
| 5 | 1.20x1.20 | 37.16 | 8500 | 5256.00 | 6202.08 | 5820 | 6867.6 | 10.73 |
| 6 | 1.50x1.50 | 8.57 | 8700 | 5621.00 | 6632.78 | 7346 | 8668.28 | 30.69 |
| 7 | 2.00X2.00 | 0.96 | 8900 | 5986 | 7063.48 | 7500 | 8850 | 25.29 |
| 8 | Others | 5.83 | 5000 | 5621.00 | 6632.78 | 4200 | 4956 | -25.28 |

*M/s. Sai Tube Well* நிறுவனத்திடம் மேற்கண்ட முதல் பேச்சுவார்த்தையின்போது அளித்த ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதலாக இருந்ததினால் விலைக்குறைப்பு கோரி மீண்டும் இரண்டாவது பேச்சுவார்த்தைக்கு *M/s. Sai Tube Well* நிறுவனத்திற்கு கடிதம் அளிக்கப்பட்டது.

இரண்டாவது பேச்சு வார்த்தையின்போது *M/s. Sai Tube Well* நிறுவனம் அளித்த ஒவ்வொரு மழைநீர் வடிகால்களின் அளவின்படி *(Size)* தூர்வார செலவாகும் தொகையினை அளித்துள்ளார்கள். இது *M/s.ITCOT* நிறுவனம் அளித்த அடிப்படை விலையுடன் *(Base Rate)* ஒப்பீடு செய்யப்பட்டது.

இரண்டாவது பேச்சு வார்த்தையின்போது *M/s. Sai Tube Well* நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம் மற்றும் அடிப்படை விலையுடன் *(Base Rate)* ஒப்பீடு செய்யப்பட்ட விவரம்.

(அட்டவணை-*IV*)

| Sl.NO | Size of the Drain | Tentative Length of SWD network in North region in KM | Quoted Rateby M/s.Sai Tube Well in Tender per RM With GST at 18 % | Base Rates arrived by ITCOT Without GST | Base Rates arrived by ITCOT With GST at 18 % | Rate Quoted by M/s.Sai Tube Well on 1 st Negotiation without GST | Rate Quoted by M/s.Sai Tube Well on 1 st Negotiation with GST | % excess over Base rate on 1st Negotiation | Rate Quoted by M/s.Sai Tube Well on 2 nd Negotiation with GST | % excess over Base rate on 2nd Negotiation |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | OPENDRAIN -.45 m *.45 m | 483.12 | 4700 | 1618 | 1909.24 | 1860 | 2194.8 | 14.96 | 2043.00 | 7.01 |
| 2 | ARCHDRAIN 2.00 m | 3 | 8000 | 5073 | 5986.14 | 7264 | 8571.52 | 43.19 | 6405.00 | 7.00 |
| 3 | 0.60x0.75 | 462.54 | 4700 | 2774.00 | 3273.32 | 3250 | 3835 | 17.16 | 3502.00 | 6.99 |
| 4 | 0.90x0.90 | 284.74 | 8000 | 3851.00 | 4544.18 | 4430 | 5227.4 | 15.04 | 4862.00 | 6.99 |
| 5 | 1.20x1.20 | 37.16 | 8500 | 5256.00 | 6202.08 | 5820 | 6867.6 | 10.73 | 6636.00 | 7.00 |
| 6 | 1.50x1.50 | 8.57 | 8700 | 5621.00 | 6632.78 | 7346 | 8668.28 | 30.69 | 7097.00 | 7.00 |
| 7 | 2.00X2.00 | 0.96 | 8900 | 5986 | 7063.48 | 7500 | 8850 | 25.29 | 7558.00 | 7.00 |
| 8 | Others | 5.83 | 5000 | 5621.00 | 6632.78 | 4200 | 4956 | -25.28 | 4956.00 | -25.28 |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு மழைநீர் வடிகால்களின் அளவின்படி *(Size)* *M/s. Sai Tube Well* நிறுவனம் அளித்த ஒப்பத் தொகை மற்றும் ஒப்ப சதவீதத்தினை ஏற்க பரிந்துரைவேண்டி ஒப்பந்த புள்ளிகள் விவர அறிக்கை துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் தலைமையிலான ஒப்ப ஆய்வுக்குழுவிடம் *(Tender Scrutiny Committee)* சமர்ப்பிக்கப்பட்டு *19.05.2025* அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே,

1. தெற்கு வட்டாரத்தில் உள்ள பல்வேறு அளவுகள் கொண்ட மழைநீர் வடிகால்களில் நவீன இயந்திரம் மூலம் *4000 m3/hour* உறிஞ்சும் திறன் மற்றும் *25* கி.மீ. தூரம் தூர்வாரிய வண்டல் மணலினை *Dumpers* மூலம்

*Yard*க்கு எடுத்து சென்று கொட்டவும், தூர்வாருவதற்கு முன் மற்றும் தூர்வாரிய பின் புகைப்படம் எடுக்கும் பணிக்கு பல்வேறு மழைநீர் வடிகால்களின் அளவிற்கு *M/s. Sai Tube Well* நிறுவனம் அளித்த ஒப்பந்த புள்ளித் தொகை

| Sl.NO | Size of the Drain | Rate Quoted by M/s.Sai Tube Well on 2 nd Negotiation with GST | % excess over Base rate on 2nd Negotiation |
|---|---|---|---|
| 1 | OPEN DRAIN -.45 m *.45 m | 2043.00 | 7.01 |
| 2 | ARCHDRAIN 2.00 m | 6405.00 | 7.0 |
| 3 | 0.60x0.75 | 3502.00 | 6.99 |
| 4 | 0.90x0.90 | 4862.00 | 6.99 |
| 5 | 1.20x1.20 | 6636.00 | 7.0 |
| 6 | 1.50x1.50 | 7097.00 | 7.0 |
| 7 | 2.00X2.00 | 7558.00 | 7.0 |
| 8 | Others | 4956.00 | -25.28 |

ரூ.10 கோடி செலவீனத்தில் தெற்கு வட்டாரத்தில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாரும் பணியினை மேற்கொள்ளவும், மேற்கண்ட விலைப்பட்டியல்படி ஒவ்வொரு மண்டலத்திலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் முன்னுரிமை பட்டியலின்படி தூர்வார தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் ஒப்புதல் பெற்று பணிகள் மேற்கொள்ளவும்,

2. மேற்காணும் பணிகளுக்கு மூலதன நிதியின் கீழ் பட்டியினை தீர்வு செய்ய அனுமதியும்,
3. நிதி ஆலோசகர் அவர்களுக்கு இப்பணியினை மேற்கொள்ள ரூ.10 கோடியினை மழைநீர் வடிகால் துறை மூலதன நிதியில் ஒதுக்கீடு செய்வதற்கு ஆணை வேண்டியும்,
4. இப்பணியின் அவசரம் மற்றும் அத்தியாவசியத்தினை கருதி குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணியேற்பு கடிதம் வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.421/2025, நாள்.24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.326/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**திக.மே.ந.க.எண்.அ7 / 1971 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2024 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 793 / 2025** **பொருள் எண்.89**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - தோட்டக் கழிவுகளுக்கான பல்வேறு இடங்களில் திட்ட செயலாக்க திட்டங்கள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் செயலாக்க திட்டங்கள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது மற்றும் உயிரி எரிவாயு Bio-CNG சேகரிப்பு மற்றும் போக்குவரத்து - திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்கான திட்ட மேலாண்மை ஆலோசகரை (Project Management Consultant) (PMC) இரண்டு ஆண்டு காலத்திற்கு ஈடுபடுத்தும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் Pollucare Engineers India Private Limited அவர்களுக்கு பணி ஆணை வழங்க மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, நகரின் பல்வேறு இடங்களில் தோட்டக் கழிவுகளுக்கான பல்வேறு இடங்களில் கழிவு செயலாக்க திட்டங்கள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் செயலாக்க திட்டங்கள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது மற்றும் உயிரி எரிவாயு *Bio-CNG* சேகரிப்பு மற்றும் போக்குவரத்து போன்ற பல்வேறு வகையான பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் பணிகள் பல்வேறு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்டவையின்படி, *Project Management Consultant (PMC)* திட்ட மேலாளரின் தலைமையில் இயங்க ஒரு நகர அலுவலகத்தை நிறுவவும், மேலும் இந்த அலுவலகம் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ஒரே தொடர்பு புள்ளியாக செயல்படும். மேலும் தகவல், அறிக்கைகள், ஒப்பந்த நிர்வாகம், சலுகைகள் / ஒப்பந்ததாரரின் விலைப்பட்டியல் சரிபார்ப்பு / செயலாக்கம் ஆகியவை இந்த அலுவலகத்தால் செய்யப்படும். மேலும், முழு *PMC* பணிகளின் மேலாண்மை மற்றும் விநியோகத்திற்கும் திட்ட மேலாளர் பொறுப்பாவார்.

மேற்கூறிய தேவைகளுக்காக, பல்வேறு திடக்கழிவு மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் திட்ட மேலாண்மை ஆலோசகரை *(Project Management Consultant) (PMC)* ஈடுபடுத்துவதற்கான இரண்டு வருட காலத்திற்கு நியமிக்கும் பணி ரூ.793.12 இலட்சத்திற்கு மன்றத் தீர்மான எண்.*491/2025*, நாள்:*30.04.2025*ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்டவையின்படி, *28.05.2025* அன்று மின்னணு ஒப்பம் கோரப்பட்டதில் ஒற்றை ஒப்பமாக திருவாளர்கள் *Pollucare Engineers India Private Limited* மட்டுமே பங்கேற்றார். இவ்வொப்பத்தில் திருவாளர்கள் *Pollucare Engineers India Private Limited* அவர்கள் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளி திறக்க *(Financial Bid) Tender Evaluation Commitee 15.06.2025* அன்று அனுமதிக்கப்பட்டது.

இதன் விவரம் கீழ்வருமாறு

| Sl.No | Tender Participants | Technical Bid Qualification |
|---|---|---|
| 1. | M/s. Pollucare Engineers India Private Limited | Bid Qualified |

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பம் பெறப்பட்டுள்ளன.

| Sl.No | Name of the Bidder | Estimated Work Value | Rate Quoted | Percentage % |
|---|---|---|---|---|
| 1. | M/s. Pollucare Engineers India Private Limited | Rs.7,93,12,000/- | Rs.7,76,90,400/- | (-) 2.04% lesser |

மேற்படி பெறப்பட்ட ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் *Pollucare Engineers India Private Limited* அளித்துள்ள ஒப்ப தொகை ரூ.7,76,90,400/- ஆகும் இது அலுவலக தொகையான ரூ.7,93,12,000/-விட (-) 2.04% குறைவு ஆகும்.

திருவாளர்கள் *Pollucare Engineers India Private Limited (L1)* ஒப்பந்தாரரிடம் விலைகுறைப்பு கோரப்பட்டதில் 17.06.2025 அன்று அளிக்கப்பட்ட கடிதத்தில் ஒப்பத்தில் அளித்துள்ள தொகை அலுவலக விலையினை விட குறைவாகவே அளித்துள்ளதால் மேலும் விலைகுறைப்பிற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. இதன்படி கீழ்வருமாறு

| Sl.No | Name of the Bidder | Estimated Work Value (inclusive of all taxes) | Final Negotiate Rate | Percentage % |
|---|---|---|---|---|
| 1. | M/s. Pollucare Engineers India Private Limited | Rs.7,93,12,000/- | Rs.7,76,90,400/- | (-)2.04% lesser |

தோட்டக் கழிவுகளுக்கான பல்வேறு இடங்களில் கழிவு செயலாக்க திட்டங்கள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் செயலாக்க திட்டங்கள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது மற்றும் உயிரி எரிவாயு *Bio-CNG* சேகரிப்பு மற்றும் போக்குவரத்து திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்கான திட்ட மேலாண்மை ஆலோசகரை *(Project Management Consultant) (PMC)* ஈடுபடுத்துதல் *PMC* திட்டத்திற்கான இரண்டு வருட காலத்திற்கு மேற்கொள்ளும் பணிக்கு திருவாளர்கள் *Pollucare Engineers India Private Limited* அவர்கள் அளித்துள்ள இறுதி ஒப்ப தொகை ரூ.7,76,90,400/-க்கு ஆகும். இத்தொகை அலுவலக தொகையான ரூ.7,93,12,000/-விட (-) 2.04% குறைவாக உள்ளதால் *Tender Scrutiny Commitee*யால் 18.06.2025 அன்று அனுமதிக்கப்பட்டது.

எனவே,

1. தோட்டக் கழிவுகளுக்கான பல்வேறு இடங்களில் கழிவு செயலாக்க திட்டங்கள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் செயலாக்க திட்டங்கள், கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்வது மற்றும் உயிரி எரிவாயு *Bio-CNG* சேகரிப்பு மற்றும் போக்குவரத்து திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்கான திட்ட மேலாண்மை ஆலோசகரை (Project Management Consultant) (PMC) ஈடுபடுத்துதல் PMC திட்டத்திற்கான இரண்டு வருட காலத்திற்கு மேற்கொள்ளும் பணிக்கு திருவாளர்கள். Pollucare Engineers India Private Limited அவர்கள் அளித்துள்ள இறுதி ஒப்ப தொகை ரூ.7,76,90,400/-க்கு பணிகள் மேற்கொள்வதற்கு அனுமதியும்,

2. இப்பணிக்கான பணி ஆணையினை திருவாளர்கள் Pollucare Engineers India Private Limited அவர்களுக்கு வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 19.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 24.06.2025 அன்று தீர்மான எண்.117/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 346/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**தி.க.மே.ந.க.எண்.அ7 / 1789 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 794 / 2025** **பொருள் எண்.90**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம் – 1 முதல் 5 வரையில் உள்ள 67 மயான பூமியை பராமரிப்பதற்காக - பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தூய்மை பணி மேற்கொள்ளும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்Black Cat Solutionமூலம் பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் *1* முதல் *5* வரையில் உள்ள சுகாதாரத்துறையின் மயானபூமி பட்டியலின்படி *67* எண்ணிக்கையிலான மயானபூமிகள் சுகாதாரத்துறையின் மூலம் மண்டலங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை மொத்தம் *2,66,034* சதுரமீட்டர் நிலப்பரப்பை கொண்டது.

தற்போது மயான பூமியில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுவதில் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் சனிக்கிழமைகளில் தீவிர துப்புரவு *(Mass cleaning)* பணிகள் மூலம் அவ்வப்போது சுத்தம் செய்யப்டுகிறது.

இறுதிச் சடங்கு நடக்கும் இம்மயான பூமிகளில் துப்புரவு பணிகள் தினந்தோறும் நடைபெற வேண்டும் என்ற ஆணையரின் உத்தரவின்படி, மயான பூமியில் குப்பைத் தொட்டி வைத்து அதில் சேரும் குப்பைகளை மண்டலம் *9* முதல் *15* வரை திருவாளர். உர்பேசர் சுமித் நிறுவனமும், மண்டலம் *1, 2, 3* மற்றும் *7*(பகுதி) யில் திருவாளர். சென்னை என்விரோ சொலுஷன்ஸ் நிறுவனமும் மற்றும் மண்டலம் *4, 5, 6, 7* மற்றும் *8* களில் பெருநகர சென்னை மாநகராட்சியும் வாகனங்கள் மூலம் அகற்றி வருகிறது.

தற்போது மண்டலம் *1, 2* மற்றும் *3*ல் துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் திருவாளர் சென்னை என்விரோ சொலுஷன்ஸ் நிறுவனமும் மற்றும் மண்டலம் *4* மற்றும் *5* களில் பெருநகர சென்னை மாநகராட்சியும் வீடுகள் தோறும் மற்றும் தெருக்களில் சேரும் குப்பைகளை தினந்தோறும் அகற்றப்பட்டு வருகிறது, இருந்த போதிலும் அந்த மயான பூமிக்குள் உள்ள குப்பைகள் மற்றும் செடி கொடிகளை தினந்தோறும் திருவாளர்.ராம்கி என்விரோ சொலுஷன்ஸ் நிறுவனத்தினர் அகற்றுவதில்லை.

மனிதர்களின் இறுதி சடங்கு நடைபெறும் இடம் மிக தூய்மையாக இருக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதிநிதிகள் மற்றும் குடியிருப்போர் சங்கங்கள் நேரடியாகவும் மற்றும் கடிதங்கள் மூலமாகவும் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும் மற்றும் ஆணையர் அவர்களுக்கும் கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக, மயான பூமிகளில் செயல்பட்டு வந்த அனைத்து *Micro Compost Centres (MCC)* கள் மற்றும் *Material Recovery Facilities (MRF)* க்களின் செயல்பாடு முழுவதுமாக நிறுத்தப்பட்டுள்ளது-

தற்போது, அம்மயான பூமியில் அன்றாடம் சேரும் குப்பைகள் மற்றும் செடி கொடிகளை அகற்ற போதுமான பணியாளர்கள் நியமனம் செய்ய அவசியம் ஏற்படுகிறது.

**மயான பூமிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணிகள் :-**

1. மயான பூமிகளில் சேரும் மற்றும் கொட்டப்படும் கழிவுகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.
2. இறுதி சடங்குகளின் மூலம் ஏற்படும் திடக்கழிவுகளான, பூமாலை, பாடை, பானை போன்ற கழிவுகளை தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.
3. மயான பூமிகளில் உள்ள சாலைகள் மற்றும் பாதைகள் தினந்தோறும் பெருக்கி தூய்மை படுத்தும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. ஒப்பந்ததாரர் பணியாளர்களால் சேகரிக்கும் அனைத்து வகை குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தேவையான Rotomac Bin மூலம் ஒப்பந்ததாரரால் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும்.

மேற்கூறிய பணிகளுக்கு தனிப்பொறியாளர்கள் (Independent Engineer) நியமித்து அவர்கள் மூலம் மேற்பார்வையிடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

மேற்கூறிய மண்டலம் 1 முதல் 5 வரையில் உள்ள 67 மயானபூமிகளை தினசரி தூய்மை பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.8,13,06,266/- (அனைத்து வரிகள் உட்பட) (ரூபாய் எட்டு கோடியே பதிமூன்று இலட்சத்து ஆறாயிரத்து இருநூற்றி அறுபத்து ஆறு மட்டும்)க்கு மன்றத் தீர்மானம் எண்:488/2025, நாள்:30.04.2025-ன்படி மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்டவையின்படி, 23.05.2025 அன்று மின்னணு ஒப்பம் கோரப்பட்டதில் ஒற்றை ஒப்பமாக திருவாளர்கள் Black Cat Solution மட்டுமே பங்கேற்றார். இவ்வொப்பத்தில் திருவாளர்கள் Black Cat Solution அவர்கள் ஒப்ப முன்தகுதி ஆவணங்கள் மின்னணு ஒப்பத்தில் முழுமையாக சமர்ப்பிக்காததால் இவ்வொப்பத்தினை ரத்து செய்து மறு ஒப்பம் கோரப்பட்டது.

இதன்படி, 06.06.2025 அன்று இரண்டாம் முறையாக மின்னணு ஒப்பம் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனார். இதன் விவரம் கீழ்வருமாறு.

| Sl. No | Tender Participants | Technical Bid Qualification |
|---|---|---|
| 1. | M/s. Black Cat Solution | Bid Qualified |
| 2. | M/s. AMS Projects | Bid Not Qualified |

இதில் திருவாளர்கள் AMS Projects நிறுவனத்தினர் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெறாததால் இவ்ஒப்பந்ததாரரின் ஒப்பங்கள் விலைப்புள்ளி திறப்பிற்கு தகுதி பெறவில்லை மீதமுள்ள ஒப்பந்ததாரரின் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளி திறக்க (Financial Bid) அனுமதிக்கப்பட்டது.

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பம் பெறப்பட்டுள்ளன.

| Sl. No | Name of the Bidder | Estimated Work Value (inclusive of all taxes) | Rate Quoted inclusive of all taxes for twelve months (inclusive of all taxes) | Percentage % |
|---|---|---|---|---|
| 1. | M/s. Black Cat Solution | Rs.8,13,06,266/- | Rs.8,08,93,499.34p | (-) 0.51% lesser |

மேற்படி பெறப்பட்ட ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் *Black Cat Solution* அளித்துள்ள ஒப்ப தொகை ரூ.***8,08,93,499.34***பை ஆகும் இது அலுவலக தொகையான ரூ.*8,13,06,266/-*விட *(-) 0.51%* குறைவு ஆகும்.

திருவாளர்கள் Black Cat Solution *(L1)* ஒப்பந்தாரரிடம் விலைகுறைப்பு கோரப்பட்டதில் *17.06.2025* அன்று அளிக்கப்பட்ட கடிதத்தில் ஒப்பத்தில் அளித்துள்ள தொகை அலுவலக விலையினை விட குறைவாகவே அளித்துள்ளதால் மேலும் விலைகுறைப்பிற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. இதன்படி கீழ்வருமாறு

| Sl.No | Name of the Bidder | Estimated Work Value (inclusive of all taxes) | Final Negotiate Rate for twelve months (inclusive of all taxes) | Percentage % |
|---|---|---|---|---|
| 1. | M/s. Black Cat Solution | Rs.8,13,06,266/- | Rs.8,08,93,499.34p | (-) 0.51% lesser |
| Rounded off | | | Rs.8,08,93,500/- | |

மண்டலம்-*1* முதல் *5* வரையில் உள்ள *67* மயான பூமியை பராமரிப்பதற்கான பணிகளை பன்னிரண்டு மாத காலத்திற்கு மேற்கொள்ள ரூ.***8,08,93,500/-*** ஆகும்.

எனவே,

1. மண்டலம்–1 முதல் 5 வரையில் உள்ள 67 மயான பூமியை பராமரிப்பதற்கான பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்துள்ள திருவாளர்கள். Black Cat Solution அளித்துள்ள விலைப்புள்ளி ரூ.8,08,93,500/- (ரூபாய் எட்டு கோடியே எட்டு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) பன்னிரண்டு மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ளவும்,
2. இப்பணிக்கான பணி ஆணையினை திருவாளர்கள் Black Cat Solution அவர்களுக்கு வழங்கவும்,
3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை நிதி ஆலோசகர் அவர்களால் வட்டார அலுவலகத்திற்கு (வடக்கு) Budget Head Code. 230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கி அந்நிதியிலிருந்து பணியை மேற்கொள்ளவும்,
4. பணி ஆணை வழங்கப்பட்ட பின் இப்பணிகளை வட்டார அலுவலகம் (வடக்கு) மூலம் கண்காணிக்கவும் மற்றும் அனைத்து மண்டலங்களிலிருந்து செயல்திறன் சான்றிதழ்கள் பெற்று வட்டார கண்காணிப்பு பொறியாளர் (வடக்கு) மூலம் பட்டியை தீர்க்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 19.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 24.06.2025 அன்று தீர்மான எண்.118/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.347/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**தி.க.மே.ந.க.எண்.அ7/1791/2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 795/2025** **பொருள் எண்.91**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம் – 11 முதல் 15 வரையில் உள்ள 88 மயான பூமியை பராமரிப்பதற்காக - பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தூய்மை பணி மேற்கொள்ளும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் Black Cat Solution மூலம் பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் *11* முதல் *15* வரையில் உள்ள சுகாதாரத்துறையின் மயானபூமி பட்டியலின்படி *88* எண்ணிக்கையிலான மயானபூமிகள் சுகாதாரத்துறையின் மூலம் மண்டலங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை மொத்தம் *1,40,657* சதுரமீட்டர் நிலப்பரப்பை கொண்டது.

தற்போது மயான பூமியில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுவதில் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் சனிக்கிழமைகளில் தீவிர துப்புரவு *(Mass cleaning)* பணிகள் மூலம் அவ்வப்போது சுத்தம் செய்யப்படுகிறது.

இறுதிச் சடங்கு நடக்கும் இம்மயான பூமிகளில் துப்புரவு பணிகள் தினந்தோறும் நடைபெற வேண்டும் என்ற ஆணையரின் உத்தரவின்படி, மயான பூமியில் குப்பைத் தொட்டி வைத்து அதில் சேரும் குப்பைகளை மண்டலம் *9* முதல் *15* வரை திருவாளர். உர்பேசர் சுமித் நிறுவனமும், மண்டலம் *1, 2, 3* மற்றும் *7*(பகுதி) யில் திருவாளர். சென்னை என்விரோ சொலுஷன்ஸ் நிறுவனமும் மற்றும் மண்டலம் *4, 5, 6, 7* மற்றும் *8* களில் பெருநகர சென்னை மாநகராட்சியும் வாகனங்கள் மூலம் அகற்றி வருகிறது.

தற்போது மண்டலம் *1, 2* மற்றும் *3*ல் துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் திருவாளர் சென்னை என்விரோ சொலுஷன்ஸ் நிறுவனமும் மற்றும் மண்டலம் *4* மற்றும் *5* களில் பெருநகர சென்னை மாநகராட்சியும் வீடுகள் தோறும் மற்றும் தெருக்களில் சேரும் குப்பைகளை தினந்தோறும் அகற்றப்பட்டு வருகிறது இருந்த போதிலும் அந்த மயான பூமிக்குள் உள்ள குப்பைகள் மற்றும் செடி கொடிகளை தினந்தோறும் திருவாளர்.ராம்கி என்விரோ சொலுஷன்ஸ் நிறுவனத்தினர் அகற்றுவதில்லை.

மனிதர்களின் இறுதி சடங்கு நடைபெறும் இடம் மிக தூய்மையாக இருக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் குடியிருப்போர் சங்கங்கள் நேரடியாகவும் மற்றும் கடிதங்கள் மூலமாகவும் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும் மற்றும் ஆணையர் அவர்களுக்கும் கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக, மயான பூமிகளில் செயல்பட்டு வந்த அனைத்து *Micro Compost Centres (MCC)* கள் மற்றும் *Material Recovery Facilities (MRF)* க்களின் செயல்பாடு முழுவதுமாக நிறுத்தப்பட்டுள்ளது-

தற்போது, அம்மயான பூமியில் அன்றாடம் சேரும் குப்பைகள் மற்றும் செடி கொடிகளை அகற்ற போதுமான பணியாளர்கள் நியமனம் செய்ய அவசியம் ஏற்படுகிறது.

**மயான பூமிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணிகள் :-**

1. மயான பூமிகளில் சேரும் மற்றும் கொட்டப்படும் கழிவுகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்
2. இறுதி சடங்குகளின் மூலம் ஏற்படும் திடக்கழிவுகளான, பூமாலை, பாடை, பானை போன்ற கழிவுகளை தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.
3. மயான பூமிகளில் உள்ள சாலைகள் மற்றும் பாதைகள் தினந்தோறும் பெருக்கி தூய்மை படுத்தும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. ஒப்பந்ததாரர் பணியாளர்களால் சேகரிக்கும் அனைத்து வகை குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தேவையான Rotomac Bin மூலம் ஒப்பந்ததாரரால் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும்.

மேற்கூறிய பணிகளுக்கு தனிப்பொறியாளர்கள் (Independent Engineer) நியமித்து அவர்கள் மூலம் மேற்பார்வையிடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

மேற்கூறிய மண்டலம் 11 முதல் 15 வரையில் உள்ள 88 மயானபூமிகளை தினசரி தூய்மை பணிக்கு மதிப்பீடு தொகைக்கு ரூ.7,91,79,091/- (அனைத்து வரிகள் உட்பட) (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூற்று ஒரு இலட்சத்து எழுபத்தி ஒன்பதாயிரத்து தொண்ணூற்று ஒன்று மட்டும்)க்கு மன்றத் தீர்மானம் எண்:488/2025, நாள்: 30.04.2025-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்டவையின்படி, 23.05.2025 அன்று மின்னணு ஒப்பம் கோரப்பட்டதில் ஒற்றை ஒப்பமாக திருவாளர்கள். Black Cat Solution மட்டுமே பங்கேற்றார். இவ்வொப்பத்தில் திருவாளர்கள். Black Cat Solution அவர்கள் ஒப்ப முன்தகுதி அவணங்கள் மின்னணு ஒப்பத்தில் முழுமையாக சமர்ப்பிக்காததால் இவ்வொப்பத்தினை ரத்து செய்து மறு ஒப்பம் கோரப்பட்டது.

இதன்படி, 06.06.2025 அன்று இரண்டாம் முறையாக மின்னணு ஒப்பம் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனார். இதன் விவரம் கீழ்வருமாறு

| Sl.No | Tender Participants | Technical Bid Qualification |
|---|---|---|
| 1. | M/s. Black Cat Solution | Bid Qualified |
| 2. | M/s. AMS Projects | Bid Not Qualified |

இதில் திருவாளர்கள். AMS Projects நிறுவனத்தினர் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெறாததால் இவ்ஒப்பந்ததாரரின் ஒப்பங்கள் விலைப்புள்ளி திறப்பிற்கு தகுதி பெறவில்லை மீதமுள்ள ஒப்பந்ததாரரின் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளி திறக்க (Financial Bid) அனுமதிக்கப்பட்டது.

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பம் பெறப்பட்டுள்ளன.

| Sl.No | Name of the Bidder | Estimated Work Value (inclusive of all taxes) | Rate Quoted inclusive of all taxes for twelve months (inclusive of all taxes) | Percentage % |
|---|---|---|---|---|
| 1. | M/s. Black Cat Solution | Rs.7,91,79,091/- | Rs.7,88,03,999/- | (-) 0.47% lesser |

மேற்படி பெறப்பட்ட ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். *Black Cat Solution* அளித்துள்ள ஒப்ப தொகை ரூ.***7,88,03,999/-***(அனைத்து வரிகள் உட்பட) ஆகும் இது அலுவலக தொகையான **ரூ.*7,91,79,091/-***விட ***(-) 0.47%*** குறைவு ஆகும்.

திருவாளர்கள் Black Cat Solution *(L1)* ஒப்பந்தாரரிடம் விலைகுறைப்பு கோரப்பட்டதில் *17.06.2025* அன்று அளிக்கப்பட்ட கடிதத்தில் ஒப்பத்தில் அளித்துள்ள தொகை அலுவலக விலையினை விட குறைவாகவே அளித்துள்ளதால் மேலும் விலை குறைப்பிற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. இதன்படி கீழ்வருமாறு

| Sl.No | Name of the Bidder | Estimated Work Value (inclusive of all taxes) | Final Negotiate Rate for twelve months (inclusive of all taxes) | Percentage % |
|---|---|---|---|---|
| 1. | M/s. Black Cat Solution | Rs.7,91,79,091/- | Rs.7,88,03,999/- | (-) 0.47% lesser |

மண்டலம்-*11* முதல் *15* வரையில் உள்ள *88*மயான பூமியை பராமரிப்பதற்கான பணிகளை பன்னிரண்டு மாத காலத்திற்கு மேற்கொள்ள ரூ.***7,88,03,999/-*** (அனைத்து வரிகள் உட்பட) ஆகும்.

எனவே,

1. மண்டலம்–11 முதல் 15 வரையில் உள்ள 88 மயான பூமியை பராமரிப்பதற்கான பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்துள்ள திருவாளர்கள். Black Cat Solution அளித்துள்ள விலைப்புள்ளி ரூ.7,88,03,999/- (ரூபாய் ஏழு கோடியே எண்பத்தி எட்டு இலட்சத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது மட்டும்)க்கு (அனைத்து வரிகள் உட்பட) பன்னிரண்டு மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ளவும்,
2. இப்பணிக்கான பணி ஆணையினை திருவாளர்கள் Black Cat Solution அவர்களுக்கு வழங்கவும்,
3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை நிதி ஆலோசகர் அவர்களால் வட்டார அலுவலகத்திற்கு (வடக்கு) Budget Head Code.230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கி அந்நிதியிலிருந்து பணியை மேற்கொள்ளவும்,
4. பணி ஆணை வழங்கப்பட்ட பின் இப்பணிகளை வட்டார அலுவலகம் (தெற்கு) மூலம் கண்காணிக்கவும் மற்றும் அனைத்து மண்டலங்களிலிருந்து

செயல்திறன் சான்றிதழ்கள் பெற்று வட்டார கண்காணிப்பு பொறியாளர் (தெற்கு) மூலம் பட்டியை தீர்க்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 19.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 24.06.2025 அன்று தீர்மான எண்.119/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 348/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ1.ந.க.எண்.பி1/ 47/2025**

**ஆணையர் அவர்களின் 11.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 796/2025** **பொருள் எண்.92**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-01, பகுதி-01, வார்டு-01 மற்றும் 2க்கு உட்பட்ட சர்வே எண் 20ல் அமைந்துள்ள தாமரைக் குளத்தில் நீதிமன்ற வழக்கு (வழக்கு எண் : O.A No: 36 of 2022) தீர்ப்பின் படி ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்ட கட்டிடம் குடியிருப்புகளில் குடியமர்வு செய்வது - மூன்றில் இரண்டு பங்கு தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சியும் - மூன்றில் ஒரு பங்கு தொகையினை பயனாளிகள் வட்டியின்றி 20 வருடங்களில் தவணையாக (Hire Purchase) செலுத்த மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-01, பகுதி-01, கோட்டம்-01 மற்றும் 02க்கு உட்பட்ட கத்திவாக்கம் கிராமம் சர்வே எண்;20ல் அமைந்துள்ள நீர்நிலை வகைப்பாட்டிலுள்ள தாமரைக் குளத்தில் நீதிமன்ற வழக்கில் ( வழக்கு எண்: O.A No: 36 of 2022) குறிப்பிட்டுள்ள உத்தரவில், தாமரை குளத்தின் ஆக்கிரமிப்புகளால் நீர்நிலைகளில் ஓடும் நீர்/மழைநீர் தடைப்பட்டு பொதுமக்களுக்கு இடையூறாகவும், இயற்கைக்கு இடையூறாகவும் உள்ளது. எனவே, மாண்புமிகு தேசிய பசுமைத்தீர்ப்பாயம் மேற்படி வழக்கின் தீர்ப்பில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீர் நிலைகளை பழைய நிலைக்கு கொண்டு வர உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

தாமரைக் குளத்தில் Biometric Survey எடுக்கப்பட்டதில் மொத்தம் 55 வீடுகளில் 106 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இதில் 106 குடும்ப அட்டைகளில் 145 ஆண்களும் , 162 பெண்களும், 84 மாணக்கர்களும் அடங்குவர்

பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவுக்கிணங்க பெருநகர சென்னை மாநகராட்சியால் படிவம் 124b - நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் (ULB Act)–படியும் வருவாய்த்துறையில் படிவம் 7 மற்றும் 6யும் வழங்கி சுமார் 32 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு 30.01.2025 அன்று நிகழ்நிலை அறிக்கை (status report) சமர்ப்பிக்கப்பட்டது. மாண்புமிகு பசுமை தீர்ப்பாயம் வருகின்ற 28.03.2025 க்குள் அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றி தாமரைக் குளத்தினை மீண்டும் நீர்நிலையாக மாற்றி இணக்க அறிக்கை (compliance report) சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஆக்கிரமிப்புகளை அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சியானது வருவாய்த்துறை, காவல் துறை மற்றும் பிற துறைகளுடன் இணைந்து உரிய நடவடிக்கை எடுக்கும் போது, ஆக்கிரமிப்பாளர்களால் தாங்கள் பல்லாண்டு காலங்களாக இவ்விடத்தில் வசித்து வருவதாகவும் அதனால் வீடுகளை அகற்ற கூடாதென்றும். ஒரு வேளை நீதிமன்ற உத்தரவுப்படி அகற்றினால் தங்களுக்கு மாற்று ஏற்பாடாக குடியிருப்புகளை இலவசமாக அளித்துவிட்டு ஆக்கிரமிப்பு அகற்றும் பணியை செய்ய வேண்டும் என்று பலத்த எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இது நீண்ட வருடங்களாக சட்ட – ஒழுங்கு பிரச்சனையாக உள்ளதாலும், மேற்படி குடும்பதாரர்கள் ஏழ்மை நிலையில்

உள்ளதாலும், நீதிமன்ற தீர்ப்பின் படி ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்ற இந்த *106* குடும்பங்களுக்கு மாற்று குடியிருப்புகளை ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளதால் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் எண்ணூர், கார்கில் நகரில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் *106* எண்ணிக்கையிலான குடியிருப்புகளை *(6.75* இலட்சம் *x106* குடியிருப்புகள் = சுமார் *7.16* கோடிகள்*)* அதன் மொத்த மதிப்பில் மூன்றில் இரண்டு பங்கு தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்படும் என்றும் மூன்றில் ஒரு பங்கினை சம்மந்தப்பட்ட குடும்பத்தினர் வட்டியின்றி தவணை முறையில் *(Hire Purchase) 20* வருடங்களில் செலுத்தும் முறையில் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர் அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்பொருட்டு மண்டலம்-*01*, பகுதி-*01* , வார்டு-*01* மற்றும் *2*க்கு உட்பட்ட சர்வே எண் *20*ல் அமைந்துள்ள தாமரைக் குளத்தில் நீதிமன்ற வழக்கு (வழக்கு எண் *: O.A No: 36 of 2022)* தீர்ப்பின் படி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட கட்டிட குடியிருப்பு வாசிகளை குடியமர்வு செய்ய கவுன்சிலின் ஒப்புதலுக்கு உட்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, குடியிருப்பு செலவில் மூன்றில் இரண்டு பங்கை ஏற்க ஒப்புக்கொள்ளும் என *25.03.2025* நாளிட்ட குறிப்பில் ஆணையர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

எனவே, வார்டு-*01* மற்றும் *2*க்கு உட்பட்ட சர்வே எண் *20* தாமரைக் குளத்தில் அமைந்துள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட *106* குடும்பங்களுக்கு மாற்று குடியிருப்புகளை ஏற்பாடு செய்ய அதன் மொத்த மதிப்பில் மூன்றில் இரண்டு பங்கு தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்படும் என்றும் மூன்றில் ஒரு பங்கினை சம்மந்தப்பட்ட குடும்பத்தினர் *20* வருடங்களில் வட்டியின்றி தவணை முறையில் *(Hire Purchase)* வாடகை செலுத்த ஆவன செய்வதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> **"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.350/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."**

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/2977/2021**

**ஆணையர் அவர்களின் 26.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 797/2025** **பொருள் எண்.93**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) – அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலங்களில் சர்கார் புறம்போக்கு-வண்டிப்பாதை வகைப்பாடு கொண்ட நிலங்களை இரயத்துவாரி மனை என வகைப்பாடு மாற்றம் செய்ய - தடையின்மை சான்று கோரியது -வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி.**

முதன்மை செயலாளர்/ தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) அவர்களின் 21.02.2025 (ம) 23.06.2025 நாளிட்ட கடிதத்தில், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலங்களின் நில வகைப்பாட்டில் சர்க்கார் புறம்போக்கு-வண்டிப்பாதை வகைப்பாடு கொண்ட நிலங்களை இரயத்துவாரி மனை என வகைப்பாடு மாற்றம் செய்ய 0.67 ஏக்கர் அளவுள்ள கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கு தடையின்மை சான்று வழங்க கேட்டு கொள்ளப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

| Ward | Block No. | TS.No. | Classification | Total extent | Developed Plot extent | Extent to be retained in original classification |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| Ambattur-B | 52 | 65 | Sarkar Poramboke-Vandi pathai | 5830.0 | 145.0 | 5685.0 |
| | 86 | 53/2 | | 5884.0 | 422.0 | 5462.0 |
| Korattur-E | 57 | 44 | | 765.0 | 690.0 | 75.0 |
| Mannurpet(F) | 10 | 8/6 | | 300.0 | 300.0 | 0 |
| | 10 | 8/7 | | 900.0 | 900.0 | 0 |
| Mogappair(H) | 19 | 69 | Sarkar Nanjai - pathai | 1000.0 | 244.0 | 756.0 |
| **Total** | | | | **14679.0 Sq.mtr (or) 3.63 Acre** | **2701.0 Sq.mtr (or) 0.67 Acre** | **11978.0 Sq.mtr (or) 2.96Acre** |

இவ்வலுவலக 30.04.2025 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட இடங்களை புலத்தணிக்கை மேற்கொண்டு விரிவான அறிக்கையினை அளிக்குமாறு மண்டல அலுவலர்-7 அவர்களுக்கும், புலத்தணிக்கை அறிக்கை வேண்டி துணை ஆட்சியர் /நிமஉது (மத்தியம்) அவர்களுக்கு கடித நகல் அனுப்பப்பட்டு, மண்டல அலுவலர் -7 அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 7, வார்டு 84, 85 மற்றும் 86 ஆகிய கோட்ட பொறியாளர்கள் மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன அலுவலர்களுடன் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள நிலங்களை கூட்டுப்புலத் தணிக்கை செய்யப்பட்டு புலத்தணிக்கை செய்யப்பட்டதில்,

இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள புலங்கள் அனைத்தும் பூமியில் தொழில் மனைகளாக உள்ளன என்றும், புலத்தில் எந்த மனைகளும் வண்டிப்பாதையாக இல்லை எனவும், மண்டலம் 7ல் உள்ள பொறியாளர்களின் கள ஆய்வின்படி, வார்டு - 84, 85, 86ல் அமைந்துள்ள தொழிற் மனைகளின் எண்ணிக்கை விவரம் கீழ்கண்டவாறு அட்டவணையிடப்பட்டு, இணைப்பில் உள்ள நிலங்களுக்கு தடையின்மை சான்று வழங்குவது குறித்து மாமன்றத்தில் விவாதித்து முடிவெடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl.No | Zone | Division | Village Name | No.of Industrial Plots | Remarks |
|---|---|---|---|---|---|
| 1 | 7 | 84 | Korattur | 3 | |
| 2 | 7 | 85 | Ambattur | 1 | |
| 3 | 7 | 86 | Ambattur | 1 | |
| | | | Mannurpet | 2 | |
| 4 | 7 | | Mogappair | 1 | |
| **Total** | | | | **8** | |

எனவே, சென்னை மாவட்டம், அம்பத்தூர் வட்டம் மற்றும் நகரம், மண்டலம்-7க்குட்பட்ட அம்பத்தூர் தொழிற்பேட்டையில், உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலங்களை தற்போதைய வகைப்பாட்டியிலிருந்து கலம் எண்.6ல் குறிப்பிடப்பட்டுள்ள **2701 சதுர மீட்டர் (அல்லது) 0.67 ஏக்கர்** விஸ்தீரணத்தில் உள்ள 8 மனைகளுக்கு மட்டும் இரயத்துவாரி மனை என வகைப்பாடு மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்று வழங்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.06.2025 அன்று தீர்மான எண்.351/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1 / 1108 / 2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 798 / 2025** **பொருள் எண்.94**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-5, கோட்டம்-61, மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு தமிழ் வளர்ச்சி இயக்கக வளாகத்தில் திருவுருவச் சிலை நிறுவ - சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி.**

மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் 13.05.2025 நாளிட்ட கடிதத்தில், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு தமிழ் வளர்ச்சி இயக்கக வளாகத்தில் தேவநேயப் பாவாணரின் திருவுருவச் சிலை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும், தற்போது சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் திருவுருவச் சிலை நிறுவும் பொருட்டு ரூ.50,50,000/- (ரூபாய் ஐம்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து, அரசாணை (நிலை) எண்.183, வருவாய்த்துறை (LD 4(1)), நாள்.23.05.2017 வெளியிடப்பட்டுள்ளது எனவும், அரசு உறுதிமொழிக்குழு வரிசை எண்.1059-இல் இப்பொருண்மை இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ் வளர்ச்சி இயக்கக வளாகத்தில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் திருவுருவச் சிலை நிறுவும் பொருட்டு தடையின்மைச் சான்று வழங்கிட ஆவன செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு தமிழ் வளர்ச்சி இயக்கக வளாகத்தில் திருவுருவச் சிலை நிறுவுதல் தொடர்பாக அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கும் நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மன்றத்தீர்மானம் மற்றும் இசைவினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.183, வருவாய்த்துறை (LD 4(1)), நாள்.23.05.2017-ன் வழிமுறைகளைப் பின்பற்றி மேற்படி இடத்தினை புலத்தணிக்கை மேற்கொண்டு குறிப்பான பரிந்துரையுடன் கூடிய விரிவான அறிக்கையினை வரைபடம் மற்றும் புகைப்படங்களுடன் இத்துறைக்கு அனுப்புமாறு உதவி ஆணையர், மண்டலம் – 5 அவர்களிடம் 15.05.2025 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து, வடக்கு வட்டார அலுவலகம் அவர்களின் 25.06.2025 நாளிட்ட கடிதத்தில், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு தமிழ் வளர்ச்சி இயக்கக வளாகத்தில் திருவுருவச் சிலை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு தடையின்மைச் சான்று வழங்கிட கோரப்பட்டுள்ளதன் அடிப்படையில் இன்று (25.06.2025) தலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும், தணிக்கையின் போது தனி வட்டாட்சியர் (நி.ம.உ.து), உதவி செயற் பொறியாளர் (பொ.ப.து), உதவி பொறியாளர் (பொ.ப.து), உதவி

பொறியாளர் (வார்டு 61) மற்றும் உரிமம் பெற்ற நில அளவர் ஆகியோர் உடனிருந்தனர் என்றும், உத்தேச நிலமானது கிராமக் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு உள்ளது.,

மாவட்டம்- சென்னை வட்டம்-எழும்பூர் நகரம்-எழும்பூர் (பாகம் - 2)

| Block Code and Name of Locality | Survey Field/Sub Div | Govt. Mitta Zamindari Inam | Dry, Wet Unassessed, Promboke, House-site | Extent in Hectare | How the holding is utilized |
|---|---|---|---|---|---|
| Block-31<br>பாந்த்தகம் ரோடு<br>ஹாலர்ரோடு | 480/1 | சர்க்கார் | புறம்போக்கு | 6.38.33.0 | அரசு<br>மியூசியம் |

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களது திருவுருவச் சிலை அமையவுள்ள இடமானது தமிழ் வளர்ச்சி இயக்கக வளாகத்தின் நுழைவு வாயிலில் 6 மீ X 6 மீ என்ற அளவு கொண்ட பீடத்தில் முன்புற சுற்றுச்சுவருக்கு 4மீ தொலைவிலும், இயக்கக கட்டடத்தின் இடதுபுற சுற்றுச்சுவருக்கு 16மீ தொலைவிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், உத்தேச இடத்திற்கான 4 பக்க எல்லைகள் கீழ்க்கண்டவாறு உள்ளது.

வடக்கு - புலஎண்.480/1 சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

கிழக்கு - புலஎண்.480/1 சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

தெற்கு - புலஎண்.480/1 சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

மேற்கு - புலஎண்.480/1 சர்க்கார் புறம்போக்கு (பகுதி)

திருவுருவச் சிலை அமையவுள்ள இடமானது தற்போது வாகன நிறுத்தும் இடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும், உத்தேச இடத்தில் மரங்கள், கட்டடங்கள் போன்றவை ஏதுமில்லை. பொதுமக்களுக்கும், பொதுப் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுத்தாத இடமாகவும், அரசாணையில் உள்ள வழிமுறைகளைப் பின்பற்றியும் உள்ளது என்றும் தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-5, கோட்டம்-61, தமிழ் வளர்ச்சி இயக்கக வளாகத்தில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு திருவுருவச் சிலை நிறுவுவதற்கு சென்னை மாவட்ட ஆட்சியருக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.06.2025 அன்று தீர்மான எண்.352/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**க.து.ந.க.எண்.அ1/6637/2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 799/2025** **பொருள் எண்.95**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னை தொடக்கப் பள்ளிகளில் பாதுகாப்பு பணி மேற்கொள்வதற்கு ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்கள் - ஜூன் 2025 முதல் மே 2026 வரை பணியமர்த்துவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அனைத்து பள்ளிகளிலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியமாகும். 2024-2025ஆம் கல்வியாண்டில் கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 13.06.2024 நாளிட்ட அனுமதியும் மற்றும் மன்றத்தீர்மான எண்.159/2024, நாள்.24.06.2024ல் மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டு 476 தற்காலிக பாதுகாவலர்கள் ஜூன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை பணியமர்த்தப்பட்டனர்.

ஆணையர் அவர்களின் 25.09.2024 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு கூடுதலாக 73 தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்துவதற்கும் அவர்களுக்கான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.524/- (+ GST) = ரூ.618/- என நிர்ணயம் செய்யப்பட்டு செப்டம்பர் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை 549 தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.

தற்போது, 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை தொடக்கப்பள்ளிகளில் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்குவதற்கு கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களை பணியமர்த்துவது அவசியமாகிறது.

| வ. எண் | விவரம் | பாதுகாவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சென்னை தொடக்கப் பள்ளிகள் | 206 |

மேற்குறிப்பிட்ட ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களுக்கு Labour Welfare and Skill Development (J1) Department, G.O.(2D) No.36, Dated: 16.06.2023ன்படி நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ.687/- என நிர்ணயம் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பள்ளிகளின் விவரம் | பணியாளர்களின் எண்ணிக்கை | ஜூன் 2025 முதல் மே 2026 வரை (365 நாட்கள்) | நாள் ஒன்றுக்கு | மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை தொடக்கப் பள்ளிகள் | 206 | 365 நாட்கள் | 687 | 5,16,55,530 |
| GST 18% | | | | | 92,97,995 |
| **மொத்த தொகை** | | | | | **6,09,53,525** |

எனவே,

1. 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை தொடக்கப் பள்ளிகளில் பாதுகாப்பு பணி மேற்கொள்வதற்கு ஜூன் 2025 முதல் மே 2026 வரை ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களை பணியமர்த்துவதற்கு அனுமதியும்,
2. மேற்குறிப்பிட்ட ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களுக்கு Labour Welfare and Skill Development (J1) Department, G.O.(2D) No.36, Dated: 16.06.2023ன்படி நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ.687/- என நிர்ணயம் செய்வதற்கு அனுமதியும்,
3. மேற்குறிப்பிட்ட ஏற்கனவே பணிபுரிந்த 206 தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஜூன் 2025 முதல் மே 2026 வரை ஊதியம் வழங்க ஆகும் செலவினம் 206 x 365 x 687 = ரூ.5,16,55,530/- + GST 18% தொகை ரூ.92,97,995/- ஆக மொத்த தொகை ரூ.6,09,53,525/- செலவினம் மேற்கொள்வதற்கு அனுமதியும்,
4. மேற்குறிப்பிட்ட ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களுக்கு இனிவரும் காலங்களில் Labour Welfare and Skill Development (J1) Department அரசாணைக்கிணங்க உயர்த்தப்படும் ஊதியத்தினை இணை ஆணையர்(கல்வி) அவர்களின் ஒப்புதல் பெற்று வழங்குவதற்கு அனுமதியும்,
5. மேற்குறிப்பிட்ட செலவினத் தொகையினை கணக்கு குறியீட்டு எண். 80-82-06, 220-11-03-11 (Security Expenses) என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 17.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.06.2025 அன்று தீர்மான எண்.62/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை

உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.06.2025 அன்று தீர்மான எண்.353/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1/6637-1/2025**

**ஆணையர் அவர்களின் 20.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 800/2025** **பொருள் எண்.96**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னை நடுநிலைப்பள்ளிகளில் பாதுகாப்பு பணி மேற்கொள்வதற்கு ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்கள் - ஜூன் 2025 முதல் மே 2026 வரை பணியமர்த்துவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அனைத்து பள்ளிகளிலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியமாகும். 2024-2025ஆம் கல்வியாண்டில் கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 13.06.2024 நாளிட்ட அனுமதியும் மற்றும் மன்றத்தீர்மான எண்.159/2024, நாள்.24.06.2024ல் மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டு 476 தற்காலிக பாதுகாவலர்கள் ஜூன் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை பணியமர்த்தப்பட்டனர்.

மேலும், ஆணையர் அவர்களின் 25.09.2024 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு கூடுதலாக 73 தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்துவதற்கும் அவர்களுக்கான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.524/- (+ GST) = ரூ.618/- என நிர்ணயம் செய்யப்பட்டு செப்டம்பர் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை 549 தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.

தற்போது, 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை தொடக்கப் பள்ளிகளில் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்குவதற்கு கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களை பணியமர்த்துவது அவசியமாகிறது.

| வ. எண். | விவரம் | பாதுகாவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சென்னை நடுநிலைப் பள்ளிகள் | 170 |

மேற்குறிப்பிட்ட ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களுக்கு Labour Welfare and Skill Development (J1) Department, G.O.(2D) No.36, Dated: 16.06.2023ன்படி நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ.687/- என நிர்ணயம் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பள்ளிகளின் விவரம் | பணியாளர்களின் எண்ணிக்கை | ஜுன் 2025 முதல் மே 2026 வரை (365 நாட்கள்) | நாள் ஒன்றுக்கு | மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை நடுநிலைப் பள்ளிகள் | 170 | 365 நாட்கள் | 687 | 4,26,28,350 |
| | | | | GST 18% | 76,73,103 |
| | | | | மொத்த தொகை | 5,03,01,453 |

எனவே,

1. 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை நடுநிலைப்பள்ளிகளில் பாதுகாப்பு பணி மேற்கொள்வதற்கு ஜுன் 2025 முதல் மே 2026 வரை ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களை பணியமர்த்துவதற்கு அனுமதியும்,

2. மேற்குறிப்பிட்ட ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களுக்கு Labour Welfare and Skill Development (J1) Department, G.O.(2D) No.36, Dated:16.06.2023ன்படி பாதுகாவலர்களுக்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ.687/- என நிர்ணயம் செய்வதற்கு அனுமதியும்,

3. மேற்குறிப்பிட்ட ஏற்கனவே பணிபுரிந்த 170 தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஜுன் 2025 முதல் மே 2026 வரை ஊதியம் வழங்க ஆகும் செலவினம் 170 x 365 x 687 = ரூ.4,26,28,350/- + GST 18% தொகை ரூ.76,73,103/- ஆக மொத்த தொகை ரூ.5,03,01,453/- செலவினம் மேற்கொள்வதற்கு அனுமதியும்,

**பெருநகர சென்னை மாநகராட்சி - சிறப்புத் திட்டங்கள் துறை - "Hybrid Annuity Model-ன் கீழ் சென்னை மாநகராட்சிப் பகுதியின் I, II, III மற்றும் IV (சிப்பம்-2) மண்டலங்களில் உள்ள 285 பொது கழிப்பறைகளின் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, மேலாண்மை மற்றும் பரிமாற்றம் (DBFOT)" - திட்டத்தினை மூன்று ஆண்டுகளுக்கு கண்காணிப்பதற்கான சுயாதீன பொறியாளர் (Independent Engineer) நியமனம் - ஒப்பந்ததாரர் திருவாளர். Pollucare Engineers India Pvt Ltd மற்றும் திருவாளர். Bio Care Engineering Services Private Limited அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது தனியார் கூட்டாண்மையின் மூலம் – *Hybrid Annuity Model*-ன் கீழ், *9* ஆண்டுகளுக்கு மண்டலம் – *I,II, III* மற்றும் *IV* மண்டலங்களில் உள்ள கழிப்பறைகளை வடிவமைத்தல், கட்டுதல், நிதி மேலாண்மை, செயலாக்குதல் மற்றும் திருப்பி ஒப்படைத்தல் *(DBFOT)* என்ற திட்டத்தினை கண்காணிப்பதற்காக சுயாதீன பொறியாளரை *(Independent Engineer)* நியமிப்பதற்காக திறந்த ஒப்பம் முறை மூலம் தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு *9* ஆண்டுகளுக்கு ரூ.*380.50* கோடி மொத்த திட்டச் செலவிற்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டது.

தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை, (பொது தனியார் கூட்டு கொள்முதல்) விதிகள், *2012* இன் படி, இந்த திட்டத்திற்கு சுயாதீன பொறியாளர்களை *(Independent Engineer)* நியமிக்க வேண்டியது அவசியம். இந்த திட்டத்திற்கு மன்ற தீர்மான எண். *559/2025* நாள் *30.04.2025*ன்படி ரூ.*7,53,73,385/-*க்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதைத் தொடர்ந்து, " *Hybrid Annuity Model*-ன் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி *I,II, III* மற்றும் *IV* (சிப்பம்-*2*) மண்டலங்களில் உள்ள *285* பொது கழிப்பறைகளை வடிவமைத்தல், கட்டுதல், நிதி மேலாண்மை செயலாக்குதல் மற்றும் திருப்பி ஒப்படைத்தல் முறையில் *(DBFOT)* மூலம் மேற்கொள்ளவுள்ள பணிகளை மேற்பார்வையிட சுயாதீன பொறியாளரைத் *(Independent Engineer)* தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பம் கோரப்பட்டு, *29.04.2025* அன்று ஒப்பம் திறக்கப்பட்டது.

நான்கு ஒப்பங்கள் உரிய நாட்களில் பெறப்பட்டன, பின்னர் ஒப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு. மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப மதிப்பீட்டின் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது *(Pre Qualified Bidders)*:-

| Sl.No. | Name of the Bidder | Remarks |
|---|---|---|
| 1 | M/s Pollucare engineers India pvt Ltd and M/s Bio Care Engineering Services Private Limited (JV) | Qualified |
| 2 | M/s Bureau Veritas (India)Private Limited | Qualified |
| 3 | M/s Vax Consultants Pvt Ltd & M/s Raviveer Associates (JV) | Qualified |
| 4 | M/s L. N Malviya Infra Projects Pvt Ltd. | Qualified |

தொழில்நுட்ப மதிப்பீட்டின் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது *(Technical Qualified Bidders)*:-

| **Sl.No.** | **Name of the Bidder** | **Remarks** |
|---|---|---|
| 1 | M/s Pollucare engineers India pvt Ltd and M/s Bio Care Engineering Services Private Limited (JV) | Qualified |
| 2 | M/s Bureau Veritas (India)Private Limited | Qualified |
| 3 | M/s Vax Consultants Pvt Ltd & M/s Raviveer Associates (JV) | Qualified |
| 4 | M/s L. N Malviya Infra Projects Pvt Ltd. | Not - Qualified |

தொழில்நுட்ப ரீதியாக தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு அதன் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது *(Financial Bid Details)*:-

| **S. No** | **Name of the Bidder** | **Office Work Value (Rs.) - inclusive of 18% GST** | **Quoted amount by bidders(Rs.) (inclusive of 18% GST)** | **Compared with office Work Value (inclusive of 18% GST)** |
|---|---|---|---|---|
| 1 | M/s Pollucare engineers India pvt Ltd andM/s Bio Care Engineering ServicesPrivateLimited (JV) | 7,53,73,385 | 6,36,95,786 | -15.49% |
| 2 | M/s Bureau Veritas (India)Private Limited | 7,53,73,385 | 7,63,53,283 | +1.30% |
| 3 | M/s Vax Consultants Pvt Ltd & M/s Raviveer Associates (JV) | 7,53,73,385 | 7,39,50,600 | - 1.88% |

மேலும், ஒப்பந்தப்புள்ளி மதிப்பாய்வின்படி, திருவாளர். *Pollucare Engineers India Pvt Ltd* மற்றும் திருவாளர். *Bio Care Engineering Services Private Limited* (கூட்டு நிறுவனம்) அவர்கள் ரூ.6,36,95,786/- (ஜிஎஸ்டி @ 18% உட்பட) குறைந்த விலைப்புள்ளியை சமர்ப்பித்துள்ளார். இது அலுவலக மதிப்பீட்டை விட(-) 15.49% குறைவாகும்.

மேலும், திருவாளர். *Pollucare Engineers India Pvt Ltd* ஒப்பத் தொகை அலுவலக மதிப்பீட்டை விடக் குறைவாக இருப்பதால் ஒப்பந்ததாரர் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, குறைந்த விலைப்புள்ளி பரிசீலிக்கப்படலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், இது ஒப்ப ஆய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. *“Hybrid Annuity Model*-ன் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியின் *I,II, III* மற்றும் *IV* (சிப்பம்-2) மண்டலங்களில் உள்ள *285* பொது கழிப்பறைகளின் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, மேலாண்மை மற்றும் பரிமாற்றம் *(DBFOT)"* திட்டத்தினை மூன்று ஆண்டுகளுக்கு கண்காணிப்பதற்கான சுயாதீன பொறியாளர் *(Independent Engineer)* திருவாளர். *Pollucare Engineers India Pvt Ltd* மற்றும் திருவாளர். *Bio Care Engineering Services Private Limited* (கூட்டு நிறுவனம்) வழங்கியுள்ள

குறைந்தபட்ச ஒப்ப தொகையான ரூ.*6,36,95,786/-* இறுதித் தொகைக்கு அனுமதி வழங்கவும்,

2. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். *Pollucare Engineers India Pvt Ltd* மற்றும் திருவாளர். *Bio Care Engineering Services Private Limited* (கூட்டு நிறுவனம்) ஆகியவற்றுக்கு ஒப்பு ஏற்பு கடிதத்தை *(LoA)* வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.432/2025, நாள். 24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 337/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**சி.தி.து.ந.க.எண்.பி1 / 0393 / 2025**

**ஆணையர் அவர்களின் 24.05.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 808 / 2025** **பொருள் எண்.104**

**பெருநகர சென்னை மாநகராட்சி - சிறப்புத் திட்டங்கள் துறை - Hybrid Annuity Model-ன் கீழ் சென்னை மாநகராட்சிப் பகுதியின் VII, VIII, IX (மெரினா தவிர) மற்றும் X (சிப்பம்-3) மண்டலங்களில் உள்ள 395 பொது கழிப்பறைகளின் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, மேலாண்மை மற்றும் பரிமாற்றம் (DBFOT)" - திட்டத்தினை மூன்று ஆண்டுகளுக்கு கண்காணிப்பதற்கான சுயாதீன பொறியாளர் (Independent Engineer) நியமனம் செய்ய ஒப்பந்ததாரர் திருவாளர். Pollucare Engineers India Pvt Ltd மற்றும் திருவாளர். Bio Care Engineering Services Private Limited அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது தனியார் கூட்டாண்மையின் மூலம் – *Hybrid Annuity Model*-ன் கீழ், *9* ஆண்டுகளுக்கு மண்டலம் – *VII,VIII, IX* (மெரினா தவிர ) மற்றும் *X* மண்டலங்களில் உள்ள கழிப்பறைகளை வடிவமைத்தல், கட்டுதல், நிதி மேலாண்மை, செயலாக்குதல் மற்றும் திருப்பி ஒப்படைத்தல் *(DBFOT)* என்ற திட்டத்தினை கண்காணிப்பதற்காக சுயாதீன பொறியாளரை *(Independent Engineer)* நியமிப்பதற்காக திறந்த ஒப்பம் முறை மூலம் தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு *9* ஆண்டுகளுக்கு ரூ. *467.99* கோடி மொத்த திட்டச் செலவிற்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டது.

தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை, (பொது தனியார் கூட்டு கொள்முதல்) விதிகள், *2012* இன் படி, இந்த திட்டத்திற்கு சுயாதீன பொறியாளர்களை *(Idependent Engineer)* நியமிக்க வேண்டியது அவசியம். இந்த திட்டத்திற்கு ரூ.*9,14,66,866/-*க்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதைத் தொடர்ந்து, " *Hybrid Annuity Model*-ன் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி *VII, VIII, IX* (மெரினா தவிர) மற்றும் *X* (சிப்பம்-3) மண்டலங்களில் உள்ள *395* பொது கழிப்பறைகளை வடிவமைத்தல், கட்டுதல், நிதி மேலாண்மை செயலாக்குதல் மற்றும் திருப்பி ஒப்படைத்தல் முறையில் *(DBFOT)* மூலம் மேற்கொள்ளவுள்ள பணிகளை மேற்பார்வையிட சுயாதீன பொறியாளரைத் *(Independent Engineer)* தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பம் கோரப்பட்டு, *29.04.2025* அன்று ஒப்பம் திறக்கப்பட்டது.

ஐந்து ஒப்பங்கள் உரிய நாட்களில் பெறப்பட்டன, பின்னர் ஒப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு. மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப மதிப்பீட்டின் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது *(Pre Qualified Bidders)*:-

| Sl.No. | Name of the Bidder | Remarks |
|---|---|---|
| 1 | M/s Pollucare engineers India pvt Ltd and M/s Bio Care Engineering Services Private Limited (JV) | Qualified |
| 2 | M/s Bureau Veritas (India)Private Limited | Qualified |
| 3 | M/s Vax Consultants Pvt Ltd & M/s Raviveer Associates (JV) | Qualified |

| | | |
|---|---|---|
| 4 | M/s L. N Malviya Infra Projects Pvt Ltd. | Qualified |
| 5 | M/s EnviroTechnologies INC | Not Qualified |

தொழில்நுட்ப மதிப்பீட்டின் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது *(Technical Qualified Bidders)*:-

| Sl.No. | Name of the Bidder | Remarks |
|---|---|---|
| 1 | M/s Pollucare engineers India pvt Ltd and M/s Bio Care Engineering Services Private Limited (JV) | Qualified |
| 2 | M/s Bureau Veritas (India)Private Limited | Qualified |
| 3 | M/s Vax Consultants Pvt Ltd & M/s Raviveer Associates (JV) | Qualified |
| 4 | M/s L. N Malviya Infra Projects Pvt Ltd. | Not - Qualified |

தொழில்நுட்ப ரீதியாக தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு அதன் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது *(Financial Bid Details)*:-

| S. No | Name of the Bidder | Office Work Value (Rs.) - inclusive of 18% GST | Quoted amount by bidders(Rs.) (inclusive of 18% GST) | Compared with office Work Value (inclusive of 18% GST) | Remarks |
|---|---|---|---|---|---|
| 1 | M/s Pollucare engineers India pvt Ltd andM/s Bio Care Engineering Services PrivateLimited (JV) | 9,14,66,866 | 7,73,34,840 | (-) 15.45% | L1 |
| 2 | M/s Bureau Veritas (India)Private Limited | 9,14,66,866 | 9,01,67,736.48 | (-) 1.42% | L3 |
| 3 | M/s Vax Consultants Pvt Ltd & M/s Raviveer Associates (JV) | 9,14,66,866 | 8,70,91,080 | (-) 4.78% | L2 |

மேலும், ஒப்பந்தப்புள்ளி மதிப்பாய்வுவின்படி, திருவாளர். *Pollucare Engineers India Pvt Ltd* மற்றும் திருவாளர். *Bio Care Engineering Services Private Limited* (கூட்டு நிறுவனம்) அவர்கள் ரூ.7,73,34,840/- (ஜிஎஸ்டி @ 18% உட்பட) குறைந்த விலைப்புள்ளியை சமர்ப்பித்துள்ளார். இது அலுவலக மதிப்பீட்டை விட(-)15.45% குறைவாகும்.

மேலும், திருவாளர். *Pollucare Engineers India Pvt Ltd* ஒப்பத் தொகை அலுவலக மதிப்பீட்டை விடக் குறைவாக இருப்பதால் ஒப்பந்ததாரர் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, குறைந்த விலைப்புள்ளி பரிசீலிக்கப்படலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், இது ஒப்ப ஆய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. “*Hybrid Annuity Model*-ன் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியின் *VII*, *VIII*, *IX* (மெரினா தவிர) மற்றும் *X* (சிப்பம்-3) மண்டலங்களில் உள்ள 395 பொது கழிப்பறைகளின் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, மேலாண்மை மற்றும் பரிமாற்றம் *(DBFOT)*” திட்டத்தினை மூன்று ஆண்டுகளுக்கு

கண்காணிப்பதற்கான சுயாதீன பொறியாளர் *(Indipendent Engineer)* திருவாளர். *Pollucare Engineers India Pvt Ltd* மற்றும் திருவாளர். *Bio Care Engineering Services Private Limited* (கூட்டு நிறுவனம்) வழங்கியுள்ள குறைந்தபட்ச ஒப்ப தொகையான ரூ.7,73,34,840/- இறுதித் தொகைக்கு அனுமதி வழங்கவும்,

2. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். *Pollucare Engineers India Pvt Ltd* மற்றும் திருவாளர். *Bio Care Engineering Services Private Limited* (கூட்டு நிறுவனம்) ஆகியவற்றுக்கு ஒப்பு ஏற்பு கடிதத்தை *(LoA)* வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.433/2025, நாள். 24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

“25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 338/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**சி.தி.து.ந.க.எண்.பி1/0394/2025**

**ஆணையர் அவர்களின் 24.05.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 809/2025** **பொருள் எண்.105**

**பெருநகர சென்னை மாநகராட்சி - சிறப்புத் திட்டங்கள் துறை - " Hybrid Annuity Model-ன் கீழ் சென்னை மாநகராட்சிப் பகுதியின் XI, XII, XIII, XIV மற்றும் XV (சிப்பம்-4) மண்டலங்களில் உள்ள 322 பொது கழிப்பறைகளின் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, மேலாண்மை மற்றும் பரிமாற்றம் (DBFOT)" - திட்டத்தினை மூன்று ஆண்டுகளுக்கு கண்காணிப்பதற்கான சுயாதீன பொறியாளர் (Independent Engineer) நியமனம் - ஒப்பந்ததாரர் திருவாளர். Pollucare Engineers India Pvt Ltd மற்றும் திருவாளர். Bio Care Engineering Services Private Limited அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது தனியார் கூட்டாண்மையின் மூலம் – *Hybrid Annuity Model*-ன் கீழ், *9* ஆண்டுகளுக்கு மண்டலம் – *XI,XII, XII, XIV* மற்றும் *XV* மண்டலங்களில் உள்ள கழிப்பறைகளை வடிவமைத்தல், கட்டுதல், நிதி மேலாண்மை, செயலாக்குதல் மற்றும் திருப்பி ஒப்படைத்தல் *(DBFOT)* என்ற திட்டத்தினை கண்காணிப்பதற்காக சுயாதீன பொறியாளரை *(Independent Engineer)* நியமிப்பதற்காக திறந்த ஒப்பம் முறை மூலம் தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு *9* ஆண்டுகளுக்கு ரூ. *395.35* கோடி மொத்த திட்டச் செலவிற்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டது.

தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை, (பொது தனியார் கூட்டு கொள்முதல்) விதிகள், *2012* இன் படி, இந்த திட்டத்திற்கு சுயாதீன பொறியாளர்களை *(Independent Engineer)* நியமிக்க வேண்டியது அவசியம். இந்த திட்டத்திற்கு ரூ. *8,52,00,777/-*க்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதைத் தொடர்ந்து, *" Hybrid Annuity Model*-ன் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி *XI,XII, XII, XIV* மற்றும் *XV (சிப்பம்-4)* மண்டலங்களில் உள்ள *322* பொது கழிப்பறைகளை வடிவமைத்தல், கட்டுதல், நிதி மேலாண்மை செயலாக்குதல் மற்றும் திருப்பி ஒப்படைத்தல் முறையில் *(DBFOT)* மூலம் மேற்கொள்ளவுள்ள பணிகளை மேற்பார்வையிட சுயாதீன பொறியாளரைத் *(Independent Engineer)* தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பம் கோரப்பட்டு, *29.04.2025* அன்று ஒப்பம் திறக்கப்பட்டது.

ஐந்து ஒப்பங்கள் உரிய நாட்களில் பெறப்பட்டன, பின்னர் ஒப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு. மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப மதிப்பீட்டின் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது *(Pre Qualified Bidders)*:-

| Sl.No. | Name of the Bidder | Remarks |
|---|---|---|
| 1 | M/s Pollucare engineers India pvt Ltd and M/s Bio Care Engineering Services Private Limited (JV) | Qualified |
| 2 | M/s Bureau Veritas (India)Private Limited | Qualified |
| 3 | M/s Vax Consultants Pvt Ltd & M/s Raviveer Associates (JV) | Qualified |
| 4 | M/s L. N Malviya Infra Projects Pvt Ltd. | Qualified |
| 5 | M/s EnviroTechnologies INC | Not Qualified |

தொழில்நுட்ப மதிப்பீட்டின் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது *(Technical Qualified Bidders):-*

| Sl.No. | Name of the Bidder | Remarks |
|---|---|---|
| 1 | M/s Pollucare engineers India pvt Ltd and M/s Bio Care Engineering Services Private Limited (JV) | Qualified |
| 2 | M/s Bureau Veritas (India)Private Limited | Qualified |
| 3 | M/s Vax Consultants Pvt Ltd & M/s Raviveer Associates (JV) | Qualified |
| 4 | M/s L. N Malviya Infra Projects Pvt Ltd. | Not - Qualified |

தொழில்நுட்ப ரீதியாக தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு அதன் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது *(Financial Bid Details):-*

| S. No | Name of the Bidder | Office Work Value (Rs.) - inclusive of 18% GST | Quoted amount by bidders(Rs.) (inclusive of 18% GST) | Compared with office Work Value (inclusive of 18% GST) |
|---|---|---|---|---|
| 1 | M/s Pollucare engineers India pvt Ltd and M/s Bio Care Engineering Services PrivateLimited (JV) | 8,52,00,777 | 7,19,68,271 | -15.53% |
| 2 | M/s Bureau Veritas (India)Private Limited | 8,52,00,777 | 8,40,86,243 | -1.31% |
| 3 | M/s Vax Consultants Pvt Ltd & M/s Raviveer Associates (JV) | 8,52,00,777 | 8,20,92,600 | -3.64% |

மேலும், ஒப்பந்தப்புள்ளி மதிப்பாய்வின்படி, திருவாளர். *Pollucare Engineers India Pvt Ltd* மற்றும் திருவாளர். *Bio Care Engineering Services Private Limited* (கூட்டு நிறுவனம்) அவர்கள் ரூ.7,19,68,271/- (ஜிஎஸ்டி@ 18% உட்பட) குறைந்த விலைப்புள்ளியை சமர்ப்பித்துள்ளார். இது அலுவலக மதிப்பீட்டை விட(-)15.53% குறைவாகும்.

மேலும், திருவாளர். *Pollucare Engineers India Pvt Ltd* ஒப்பத் தொகை அலுவலக மதிப்பீட்டை விடக் குறைவாக இருப்பதால் ஒப்பந்ததாரர் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, குறைந்த விலைப்புள்ளி பரிசீலிக்கப்படலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், இது ஒப்ப ஆய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. "Hybrid Annuity Model-ன் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியின் XI,XII, XII, XIV மற்றும் XV (சிப்பம்-4) மண்டலங்களில் உள்ள 322 பொது கழிப்பறைகளின் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, மேலாண்மை மற்றும் பரிமாற்றம் (DBFOT)" திட்டத்தினை மூன்று ஆண்டுகளுக்கு கண்காணிப்பதற்கான சுயாதீன பொறியாளர் (Indipendent Engineer) திருவாளர். Pollucare Engineers India Pvt Ltd மற்றும் திருவாளர். Bio Care

Engineering Services Private Limited (கூட்டு நிறுவனம்) வழங்கியுள்ள குறைந்தபட்ச ஒப்ப தொகையான ரூ.7,19,68,271/- இறுதித் தொகைக்கு அனுமதி வழங்கவும்,

2. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர். Pollucare Engineers India Pvt Ltd மற்றும் திருவாளர். Bio Care Engineering Services Private Limited (கூட்டு நிறுவனம்) ஆகியவற்றுக்கு ஒப்பு ஏற்பு கடிதத்தை (LoA) வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.434/2025, நாள். 24.06.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"25.06.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.339/2025, நாள்.25.06.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5.ந.க.எண். இ1/4227/2025**

**ஆணையர் அவர்களின் 27.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 810/2025** **பொருள் எண்.106**

**பெருநகரசென்னைமாநகராட்சி - மண்டலம்-5, வார்டு-57, வ.உ.சி. நகர், திருவல்லியன் பேசின் சவுத் தெருவில் உள்ள நிலத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடமேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டது - ஒரு சிறு பகுதியான நிலத்தில் வாடகைதாரராக உள்ள நபருக்கு மாற்று இடம் வழங்க அனுமதி.**

மன்றதீர்மான எண்.401/2022, நாள்.30.08.2022ஐ தொடர்ந்து, அரசாணை (நிலை) எண்.24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை, நாள்.21.02.2023-ல் பின்வரும் நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நிலமாற்றம் செய்திட அரசு ஆணையிட்டுள்ளது.

| | |
|---|---|
| நிலத்தின் விவரம் | வ.உ.சி. நகர்கிராமம் |
| பிளாக் எண் | 68 |
| புல எண் / பரப்பளவு / வகைப்பாடு | 7878/1 பகுதி / பரப்பளவு ஏர்.ச.மீ. - 24.56 / மாநகராட்சி தனிநிலம்<br>7877/1 பகுதி/பரப்பளவு ஏர்.ச.மீ. – 37.85 / மாநகராட்சி தனிநிலம்<br>7877/2 பகுதி/ பரப்பளவு ஏர்.ச.மீ. – 1.40 / மாநகராட்சி பொது<br>மொத்த பரப்பளவு 1.57 ஏக்கர் |

அரசாணையின்படி, மேற்படி நிலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு 23.02.2024 அன்று ஒப்படைப்பு செய்யப்பட்டது.

ஆனால், ஒரு பகுதியான புலஎண். 7877/2 பகுதி-ல் 1 ஏர் 40 ச.மீ. சுமார் (பட்டாவில் குறிப்பிட்டுள்ளபடி 1506 ச.அ) பரப்பளவு கொண்ட மாநகராட்சி பொது என வகைப்படுத்தப்பட்ட நிலத்தில் திரு.வெங்கடேசலு என்பவரால் குத்தகை வாடகை அடிப்படையில் நிலத்தினை உபயோகப்படுத்தி வந்தார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் திட்டபணி அவசரம் மற்றும் தனியரது வாழ்வாதாரம் ஆகிய அம்சங்களை கருத்தில் கொண்டு, நிலத்தினை அனுபவித்து வந்த திரு. வெங்கடேசலு என்பவருக்கு மாற்று இடமாக வார்டு-54, வ.உ.சி. சாலை, கதவு எண்.340, புல எண்.1277 மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தினை ஒதுக்கலாம் என 5வது மண்டல வார்டு குழு 10.01.2025 தேதியிட்டு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998, பிரிவு 78(3)ல், *“The council may grant licence, lease or rent out the land or buildings belonging to it for use and occupation for a period not exceeding,*

*(iii) twelve years, in the case of commercial shopping complexes :*

*Provided that no such licence, lease or rent out shall be granted for a period exceeding three years at time.*

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள், 2023, விதி எண்.316 (6)ல், *The auction floor price shall be fixed as below :-*

| | |
|---|---|
| Building – commercial other than shopping complexes or public markets | Commercial Annual Rental Value as decided for Property Tax assessments. |

மேற்படி விதியின்படி, வ.உ.சி. சாலையில் வணிக பயன்பாட்டிற்காக சொத்துவரி கணக்கீடு செய்ய மேற்கொள்ளப்படும் அடிப்படை தெருவின் மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ.11.25 பைசா ஆகும் *(Basic Street Rate Rs.11.25 paise for Non-residential usage).* பாதிக்கப்பட்டவர்கள் / பயனாளிகள் இவ்விகிதத்திற்கு மேல் குத்தகை வாடகை நிர்ணயம் செய்யலாம்.

எனவே,

1. அரசாணை (நிலை) எண்.24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை, நாள்.21.02.2023-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, வார்டு-57, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி. நகர் கிராமம், திருவல்லியன் பேசின் சவுத் தெரு, பிளாக் எண்.68, நகரபுல எண்.7878/1, 7877/1, 7877/2 பகுதி 1.57 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தினை ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நிலமாற்றம் செய்யப்பட்டு, அப்பகுதியில் குத்தகை அடிப்படையில் உபயோகித்து வந்த திரு.வெங்கடேசலு என்பவருக்கு 5வது மண்டல வார்டு குழுவின் பரிந்துரையின்படி மாற்று இடம் வழங்கவும்,
2. திரு.வெங்கடேசலு என்பவருக்கு மாற்று இடமாக வார்டு-54, வ.உ.சி. சாலை, கதவு எண்.340, புல எண்.1277/21 மாநராட்சி பொது என வகைப்படுத்தப்பட்ட நிலத்தில் ஒரு பகுதியாக சுமார் 700ச.அ கொண்ட கட்டிடத்தினை (நிலத்தின் மொத்த பரப்பளவு 11524ச.மீ.) 5வது மண்டல வார்டு குழு தீர்மானத்தின்படி வழங்கவும்,
3. மேற்படி கட்டிடத்திற்கு உண்டான மாத வாடகையினை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2023-ன்படி வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.06.2025 அன்று தீர்மான எண்.360/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5ந.க.எண்.2779/2024**

**ஆணையர் அவர்களின் 27.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 811/2025** **பொருள் எண்.107**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, வார்டு - 56-ல் துறைமுக சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட கட்டிடம் எண்.120 பவளக்கார தெரு, மண்ணடி, சென்னை — 600001 - புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தில் முதல் தளத்தில் திருவாளர். தனம் சாரிட்டபிள் வறுமை கோட்டின் கீழே உள்ள இளைஞர்கள் மற்றும் மகளிர்களுக்கு சுய தொழில் பயிற்சி கணினி மற்றும் தையல் பயிற்சி வகுப்புகள் நடத்த இடம் ஒதுக்கீடு மற்றும் வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-56இல், கதவு எண் 120 பவளக்கார் தெரு, மண்ணடி, சென்னை-01 என்ற முகவரியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் துறைமுக சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய பல்நோக்கு கட்டிடம் தரைத்தளம் மற்றும் முதல் தளம் கட்டப்பட்டுள்ளது, இந்நிலையில் மேற்கண்ட இடத்தின் முதல் தளத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மகளிர்களுக்கு மற்றும் இளைஞர்களுக்கும் சேவை மனப்பான்மையுடன் கட்டணம் ஏதுமின்றி கணினி பயிற்சி மற்றும் தையல் பயிற்சி வகுப்புகள் வேலை வாய்ப்புடன் கூடிய சுய தொழில் பயிற்சி அளிப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு குறைந்த கட்டணத்தில் மாத வாடகை நிர்ணயித்து குத்தகை முறையில் ஒதுக்கீடு செய்து தருமாறு திருவாளர் தனம் சாரிடபிள் டிரஸ்ட் நிறுவனத்தார் 24.07.2024 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு திருத்தம் 2022 பிரிவு 78 மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களை குத்தகை முறையில் மாத வாடகை நிர்ணயம் செய்து 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் மற்றும் ஏல முறையில் அதிக விலை புள்ளிக் கோரும் நபருக்கு ஒதுக்கீடு செய்திடவும் அதனை 12 ஆண்டுகளுக்கு வரை புதுப்பித்துக் கொள்ளவும் சட்ட திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது,

மேலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 316(4) ன்படி *the licence fee or lease rent for buildings let out of our public purpose should be based on annual rental value derived for the purpose of calculation of property tax* என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ள மாநகராட்சி சொந்தமான துறைமுக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள பல்நோக்க கட்டிடத்தின் முதல் தளத்தில் கணினி பயிற்சி வகுப்பு மற்றும் தையல் பயிற்சி வகுப்பு தேவைப்படும் இடத்தின் அளவு உடன் பவளக்கார தெருக்களுக்கான அடிப்படை கட்டணத்தின் வணிகப் பயன்பாட்டிற்கான கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டு சொத்து வரிக்கான ஆண்டு மதிப்பீடு கணக்கிடப்படும் சூத்திரத்தின் அடிப்படையில் formula நிர்ணயித்து அதிலிருந்து மாத வாடகை கணக்கிட்டு அதனை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்த தொகையாக நிர்ணயம் செய்து ஏலம் மற்றும் ஒப்பம் முறையில் அதிக விலை பற்றி கோருபவருக்கு குத்தகை வாடகை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

ஆனால் இந்நிகழ்வில் தனம் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனம் வணிக நோக்குடன் செயல்படாமல் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மகளிர்களுக்கு மற்றும் இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு வேண்டி சுய தொழில் பயிற்சி கணினி வகுப்பு மற்றும் தையல் வகுப்புகள் நடத்துவதற்கு 3 ஆண்டுகளுக்கு குறைந்த கட்டணத்தில் மாதவாடகையாக நிர்ணயித்து உதவி செய்திட கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் அதற்கான அளவீடு சுமார் 996 சதுர அடி பரப்பளவுக்கான அடிப்படை மாத வாடகையினை பின்வருமாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(1) பவளக்கார தெருவில் கட்டப்பட்டுள்ள முதல் தளத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கட்டடத்தின் பரப்பளவு 996 சதுர அடி.

(2) ஆண்டு மதிப்பீட்டுக்கான கணக்கிடும் சூத்திரம் (formula) கட்டிடத்தின் அளவு x தெருக்களின் அடிப்படை கட்டணம் (வணிகப்பயன்பாடு) x 10.92 = 996x7.50x10.92=81572.4 முழுமதிப்பு ரூ.81575. (மாத குத்தகையாக (வாடகை) நிர்ணயம் செய்யும் பட்சத்தில் = 81575 / 12 = 6797.9 முழுமதிப்பு ரூ .6800 /.

மேற்கண்டவாறு கணக்கிடப்பட்ட மாத வாடகை தொகை ரூ.6800/- அடிப்படைத் தொகையாக கொண்டு ஒப்பந்த முறையில் ஏலம் கோரி அதிக விலை புள்ளி கோரும் நபருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் இந்நிகழ்வில் தனம் சாரிடபிள் டிரஸ்ட் சேவை மனப்பான்மையுடன் கட்டணம் இல்லாமல் இப்பயிற்சி வகுப்புகள் நடத்திட குறைந்த வாடகை கோரி உள்ளதை கருத்தில் கொண்டும் துறைமுக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட கட்டிடம் என்பதாலும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறையின் அமைச்சர் அவர்கள் அவ்வப்பொழுது கலந்தாய்வு கூட்டம் மற்றும் களஆய்வில் மேற்கண்ட நிறுவனத்தின் கோரிக்கையினை பரிசீலிக்குமாறு அறிவுறுத்தியதற்கிணங்க இதனை சிறப்பினமாக கருதி ஒப்பம் மற்றும் நேரம் முறையினை தவிர்த்து நேரடியாக அந்நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்திட வார்டு குழு தீர்மானத்தின் அடிப்படையிலும்,

(அ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–5, கோட்டம் 56இல் கதவு எண் 120 பவளக்கார தெரு, மண்ணடி, சென்னை-01 என்ற முகவரியில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் துறைமுக சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய பல்நோக்கு கட்டிடத்தின் முதல் தளத்தின் ஒரு பகுதியான சுமார் 996 சதுர அடி பரப்பளவு கட்டிடத்தை திருவாளர். தனம் சாரிட்டபிள் டிரஸ்ட் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் சேவை மனப்பான்மையுடன் கட்டணம் ஏதும் இல்லாமல் வறுமை கோட்டின் கீழ் உள்ள மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டி சுயதொழில் பயிற்சி கணினி வகுப்பு மற்றும் தையல் பயிற்சி வகுப்புகளை நடத்திட குறைந்த கட்டணத்தில் மாத வாடகை நிர்ணயம் செய்து 3 ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்திட கேட்டுக்கொண்டதற்கிணங்கவும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் அமைச்சர் அவர்களின் வாய்மொழி பரிந்துரையின்

பேரிலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு திருத்தம் சட்டம் 2022, பிரிவு 78 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 316, 2 ன்படி ஒப்பம் மற்றும் ஏலம் முறையில் ஒதுக்கீடு செய்வதிலிருந்து விலக்களித்து சிறப்பினமாக கருதி திருவாளர். தனம் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு வார்டு குழு தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு நேரடியாக 3 ஆண்டுகளுக்கு மாத வாடகைக்கு குத்தகை முறையில் ஒதுக்கீடு செய்திட அனுமதி வேண்டியும்,

(ஆ) இனம் “அ” வை ஏற்கும் பட்சத்தில் திருவாளர். தனம் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு கதவு எண்.120 பவளக்கார தெரு, மண்ணடி, சென்னை 01 என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள பல்நோக்க கட்டிடத்தின் முதல் தளத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சுமார் 996 சதுர அடிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு திருத்தச்சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 ன்படி மாத வாடகையாக ரூ.6800/- உடன் சரக்கு மற்றும் சேவை வரி தற்போது நடைமுறையில் உள்ள 18 விழுக்காடு என நிர்ணயித்திட வார்டு குழு தீர்மானம் பெறப்பட்டதன் அடிப்படையில் அதனை 3 ஆண்டுகளுக்கு மாத வாடகையாக நிர்ணயித்திட அனுமதி வேண்டியும்,

(இ) இனம் “அ” மற்றும்” ஆ” வை ஏற்கும் பட்சத்தில் மாத வாடகை நிர்ணயம் செய்ய உள்ள ரூ.6800/-ஐ 12 மாத வாடகை முன் பணம் ஆக ரூ.81 ,600./-ஐ திருவாளர். தனம் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனத்திடம் இருந்து பெற்று மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திட அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட “அ” முதல் “இ” வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.06.2025 அன்று தீர்மான எண்.361/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6 / 1378 / 2025**

**ஆணையர் அவர்களின் 27.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 812 / 2025** **பொருள் எண்.108**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-9, வார்டு-116, டாக்டர் பெசன்ட் சாலை- சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் உள்ள பல்நோக்கு கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இலவச பயிற்சி மையம் அமைக்க வாடகைக்கு கோரப்பட்டுள்ளது - அறிக்கை வரப்பெற்றுள்ளது - மன்றத்தின் அனுமதி.**

திரு.P.K.பாபு B.sc.,B.L, அறங்காவலர் உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளை அவர்களின் 07.06.2025 நாளிட்ட கடிதத்தில், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, வார்டு-116, டாக்டர் பெசன்ட் சாலையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் உள்ள பல்நோக்கு கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இலவச பயிற்சி மையம் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-9, வார்டு-116, டாக்டர் பெசன்ட் சாலையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பல்நோக்கு கட்டிடத்தில் இலவச பயிற்சி மையம் அமைத்திட உத்தேசிக்கப்பட்டு, அந்த கட்டிடத்தை வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யவும் என்றும், அக்கட்டிடத்தின் வாடகை தொகையை உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளை மூலம் கட்டணமாக செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடத்தில் பின்தங்கிய மக்களுக்காக இலவச பயிற்சி உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளை மூலம் நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் ஆண்டுக்கு சுமார் 1000 பொதுமக்கள் பயன்பெறுவார்கள்.

இந்த பயிற்சியின் மூலமாக பின்னர் வேலை வாய்ப்புகள் வழங்கிட அறக்கட்டளை மூலம் ஏற்பாடு செய்யப்படும்.

மேற்கண்ட கட்டிடத்தினை ஆறு ஆண்டுகளுக்கு வாடகை செலுத்தி உபயோகிக்க ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம்–9, வார்டு-116, டாக்டர் பெசன்ட் சாலையில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பல்நோக்கு கட்டிடத்தை வாடகை மூலம் ஒதுக்கீடு செய்ய கோரியுள்ளதால் புலத்தணிக்கை செய்து அக்கட்டிடம் அமைந்துள்ள இடத்தினை வரைபடத்துடன் கூடிய விரிவான அறிக்கை ஆகியவற்றினை இத்துறைக்கு அளிக்க கோரி 18.06.2025 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மண்டல அலுவலர் மண்டலம்-9 அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

உதவி ஆணையர், அவர்களின் 25.06.2025 நாளிட்ட கடிதத்தில் மண்டலம்-9, வார்டு 116, பகுதி - 27ல் டாக்டர் பெசன்ட் சாலையில் உள்ள சேப்பாக்கம் திருவல்லிக்கேணி

சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில், ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் கடந்த 2021-2022ஆம் நிதியாண்டில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் தரைத் தளம் ரூ.105.35 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.50 இலட்சம் செலவில் பாராளுமன்ற உறுப்பினர் (இராஜ்யசபா) திரு.அந்தியூர் பி.செல்வராஜ் அவர்களின் நிதியின் கீழ் முதல் தளம் கட்டப்பட்டது.

2023-2024ஆம் நிதியாண்டில் ரூ. 49 லட்சம் செலவில் பாராளுமன்ற உறுப்பினர் (இராஜ்யசபா) திருமதி.கனிமொழி N.V.N. சோமு அவர்களின் நிதியின் கீழ் மின்தூக்கி, மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் வசதிகள் அமைக்கப்பட்டது.

முதல் மற்றும் இரண்டாவது தளங்கள் கட்டப்பட்டு 4800 சதுர அடி கொண்ட இக்கட்டிடத்திற்கு மொத்த செலவின தொகை ரூ.204.35 இலட்சம் ஆகும்.

மேற்கூறிய ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி மைய கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளை மூலமாக இலவச பயிற்சி மையமாக பயன்படுத்துவதற்கு உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளைக்கு வாடகைக்கு விடுவதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி உத்தேச நிலமானது வருவாய் ஆவணங்களின்படி கீழ்க்கண்டவாறு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

TALUK: MYLAPORE TOWN: TRIPLICANE

| Block Code and Name of Locality | Survey Field/ Sub Div. | Govt.Mitta, Zamindari, Inam | Dry, Wet, Unassessed, Promboke, House site | Extent in Hectare - Ares | Adangal (UDS Details) | How the holding is utilized |
|---|---|---|---|---|---|---|
| 31 ஐஸ் அவுஸ் சாலை | 1516/1 | சர்க்கார் | புறம் போக்கு | 0.74.5.5 | காரப்பரேசன் பிரைவேட் | --- |

எனவே, மண்டலம்-9, வார்டு-116, டாக்டர் பெசன்ட் சாலையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பல்நோக்கு கட்டிடத்தில் இலவச பயிற்சி மையம் அமைக்க கடந்த நிதியாண்டில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்ட மன்ற உறுப்பினர் நிதியின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் முதல் மற்றும் இரண்டாவது தளங்கள் 4800 சதுர அடி கொண்ட கட்டிடத்தினை மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

மண்டலம்-9, பகுதி – 27, வார்டு-116ல் டாக்டர் பெசன்ட் சாலையில் 4800 சதுரடி பரப்பளவுள்ள கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ.36000/ + GST 18% ரூ.6480/- ஆக மொத்தம் ரூ.42,480 (ரூ.36000/-ன் தொகையை 12 மாதத்திற்கு முன் பணமாக ரூ.4,32,000/-) செலுத்த வேண்டும் என்றும், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15 சதவீதம் உயர்த்தப்படும் என்றும், கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர

சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில், மேற்படி, கட்டிடத்தை இலவச பயிற்சி மையம் அமைக்க மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.06.2025 அன்று தீர்மான எண்.362/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1580/2025**

**ஆணையர் அவர்களின் 28.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 813/2025** **பொருள் எண்.109**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் – 08, கோட்டம் – 103, பேராயர் கதிரொளி மாணிக்கம், தலைவர், இசிஜ சென்னை பேராயம் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அளித்துள்ள மனு - தந்தை பேராயர் வசித்து வந்த வாடல்ஸ் சாலையை தந்தை பேராயர் எஸ்றா சற்குணம் சாலை என பெயர் மாற்றம் செய்ய அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி மன்றத்தின் அனுமதி.**

பேராயர் கதிரொளி மாணிக்கம், தலைவர், இசிஜ சென்னை பேராயம் அவர்கள் 24.06.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அளித்துள்ள மனுவில் தந்தை பேராயரின் அடக்க ஆராதனையில் கலந்துகொண்டு, அவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்தி இறுதி அஞ்சலியில் அமைச்சர்களும் கலந்துகொண்டு அரசு மரியாதையோடு அவர்களின் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு உதவி செய்ததற்காக தனது இந்திய சுவிசேஷ திருச்சபையின் சார்பாக தங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும், தந்தை பேராயர் அவர்கள் கடந்த 1996-ம் ஆண்டு முதல் 2001-ம் ஆண்டு வரை முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு சிறுபான்மை துறை ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள் என்றும். தந்தை பேராயர் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் சிறுபான்மை ஆணையத்தில் தன்னுடைய பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றினார்கள் என்றும், 1997-ஆம் ஆண்டு முதல் 1998-ம் ஆண்டு வரை Railway Recruitment Board-ன் தலைவராக சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்கள் என்றும். 1997-ஆம் ஆண்டு முதல் 2000-ஆம் ஆண்டு வரை பாரதிதாசன் பல்கலைகழகத்தின் செனட் உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்கள் என்றும்,

மேலும், தந்தை பேராயர் அவர்கள் இறைப்பணியிலும், சமுதாயப்பணியிலும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக்கொண்டவர் என்றும் பிறந்தநாளான ஜூலை 19 அன்று ஒடுக்கப்பட்டோர் தினமாக அனுசரித்து எளியோருக்கு நலதிட்ட உதவிகள் வழங்கி வந்தார்கள் என்றும், எனவே, தந்தை பேராயர் அவர்களுக்கு சிறப்பு சேர்க்கும் விதமாக அவர் வசித்து வந்த வாடல்ஸ் சாலை, கீழ்பாக்கம், சென்னை - 600 010-ஐ தந்தை பேராயர் எஸ்றா சற்குணம் சாலை என அறிவிக்கும்படி தனது இசிஜ திருச்சபைகளின் சார்பாக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் என்றும், இந்த கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் ஆவன செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மேற்குறிப்பிட்ட சட்டப் பிரிவுகளுக்குட்பட்டு, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள், கட்டடங்கள், பூங்காக்கள், விளையாடுமிடங்கள் முதலியவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகள்

ஆணையாளர் வழியாக அரசிற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மாமன்றங்களின் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும்,

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சாலைகள், கட்டடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை முதன்மைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் ஆணையாளர் ஆகியோர் வழியாக அரசிற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மன்றங்கள் / மாமன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அறிவுறுத்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-08, கோட்டம்-103ல் கீழ்பாக்கத்தில் அமைந்துள்ள வாடல்ஸ் சாலையை **தந்தை பேராயர் எஸ்றா சற்குணம் சாலை** என பெயர் மாற்றம் செய்வதற்கு அரசாணையின் ஒப்புதலை எதிர் நோக்கி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.06.2025 அன்று தீர்மான எண்.363/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1581/2025**

**ஆணையர் அவர்களின் 28.06.2025 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 814/2025** **பொருள் எண்.110**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-05, வார்டு – 57க்கு உட்பட்ட தண்ணீர் தொட்டி தெருவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் தலைவர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான - பயன்பாட்டில் இல்லாத Electrical Work Shop, Electrical Workers Dining Hall மற்றும் MCCல் உள்ள இடத்தில் - தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலமாக புதியதாக அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட மன்றத்தின் அனுமதி.**

மண்டலம்-05, பகுதி-13, வார்டு–57க்கு உட்பட்ட அண்ணாபிள்ளை தெருவில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் ஏழை எளிய மக்களுக்காக புதியதாக 700 எண்ணிக்கை கொண்ட குடியிருப்புகள் புதியதாக தற்போது கட்டப்பட்டு வருவதாகவும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தலைவர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-05, பகுதி-13, வார்டு – 57 க்கு உட்பட்ட தண்ணீர் தொட்டி தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத *Electrical Work Shop, Electrical Workers Dining Hall* மற்றும் *MCC* உள்ள இடத்தை கள ஆய்வு மேற்கொண்டார். அதனை கள ஆய்வு மேற்கொண்ட போது பயனற்ற நிலையில் உள்ள *Electrical Work Shop, Electrical Workers Dining Hall* மற்றும் *MCC* ஆகியவற்றை அகற்றிவிட்டு, அவ்விடத்தில் புதியதாக ஏழை எளிய மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைவர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களால் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் இப்பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பயனற்ற நிலையில் உள்ள *Electrical Work Shop, Electrical Workers Dining Hall* மற்றும் *MCC* ஆகியவற்றை கள ஆய்வு மேற்கொண்டு அளவீடு செய்யப்பட்ட போது, 32.5 மீ. x 78.5 மீ. = 2551 சதுர மீட்டர் (27449 சதுர அடி) நிலம் இருப்பது கண்டறியப்பட்டது.

மேற்படி புலமானது, வருவாய் ஆவணங்களின்படி கீழ்க்கண்டவாறு காணப்படுகிறது,

மாவட்டம் : சென்னை, வட்டம் : புரசைவாக்கம், நகரம் : வ.உ.சி. நகர்

| S. No | Block No | T.S. No | Govt., Mitta, Zamindari, Inam | Dry, Wet, Unassessed, Poramboke, House-site | Adangal (UDS Details) | Total Extent in Hect. | How the holding is utilized |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 68 – திருவல்லியன் பேசின் சவுத் தெரு | 7878/1 | மாநகராட்சி | தனியார் | கார்ப்பரேசன் பிரைவேட் | 1.19.31.5 | ஒர்க் ஷாப் – ஸ்டோர் |
| 2. | 68 – பெருமாள் கோயில் கார்டன் தெரு | 7879/1 | மாநகராட்சி | தனியார் | கார்ப்பரேசன் பிரைவேட் | 0.12.41.0 | சந்து |

மேலும், 13.06.2025 அன்று மண்டலம்-05-ல் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைவர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் மற்றும் மண்டல குழு தலைவர் மண்டலம்-05 அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேற்பார்வை பொறியாளர் Electrical Work Shop, Electrical Workers Dining Hall மற்றும் MCC உள்ள 2551 சதுர மீட்டர் (27449 சதுர அடி) இடத்தில் வாகன நிறுத்தம் மற்றும் 9 மாடிகளில் (Stilt + 9 Floors) 151 எண்ணிக்கையிலான குடியிருப்புகள் கட்டலாம் என கூறினார்.

**நிபந்தனைகள்:-**

1. இந்தப் பகுதியில் கட்டப்படும் கட்டிடங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கும் பக்கிங்ஹாம் கால்வாய் உள்ளிட்ட நீர்நிலை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கும் அதே பகுதியைச் சார்ந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும்.
2. மேற்கண்ட நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிலுள்ள கட்டிடங்களை இடிக்கும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டிட மதிப்பு தொகையினை தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

எனவே, மண்டலம்-05, பகுதி-13, வார்டு – 57 க்கு உட்பட்ட தண்ணீர் தொட்டி தெருவில் TS.No.7878/1 மற்றும் 7879/1 ஆகியவற்றில் **கார்ப்பரேஷன் பிரைவேட்** என்ற வகைபாடு கொண்ட 2551 சதுர மீட்டர் (27449 சதுர அடி) சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பயன்பாட்டில் இல்லாத Electrical Work Shop, Electrical Workers Dining Hall மற்றும் MCC ஆகியவற்றை இடித்துவிட்டு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலமாக புதிதாக ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பொருட்டு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தடையின்மை சான்று வழங்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டம் 25.06.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.06.2025 அன்று தீர்மான எண்.364/2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********